# சித்தவேதம்.

ஸ்வாமி சிவானந்த பரமஹம்ஸரால்
உபதேசிக்கப்பட்ட

## மோக்ஷ சூத்ரம்.

சித்தசமாஜம் ஜெனரல் பிரசிடெண்டினுல்
பிரசுரம் செய்யப்பட்டது.


மொழிபெயர்ப்பு அதிகாரம் மேற்சொல்லிய
பிரசுரர்க்கே உரியது.

கோயமுத்தூர்
எலெக்டிரிக் பிரிண்டிங் ஒர்க்ஸ் அச்சு யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்.

1928

**காப்பி** 2500



HIS HOLINESS
Swami Sivananda Paramahamsa.

# சித்தவேதம்.

---

**ஸ்வாமி சிவானந்த பரமஹம்ஸரால்**

**உபதேசிக்கப்பட்ட**

# மோக்ஷ சூத்ரம்.

---


ஓம். தத். சத்.

ஸ்வாமி சிவானந்த பரமஹம்ஸர் துணை.

---

"ராகாதி ரோகான் சததானுஷக்தா
நஸேஷகாய ப்ரசுர்தா நசேஷான்
ஔத் சுக்யாமோகாரதிதான் ஜகான
யோபூர்வ வைத்யாய நமோஸ்துதஸ்மை"

பொருள் :—சகலமான தேகங்களிலும் வியாபித்து எப்பொழுதும் விட்டுப்பிரியாமல் சிநேகம், மோஹம் முதலிய துர்விர்த்திகளை உண்டாக்கிக்கொண்டிருக்கின்ற ராகத்துவேஷாதி மஹா ரோகங்களை யாதொருவரால் வேரற நாசம் செய்கிறவர் யாரோ அப்பேர்பட்ட அசாதாரணமான அதாவது சாதாரணமல்லாமலிருக்கின்ற வைத்தியருக்கே நமஸ்காரம்.



HIS HOLINESS

**Swami Sivananda Paramahamsa.**

# சித்தவேதம்.

## 1-ம் அத்தியாயம்.

சிஷ் : சத் குருவே, மாயா சமுத்திரத்திலிருந்து அலைந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற எனக்கு அதிலிருந்து கரையேறுவதற்குள்ள நல்ல மார்க்கத்தைக் காண்பித்துத்தரவேண்டி பக்தி விஸ்வாஸத்துடன் அபேக்ஷிக்கிறேன்.

குரு : பிரிய சிஷ்யா, மாயா சமுத்திரத்திலிருந்து எங்கே கரையேறுவதற்குள்ள மார்க்கத்தைக் காண்பித்துத் தரவேண்டும்?

சிஷ் : சர்வ சக்தனுகிய ஈஸ்வரனிடம் சேருவதற்கு.

கு : ஈஸ்வரன் என்று சொல்லப்பட்டது இன்னதென்று உமக்குத் தெரியுமா?

சி : ஈஸ்வரன் என்பது உலகத்தை சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், முதலியவைகள் செய்தற்குறிய கர்த்தாக்களாகிய பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன், இவர்களென்று சொல்லுகிருர்கள். அவர்களை நானுவிதத்திலும் அநேக கோவில்களிலும் பிரதிஷ்டாதிகள் செய்து அநேகரும் சேவித்து வருகிருர்கள். ஆகையால் அவ்வண்ணமே யானும் கருதுகின்றேன்.

கு : ஆனுல் அவ்வண்ணமே நீரும் கருதிவந்த போதிலும் ஈஸ்வரனுக்கு சர்வ வியாபகத்வம் உண்டென்ருே? இல்லையென்ருே? உம்முடைய நம்பிக்கை.

சி : ஈஸ்வரன் சர்வ வியாபி (எங்கும் நிறையப்பட்டவர்) என்றே தான் எனது பூரண நம்பிக்கை.

கு : ஆனுல் சர்வ வியாபியாயிருக்கப்பட்ட ஈஸ்வரனுக்கு நாமமோ ரூபமோ உண்டாவதற்கு இடம் உண்டோ?

சி : ஈஸ்வரனுக்கு நாம ரூபங்கள் உண்டாகிறபோது சர்வ

வியாபகத்வம் உண்டாக இடமில்லை. ஆகையால் ஈஸ்வரனுக்கு நாம ரூபங்கள் இல்லையென்றுதான் என் எண்ணம்.

கு: ஈஸ்வரன் நாம ரூபாதிகள் இல்லாமல் சர்வ வியாபி என்றேதான் நீர் கூறினீர். அப்பொழுது ஈஸ்வரன் நம்முள்ளிலும் உண்டென்றோ? இல்லையென்றோ? உமது நம்பிக்கை.

சி: ஈஸ்வரனுக்கு சர்வ வியாபகத்வம் இருப்பதனால் நம்முள்ளிலும் உண்டென்றேதான் நம்புகிறேன்.

கு: நம்மிடம் ஈஸ்வரன் இருக்கையில் நாமல்ல ஈஸ்வரன், பிரம்மாவாகும், விஷ்ணுவாகும், மஹேஸ்வரர் ஆகும், அல்லாவிடின், பிரதிஷ்டை செய்துள்ள கோவில்களிலாகும், என்று எல்லாம் சங்கற்பித்து நம்பும்போது நாம் ஈஸ்வர மதஸ்தரோ? அல்லது நிரீஸ்வர மதஸ்தரோ?

சி: சர்வ வியாபியான ஈஸ்வரனை எவ்விதம் சங்கற்பித்தாலும் ஈஸ்வர மதமென்று அதைச்சொல்லாமல், ஈஸ்வரமதம் அல்லவென்று சொல்லுவதற்கு நியாயம் உண்டோ?

கு: ஈஸ்வரன் நம்மில் இல்லாவிடின் எதையும் காண்பதற்கோ கேட்பதற்கோ பேசுவதற்கோ அறிவதற்கோ சாத்தியப்படுமோ?

சி: சாத்தியப்படாது.

கு: அதற்கொரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்கேள். ஒருவன் இறந்தால் பிணமாகிறான் அதற்கு ஏதேனும் காணவோ கேட்கவோ பேசவோ அறியவோ அசையவோ சாத்தியப்படுமோ?

சி: சாத்தியப்படாது.

கு: ஏன்?

சி: அதில் ஈஸ்வர சைதன்யம் இல்லாததனால்.

கு: அதனால் ஈஸ்வர சைதன்யம் இல்லாவிடின் நமக்கு யாதொரு உணர்வுமில்லை. இந்தக்காணப்பட்ட உலகம் முதலிய யாதொரு அவஸ்தையும் இல்லை. அப்பொழுது ஈஸ்வர சைதன்யத்தைக் கொண்டுதான் நமக்கு இவைகள் எல்லாவற்றையும் காணவும் அறியவும் இடமுண்டாயிற்று. அந்தச் சந்தர்ப்பத்தில் ஈஸ்வரன்தான் இவைகளெல்லாவற்றையும் அறிகிறாரென்று நம்பவேண்டியது. அப்படி ஈஸ்வரனாயிருக்கின்ற தான்தன்னை ஈஸ்வரன் அல்லவென்றும் ஈஸ்வரன் பிரம்மாவாகும் விஷ்ணுவாகும் மஹேஸ்வரனாகும் கோவில்களிலாகும் என்று மற்றும் சங்கற்பிக்கின்றது. அந்தப்பிரகாரம்

நானல்ல மற்றொன்றாகும் என்று சங்கற்பிக்கும்போது நாம் ஈஸ்வர மதஸ்தரென்று சொல்லுவதற்கு இடமுண்டோ ?

சி : அவ்விதம் ஆலோசித்துப்பார்க்கும்போது நிரீஸ்வர மதஸ்தர்கள்தான்.

கு : ஆனால், ஈஸ்வர மதமென்று சொல்லப்பட்டது தன்னிலுள்ள ஈஸ்வர சக்தியை வெளியில்விடாமல் எவனொருவன் தன்னிலேயே ஸ்தாபிக்கின்றானோ, அவனே ஈஸ்வர மதஸ்தன் என்று நிச்சயிக்கப்படுகின்றது.

சி : குருவே ! என்னிலுள்ள ஈஸ்வர சக்தியை என்னில் எவ்விதம் ஸ்தாபிப்பது ?

கு : அந்த மார்க்கத்தைக் காண்பித்துத் தருகிறவர் யார் ?

சி : அவர்தான் குரு.

கு : குருவென்பது யார் ?

சி : குருவென்பவர் ஈஸ்வரன் என்று எனது நம்பிக்கை.

கு : ஈஸ்வரன் ஒருக்காலமும் குருவாகி வருகிறதற்கு இடமில்லை. ஏனென்றால் ஈஸ்வரன் நாம ரூபமில்லாமல் சர்வ வியாபியாகி இருக்கின்ற வஸ்துவென்று நீர்தானே சொன்னீர். அப்படியுள்ள வஸ்து நம்மிலிருந்து வேறுபடாமல் உள்ளதோ? வேறுபட்டுள்ளதோ ?

சி : அது அபின்னமாய் வேறுபடாமல் உள்ளது.

கு : அப்படி யிருக்கப்பட்ட வஸ்து நமக்குக் குருவாக வருவதற்கு இடமில்லை. காரணம், குருவென்று வருகையில் நம்மிலிருந்து வேறுபடுத்திச் சங்கற்பிக்கின்றோம். அப்போது குரு வேறுபடுகின்றது. அப்படி வேறுபடும்போது ஈஸ்வரன் குருவாய் வருவதற்கு இடமுண்டோ? தவிர ஈஸ்வர சைதன்யம் நம்மில் இல்லாவிடின் பிணமாகின்றோம். அவ்விதமான சைதன்ய வஸ்துவை நம்மிலிருந்து குருவாகி வேறுபடுத்தும் போதும் நாம் பிணமாகின்றோம் அல்லவா? அவ்விதம் பார்க்கும் போதும் ஈஸ்வரன் குருவாக வருவதற்கு இடமுண்டோ ?

சி : இவ்விதம் ஆலோசித்துப் பார்க்கும்போது ஈஸ்வரன் குருவாக வருவதற்கு இடமில்லை.

கு : ஈஸ்வரன் குரு அல்ல, என்பதற்குத் திருஷ்டாந்தம்

என்னவென்ருல், ஈஸ்வரன் உண்டென்ருே? இல்லையென்ருே? உங்களுடைய நம்பிக்கை.

சி: உண்டென்றேதான்.

கு: ஆனல், அந்த ஈஸ்வரன் ஒரு சமயத்தில் மாத்திரம் உள்ளதோ? அல்லது எப்பொழுதும் உள்ளதோ?

சி: அது எல்லாச் சமயத்திலும் உள்ளது.

கு: ஆனல், நீர் தூங்கும் சமயத்தில் உண்டோ இல்லையோ?

சி: உண்டு.

கு: அந்தச் சமயம் குரு உமதருகில் வந்திருந்தால் நீர் அறிகிறதுண்டோ?

சி: அறிகிறதில்லை.

கு: நீர் தூங்கும் சமயத்தில் ஈஸ்வரன் உண்டல்லவா? அந்தச் சமயம் நீர் அறியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அதைச் சொல்லச் சாத்தியப்படுமா?

சி: சாத்தியப்படாது.

கு: ஆனல், அதன்காரணம், ஈஸ்வரனுக்கு இரண்டு அவஸ்தைகள் உண்டு. அவைகள் சகளத்துவம், நிஷ்களத்துவம் என்னப்படும். எப்பொழுது ஈஸ்வரனுக்குச் சகளத்துவம் சம்பவிக்கின்றதோ அந்தச் சந்தர்ப்பத்தில் ஈஸ்வரன் சகுணனுகிருன். அப்போது, விகாராதிகள் உத்பவித்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், முதலியவைகளைச் செய்து, ராகத்வேஷியாக அமைகின்ருன். எப்பொழுது ஈஸ்வரனுக்கு நிஷ்களத்துவம் பவிக்கின்றதோ; அப்பொழுது ஈஸ்வரன் நிர்க்குணமாய், நிர்விகாரமாய் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாராதிகள், இலதாய் ராகத்வேஷவிஹீனமாய் பவிக்கின்றது. இவைகளனைத்தும் சம்பவிக்கின்றது எவ்விடமிருந்தென்ருல், தன்னிலிருந்தேதான். அதெப்படியென்ருல், ஒரு பிணத்திற்கு இவையொன்றும் பாத்தியதை இல்லை. அதேதெனென்ருல் அந்தப்பிணத்திற்கு ஈஸ்வர சைதன்யம் இல்லை. ஈஸ்வர சைதன்யம் தன்னில் இருக்கும்போதுமாத்திரமே இந்த அவஸ்தைகள் உண்டாகின்றன. அது ஏனென்ருல், தன்னில் உள்ள ஈஸ்வரசக்தி தன்னில் தானே லயித்து; வெளியில் வ்யாபிக்காமல் வரும்போது நிஷ்களமாகிறது. அது நம்முடைய தூக்கத்தில் உள்ள அவஸ்தை. அப்போதும் நமக்கு ஜீவனுண்டு, ஜீவனுக்கு யாதொரு களங்கமும் இல்லை. அது

களங்கமின்றி நிர்மலமாய் ஆத்மாவாயிருக்கின்றது. அதற்குத் திருஷ்டாந்தம், கொடுமையும், கடூரமுள்ளவனும், கொலைபாதகனுமாய் இருக்கின்ற ஒருவன் தூங்குகிற சமயத்தில் அவனுக்கு ஜீவனுண்டு. அப்பொழுது அந்த ஜீவனுக்கு யாதொரு களங்கமுமில்லை. அந்தச் சமயம் ஜீவனுனது நிஷ்களமாயிருக்கின்றது. அந்த ஜீவன் தான்சிவன். அப்பொழுதேதான் ஜீவ: சிவோஹம் என்கிற அவஸ்தை. அந்த அவஸ்தை தவறி வெளியில் வியாபித்து மற்றொன்ருய் பிரதிபிம்பிக்கும்போது ஜீவனும் அந்தப்பிரதிபிம்பித்தலைவிட்டு வெளியிலே வியாபிக்காது தன்னில்தானே லயிக்கும்போது சிவனுமாகிறது. இதனுற்ருன் ஜீவ: சிவோஹம் என்று சொல்லக்காரணம். சிவன் தான் ஈஸ்வரன், அந்த ஈஸ்வரனுக்கேதான் மேற்சொல்லியவைகளால் நிஷ்களத்துவம் உண்டாயிற்று. அப்பொழுது ஈஸ்வரன் நிர்க்குணமாயிற்று. நிர்க்குணமென்ருல் குணமின்மை. குணங்கள் சாத்விகம், ராஜஸம், தாமசம், என்பவைகளாம். இந்த மூன்று குணங்களுமில்லாமல் வரும் ஸ்திதியில் நிர்க்குணன். அப்பொழுது நிர்விகாரமாய் நிர்மோகமாய் ராகத்வேஷாகிதமாய் அமைகின்றது. அதுதான் நாம் தூங்கும் சந்தர்ப்பத்தில் உள்ள அவஸ்தை. அப்பொழுது தன்னில் தானே இருக்கின்ற ஈஸ்வர சைதன்யம் தன்னில் அடங்கி நிர்க்குணன் நிஷ்களன் நிர்விஹாரி என்றிவ்விதமாய் அமைகிறது. எப்பொழுது தூக்கம்விழித்து தனது சக்தி வெளியில் வியாபிக்கின்றதோ அப்பொழுது சகளத்வம் அடைகிறது. சகளத்வம் அதாவது களங்கம். அப்போது விகாரியும் சகுணனுமாகிருன். சகுணன் என்பது முன்விவரித்த மூன்று குணங்களோடு கூடியவன். அந்த மூன்று குணங்களும் உண்டாகும்போது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், உண்டாகின்றன. இவையெல்லாம் தன்னிலிருந்தேதான். தான் இல்லாவிடின் இந்தவிமான யாதொரு அவஸ்தையும் இல்லை. அப்பொழுது சகளனுகிறதும், நிஷ்களனுகிறதும், சகுணனுகிறதும், நிர்க்குணனுகிறதும், விகாரியாகிறதும், நிர்விகாரியாகிறதும் தானேதான். ஆகையினுல் தானேதான் ஈஸ்வரன். தானுயிருக்கின்ற ஈஸ்வர சைதன்யம் தன்னில் தானே அடங்கித் தூங்கும்போது ஈஸ்வர சைதன்யம் ஒன்றுமாத்திரமே உளதாயும் மற்றெலாம் இலாதாயும் நேருகின்றது. அதனுற்ருன் தூங்கும் சமயத்தில் குரு வந்து அருகிலிருந்தபோது தெரியாமல் இருக்கக்காரணம். ஆனுல் குரு வந்திருக்கிருர் என்றுள்ள சங்கல்பம் உமக்கு எப்பொழுது உண்டாயிற்று ?

சி : தூக்கம் விழித்தபோது.

கு : தூக்கம் விழித்தபோது சங்கல்பம் எவ்விடத்திலிருந்து உண்டாயிற்று ?

சி: என்னிலிருந்தே தான்.

கு: என்னிலென்றால் எவ்விடத்திலிருந்து? தூங்கும்போது நீரில்லையா? அப்போது சங்கற்பம் உண்டாயிருந்ததா? தூக்கம் விழித்தபோது அது எவ்விதம் உண்டாயிற்று?

சி: தூக்கம் விழித்தபோது எனக்கு விகாரம் உண்டாகி அவ்விகாரத்திலிருந்து உண்டாயிற்று.

கு: விகாராதிகள் எவ்விடமிருந்து உண்டாயின?

சி: ஜீவனிலிருந்து உண்டாயின.

கு: ஜீவனிலிருந்து எப்படி உண்டாகும்? தூங்கும் சமயத்தில் ஜீவனில்லையா? அப்போது விகாராதிகள் உண்டாயிருந்தனவா? தூக்கம் விழித்த போது உமக்கு என்ன உண்டாயிற்று?

சி: சங்கற்பம் உண்டாயிற்று.

கு: அந்தச் சங்கற்பம் எவ்விடமிருந்து உண்டாயிற்று?

சி: மனஸிலிருந்து.

கு: மனஸில்லாவிடின் யாதேனும் உளதோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது குருவென்கிற சங்கற்பம் எவ்விடமிருந்து உண்டாயிற்று?

சி: மனஸிலிருந்தே.

கு: அப்போது குரு யார்?

சி: மனம்.

கு: சங்கற்பம் செய்கிறதற்குள்ள சக்தி யாருக்கிருக்கின்றதோ அவர்தான் புரோகிதர். அவர்தான் குரு. அதற்கு உதாரணம்:—ஒரு கோவில் உண்டாக்கி அதில் சங்கற்பம் செய்வது யார்? அங்கே சங்கற்பம் செய்பவனே தான் அவ்விடத்துப் புரோகிதன். சங்கற்ப சக்தி யாருக்கிருக்கின்றதோ அவர்தான் சங்கற்பிக்கின்றவர். அப்படியுள்ளவரைத்தான் அவ்விடத்திய தந்திரியென்றும் புரோகிதர் என்றும் சொல்லுகின்றது. இந்தப்பிரகாரம் உலகத்தைச் சங்கற்பம் செய்கின்றது யார்?

சி: மனம்.

கு: அப்பொழுது சங்கற்ப சக்தி யாருக்கிருக்கின்றது?

சி : மனஸிற்கு.

கு : அப்பொழுது புரோகிதர் யார்?

சி : மனஸேதான்.

கு : ஆனால் நமக்கு எத்தனை குரு உண்டு?

சி : ஒரே குரு உண்டு.

கு : அது ஒரு காலத்திலும் வருகிறதில்லை. அவனவன் மனஸே குரு. வேறு குரு இல்லை. அதனால் குரு சிஷ்யன் என்கிற அவஸ்தையும் இல்லை. அதெப்படியென்றால், மனஸில்லாவிடின் யாதொன்றும் இல்லை. எல்லாம் மனஸிலிருந்தே தான் உத்பவிக்கின்றது. ஆனதால் மனம்தான் குரு. தவிர, ஒன்றிலிருந்து இரண்டு உண்டானதோ? அல்லது இரண்டிலிருந்து ஒன்று உண்டானதோ? உம்முடைய நம்பிக்கை என்ன?

சி : ஒன்றிலிருந்தேதான் இரண்டுண்டானதென்று சொல்லி வருகிறார்கள். அதுபோலவேதான் நான் கருதியிருக்கிறேன்.

கு : ஆனால் அந்தக்கருத்து தப்பு. ஒன்றிலிருந்து இரண்டுண்டாவதில்லை. இரண்டிலிருந்தேதான் ஒன்றுண்டாகிறது. அதன் காரணம், ஒன்று எனச்சொல்ல வேண்டுமேயானால் அதனுடைய ஆதியும் அந்தமும் காணவேண்டும், ஆதியந்தம் உண்டாகும் போது மாத்திரமே ஒரு வஸ்துவென்று தீர்மானிக்க முடியும். ஆதியந்தம் இல்லையானால் ஒரு வஸ்துவென நிச்சயிக்க முடியாது. ஒரு வஸ்துவைத் தீர்மானிக்கும்போது அதற்கு ஒரு ஆதியுண்டு. ஆதியுண்டாகும்போது அது நிற்பதற்கொரு அடிஸ்தானம் வேண்டும். அந்த அடிஸ்தானம் இல்லாவிடின் அது நிற்க முடியாது. அந்தம் வேண்டுமென்றால் ஒரு வெளி வேண்டும். வெளியாயிருக்கிற ஆகாசம் மேலே இல்லாவிடின் அந்தம் உண்டாகிறதில்லை. அந்த அவஸ்தைகளுக்கு ஆதியாயிருக்கின்ற வஸ்து நிற்பதற்காக அடிஸ்தானமாகிய ஒன்று கீழும் அந்தம் காணவேண்டியதற்கு வெளியான ஆகாசமாயிருக்கின்ற ஒன்று மேலேயும் உண்டாகிறது. இவ்விதம் உண்டாகும்போது இரண்டாகி அந்த இரண்டிலேதான் ஒன்று நிற்பது. தவிர, பூமி என்றும் ஆகாசமென்றும் இரண்டு அவஸ்தைகள் இல்லாவிடின் யாதொரு வஸ்துவும் உண்டாகாதல்லவா? ஆகையால் எல்லா வஸ்துவும் இரண்டிலிருந்தேதான் உண்டாகிறது. அதற்கு திருஷ்டாந்தம் :—ஏதேனும் ஒரு விதையை எடுத்தால் அதன் உள்ளில் உள்ள பருப்பு காணப்படுவதில்லை. ஏனெனில், அதன் உள்ளில்

அது நிறைந்து அடங்கி ஆதியந்தமில்லாமல் இருக்கின்றது. ஆனால் அதிலிருந்து ஒரு முளை கிளம்பவேண்டுமேயானால் அவ்வித்து எவ்விதமாகின்றது ?

சி : அந்த வித்தினுடைய முகம் இரண்டாகிப் பிளவுபடுகின்றது.

கு : அப்பொழுது எதிலிருந்து அந்த ஒன்று உற்பத்தியாகிறது ?

சி : இரண்டிலிருந்தே.

கு : அஃதே போன்று நம்முடைய உத்பவமும் இரண்டிலிருந்தேதான். எவ்விதமென்றால் ஒரு ஸ்திரீமாத்திரம் இருந்தால் அவளிடமிருந்தோ அல்லது புருஷன்மாத்திரம் இருந்தால் அவனிடமிருந்தோ சந்தானம் உண்டாகிறதில்லை. ஸ்திரீயும், புருஷனும் சேர்ந்தால் மாத்திரமே சந்தானம் உண்டாகும். அப்போது நாமும் இரண்டிலிருந்தேதான் உண்டானோம். ஆகையினால் ஒன்று எதிலிருந்து உண்டாகின்றது ?

சி : இரண்டிலிருந்துதான்.

கு : இரண்டில்லாவிடின் ?

சி : ஒன்றும் இல்லை.

கு : இதைத்தான் அத்வைதம் என்று சொல்லுகிறது. அத்வைதம் என்றால் த்வைதரஹிதம், அதாவது இரண்டில்லாதது. ஆனால் இரண்டென்றுள்ள அவஸ்தை எவ்விடமிருந்து உண்டாயிற்றென்றால்; தன்னிலிருந்தேதான். தன்னுடைய சக்திக்கு சலனம் உண்டானபோது இரண்டென்கிற அவஸ்தை உண்டாயிற்று. தான் என்றால் அக்ஷரம். அக்ஷரம் என்றால், க்ஷரரஹிதம். அதாவது நாசமில்லாதது. நாம் கேட்கிறதும், காண்கிறதும், அறிகிறதும், ஆன பொருள்களையல்லாமல் இன்னும் ஆதியந்தம் உடைய எல்லா வஸ்துக்களும் நசித்துப்போகின்றன. எந்த வஸ்து ஆதியந்தமில்லாமல் இருக்கின்றதோ, அந்த வஸ்து நாசமில்லாதது. அந்த வஸ்துவே ஈஸ்வரன். அப்போது ஈஸ்வரனாய், தானாய், ஆதியந்த விஹீனனாய், அக்ஷரமாய் இருக்கப்பட்டதிலிருந்து வெளி எனும் ஆகாசம் உண்டாயிற்று. அந்த ஆகாசத்தில் தான் எனும் சக்தி சலித்தது. அப்பொழுது அதிலிருந்து எல்லா அவஸ்தைகளும் உண்டாயின. எப்பொழுது "தான்" வெளியாய் இருக்கின்ற ஆகாசமாகி சக்தியாய்ச் சலிக்கத் துவக்கிற்றோ அப்பொழுது அது இரண்டாயிற்று. அதற்

குத்தான் பிரம்மமென்றும், மாயையென்றும் சொல்லப்படுவது.

சி: ஓ! குருவே, நாசரஹிதமான வஸ்துவிலிருந்தே பிரம்மமென்றும், மாயையென்றும், இரண்டு அவஸ்தைகள் உண்டானதென்று அருளிச்செய்தீர் அல்லவா? அதை இன்னும் விபரமாய் அருளிச்செய்யுமாறு அம்பக்ஷிக்கிறேன்.

கு: ஆதியந்தமின்றி, நாசரஹிதமாய் இருக்கின்ற வஸ்துவானது எப்பொழுது ஆகாசமாகின்றதோ, அப்பொழுது மேல் என்றும் கீழ் என்றும் இரண்டு அவஸ்தைகள் உண்டாகின்றன. அவைகளில் மேலாயிருக்கின்ற வஸ்து பிரம்மமும் கீழாயிருக்கின்ற வஸ்து மாயையும் ஆகும். மாயையி லிருந்துதான் எல்லாம் உத்பவித்திருப்பது. நாம் எவைகளை யெல்லாம் காண்கின்றோமோ, கேட்கின்றோமோ, அறிகின்றோமோ, அவைகளெல்லாம் அம் மாயையிலிருந்து உண்டானவை. மாயை இல்லாவிடின் யாதொரு வஸ்துவும் இல்லை. பிரம்மம் என்கிற ஒரு அவஸ்தையும் இல்லை. அது என்னவென்றால், தானாயிருக்கின்ற வஸ்துவுக்குத்தான் சலனம் உண்டானது. அந்தச் சலனத்திற்குத்தான் மாயை யென்று சொல்லுவது. மாயையாய் இருக்கப்பட்ட தனது சக்தி எப்பொழுது தன்னில் லயிக்கின்றதோ அப்போது யாதொன்றும் இல்லை. பிரம்மம் என்கிற ஒரு அவஸ்தையும் இல்லை. தனக்குச் சலனம் உண்டாகும்போது பிரம்மம் என்கிற ஒரு அவஸ்தை உண்டாகிறது. அது பிரமை. எப்போது பிரமையாகின்ற சலனம் தன்னில் அடங்குகின்றதோ, அப்போது ஆதியந்தமில்லாமல், சப்தாதீதமாய், அகோசரமாய், சூன்ய பதவியாகிய ஆனந்தமுண்டாகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் பிரம்மம் என்கிற அவஸ்தை இல்லை. சப்தாதிகளாகிய எல்லா அவஸ்தைகளும் உண்டானது மாயையில்இருந்துதான். மாயை யென்றால் யாதொன்று இல்லாததோ அது தான். அதென்னவென்றால் இந்தக் காணப்படுகின்ற சராசரங்களல்ல. உலகத்தில் மாயை யென்று சொல்லி வருகின்றது இந்தக் காணப்படுகின்ற சராசரங்களைத்தான். அது சரியல்ல. மாயையில்தான் எல்லாம் நிலைகொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படை மாயை. மாயை இல்லாவிடின் இயாதொன்றும் இல்லை. இதோ பாருங்கள், ஒரு குத்துவிளக்கு. இந்த விளக்கை உண்டாக்குவதற்கும், இங்கே கொண்டுவந்து வைப்பதற்கும் எடுத்துக்கொண்டு போவதற்கும், துடைப்பதற்கும் மற்றும்பல செய்வதற்கும், அடிப்படையாக இருக்கின்றது பூமி. பூமி இல்லாவிடின் இதை உண்டாக்குவதற்கோ, கொண்டுவந்து வைப்பதற்கோ, துடைப்பதற்கோ, யாதொன்றுக்கும் முடியாது. ஆனால் இந்த விளக்கிற்

குப் பூமியென்று சொல்வதற்கு இடமில்லை. பூமிக்கு பூமியென்றும் விளக்கிற்கு விளக்கென்றுந் தானே பெயர். ஆனால் மேற் சொன்ன வண்ணம் செய்கிறதற்கு பூமியே அடிப்படையாய் இருந்தது. இதே பிரகாரந்தான் யாதொன்றும் உண்டாவதற்கோ, நசிப்பதற்கோ, காணுவதற்கோ, கேட்பதற்கோ, அறிவதற்கோ, அடிப்படையாய் உள்ளது மாயை. மாயை இல்லாவிடின் மேற் சொன்னவை யாதொன்றும் உண்டாக இடமில்லை. ஆகையால், காணப்படுகிற, இந்தச் சராசரங்களெல்லாம், மாயையிலேதான் இருக்கின்றன. நாம் பார்க்கின்ற இவையாவும் மாயையல்ல. மாயை என்கிறது யாதொன்று இல்லாதாகின்றதோ அதுதான், அதாவது யாதொன்று என்பது, நித்தியமாய் இருக்கின்றது. அந்த நித்திய மான வஸ்து அறிவு. அறிவென்கிறது ஞானம். அது போதம். அந்தப் போதம்தான் வித்தை. அந்த வித்தைதான் அக்ஷரம். அந்த அக்ஷரமே ‘ தான் ’ என்பது, அப்பொழுது தானும், அக்ஷரமாயும், வித்தையாயும், போதமாயும், ஞானமாயும், அறிவாயும், நித்யமாயும், உள்ளது. இல்லாதாகின்றதற்கு மாயை என்று பெயர். மாயை என்பது அநித்யமாய், அறிவில்லாததாய், அஞ்ஞானமாய், போதம் இல்லாததாய், வித்தையில்லாததாய், அக்ஷரம் அல்லாததாய், தான் அல்லாததாய், இருக்கின்ற அவஸ்தை. அதெப்படி யென்றால், இப்பொழுது நமக்கு அறிவு உண்டோ, இல்லையோ ?

சி : அறிவு உண்டு.

கு : அந்த அறிவு என்று சொல்வது எது என்று உமக்குச் சொல்லத் தெரியுமா ?

சி : சொல்லத் தெரியாது.

கு : அறிவு என்பதுதான் நாம் காண்கிறதும், கேட்கிறதும், அறிகிறதும், அல்ல. ஆனால் இவ்விதம் காணப்படுவதும், கேட்கப் படுவதுமாகிய யாவும் தான் எனும் அறிவான வஸ்து தன்னிட மிருந்து வெளியேவந்து வியாபிக்கும்போது அதில் பிரதிபிம்பிப்ப தும், எதிரொலிப்பதும்தான். ஆனால், அறிவு என்கிற வஸ்து இல் லையென்றால், நமக்கு இவைகளொன்றும் காணவோ, கேட்கவோ, அறியவோ, முடியாது. அப்படிமுடியுமென்றால், ஒருவன் இறந்து போனால், அந்தப்பிணம் யாதொன்றையும் காணவோ, கேட்கவோ, அறியவோ, செய்கிறதுண்டோ ?

சி : இல்லை.

கு : அது ஏன் ?

சி : இறந்து போனதினுல்.

கு : இறந்தபோது அதற்கு என்ன இல்லை ?

சி : அறிவு இல்லை.

கு : ஏன் ?

சி : ஜீவன் இல்லாததினுல்.

கு : ஜீவன் இல்லையென்று எவ்விதம் தீர்மானித்தீர் ?

சி : யாதொருவித அசைவும், சேஷ்டையும் இல்லாததினுல்.

கு : ஒரு மனிதன் தூங்கும்போது ஏதேனும் சலனமும், சேஷ்டையும் உண்டோ ?

சி : இல்லை.

கு : அப்பொழுது அவன் இறந்துவிட்டானென்று சொல்வதுண்டோ ?

சி : இல்லை.

கு : ஏன் ?

சி : அவனுக்கு ஜீவன் இருப்பதனுல்.

கு : அவனுக்கு அப்பொழுது ஜீவன் உண்டென்று எவ்விதம் தீர்மானித்தீர் ?

சி : அவன் சுவாஸோச்சுவாஸம் செய்கிறதனுல்.

கு : இறந்தானென்று என்ன காரணத்தினுல் தீர்மானிக்கப்பட்டது ?

சி : சுவாச கதியே இல்லாமற் போனதனுல்.

கு : அப்பொழுது ஜீவனுடைய சக்தியாகிய வாயு நம்மில் உள்ளபோது மாத்திரமே நமக்கு அறிவு உண்டு. நம்மில் உள்ள ஜீவசக்தியாய் இருக்கின்ற வாயு முழுதும் இல்லாமற் போகும்போது நமக்கு யாதொரு அறிவும் இல்லை. அதெப்படி யென்ருல் ஒருவனுடைய மரண சமயம் மேல்மூச்சு வாங்கிப் புருவ மத்தியத்திற்குக்

கிழேயாகிக் கொஞ்சம் ஜீவன் மாத்திரம் அதில் உள்ளபோது கண்களாலும் முகத்தினுலும் சேஷ்டைகள் காண்பிக்கின்ருன். மற்ற யாதொரு அவயவங்களையும் அசைக்க முடியாது. அந்த ஜீவசக்தியாகிய வாயு வெளியே போனுல் அந்தப் பிணம் யாதொரு அசைவும் இல்லாமல் ஒரு மரத்துண்டுக்கு ஒப்பாய் அங்கும் இங்கும் உருட்டினுல் உருளவும் தீயில் வைத்தால் எரிந்துபோகவும் செய்கின்றது. அப்பொழுது அதற்கு யாதொரு அறிவும் இல்லை. அதன் காரணம் என்ன?

சி: அதற்கு ஜீவ சக்தியான வாயு இல்லாததனுல்.

கு: ஒருவன் படுத்துத் தூங்கும்போது அவனுள் வாயுவின் கதி உண்டோ?

சி: உண்டு.

கு: அவனைத் தட்டிக் கூப்பிட்டாலோ?

சி: அறிவான்.

கு: அதற்குக் காரணம் என்ன?

சி: அதனுள் வாயு கதாகதம் செய்வதனுல்.

கு: பிணத்திற்குள் வாயு கதாகதம் செய்கிறதுண்டோ?

சி: இல்லை.

கு: ஆனுல், அந்தப் பிணத்தைத்தட்டி உருட்டினுலோ நெருப்பில் வைத்தாலோ அறிகிறதுண்டோ?

சி: அறிகிறதில்லை.

கு: ஏன்?

சி: அதனுள் வாயு கதாகதம் செய்யாததால்.

கு: அப்பொழுது அறிவா யிருக்கின்ற வஸ்து எது?

சி: ஜீவ சக்தியாய் இருக்கின்ற வாயு.

கு: தவிர, நீர் ஐந்தாறு தினங்களுக்குமுன் ஒரு காரியம், ஆலோசித்திருந்தீர். அக்காரியத்தை மறந்து விட்டீர். அதைப் பற்றி மறுபடியும் உமக்கு ஞாபகம் உண்டாகிறதற்கு நீர் என்ன செய்யவேண்டும்?

சி: அதைப்பற்றிப் பின்னரும் ஆலோசிக்க வேண்டியதே.

கு: அப்படி ஆலோசிக்கின்ற சமயத்தில் உங்களுடைய சுவாச கதியானது உமதுள்ளில் அடங்குகின்றதோ? அல்லது வெளியில் போகின்றதோ?

சி: வெளியில்போகாமல் என்னில்தானே அடங்குகின்றது.

கு: அவ்விதம் ஆழ்ந்து ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், உமது முன்னிலையில் ஒருவன் போவானேயானுல், நீர் காணவோ, அறியவோ கூடுமோ?

சி: கூடாது.

கு: அது ஏன்?

சி: அந்தச் சமயத்தில் என் ஆலோசனை மற்றென்றில் இருந்ததனுல்.

கு: ஆனுல் நீங்களும் மற்றொருவனும், ஒரு காரியத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். அந்தச்சமயம் ஒருவன் உமது முன்னிலையில் போவானேயானுல் அவனைக் காணவோ, அறியவோ, கூடாதோ?

சி: கூடும்.

கு: அதன் காரணம் என்ன? உமது ஆலோசனை அச் சம்பாஷணையில் இல்லாதிருந்ததா?

சி: இருந்தது, ஆனுல், என்னுடைய மனம் அப்போது வெளியில் வியாபித்திருந்தது. முன் கூறிய ஆலோசனைச் சமயம் எனது மனம் என்னில்தானே ஆலோசிப்பதாய் இருந்தது. அதனுல் எதிரில் போனவனைக்காணுவதற்கோ, அறிவதற்கோ, சாத்தியப்படவில்லை.

கு: அந்த மனம் வெளியில் வியாபிக்காமல், அந்தச் சமயம் உம்மில் அடங்கியிருந்ததின் காரணம் என்ன?

சி: என்னுடைய மனம் ஒன்றிலேயே ஆழ்ந்து ஆலோசித்ததால்.

கு: அது எப்படி உம்மில் அடங்கிற்று? அப்படி அடங்கியதின் காரணம் என்னவென்று சொல்லமுடியுமா?

சி: முன் சொன்னபடியல்லாமல் மற்றெந்தவிதமென்று எனக்குத் தெரியவில்லை,

கு : ஆனல், உமது ஆலோசனை சமயத்தில் "எனது கதி என்னில் அடங்குகிறதென்றும், வெளியில் போகிறதில்லை" என்றும் நீர் தானே சொன்னீர். அந்தக் கதியென்று சொல்வது வெளியே வந்த ஜீவ சக்தியாகிய வாயுவாகும். அந்தக் கதிக்கு வாயுவென்று மாத்திரம் பெயர் வந்தது. வாயுவென்ருல் சலிக்கிறதென்ருகும். அந்தச் சலனத்திலிருந்தேதான் விசாரம் உண்டாவது. அந்த விசாரத்திற்குக் கர்த்தா மனம். அவ்வாறு சலனமுள்ள வஸ்து உம்மில் அடங்க, அப்பொழுது உம்முடைய மனமும் உம்மில்தானே அடங்கிற்று. அதனலேயேதான் உமக்கு மற்ருென்றைக் காண்பதற்கும் அறிவதற்கும் முடியாமல் இருந்தது. அப்பொழுது தன்னிலிருந்து வெளியே சலித்துக்கொண்டிருக்கின்ற சக்திக்குத்தான் வாயுவென்று சொல்லப்படுகின்றது. அது தன்னிலிருந்து வெளியே போகாமல் உள்ளில் பிரம்மரந்திரத்தில் தாக்கிக்கொண்டிருக்கிறபோது அதற்குச் சமீரணன் என்று பெயர். சமீரணன் என்ருல் பிரம்மத்தோடு ஈரணம் செய்கிறது (தாக்கிக்கொண்டிருக்கிறது) "அப்பிரம்மம்" எது என்ருல் நித்தியமாய் இருக்கப்பட்ட வஸ்து. அந்த வஸ்துவினுடன் தொட்டு வேறுபடாமல் முட்டிக்கொண்டிருக்கின்ற கதி ஈரணம். இந்தப்பிரகாரமுள்ள கதி தன் உள்ளில் கூடி நடப்பதற்குச் சமீரணன் என்றும் அப்படியல்லாமல் வெளியே சலிக்கின்ற கதிக்கு வாயுவென்றும் பெயர். எப்பொழுது தன்னுடைய சக்தி தன்னில் லயிக்கின்றதோ அந்தச் சமயம் மற்ருென்றையும் அறிகிறதில்லை என்றும் நமக்குத் திருஷ்டாந்தப் படுகின்றது. தன்னுடைய சலனத்திலிருந்தேதான் தனக்கு எல்லா அவஸ்தைகளும் உண்டாகிறதென்று வெளியாகின்றது. தவிர, தன்னுடைய சலனம் தன்னில் அடங்கி ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது நமக்கு உணர்வு உண்டாகிறது. அதாவது, ஆலோசித்துக்கொண்டிருக்கிற காரியம் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பொழுது உணர்வாகும். ஞாபகம் எங்கிருந்துண்டாகிறதென்ருல், பிரகாசத்திலிருந்தேதான். பிரகாசம் எங்கிருந்துண்டாகிறதென்ருல், அக்கினியி லிருந்து. அக்கினி உண்டாகிறது வாயுவிலிருந்து. அப்பொழுது வாயுவாகி, அக்கினியாகி, பிரகாசமாகி, அறிவாகியிருக்கின்ற தன்னுடைய ஜீவ சக்தி, தன்னில்தானே அடங்கிய போதுதான் நமக்கு உணர்வு உண்டானது. அப்பொழுது அறிவாகியிருக்கும் வஸ்து எது ?

சி : ஜீவ சக்தியே.

கு : அறிவாகி ஜீவ சக்தியாகி இருக்கின்ற வஸ்து நம்முள்ளிலிருந்து வெளியே சலிக்கும்போதுதான் மாயையென்று சொல்லப்படுவது. இதற்குத்தான் "யாதொன்று" இல்லாது வருகின்றதோ

அது மாயை என்று சொல்வதின் காரணம். யாதொன்று என்பது எது என்ருல் அது அறிவு. அந்த அறிவு இல்லாமல் வருவதற்கு மாயை என்று பெயர். இதனுற்ருன் தன்னுடைய மாயை என்றும் தன்னிலிருந்து உத்பவித்ததென்றும் சொல்லக்காரணம். தான் என்ருல் யார் என்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: தானென்ருல் அவனவனே.

கு: அப்பொழுது மாயையுடைய உத்பவம் எவ்விடமிருந்து?

சி: அவனவனிடமிருந்தே.

கு: ஆனதினுல் மாயை என்பது மேலே கூறிய பிரகாரம் உத்பவித்ததாகும். அதற்குப் பிறகேதான் மனஸினுடைய உத்பவம். அந்த மனம்தான் குரு.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

# 2-ம் அத்தியாயம்.

சி: குருவே! உலகம் முழுவதும் அவனவனது மனசாகும்; என்றும் மனமே குரு என்றும் சொன்னீர். அப்படியானல் உலகந் தான் குருவாகிறதல்லவோ?

கு: ஆம். ஆனல் நீர் கிரகித்த பிரகாரமல்ல. பின் எப்படி யென்றால் முன் அத்தியாயத்தில் விபரித்த மாயையிலிருந்து இரண்டு அவஸ்தைகள் உத்பவிக்கின்றன. முதலாவது காரணமும், இரண் டாவது காரியமும். இவ்விதம் இரண்டு அவஸ்தைகள் கூடும்போது மாத்திரமே உலகம் உண்டு. அதில் காரணம் எதென்றும் காரியம் எதென்றும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். நாம் காண்பது கேட் பது அறிவது என்றிவ் வவஸ்தைகள் காரியமென்றோ காரணம் என்றோ உமக்குத் தோன்றுகிறது?

சி: காரிய மென்று.

கு: அப்போது நாம் காண்கிற கேட்கிற அறிகிற யாவும் காரிய மென்று ஆகிறது. ஆனதினால் இவைகளைக் காண்பதற்கும் கேட் பதற்கும் அறிவதற்கும் ஹேதுவாகின்றது எதுவோ அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அது என்னவென்று உமக் குத் தோன்றுகிறது?

சி: அது மனம்.

கு: அப்போது மனம் காரணமும் மற்றெல்லாம் காரியமும் ஆகும். அது எப்படி யென்றால் உமக்கு இப்பொழுது பத்து ரூபாய் தேவை யுண்டு. தற்சமயம் இல்லை. உமது சிநேகிதராகிய ஒருவ ரிடம் இருப்பதாகத் தெரிந்து அவரிடமிருந்து உமக்குத் தேவையான பணம் கிடைக்க வேண்டுமேயானல் நீங்கள் என்ன செய்யவேண்டும்?

சி: அவரைக் கேட்கவேண்டும்.

கு: கேட்டபோது கிடைத்தது. அவரிடமிருந்து நமக்குக் கிடைத்ததைக் காரியமோ காரணமோ எது எனக் கருதுவது?

சி: காரியமென.

கு: அதற்குக் காரணம் என்ன?

சி: அது கிடைப்பதற்குள்ள கேள்வி.

கு: அப்பொழுது ஏதொன்று நமக்கு லபிக்கின்றதோ அது காரியமும் லபிக்கவேண்டியுள்ள எத்தனம் எதுவோ அது காரணமுமாகும். அப்பொழுது அந்த எத்தனம் ஏதாயிருந்தது?

சி: கேட்பது.

கு: அந்தக்கேள்வி எவ்விட மிருந்துண்டாயிற்று?

சி: மனஸிலிருந்து.

கு: அப்பொழுது காரணம் எது?

சி: மனம்.

கு: அப்பொழுது காரணம் என்பது அவனவனுடைய மனமும் காரியம் என்பது உலகமும் ஆகிறதென ஏற்படுகிறது. அது எந்தப்பிரகாரம் என்றால் பிரம்மா என்று ஒன்றை நீர் கருதியிருக்கின்றீர் அல்லவா? அந்தப் பிரம்மா உமக்கு ஒரு உபதேசம் கொடுத்தார். அதை நீர் செய்வதில்லையானால் பலன் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: எறும்பு ஒரு உபதேசம் கொடுத்தது. அதையும் நீர் செய்வதில்லையானாலோ?

சி: பலன் கிடைக்காது.

கு: பிரம்மா கொடுத்த உபதேசத்தைச் செய்தாலோ?

சி: அதன் பலன் கிடைக்கும்.

கு: எறும்பு கொடுத்த உபதேசத்தைச் செய்தாலோ?

சி: அதன் பலனும் கிடைக்கும்.

கு: அப்பொழுது பிரம்மாவையும் எறும்பையும் வித்தியாசமாய்க் கருதுவதற்கு இடமுண்டோ?

சி: இல்லை.

கு: அது என்னவென்றால் பிரம்மா கொடுத்த உபதேசமென்று கருதிச் செய்யாமலிருந்தால் அதன் பலன் கிடைக்கிறதில்லை. எறும்பு கொடுத்த உபதேசமென்று கருதிச் செய்ததில் பலன் கிடைக்

காமனும் இல்லை. ஆகையாற்றான் பிரம்மாவும் எறும்பும் வித்தியாச மில்லை யென்று சொல்லக்காரணம். அப்பொழுது நமக்குப் பலன் கிடைத்தது எவ்விடமிருந்து ?

சி : நம்முடைய தொழிலிலிருந்து.

கு : அத்தொழில் எவ்விடமிருந்து உண்டாயிற்று ?

சி : மனசிலிருந்து.

கு : அந்தப்பிரகாரமுள்ள மனம் இல்லையேயானல் தொழிலோ பிரம்மாவோ எறும்போ உலகமோ யாதேனும் உண்டாகுமோ ?

சி : இல்லை.

கு : அதனலேதான் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமே காரணம் என்றும் குரு சிஷ்யன் என்கிற அவஸ்தை இல்லையென்றும் சொல்லக்காரணம். அவனவனுக்கு அவனவன் மனமே குருவாகும். அந்த மனமாகின்ற குருவின் ஸ்தானம் எவ்விடமென்று சொல்லு வீர் ?

சி : அது என்னுடைய இருதயம்.

கு : இருதய மென்று சொல்லுகிற ஸ்தானம் எதென்று தொட்டுக் காண்பியுங்கள் ?

சி : இதோ எனது இந்த இரண்டு மார்புக்கிடையில் கொஞ்சம் குழியாய்க் காணும்படியான இந்த ஸ்தலம்.

கு : அது ஒருக்காலும் இருதயமல்ல. அதை ஒருபோதும் இருதயமென்று சொல்லுவதற்கு இடமில்லை. இருதயமென்று சொல்லுவது மனசினது ஸ்தானம் அல்லவா ?

சி : ஆம்.

கு : ஆனல், அந்த மனசினுடைய ஸ்தானம் எதென்றால், நீர் ஒரு காரியத்தைப்பற்றி ஆலோசிக்கும்போது உம்முடைய ஆலோசனையும் கண் விழிகளும் எந்தப் பாகமாகப் போகின்றன ?

சி : மேற்பாகமாய்.

கு : ஆலோசனை எவ்விடத்தில் ?

சி : மனசில்.

கு: மனசினது ஸ்தானம் கீழே நெஞ்சின் மத்தியத்தில் இருக்குமென்றால் ஆலோசனை மேற்பாகம் போகக் காரணம் என்ன? கீழ் பாகத்தில் அல்லவா பார்க்கவேண்டியது?

சி: ஆம். கீழே தான் பார்க்க வேண்டியது.

கு: ஆலோசிக்கும் சமயம் அவ்விதம் செய்வதுண்டோ?

சி: செய்கிறதில்லை.

கு: இதோ இந்த வீட்டினுடைய உட்புறத்தில் வடபுறம் ஒரு சாமானத்தை நீர் வைத்துவிட்டு தேவையானபோது அதை அந்த வீட்டின் தென்புறம் இருக்கும் அறைக்குள் போய்ப்பார்த்தால் கிடைக்குமோ?

சி: கிடையாது.

கு: ஏன்?

சி: வைத்த இடத்தில் பார்க்காததால்.

கு: வைத்த ஸ்தலத்தை விட்டு மற்றொரு ஸ்தலத்தில் பார்த்தால் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: இதே பிரகாரம் நாம் ஆலோசிக்கவேண்டிய காரியங்களை பத்திரப்படுத்து மிடமெங்கே?

சி: மனஸில்.

கு: ஆலோசனைச் சமயத்தில் நாம் எங்கே பார்க்கவேண்டியது?

சி: மனஸில்.

கு: ஆலோசிப்பது எது?

சி: புத்தி.

கு: ஆனால், ஆலோசிக்கின்ற சமயம், ஆலோசிப்பதும், பார்ப்பதும் எந்த இடத்தில்?

சி: மேற் பாகத்தில்.

கு: ஆனால், மனசினுடைய ஸ்தானம் எவ்விடம்?

சி: மேற்பாகம்.

கு: அன்றியும் உமக்குப் பிரகாசிக்கின்றது எவ்விடமிருந்து?

சி: இருதயத்திலிருந்து.

கு: இருதயம் இல்லையானாற் பிரகாசம் உண்டோ?

சி: இல்லை.

கு: அந்த இருதயம் இரண்டு மார்பின் மத்தியமாகிய நெஞ்சின் குழியிலென்று நீர் சொன்னீர் அல்லவா? அவ்விடம் திறப்பதற்கோ மூடுவதற்கோ யாதொன்றும் இருப்பதாகக் காணப்படுகின்றதா?

சி: இல்லை.

கு: குருடனுக்குப் பார்வையோ அல்லது பிரகாசமோ உண்டா?

சி: இல்லை.

கு: இருதயம் நீர் சொல்லிய ஸ்தலத்தில் என்றால், குருடனும் காணவேண்டுமல்லவா? அவனுடைய கண்கள்தானே குருடு. இருதயம் குருடுபடவில்லையே? பின் ஏன் காண்பதில்லை.

சி: இருதயம் என்பது நான் சொன்ன ஸ்தலம் அல்லாததால்.

கு: ஆனால் நமது கண்கள் இப்போது குருடாகவில்லை. நாம் இவைகள் யாவற்றையும் பார்க்கிறோம், அப்பொழுது நமக்குக் காணப்படுகிறது. கண்களை மூடிக்கொண்டால் யாதேனும் காணுமோ?

சி: காணப்படாது.

கு: நீர் சொன்ன ஸ்தலத்திலே இருதயமென்றால் அது மூடப்பட்டிருக்கவில்லையல்லவா? கண்கள் அல்லவா மூடப்பட்டிருக்கின்றன. காணவேண்டியதல்லவா? ஏன் காண்கிறதில்லை?

சி: கண்ணில் இருந்துதான் பிரகாசிக்கின்றது. அப்படிப்பிரகாசிக்கின்ற கண்களை மூடியபோது இருட்டாகிறது அதனால் காண்கிறதில்லை.

கு: அப்பொழுது நமக்கு மேற்பாகத்திலிருந்தா, கீழ்பாகத்திலிருந்தா பிறகாசம் உண்டாகிறது?

சி: மேற்பாகத்திலிருந்து.

கு: அந்தத் தலத்திற்குத்தான் இருதயமென்று பெயர். அன்றியும் இருதயம் ஆகாசத்தில் ஸ்திதி செய்கின்றது. ஆகாசம் எதென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: இதோ நமது தலைக்குமேலே உயரமாய்க் காணப்படுவது தான்.

கு: அது ஒருக்காலும் ஆகாசம் அல்ல. ஆகாசம் அதுவானால் இருதயம் ஸ்திதி செய்வதும் அவ்விடம்தான், அங்கே இருதயம் ஸ்திதி செய்கிறதென்றால் நமக்குப் பிரகாசிக்கிறதற்கு இடமுண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் இருதயம் அங்கேயிருந்தால் ஒரு பிணத்திற்கும் பிரகாசிக்கவேண்டுமல்லவா? நீர் சொன்ன ஆகாசமும் இருதயமும் போகவில்லையே? பிணத்திற்குப் பிரகாசிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

சி: அது இறந்ததனால்.

கு: இறந்தபோது என்ன உண்டாயிருக்கவில்லை?

சி: ஜீவன் உண்டாயிருக்கவில்லை.

கு: ஜீவன் இல்லையானால் பிரகாசமுண்டோ?

சி: இல்லை.

கு: பிரகாசமாயிருக்கின்ற வஸ்து எது?

சி: ஜீவன்.

கு: ஜீவனும் பிரகாசமாயும் இருக்கின்ற தன்னில் உள்ள வஸ்து தன்னிலிருந்து நசித்தபோது பிரகாசமில்லாமல் ஆயிற்று. அப்போது எவ்விடமிருந்து பிரகாசிக்கிறதென்று வெளிப்படுகிறது?

சி: அது தன்னிலிருந்து.

கு: தன்னில் எவ்விடமிருந்து பிரகாசிக்கின்றது?

சி: மேற் பாகத்திலிருந்து.

கு: அப்போது தன்னில்தானே மேலேயிருக்கிற பாகத்திற்குத்தான் ஆகாசமென்று சொல்லுகிறது. ஆனால், ஆகாசம் என்பது அதிகம் பிரகாசிக்கின்றதும், மேலேயிருக்கின்றதும், காணக்கூடாததும் ஆகும். ஆனால் நமக்குப் பிரகாசிப்பது எவ்விடமிருந்து?

சி: ஆகாசத்தின்கண் சூரியனிலிருந்து.

கு: அதற்கு ஒருக்காலும் இடமில்லை. ஏனென்றால் இறந்தபோது ஆகாசமும் சூரியனும் இருந்தன வல்லவா? அப்போது பிணத்திற்குப் பிரகாசித்திருக்கவில்லை யென்று நீர் தானே சொன்

னீர். தவிர இப்போது சூரியன் உதித்து மத்தியானம் என்று சொல்லுகின்றீர் அல்லவா? இதோ இந்தச் சமயத்தில் ஒருவன் படுத்துத் தூங்குகின்றான். ஆனால் அவனுக்கு ஏதேனும் பிரகாசம் உண்டோ?

சி: இல்லை.

கு: என்ன காரணம்? நீர் சொன்ன ஆகாசமும் சூரியனும் இல்லையா? பின் ஏன் பிரகாசிக்கவில்லை?

சி: தூங்குவதனால்.

கு: ஆனால், தூங்குபவனுக்கு எப்போது பிரகாசிக்கிறது?

சி: தூக்கம் விழித்தபோது.

கு: அப்போது பிரகாசம் எவ்விடமிருந் துண்டாயிற்று? ஆகாசத்திலிருந்தோ? சூரியனிலிருந்தோ? அல்லது அவனிடத்தி லிருந்தோ?

சி: அவனிலிருந்தே தான்.

கு: அவனில் எவ்விடமிருந்து பிரகாசிக்கின்றது?

சி: அவனில் உள்ள ஆகாசத்திலிருந்தே.

கு: அந்த ஆகாசம் எவ்விடம் இருக்கின்றது?

சி: அவனிடத்தில் மேலே யிருக்கின்றது.

கு: அது எது?

சி: அது சிரசு.

கு: நமக்கு அதிகம்'பிரகாசிப்பது எவ்விடமிருந்து?

சி: சிரஸிலேயிருந்து.

கு: ஆனால் நமக்கு மேற்பாகம் எது?

சி: சிரம்.

கு: தவிர ஆகாசம் காணக்கூடாத பொருளென்று சொல்லப் படுகிறது. ஆனால் நீர் சொன்ன ஆகாசம் இதுவானால் இதோபார் காணப்படுகிறதில்லையா?

சி: காணப்படுகிறதுண்டு.

கு: அப்போது இதைக்காண்பதற்காகாதென்று சொல்லுவதற்கு இடம் உண்டோ?

சி: இடமில்லை.

கு: ஆனால் நமக்கு காண்பதற்கு சாத்தியப்படாத வஸ்து அவனவன் சிரமே. ஒரு கண்ணாடி எடுத்துப்பார்க்கும்போது முகம் தான் காணலாம். ஒன்றுக்கதிகம் கண்ணாடிகள் எடுத்து எல்லாப் பாகங்களிலும் வைத்துப்பார்த்தாலும், நிலத்தில் வைத்துத் தலைகீழாகப்பார்த்தாலும், சிரசு முழுதும் ஒரே சமயத்தில் காண்பதில்லை. இதனாலேதான் ஆகாசம் காணக்கூடாததென்று சொல்லக்காரணம். அது அவனவனுடைய சிரசுதான். தவிர, ஆகாசத்திலிருந்து சப்தம் உத்பவிக்கின்றது. அந்த ஆகாசத்திலேதான் சப்தம் கேட்கப்படுகிறது. அந்த சப்தம் உண்டாவது நீர் சொல்லிய ஆகாசத்திலிருந்து தானென்றால், நான் என் வாயை மூடிப் பேசாமலிருந்தால் என்னுடைய சப்தம் நீர் சொன்ன ஆகாசத்தில் இருந்து உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது எங்கேயிருந்து சப்தம் உத்பவிக்கின்றது?

சி: அவனவன் சிரசிலிருந்து.

கு: சிரமில்லையென்றால் சப்தம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: இதனாலேதான் ஆகாசத்திலிருந்து சப்தம் உற்பவிப்பதென்று சொல்லக்காரணம். அந்த ஆகாசம்தான் சிரசு. சிரசிலிருந்து சப்தம் உற்பவிக்கின்றது. தவிர சப்தத்தைக் கேட்பதற்கு என்ன வேண்டும்?

சி: சிரசு வேண்டும்.

கு: இதனாலேதான் ஆகாசத்திலிருந்து சப்தம் உண்டாகிறதென்றும், ஆகாசத்தால் சப்தம் கேட்கப்படுகிறதென்றும் சொல்லக் காரணம். அப்பொழுது ஆகாசமாயிருக்கின்ற சிரசு இல்லை என்றால் சப்தம் உண்டாகிறதற்கோ, கேட்பதற்கோ, முடிகிறதில்லை. தவிர நமக்கு கால், கை, கண், மூக்கு, இத்யாதிகள் இல்லையென்று வைத்துக்கொள்வோம். சிரசும், ஜீவனும், நாவும், உண்டு. அப்பொழுது நமக்கு சப்தம் உண்டாக்கலாம். சிரசில்லையென்றால் சப்தம் உண்டாக்க முடியுமோ?

சி: முடியாது.

கு: இதோ பாருங்கள் நம்முடைய கைகளைத் தட்டினால் சப்தம் உண்டாகிறது. அந்தச் சப்தம் உண்டாவதற்குக் காரணம் என்ன?

சி: அது இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று தட்டினதனால் உண்டாயிற்று.

கு: அது ஒருக்காலும் கைகளைக்கொண்டு முடிகிறதில்லை. ஏனென்றால், நம்முடைய தலையை எடுத்துவிட்டால் பின்பு உடலின் மேல் கைகள் இருக்கிறதில்லையா? அப்போது கைகளை எடுக்கவும் தட்டவும் முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது எல்லாச் சக்தியும் எவ்விடத்தில் இருக்கின்றது?

சி: சிரசில்.

கு: சிரசில்லையானால், ஆகாசமென்றோ, ஆதியென்றோ, அந்தமென்றோ, யாதேனும் உண்டா?

சி: இல்லை.

கு: எல்லா அவஸ்தைகளும் உண்டாவது எவ்விடமிருந்து?

சி: அவனவனது சிரசிலிருந்து.

கு: நமக்குப் பிரகாசிப்பது சிரசிலிருந்தென்பதற்கு மற்றொரு திருஷ்டாந்தம். இதோ இரண்டடுக்குள்ள ஓர் மெத்தை வீடு. அவைகளில் கீழ் அடுக்கின் உள்ளே இரவில் ஒரு விளக்கை ஏற்றி வைத்துக் கதவுகளை மூடிவிட்டு மேல் அடுக்கிற்குச் சென்று அங்குள்ள ஜன்னலின் வழியாய் வெளியில் பார்க்கும்போது கீழ் அடுக்கில் ஏற்றிவைத்திருக்கப்பட்ட விளக்கின் வெளிச்சத்தால் வெளியில் உள்ள எவைகளையேனும் காணுவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: ஏன்?

சி: அந்த வீட்டினது கீழ் அடுக்கில்தான் பிரகாசம் இருக்கிறது. அதன் கதவு மூடப்பட்டிருப்பதனால்தான் வெளியில் இருக்கும் பொருள்களைக் காண முடியவில்லை.

கு: இதேபிரகாரந்தானே நமது இந்த ஜடத்தை இரண்டு அடுக்குள்ள ஒரு மெத்தை வீடாக ஒப்பிடலாம். அதாவது கழுத்திற்கு கீழே கீழ் அடுக்கு. மேலே மேலடுக்கு. கழுத்தின் கீழ் உள்ள

கீழ் அடுக்கில் உள்ளிலிருந்து பிரகாச வஸ்து இருக்கிறதென்றால் கழுத்திற்கு மேலுள்ள மேலடுக்கிலிருந்து வெளியே பார்க்கும்போது பிரகாசத்தைக் காணமுடியுமா ?

சி : காணமுடியாது.

கு : அது எதனுல் ?

சி : பிரகாசமானது கீழ் அடுக்கினுள் இருந்ததனுல்.

கு : அப்போது நமக்கு எவ்விடமிருந்து பிரகாசிக்கிறதென்று தெரிகிறது.

சி : கழுத்திற்கு மேலேயுள்ள மேலடுக்கிலிருந்து.

கு : அல்லாமல், இதோ இந்த வீட்டிற்குள் வாசற்படிக்கு நேரே ஒரு விளக்கு ஏற்றிவைத்துக் கதவை மூடினுல் வெளியில் எப்படி யிருக்கும்?

சி : இருட்டாய் இருக்கும்.

கு : கதவைத் திறந்தாலோ ?

சி : வெளிச்சமாயிருக்கும்.

கு : அப்பொழுது எவ்விடமிருந்து வெளிச்சம் உண்டாகிறது ?

சி : உள்ளிலிருக்கும் விளக்கிலிருந்து.

கு : அது வெளியில் எப்படிப் பிரகாசிக்கிறது.

சி : வாசற்படிக்கு நேரே விளக்கிலிருந்து எரிந்துக்கொண்டிருக்கிற அக்னியினது சக்திக்கு அனுசரித்து வெளியில் பிரகாசிக்கிறது.

கு : அந்த விளக்கில் எண்ணெயும், திரியும், அக்னியும், இல்லாவிட்டால் பிரகாசிக்குமோ ?

சி : இல்லை.

கு : ஆனுல் அந்த விளக்கின் கீழ்த்தட்டிலிருந்தோ, மேல் தட்டிலிருந்தோ, பிரகாசிக்கின்றது ?

சி : மேல் தட்டிலிருந்து.

கு : அதே பிரகாரந்தான், இந்த ஜடத்தை ஒரு விளக்கிற்கு ஒப்பிடலாம். இந்த ஜடமாயிருக்கிற விளக்கில் கர்மமாய் வாயுவாயிருக்கின்ற தைலத்தை நிறைத்து, அதில் மனசாகின்ற திரியைப்

போட்டு ஆத்மாவாகின்ற தீபம் எரிந்துக் கொண்டிருக்கும்போது, இந்தக் காணுகிற உலகம் பிரகாசமாகத் தோன்றுகிறது. தவிர எந்தப்பிரகாரம் முன்சொன்ன விளக்கினுடைய மேல்தட்டிலிருந்து எரிந்து பிரகாசிக்கின்றதோ, அந்தப் பிரகாரமே இந்த ஜடமாயிருக்கிற விளக்கினுடைய மேல்தட்டிலிருந்துதான் பிரகாசிக்கிறது. மேல் தட்டில் எவ்விடமிருந்து பிரகாசிக்கிறதென்றால், அது புருவ மத்தியத்திலிருந்து, காரணம், சிவனை விருபாக்ஷனென்றும், திரிலோசனனென்றும் சொல்லுகிறார்கள். சிவனுடைய ரூபத்தைச் சங்கற்பித்துப் படங்கள் எழுதப்பட்டுக் காண்கிறதுண்டு. அந்தப் படங்களைப் பார்க்கும்போது அதற்கு மூன்று கண்கள் உண்டு. அவைகளில் ஒரு கண் நெருப்புக் கண் என்று சொல்லுகின்றோம். ஆனால் அந்தச் சிவன் யாரென்றால் ஜீவனாகும். அந்த ஜீவனா யிருக்கின்ற சிவனுக்கு மூன்று கண்கள் உண்டு. அதாவது இடகலை, பிங்கலை, சுழிமுனை, (சுஷும்னா) இதில் இடகலை பிங்கலை சந்திரன் சூரியர்களாம். சுஷும்னா என்பது அக்கினியும் ஆகின்றது. இதனாலேதான் சிவனுக்கு மூன்று கண்கள். அவைகளில் ஒன்று அக்கினி நேத்திர மென்றும், அது புருவ மத்தியத்திலென்றும் சொல்லப்படுகிறது. அப்பொழுது புருவ மத்தியத்திலென்று சொல்லப்படுகிற சுஷும்னா அக்கினி நேத்திரமென்று வெளிப்படுகிறது. அதை அனுசரித்துதான் முன்சொன்ன படத்திலும் புருவ மத்தியத்தில் அக்கினி நேத்திரம் எழுதியிருக்கக் காரணம். அப்பொழுது அந்தப் புருவ மத்தியத்தில் அக்கினி இல்லையானால் பிரகாசிக்கிறதற்கு இடமுண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது நம்மில் எவ்விடமிருந்து பிரகாசிக்கிறது?

சி: புருவ மத்தியத்தில் இருக்கின்ற சுஷும்னாவான அக்கினி நேத்திரத்திலிருந்து.

கு: அதைத்தான் இருதயமென்று சொல்லுவது. இவ்விதத்தில் தன்னில் ஆகாசமத்தியாய், இருதயமாய், அக்கினியாய், சுஷும்னாவாய், இருக்கின்ற புருவ மத்தியத்தில் இருந்து பிரகாசிக்கின்றது.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# 3-ம் அத்தியாயம்.

சி: இதுவரை தாங்கள் கூறியதைக் கேட்டமட்டிலும் தானே ஈஸ்வரனென்றும், அப்படி யிருக்கின்ற தன்னுடைய சக்தி வெளியில் வியாபித்தபோது அதிலிருந்து உலகம் உண்டானதென்றும் தெரிய வந்தது. ஆனல் உலகத்தில் புண்ணிய பாவங்களைக் கொண்டுதான் ஜனன மரணம் எற்படுகிறதென்றும் சாதாரணமாய் உத்தேசிக்கப்படு கின்றது. இப்படிச் சொல்லுவதற்குக் காரணம் என்ன?

கு: புண்ணியம் (சுகிர்தம்) பாவம் (துஷ்கிருதம்) என்பவைகள் என்னவென்று நீர் அறிந்திருக்கின்றீர்?

சி: சுகிர்தம் என்பது நல்ல தொழில்களைச் செய்வது. அதாவது யாதொன்றையும் இம்ஸியாமல் தயையோடு கூடியிருப்பதும், அன்ன தானம், கோ தானம், முதலியவை செய்கின்றதும், ஓமம், யாகம், பூஜை, இவைகளைச் செய்விக்கின்றதும், செய்கின்றதும் மற்றுமாகும். துஷ்கிருத மென்பது, கெட்ட தொழில்களைச் செய்கிறது. அதாவது ஜந்து இம்ஸாதிகளும், தானம், தருமம், செய்யாதிருப்பதும் மற்று மாகும். இந்தப்படியே நானும் உத்தேசித்திருக்கிறேன்.

கு: இந்த உத்தேசம் மிகவும் தப்பிதம். சுகிர்தம் என்பது நல்ல•செய்கையென்றே, துஷ்கிருதம் என்பது கெட்ட செய்கை யென்றே சொல்வதற்கு இயலாது. அதேனென்றால், சுகிர்த துஷ் கிருதாதிகளைக் கொண்டுதான் ஜனன மரணமென்று நீர்தானே சொன்னீரல்லவா? அப்படியானல் யானைமுதல் எறும்புவரையுள்ள எல்லா ஜந்துக்களுக்கும் சுகிர்த துஷ்கிருதாதிகள் பாத்தியப்படுகிறதல்லவா? இதில் எவையெல்லாம் சுகிர்தங்கொண்டு ஜனித்தன? எவையெல்லாம் துஷ்கிருதங் கொண்டு ஜனித்தன?

சி: மனுஷராகிய நாமெல்லாம் சுகிர்தத்தாலும் பாக்கியுள்ள ஜந்துக்களெல்லாம் துஷ்கிருதங்கொண்டும் ஜனித்தன.

கு: மனிதரென்று சொல்லப்படுகிறவர் மனிதராகி ஜனிப்பதற்கு வேண்டி எப்போது சுகிர்தம் செய்தனர். எறும்பு முதலிய பாக்கியுள்ள ஜந்துக்கள் அந்தப்பிரகாரம் ஜனிக்கிறதற்கு வேண்டி எப்பொழுது துஷ்கிருதம் செய்தன?

சி: முன் ஜன்மத்தில்.

கு: ஆனால், முன் ஜன்மத்தில் நாம் யாராயிருந்தோம்? மனுஷராகி ஜனிக்கிறதற்கு வேண்டி என்ன சுகிர்தம் செய்தோம்? எறும்பு முதலிய ஜந்துக்கள் முன் ஜன்மத்தில் யாதாயிருந்தன. இந்த ஜன்மத்தில் இப்பிரகாரம் ஜனிப்பதற்கு வேண்டிச் செய்த துஷ்கிருதம் என்ன? சொல்வதற்கு முடியுமா?

சி: சொல்ல முடியாது.

கு: ஆனால், அவனவனுக்கு அனுபவமில்லாத சங்கதிகளை நம்புவதில் பிரயோஜனமில்லை. அவனவனுடைய அனுபவத்திற்கும், சுருதிக்கும், யுக்திக்கும், அனுசரித்தது எதுவோ, அதைத்தான் நம்ப வேண்டும். ஏனென்றால் எறும்புமுதல் நாம் உட்பட ஏதேது சிருஷ்டிகள் உலகத்தில் காணப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ, அறியப்படுகிறதோ, அவைகளுக்கெல்லாம் ஒரே ஜீவன்தான், இந்தப்படி வித்தியாசமாய்க் காணப்படுவது உருவ வித்தியாசத்தால். தவிர அவனவன் சக்தி வெளியில் வியாபித்து, அந்தச் சக்தியாகிய ஜீவன் மற்றொன்றாகிப் பிரதி பிம்பித்ததுதான். இக்காணும் உலகு, அதன் பின்னால் விஸ்தரிப்போம். சுகிர்த, துஷ்கிருதாதிகளைக் கொண்டு ஜனன மரணமென்றால், இராஜாக்களென்று அபிமானிக்கப்படுகிறவர்களுக்கும் அது பாத்தியப்படும். சுகிர்த துஷ்கிருதாதிகளைச் செய்தால் அதனதன் குணதோஷங்களை எவ்வெப்போது அனுபவிக்கிறது?

சி: முன் ஜன்மத்தில் செய்ததை இந்த ஜன்மத்திலும் இந்த ஜன்மத்தில் செய்கிறதை அடுத்த ஜன்மத்திலும் அனுபவிக்கிறது.

கு: அதை எவ்விதம் அநுபவிக்கிறது?

சி: சுகிர்தம் செய்தவர் பிராமணராயும், இராஜாக்களாயும், தனவந்தராயும், துஷ்கிருதம் செய்தவர்கள் தரித்திரர்களாயும், ரோகிகளாயும், ஜனித்து அனுபவிக்கிறார்கள்.

கு: ஆனால், இராஜாக்களுக்கும் தனவான்களுக்கும் ரோகம் உண்டாகின்றதோ இல்லையோ?

சி: உண்டாகிறதுண்டு.

கு: அதற்கென்ன காரணம்?

சி: சென்ற ஜன்மத்தில் செய்த துஷ்கிருதமாகும்.

கு: அப்படியானால் அவர் எப்படி இராஜாவாகின்றது? நாமும் இராஜாவாக வேண்டுமல்லவா? துஷ்கிருதம் முழுமையும் இல்லாது வரும்போதுதான் இராஜாவாகின்றது. இராஜாக்கள் புண்ணியோத் கிருஷ்ட சரீரிகளாகும். அதாவது புண்ணியம் உயர்ந்த பதவியை அடைகின்றது. அப்போது பாவம் என்று சொல்லப்படுகின்ற அவஸ்தை கொஞ்சமேனும் இல்லை. ஏனென்றால் புண்ணியம் உயர்ந்த பதவி யாகும்போது, உயர்ந்த வஸ்து ஈஸ்வரனாகும். அப்போது ஈஸ்வரனோடு சேர்ந்து ஈஸ்வராம்ஸமாகிறது. அப்போது தான் இராஜாவாகிறது. ஈஸ்வராம்ஸமாகும் இராஜா, அதை அனுசரித்தே "இராஜா பிரத்தியக்ஷ தேவதா" என்று சொல்லக்காரணம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சுவற்றின் மேலும் மற்றும் "இராஜா பிரத்தியக்ஷ தேவா" என்று எழுதப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அப் பொழுது பிரத்தியக்ஷமான ஈஸ்வரராகும் இராஜா. அந்த இராஜா வுக்கு யாதொரு வியாதியும் உண்டாகிறதற்கு இடமில்லை. அப் படி இருக்கவேண்டிய இராஜாக்களுக்கு உண்டாகின்ற விதத்தில் நமக்கு வியாதிகள் உண்டாகிறதில்லை. அவர்களுக்கு, இராஜ பிளவை, பவுந்தரம், பிரமேகம், பச்சவாதம், முதலாகிய பெரிய வியாதிகள் உண்டாகின்றன. அதனால் அவர் பெரிய குற்றம் செய்தவராகும். அப்படிப் பெரிய குற்றம் செய்தவர், இராஜாக்களாக ஜனிப்பதற்கு இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: அவ்விதமானால் நமக்குச் சுகிர்தம் துஷ்கிருதம் உத்பவிப் பது எவ்விடமிருகது?

சி: அது நம்முடைய மனசிலே யிருந்து.

கு: அப்போது நமக்கு மனசில்லையானால் சுகிர்தமோ துஷ் கிருதமோ உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: ஆனால், மனசிலிருந்து உத்பவிக்கிறது துஷ்கிருதங்கள் உண்டாகாமல் இருந்தால் அப்பொழுது அது என்னமா யிருக்கும்?

சி: சுகிர்தமாயிருக்கும்.

கு: சுகிர்தமென்று சொல்லப்படுவது எது?

சி: புண்ணியம்.

கு: புண்ணியம் என்கிற அவஸ்தை என்னவாயிருக்கும்?

சி: ஈஸ்வரனிடம் சேருவதற்குள்ள ஒரே அவஸ்தை.

கு: அப்பொழுது ஈஸ்வரன் நம்மில் எவ்விடம் இருக்கிறது?

சி: நம்மில் உயர்ந்த பதவியில் இருக்கிறது.

கு: ஈஸ்வரன் நம்மில் உயர்ந்த இடத்திலாகும் அப்படி உயர்ந்த இடத்தில் இருக்கிற ஈஸ்வரனிடத்து, ஒரே அவஸ்தையாக இருக்க வேண்டுமேயானல், ஈஸ்வரனிடம் ஒரே கதியாகவே யிருக்கவேண்டும். அந்த அவஸ்தைக்குத்தான் புண்ணியோத்கிருஷ்டம் என்று சொல்லுவது. புண்ணியம் உத்கிருஷ்டமாகிய சரீரிகளாகும் ஈஸ்வரர்கள். அதாவது புண்ணியம் உயர்ந்த பதவியாய் வந்த சரீரிகள் யாரோ அவரே ஈஸ்வரர்கள் ஆகையினல்தான் ஈஸ்வராம்ஸமாகும் இராஜாவென்று சொல்லக்காரணம். இதனல் தன்னிலிருந்து உத்பவிக்கின்ற துஷ்கிருதங்கள் உண்டாகாமல் தன்னில் மேலிடத்தில் (உபரியாய்) இருக்கின்ற ஈஸ்வரரிடம் ஏககதியாக வரும்போது, புண்ணியம் உத்கிருஷ்டமாகி இராஜாவாகின்றது. நீர் சண்டாளனென்று சொல்லப்படுகின்ற ஒரு பறையனுக்கு மேற்சொன்ன பிரகாரம் உண்டாயிற்று என்ருல் அவன் யாராகிருன்?

சி: அவன் இராஜாவாகிருன்.

கு: அப்பொழுது இராஜா வென்ருெரு சிருஷ்டியுண்டோ?

சி: இல்லை.

கு: பின் எப்படி இராஜா வாகின்றது?

சி: அவனவன் தொழிலால் ஆகின்றது.

கு: அது எப்படியெனில் தன்னுடைய சக்தி வெளியில் வியாபித்து பலவிஷயங்களிலும் சென்று பதிந்து, மோகித்து, பிரமித்துக் கிடக்கிறதை, வெளியில் யாதொரு விஷயங்களிலும் போகவிடாமல் உத்பவஸ்தானமாகிய தன்னில் தானே சேருவதற்குள்ள ஏக கதியாகி வரும்போதாகும் இராஜாவென்று சொல்லப்படுகிற அவஸ்தை. அதல்லாமல் இப்போது நாம் இராஜாவென்று அபிமானித்து வருகிறவர்களுடைய நிலைமை உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்ற ஜீவிகளுக்கு சமமாக அனுபவிக்க இருக்கிற சொத்தை கை வலுத்தவன் காரியம் என்கிற நிலையில் பிடித்தடக்கி மேலதிகாரம் பெற்றதாகும். ஒருவர் அதிக பலவந்தனகவும், ஜனக்கட்டு உள்ளவனுமானல் பாக்கியுள்ள ஜனங்களைப் பிடித்துக்கட்டி அடித்து வெட்டி நீங்கள் எனக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும், நான் இராஜா என்னுடைய சொற்

படி நடக்கவேணும் என்று எல்லாம் நிர்ப்பந்தித்துக் கீழடக்கி ஆண்டு வருவதுதான். தவிர சிலகாலத்திற்கு முன் மலையாள இராஜியத்தில் நடந்த மாப்பிள்ளைக் கலகத்தில் தலைவனாக குஞ்ஞு அஹம்மது ஆஜி இருந்தாரல்லவா, அவரை ஒரு முறையோ இருமுறையோ பிரிடிஷ் அதிகாரிகள் தண்டித்து ஜெயிலில் சிறை வைத்ததை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஷை ஆஜியானவர் தன் ஜனக்கட்டின் சக்தியை அதிகப்படுத்திக்கொண்டு பிரிடிஷ் கவர்ன்மென்டோடு எதிர்த்து யுத்தத்திற்குப் புறப்பட்டார். அது தருணம் அநேக ஜனங்களைக் கொடூரமாக உபத்திரவம் செய்து பிடித்துக் கட்டிக் கண்டதுண்டம் செய்வதற்கு ஆரம்பிக்க அப்போது அந்த இராஜ்யவாசிகள் அனைவரும் பயந்து அடங்கி அவரின் கீழ்ப்படிந்து நடந்தார்கள் என்றால் அச்சமயம் அவரை யாரென்று சொல்லலாம்?

சி: இராஜா என்று சொல்லலாம்.

கு: அப்பொழுது இராஜாவென்பது பிரத்தியேகமான ஒரு சிருஷ்டியோ அல்லது அவனவனுடைய துஷ்ட செய்கையால் உண்டாகிறதோ?

சி: அவனவனுடைய துஷ்ட செய்கையால் தான்.

கு: ஆனால், சுகிர்தம் துஷ்கிருதம் என்பது இன்னதென்றறியாததனால் தவறாகக் கிரகிக்க இடமுண்டாயிற்று. துஷ்கிருதம் என்பது நசிக்கின்றது. அதாவது சுகிர்தமில்லாமல் போகின்றது. தவிர ஒருவன் ரோகம் பிடித்து அசக்தனாய்க் கிடக்கின்றான். அவனை சுகிர்தியென்றோ துஷ்கிருதியென்றோ சொல்லவேண்டியது?

சி: துஷ்கிருதி யென்று.

கு: அப்படிச் சொல்லுவதற் கிடமில்லை. காரணம் சுகிர்தம் நசித்தால் இறக்கிறான். ரோகம் பிடித்துப் படுத்திருக்கும்போது அவனுக்கு ஜீவனிருக்கிறதல்லவா? அவன் சாகவில்லையல்லவா? பாபம் என்று சொன்னால் ஈஸ்வர சைதன்யம் இலலாதது. ரோகம் பிடித்துப் படுத்திருக்கும் சமையம் அவனுக்கு ஈஸ்வர சைதன்யம் இருக்கிறதல்லவா? ஈஸ்வர சைதன்யம் இல்லையானால் அவன் ஒரு மரப் பொம்மைக்குச் சமானமாகும். அப்பொழுதுதான் பாவம் என்று சொல்லவேண்டியது. பாவம் என்கிறது ஈஸ்வர சைதன்யம் இல்லாமல் ஜீவன் அதிலிருந்து நசித்ததாகும். ஜீவன்தான் ஈஸ்வரன். அது தான் புண்ணியம். அந்தப் புண்ணியமாயிருக்கின்ற வஸ்து நசித்து சந்திரமண்டலத்தில் பனிபோல் சென்று பதிகின்றது. அது உண்மை தான். அதென்னவென்றால் சந்திரன் என்பது மனம். சந்திர

மண்டலமென்று சொல்லப்படுகிறது மனோ மண்டலம். பனி யென்பது நீராயிருக்கின்ற ஆவி. அதாவது விசாரமாயிருக்கின்ற புகையாகும். அதெப்படி யென்றால் சந்திரமண்டலமா யிருக்கின்ற மனோ மண்டலத்தில் ஜீவனாயிருக்கின்ற புண்ணியம் அது இது என்றுள்ள விகாராதிகளாகி நசித்துப் போகின்றது. அப்பொழுதுதான் இறந்து போகின்றது. இதற்குத்தான் புண்ணியம் அழிந்து சந்திரமண்டலத்தில் பனிக்குச் சமமாய் ஆவி ரூபமாகி போகிறது என்று சொல்வது. அப்படிப் போவது என்ன ?

சி : ஜீவனாயிருக்கின்ற புண்ணியம்.

கு : ஆனால், அந்தப் புண்ணியம் தன்னிலிருந்து நசித்துப் போகும்போதுதான் இறப்பது. அதனால் புண்ணியமாயிருக்கின்ற ஒரு வஸ்து நம்மிடம் உண்டென்று ஏற்படுகிறது. அதாவது சுகிர்தமாயிருக்கின்ற தனம், அதுதான் புருஷார்த்தம். அதாவது புரமாகிய சுழிமுனையிலுள்ள அர்த்தம், புரமென்பது வீடு, சுழி முனை இருதயம். அர்த்தம் தனம், அதாவது பொருள். ஆகையால் புரமாகிய சுழிமுனை வீட்டுக்குள் இருக்கின்ற தனமாகும். அந்த தனம் நசிக்கும் போதுதான் நாம் இறக்கின்றோம். அதெப்படி யெனில் இதோ பாருங்கள் ஒரு பெட்டி, இந்தப் பெட்டி நிறையத் தனம் உண்டாயிருந்தது. அந்தத் தனத்தை சிலவழித்துக் கொண்டே வந்தால் கடைசியில் என்னவாகும் ?

சி : தனம் தீர்ந்துபோகும்.

கு : பின்பு என்ன மிச்சமுண்டு ?

சி : பெட்டி மாத்திரம் மிச்சமுண்டு.

கு : இதே பிரகாரந்தானே இந்தக்காணுகின்ற ஜடத்தை ஒரு பெட்டியென்று வைத்துக்கொள்வோம். இந்த ஜடமாயிருக்கின்ற பெட்டிக்குள் சுகிர்தம் என்கிற தனம் இருக்கின்றது. அந்தத் தனம் சிலவாகிவிட்டால் கடைசியில் அது என்னவாகும் ?

சி : இறந்துபோகும்.

கு : அப்பொழுது சுகிர்தம் என்கிற தனம் நசித்து பின் என்ன மிச்சமுண்டு ?

சி : ஜடமாகிய பெட்டி மாத்திரம் மிச்சமுண்டு.

கு : இந்த ஜடமாகிய பெட்டியிலுண்டாயிருந்த சுகிர்தம் என்கிற தனம் நசித்து, ஜடமாயிருக்கின்ற பெட்டி மாத்திரம் மிச்சமிருக்கிறது. அப்பொழுது அதைக் குழிதோண்டிப் புதைக்கிறோம்,

அல்லது சுட்டு சாம்பராக்குகிறோம். இது நமக்குப் பிரத்தியக்ஷ அநுபவமல்லவா? அதனால் இந்த ஜடத்தில் ஒரு தனம் உண்டாயிருந்ததென்றும், அது சுகிர்தமென்றும், தெரிய வருகிறது. சுகிர்தமென்பது விசேஷ கிருதம். அதாவது விசேஷம் என்றால் அறிவு. கிர்தம் என்றால் செய்யப்படுகிறது. ஆகையால் அறிவினால் செய்யப்படுகிறது சுகிர்தமும், அறிவில்லாமல் செய்யப்படுகிறது துஷ்கிருதம் என்றும் உலகத்தில் சொல்லி வருகிறார்கள். அது உண்மைதான். அறிவு என்பது என்னவென்று முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது?

சி: ஜீவ சக்தியாகிய வாயுவென்று.

கு: அது எத்தன்மையான வாயு?

சி: உள்ளில் பிரம்மத்தோடு தாக்கிக்கொண்டிருக்கிற சமீரணன்.

கு: அறிவெனும் வாயுவினால் செய்யப்படுகிறது சுகிர்தமும், அது உள்ளில் தங்காமல் வெளியே போய்க்கொண்டிருப்பது துஷ்கிருதமும் என்று பெயர். இதனால்தான் புண்ணியம் நசித்தால் பாவம் என்று சொல்லக்காரணம். அதனால் பாவம் என்பது என்ன?

சி: ஜீவனை நசிப்பிக்கிறதே.

கு: உமது ஜீவனை நீர் சிநேகித்துக்கொண்டிருக்கிறீரா?

சி: ஆம்.

கு: நீர் இறப்பதுண்டா?

சி: உண்டு.

கு: உமது ஜீவனை நீர் சிநேகித்துக்கொண்டிருந்தால் இறப்பதற்கு இடம் உண்டோ?

சி: அது எப்படியென்று எனக்குத் தெரியவில்லை.

கு: ஆனால், சொல்லுகிறேன். அதாவது உமது ஜீவனை நீர் சிநேகித்துக்கொண்டிருக்கிறதானால் அந்த ஜீவனை வெளியில் விடாமல் உம்மில்தானே அடக்கமல்லவா செய்யவேண்டும்?

சி: ஆம்.

கு: அப்பொழுது நீர் இறப்பதற்கு இடமுண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அதுமாத்திரமல்ல, உங்கள் ஜீவனை நீங்கள் சிநேகித்தால் மற்றொரு ஜீவனை இம்சிக்க இடமில்லை. எப்பொழுது தன்னைத்தான் சிநேகிக்கிறானோ, அப்பொழுது மற்றொன்றை இம்ஸிக்கிறதில்லை. தன்னைத்தான் சிநேகித்தால் தன்னைவிட்டு வெளியே போகிறதில்லை.

தன்னைவிட்டு வெளியே போகிறதில்லை யென்றால், மற்றொன்றையும் இம்ஸிக்க முடியாது. அதெப்படி யென்றால், இதோ இரண்டடுக்குள்ள ஒரு மெத்தை வீடு. அதன் கீழ் அடுக்கிற்குள் சென்று கதவை மூடி அதிலிருந்து மேலடுக்கிற்கு ஏறிப்போய் அதன் கதவையும் மூடி அங்குள்ள ஜன்னலின் வழியாகப் பார்த்தால் எல்லா அவஸ்தைகளையும் நீர் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் கீழே இறங்கி வெளியில் வராமல் ஏதேனும் ஜந்துக்களை இம்ஸிக்க முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் அதன் மேலாக நீர் இருக்கும் சமயத்தில் எல்லாவற்றையும் பார்க்கத்தான் முடியும். இதே பிரகாரந்தான் தன்னிலிருக்கப்பட்ட ஜீவன் கீழே இறங்கி வெளியில் வந்து வியாபிக்கிறதனால் தான் பல இம்சைகளையும் செய்ய இடம் உண்டாகிறது. அந்த ஜீவனை வெளியில் விடாமல் தன்னில்தானே உபரியாய் அதாவது மேல் பாகமாய் அடக்கினால் யாதொரு இம்சைகளும் செய்யாமல் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டிருக்கலாம். அப்பொழுதுதான் ஜீவனை சிநேகிக்கிறதென்று சொல்லக்கூடும். அந்த விதம் சிநேகிக்காமல் சில விஷயங்களிலும் ஈடுபடுகிறதனால் நம்முடைய ஜீவன் மூக்கின் வழியாயும் வாயின் வழியாயும் மற்றும் வெளியே போய் நசித்துப் போகின்றது. அதைத்தான் பாபம் என்று சொல்லுவது. அதாவது தன்னுடைய சுகிர்தமாய் உள்ளிலுண்டாயிருக்கின்ற ஜீவ சக்தியாகிய வாயு துஷ்கிருதமாக வெளியில் அநுலோமப் பிரதிலோமமாகி சென்று சென்று தீருகின்றது. அநுலோமம் என்றால் மூக்கின் வழியாயும் மற்றும் வெளியே விடுகிறது. பிரதிலோமம் என்றால் அவ்வழியாகத் தானே உள்ளில் தடுப்பது. இதே பிரகாரம் கமிக்கவும் அநுகமிக்கவும் செய்து கடைசியில் தன்னிலிருந்து ஜீவன் நசித்து இறந்துபோகிறது. இறந்துபோகிறதென்றால் சாகல், அதாவது நம்முடைய சத்தாயிருக்கிற ஜீவன் தன்னைத்தான் தெரியாமல் அது இது வென்றுள்ள விசாரங்களால் துஷ்கிருதமாகி வெளியே போய் நசித்துப்போகின்ற அவஸ்தை. ஆனால் இந்நிலையில் இதுவரை நீர் உமது ஜீவனை சிநேகித்திருக்கிறீரா?

சி: இல்லை.

கு: உமது ஜீவனை நீர் சிநேகித்துக்கொண்டிருந்தால் இறக்கக் கூடுமோ?

சி: இல்லை.

கு: ஆனால் நாம் எதற்தாக சுகிர்தம் செய்யவேணும்?

சி: இறக்காமலிருப்பதற்காக.

கு: இறந்தபோது அந்தப் பிணத்திற்கு ஞாபகமோ, மற்ருே உண்டா?

சி: யாதொன்றும் இல்லை.

கு: ஏன்?

சி: இறந்து போனதனுல்.

கு: இறந்தபோது அதில் என்ன இல்லை?

சி: ஜீவ சக்தியாகிய வாயு இல்லை.

கு: அப்பொழுது நம்மை ரக்ஷிப்பது யார்?

சி: ஜீவசக்தியாகிய வாயு.

கு: அதுதான் ஈஸ்வரன் என்று பெயர்.

மூன்ரும் அத்தியாயம் முற்றிற்று.

# 4-ம் அத்தியாயம்.

சி: சுவாமி! முன் அத்தியாயத்தில் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவை ஈஸ்வரன் என்று சொன்னீர்களல்லவா? அது எவ்வித மென்று விஸ்தரித்து அருளிச்செய்ய விரும்புகிறேன்.

கு: ஈஸ்வரன் என்பதின் தாற்பரியம் பரண சிரேஷ்டன் என்றாகும். அதாவது ஈஸ் + வரன், ஈஸ் = பரணம் அதாவது காப்பாற்றல்; வரன் = சிரேஷ்டன், அப்பொழுது ஈஸ்வரன் என்பது பரண சிரேஷ்டன் என்ருகிறது. ஆகையால் நம்மை பரித்துக்கொண்டிருப்பது, அதாவது காப்பாற்றுவது யார்?

சி: ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயு.

கு: அந்த வாயு இல்லாதிருந்தால் நாம் சாப்பிட, பேச, அசைய, மற்றும் செய்ய முடியுமா?

சி: முடியாது.

கு: அதுமாத்திரமல்ல, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாராதிகள் செய்வது ஈஸ்வரன் என்று சொல்லுகின்ருேம். அது சரியல்ல. அப்படிச் செய்கிறது ஜீவ சக்தியாகிய வாயுவாகும். உதாரணம்:— இவ்விடம் ஒரு நெருப்புத்தணல் கொண்டுவந்து வைத்து அதன் பேரில் ஓலைச் சருகுகளைப் போட்டால் அது தானுகவே எரியுமா?

சி: எரியாது.

கு: அது எரிய வேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும்?

சி: ஊதவேண்டும்.

கு: அதை எப்படி ஊதுவது?

சி: ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயுவைக் கொண்டுதான்.

கு: அந்த வாயுவைக்கொண்டு என்ன உண்டாயிற்று?

சி: அக்கினியின் பிரகாசம் உண்டாயிற்று.

கு: அந்தப் பிரகாசத்தை நாம் காண்பதுண்டா?

சி: காண்பதுண்டு.

கு: காணப்படுவதற்கு என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி: ரூபம் உண்டாயிருக்கவேண்டும்.

கு: வாயுவிற்கு ரூபம் உண்டா?

சி: இல்லை.

கு: ரூபம் யாருக்கு உண்டாயிற்று?

சி: அக்னிக்கு.

கு: அக்னியுடைய ரூபம் என்ன?

சி: பிரகாசம்.

கு: அப்பொழுது பிரகாசமாயிருக்கின்ற ரூபத்தை சிருஷ்டித்தது யார்?

சி: வாயு.

கு: அப்பொழுது சிருஷ்டி கர்த்தா யார்?

சி: சிருஷ்டி கர்த்தா ஜீவ சக்தியா யிருக்கின்ற வாயு.

கு: அந்தப்பிரகாரம் வாயுவால் சிருஷ்டிக்கப்பட்ட பிரகாசமாகிய ரூபத்தைக்கொண்டு ஒரு மெழுகுவர்த்தி கொளுத்திப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினால் எரியுமா?

சி: பெட்டிக்குள் வாயு இருக்கும் வரை எரியும், அப்புறம் எரிகிறதில்லை.

கு: காரணம் என்ன?

சி: வாயு இல்லாததனால்.

கு: அது எரிந்துகொண்டிருக்க என்ன வேண்டும்?

சி: வாயு இருக்கவேண்டும்.

கு: அப்பொழுது ஸ்திதி செய்கிறது யார்?

சி: வாயு.

கு: எரிந்துக்கொண்டிருக்கிற பிரகாசத்தை அணைக்கவேண்டுமானால் என்ன வேண்டும்?

சி: வாயு வேண்டும்.

கு: வாயுவைக்கொண்டு எப்படி அணைப்பது?

சி: ஊதி அணைப்பது.

கு: அப்பொழுது சம்ஹாரம் செய்வது யார்?

சி: வாயு.

கு: சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், செய்கிறது யார்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுதானென்று வெளிப்படுகிறது.

கு: ஆகையால் அந்த வாயுதான் சக்தி. அந்தச் சக்தியிலிருந்து தான் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், உண்டாகின்றன. இதற்குதான் சிவ சக்தி என்று சொல்லப்படுகிறது. அதனுல்தான் சக்தியொழிந் தால் சிவனும் சவரூபமாம் என்று சொல்லக்காரணம். தவிர அர்த் தங்களும் அனர்த்தங்களும் அதாவது இன்ப துன்பங்கள் உண்டாகின் றன. உலகிற்கு ஏக காரணமா யிருக்கின்றதும் விசேஷமா யிருக்கின் றதும், சரீரமாகும்.

சி: ஓ சுவாமின், இதுவரையிலும் எல்லாவற்றிற்கும் காரணம் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவென்று சொல்லிவந்தீர். ஆனுல் இப் போது சரீரம் என்று சொல்லுகிறீர். இதற்கு காரணம் யாது?

கு: சரீரம் என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா?

சி: ஆஹா, தெரியும்.

கு: அது யாது?

சி: இதோ இந்த உடல்.

கு: நீர் இப்போது தொட்டுக் காண்பித்ததற்கு சரீரம்யென்று பெயரில்லை. அதன் பெயர் மார்பு. சரீரத்தைத் தொட்டுக்காண்பிக்க முடியுமா?

சி: எல்லா அவயவங்களோடு கூடிய ஒரு ரூபத்திற்குச் சரீ ரம் என்று பெயர்.

கு: ஆனுல் எல்லா அவயவங்களும் இல்லாதிருந்தால் அதைச் சரீரம் என்று சொல்லக்கூடாதோ?

சி: சொல்லக்கூடாது.

கு: ஒரு மனிதனுக்குக் காலில்லை, ஒரு மனிதனுக்குக் கை யில்லை, மற்றொருவனுக்குக் கண்ணில்லை, வேறொருவனுக்கு மூக்கு இல்லை, ஒருவனுக்கு மேற்கூறிய அவயவங்கள் கால், கை, கண், மூக்கு இவை யாதொன்றுமில்லையானுல், அவர்களுக்குச் சரீரம் இல்லையென்று சொல்லக்கூடுமா?

சி: கூடாது.

கு: அன்றியும் மேற்சொல்லப்பட்ட அவயவங்களுக்கெல்லாம் பிரத்தியேகம் ஒவ்வொரு பெயருண்டு, அதனுல் அவையொன்றும் சரீ ரமாகா. அது மாத்திரமல்ல தோல், நரம்பு, எலும்பு, முதலானவை

சரீரத்திற்குச் சம்பந்தப்பட்டவை யென்றும் சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும் தோலேயும், நரம்பையும், எலும்பையும், எடுத்து விட்டால் சரீரத்தைக் காணலாகுமா ?

சி : காணமுடியாது.

கு : ஏன் ! உம்மை இரண்டு மூன்று பேர் தொட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் அவர்கள் உம்மை சம்பந்தப்பட்டிருக்கிறர்களல்லவா ?

சி : ஆம்.

கு : அவர்கள் உம்மை தொடாதிருக்கும்போது உம்மோடு சம்பந்தப்பட்டிருக்கிறர்களா ?

சி : இல்லே.

கு : அப்பொழுது உங்களே வேறிட்டுக் காண்கிறதில்லேயா ?

சி : காணுகிறதுண்டு.

கு : அப்படியானல் சரீரத்தைச் சம்மந்தப்பட்டிருக்கிற தோல், நரம்பு, எலும்பு, முதலியதை வேறிட்டு எடுத்தால் சரீரத்தைப் பிரத்தியேகமாய்க் காணவேண்டியதல்லவா ?

சி : ஆம்.

கு : ஆனல் அப்படிக் காணுகிறதுண்டோ ?

சி : இல்லே.

கு : ஆகையால் இந்தக் காணப்படுகிறதற்குச் சரீரம் என்று சொல்லுகிறதற்கிடமில்லே. சரீரம் என்பது என்னவென்றல் த்ரவிக்கக்கூடியது (அதாவது திராவகமாதல்) க்ஷயிக்கக்கூடியது (அதாவது குறைந்துபோதல்) க்ஷீணிக்கக்கூடியது (அதாவது மெலிந்துபோதல்) இப்பிரகாரம் நஸித்துப்போகிறதற்கும். அப்படியிருக்கத் தொட்டுக் காண்பித்ததைத்தான் சரீரம் என்று சொன்னல் இது நஸிக்கிறதுண்டோ ?

சி : உண்டு.

கு : எப்படி ?

சி : இறந்து போகிறது.

கு : இறந்தபோது நசித்ததோ ?

சி : ஓ, நசித்தது.

கு : சே, ஒரு போதும் நசிக்கிறதில்லே. நீர் இதற்குச் சரீரம் யென்று தொட்டுச் சொல்லுகிறீர். அப்படியிருக்க இறந்தபோதும்

7424a

இதைக் காண்பதுண்டு. நசிக்கவில்லை. பின்பு ஒரு குழியில் புதைத்தோ, அல்லது சுட்டுச் சாம்பராக்கியோ நசிப்பிக்கிறதல்லாமல் அது தானாகவே நசிக்கிறதில்லை.

சி : ஓ, தானாகவே நசிக்கிறதுண்டு.

கு : எப்படி ?

சி : சிலகாலம் வைத்துக்கொண்டிருந்தால்.

கு : சிலகாலம் வைத்துக்கொண்டிருந்தால் எப்படி நசிக்கும்?

சி : கெட்டுக் கிருமி கீடாதிகள் தின்று நசிக்கிறது.

கு : ஆனால் அது தானாகவே நசிக்கிறதில்லை. மற்றொன்றினால் உபத்திரவம் ஏற்பட்டு, அல்லாமல் தனியே நசிக்கிறதுண்டோ ?

சி : இல்லை.

கு : தவிர மற்றொன்றினால் அதற்கு உபத்திரவம் நேரிடாமல் பத்திரப்படுத்தினால் நசிக்கிறதில்லை. அதற்கு உதாரணம் :— ஈஜிப்டு முதலிய பல தேசங்களில் அரண்மனைகளிலும் அநேக ஆயிர வருஷங்கள் கடந்த பிணங்கள் இப்பொழுதும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனாலதை நாம் பார்த்ததில்லை, பார்த்ததைச் சொல்லலாம். சமுத்திரத்திலிருக்கிற எட்டை சுறா, திரண்டி, திமிங்கலம், என்று சொல்லுகிற பெரிய பெரிய மீன்களைப் பிடித்து உப்பிட்டுக் காய வைத்து பத்து ஐயாயிரம் வருஷ காலம் கடந்தவைகள் இப்பொழுதும் இருக்கிறதுண்டு. அதை அநேகரும் பார்த்து வருகிறார்கள். அந்தப்பிரகாரமே இதையும் பத்திரப்படுத்தினால் நஸிக்குமா ?

சி : நசிக்காது.

கு : ஆனால் இது நசிக்கிறது எப்படியென்றால் மேற்சொல்லிய மீன்களாகிய பிணத்தை மனிதனென்று அபிமானித்து வருகிற புழுக்கள் தின்று தீர்ப்பதுபோல் இந்தப் பிணத்தையும் ஜீவிகளாகிய கிருமிகள் தின்று தீர்க்கிறது. இந்தப் பிரகாரமல்லாமல் தானாக நஸிக்கிறதில்லை. தவிர இறந்தபோது இதிலிருந்து நஸித்தது எது ?

சி : ஜீவசக்தி.

கு : இதிலேயிருந்த ஜீவ சக்தி நஸித்து இறந்தபோது இதற்கு என்னவென்று பெயர் ?

சி : பிணம்.

கு : அதுவரைக்கும் இதற்கு என்னவென்று பெயர்.

சி : சரீரம் என்று பெயர்.

கு: இதனால் எது சரீரம் என்றும் எப்போது பிணம் என்றும் சொல்லலாம்?

சி: ஜீவ சக்தியாகிய வாயு இருக்கிறவரை சரீரமென்றும், இல்லாதபோது பிணம் என்றும் சொல்லலாம்.

கு: அப்பொழுது ஜீவசக்தியாகிய வாயுவுக்குத்தான் சரீரமென்று சொல்லவேண்டும். அந்தச் சரீரமாகின்ற வாயு இந்த ஜடத்தில் ஸ்திதி செய்கிற காலம் வரையிலும் சரீரம் என்றும், எப்போது இந்த ஜடத்திலிருந்து வேறுபட்டுப் பிரிந்து போகிறதோ, அப்போது பிணம் என்றும் சொல்லப்படுகிறது. அந்தச் சரீரமாகிய வாயு உடம்பிலிருந்து வேறுபடும்போது பிணமாகிறது. அதனால் வாயுதான் சரீரம். தவிர சரீரம் இருக்கும்போது ஆகாரங்களை உட்கொள்ளுகிறது. சேஷ்டைகள் காண்பிக்கிறது. காணுகிறது, கேட்கிறது, அறிகிறது, முதலிய தொழில்களும் உண்டாகின்றன. சரீரம் இல்லாதிருந்தால் பக்ஷிப்பதற்கும், சேஷ்டைகள் காண்பிப்பதற்கும், கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும், செய்வதற்கும், முடிகிறதில்லை. இந்த ஜடமென்பதைச் சரீரமென்று சொன்னால் இறந்தபோதும், அந்த ஜடத்தைக் காண்கிறோம் அல்லவா?

சி: ஆம்.

கு: அப்பொழுது முன்சொன்ன யாதொரு சேஷ்டைகள் முதலானவை அதற்கு உண்டாயிருந்ததோ?

சி: இல்லை.

கு: அது சரீரமாயிருந்ததென்றால் முன் சொல்லப்பட்ட சேஷ்டைகள் உண்டாயிருக்க வேண்டியதல்லவா?

சி: வேண்டும்.

கு: அப்பொழுது இதற்கு சரீரமென்று சொல்வதற்கு இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: ஆனால் சரீரமென்பது எது?

சி: ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவென்று வெளிப்படுகின்றது.

கு: ஆனால் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுதான் ஜடத்திலிருந்து த்ரவித்து நசிக்கின்றது. அது எப்படி யென்றால், நீர் ஊற்றுப்போல, பஞ்சேந்திரயங்களின் வழியாகக் கரைந்து கரைந்து வெளியில் போய் க்ஷயித்து (கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து) க்ஷீணித்து (மெலிந்து) இல்லாமல் போகின்றது. அது எது என்

றால் முன் சொல்லப்பட்ட வாயுதான். ஒருவனது முழங்கால் முட்டியில் ரத்தவாதத்தால் வீக்கம் இருக்கிறது. அந்தக் காலை அசைப்பதற்கு முடியுமா ?

சி : முடியாது.

கு : காரணம்?

சி : அந்தக் காலில் ரத்தம் கட்டியிருப்பதால் ஜீவசக்தியாயிருக்கின்ற, வாயுவின் கதாகதத்திற்கும் இரத்த ஓட்டத்திற்கும் தடை நேரிட்டிருக்கிறது.

கு : தவிர, பச்சைவாதம் பிடித்து கைகால் முடங்கினவருடைய கைக்கும் காலுக்கும் சக்தியிருக்கின்றதோ ? அவைகளை கிள்ளினால் வருத்த முண்டாகிற துண்டோ ? அல்லது அந்தப் பாகங்களை நகர்த்த முடியுமோ ?

சி : இல்லை.

கு : ஏன் ?

சி : ஜீவசக்தியாகிய வாயு கதாகதம் செய்யாததனால்.

கு : அப்பொழுது க்ஷீணிப்பது எது ?

சி : ஜீவசக்தியாகிய வாயு.

கு : அந்த ஜீவசக்தியாகிய வாயுதான் தேகம். தேகமென்றால் தகிபடுகிறது என்று பொருள். அப்படி தகிபடுகின்றது ஜீவசக்தியாகிய வாயு. அது எவ்விதமென்றால் ஒரு கல்லரையில் கொட்டாங்கச்சி, அதாவது, தேங்காய் தொட்டியும், காய்ந்த விறகும் போட்டு கிருஸ்ணையில் வார்த்து அதற்குள்ளில் ஒரு தேகத்தை வைத்து தீ, கொளுத்தி, அதற்குள் வாயு புகாமல் பத்திரம் செய்ததானால் அது எரியுமோ ?

சி : எரியாது.

கு : ஏன் ?

சி : வாயு இல்லாததனால்.

கு : அப்பொழுது அக்னி எதிலிருக்கிறது ?

சி : வாயுவிலிருக்கிறது.

கு : இதோ தெரிகின்ற விறகில் அக்னி பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது அதனோடு சம்மந்தப்படாத மற்றொரு விறகு எரியுமோ ?

சி : எரியாது.

கு: எப்பொருளில் அக்னி இருக்கிறதோ அப்பொருள்தான் எரியும். வாயுவில் அக்னி உள்ளதினுல் வாயு தகிபடுகிறது. அக்னி சப்த சொரூபம். அந்த சப்த மூலியமாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு தகித்து நசித்துப்போகிறது. அதனுல் அதற்குத் தேகம் என்று சொல்லப்படுகிறது. கத்தாதே, கத்தாதே, என சொல்வதின் காரணம், இதனுல்தான், அன்றியும், மலையாளத்தில் சில இடங்களில் அழுகிறதற்கு காளுதல் என்றும் சொல்லுகிறதுண்டு. அப்படிச் சொல்வதின் காரணம், கத்துதலும், காளுதலும், அக்னியானதனுல். ஆகையால், அக்னி சொரூபமா யிருக்கின்ற சப்த வாயிலாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு நசித்துப்போகிறபடியால் வாயுவுக்கு தேகமென்று சொல்லப்படுகிறது. ஜீவனுயிருக்கின்ற அவ் வாயுவே ஈஸ்வரன். அந்த ஈஸ்வரன்தான், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், முதலியவைகளைச் செய்வது, அவ்விதம் சிருஷ்டியாதிகளைச் செய்கிறது ஜீவசக்தியாகிய வாயுதான், என்று மெய்ப்பிக்கலாம். அதற்கு உதாரணம் :— ஒரு பிணம் சம்யோகம் செய்யுமா ?

சி: செய்யாது.

கு: ஏன் ?

சி: அந்தப் பிணத்துக்கு ஜீவசக்தியாகிய வாயு இல்லாததனுல்.

கு: அப்பொழுது ஜடத்தில் ஜீவசக்தி கதாகதம் செய்யும்போது மாத்திரமே சிருஷ்டி உண்டாக்கக்கூடும். அச்சமயம்தான் சம்யோகம் செய்ய விருப்பம் உண்டாகும். சம்யோகமில்லை யானுல் சந்தானம் உண்டாகுமோ ?

சி: உண்டாகாது.

கு: ஏன் ?

சி: சம்யோகம் இல்லாததனுல்.

கு: ஆனுல் சம்யோகம் செய்வதற்கு என்ன வேண்டும் ?

சி: ஜீவசக்தியாகிய வாயு வேண்டும்.

கு: ஆனுல் அந்த வாயு ஒன்றினுலேயே சிருஷ்டி யுண்டாகுமோ ?

சி: உண்டாகிறதில்லை.

கு: ஆனுல் அந்த வாயு எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது ?

சி: பஞ்ச பூதங்களைக்கொண்டு.

கு: பஞ்ச பூதங்களென்று சொல்லுவது எவை ?

சி: பிருதிவி, அப்பு, அக்னி, வாயு, ஆகாயம்.

கு: இவைகளெல்லாவற்றையும் ரூபமில்லாமலிருக்கின்ற வாயு ஒரு ஸ்திரீயினுடைய வயிற்றுக்குள் கொண்டுபோய் எவ்விதம் சிருஷ்டிக்கின்றது? அப்படிச் சிருஷ்டிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் எதைக்கொண்டு சிருஷ்டிப்பதென்று நாம் ஆலோசிக்கவேண்டியது? அதற்கு திருஷ்டாந்தம்:—நாலைந்து வயதுள்ள ஒரு குழந்தை சம்யோகம் செய்ததென்றால், அந்தச் சம்யோகம் நிமித்தம் சந்தானம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: என்ன காரணம்?

சி: அந்தக் குழந்தைக்கு இந்திரியம் முற்றாததனால்.

கு: இந்திரியம் என்றால் என்ன?

சி: சுக்லம்.

கு: சுக்லமாயிருக்கின்ற பீஜம் ஸ்திரீயிடம் சென்று விழாமலிருந்தால் கெற்பம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது?

சி: சுக்லம் கொண்டு.

கு: அந்த சுக்லம் ஜீவனுக்கு கீழாகவோ மேலாகவோ இருக்கிறது?

சி: ஜீவனுக்கு கீழாகவேதா னிருக்கிறது.

கு: அந்த ஜீவன் இருப்பது எவ்விடம்?

சி: ஆகாசத்தில்.

கு: ஆகாசம் என்பது என்னவென்று முன் சொல்லப்பட்டிருக்கிறது?

சி: சிரசென்று.

கு: ஆனால் அந்த ஆகாசம் புருவ மத்தியத்தின் மீது தலையினுள் உச்சிவரை யாகும், அந்த ஆகாசத்தில்தான் ஜீவன் இருக்கிறது. அந்த ஜீவனுடைய சலனத்தைத்தான் ஜீவசக்தியாகிய வாயுவென்று சொல்லுவது. அந்த வாயு உத்பவித்த புருவ மத்தியத்திலேதான் சுக்லமிருக்கிறது. சுக்லம் புருவ மத்தியத்திலென்பதற்கு திருஷ்டாந்தம்:—வியாதியினால் ஜடம் களைத்தோ, அல்லது நாடிகளுக்கு க்ஷீணம் ஏற்பட்டோ, அதிக தூரம் நடந்து தாதுக்களானவை

சோர்வடைந்தோ, முன்னரே ஒரு ஸ்திரீயைக்கண்டு மோகித்தோ, வேறெதனாலோ, தனக்குரிய ஸ்தானத்திலிருந்து இளகி யிருக்கின்ற சுக்லம் சம்யோக சமயத்தில் இன்ன இடத்திலிருந்து வருகிறதென்று அறிய முடியாது. முன் கூறியவண்ணம் தனக்குரிய இடத்திலிருந்து முன்னரே இளகாமல் புணர்ச்சியினால் மட்டும் சுக்லம் இளகுமே யானால் ஜடம் விறைத்துபோவதும், கண்கள் மூடி மூடிப்போவதும், தலை நடுங்குவதும் உண்டாகும். அதன் காரணம், எல்லா நாடிகளும் வந்து சேருமிடம், புருவ நடு, அதுதான் சுழிமுனை, என்று சொல்லப்படுகிற நெருப்புக்கண், நாடிகளிலிருந்து உண்டாகிற வீரியம்தான் சுக்லம், அது அக்னி நேத்திரமாகிய புருவ மத்தியத்தில் இருக்கிறது. அதைத்தான் அக்னி மயமாயிருக்கின்ற சுக்லம் என்று சொல்லுவது. ஜீவனிலிருந்து உத்பவிக்கும் சக்தியாயிருக்கின்ற வாயு ஜடத்தினுள்ளே கீழும் மேலும் கதாகதம் செய்ய உத்பவிக்கின்ற சக்தி ஐம்பொறி வாயிலாய் வெளியேபோய் நசிக்கிறது. இந்தப்பிரகாரம் நசிக்கின்ற சக்திதான் மாயை. சிருஷ்டி சம்யோகத்தால் உண்டாகிறது. ஆனால் சம்யோக சமயத்தில் மேல் பிரகாரம் பஞ்சேந்திரியங்களின் வழியாய் வெளியில் போகின்ற சக்தி வெளியில் போகாமல் தன்னுள்ளே ஏககதியாய் இளைப்பு ரீதியாய் மேல்பாகம் தனது உத்பவ ஸ்தானமாகிய புருவ மத்தியத்துக்கு சென்று அவ்விடம் ஸ்திதி செய்துக்கொண்டிருக்கின்ற ஜீவனோடு கூடுகிறது. அதாவது உள்ளில் கதாகதம் செய்துக்கொண்டிருக்கிற சக்தி ஸ்திரீயும், புருவ மத்தியத்தில் ஸ்திதி செய்துகொண்டிருக்கின்ற ஜீவன் புருஷனுமாகும். இந்தப்பிரகாரமுள்ள ஸ்திரீபுருஷ சம்யோகத்தினால் அக்னி சொருபமாயிருக்கின்ற சுக்லத்தை இளக்கியும் அந்தச் சுக்லத்தை மேல் சொல்லிய ஜீவன் சக்தியோடு கூடி கீழே கொண்டுவந்து சக்தியின் வழியாக அச்சுக்லத்தால் அந்த ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு சிருஷ்டிக்கவும் செய்கிறது. சிருஷ்டி உண்டாகிறது இவ்விதந்தான்.

சி: குருவே, சிருஷ்டி நான்குவிதமாகும் அதாவது சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம், என்று சொல்லுகிறார்கள். அதனால் அந்தச் சிருஷ்டியினுடைய ஸ்திதியை விஸ்தரித்து சொல்லவேணுமாக அபேக்ஷிக்கிறேன்.

கு: நீர், சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம், என சிருஷ்டி நான்குவிதமாமென்று சொன்னீரல்லவா? அவைகள் எவையென்று தெரிந்திருக்கிறீர்?

சி: சுவேதஜம் என்றால் வியர்வையிலிருந்து உண்டாகிற பேன், மூட்டைப் பூச்சி, முதலியவைகளும்; அண்டஜம் என்றால், முட்டையிலிருந்து உண்டாகிற பக்ஷி, பாம்பு, மீன், முதலியவை

களும்; உத்பீஜம் என்றால், பூமியிலிருந்து முளைத்து உண்டாகின்ற புல்பூண்டு, விருக்ஷாதிகள் வரையிலும், ஜராயுஜம் என்றால், பிரஸவித்து உண்டாகின்ற மனிதர் பசு முதலியவைகள் என்றும் தெரிந்திருக்கின்றேன்.

கு: ஆனால் இந்த வண்ணம் ஒருக்காலத்திலும் உண்டாக இடமில்லை. ஏனென்றால், நீர் கருதிய வண்ணம் வியர்வையிலிருந்தும், முட்டையிலிருந்தும், பூமியிலிருந்தும், பிரஸவித்தும், உண்டாகிற அனைத்தும் வெவ்வேறு விதமாகவல்ல. இவையெல்லாம் ஒரே விதத்தில்தான் உண்டாகிறது. அதெப்படியென்றால் மூட்டைப்பூச்சியும், பேனும், முட்டையிலிருந்துதான் உண்டாகிறது. மூட்டைப்பூச்சி வஸிக்கும் ஸ்தலமாகிய துவாரத்தில் பார்த்தால் அநேக முட்டைகளைக் காணலாம். அந்த முட்டைகள் உடைந்துதான், மூட்டைப்பூச்சுகள் உண்டாகின்றன. அதேமாதிரியாகத்தான், பேனுக்கும் முட்டை உண்டு. அதற்குத்தான் ஈர் என்று பெயர், இது நமக்கு பிரத்தியக்ஷ அநுபவமாகும். இந்த இரண்டு வர்க்கங்களும் மனிதர்களுடைய ரத்தபானம் செய்து ஜீவித்து வருகிறது. அதனால்தான் மூட்டைப்பூச்சிகள் ஜனங்கள் அதிகம் வாசஞ் செய்யும் ஸ்தலங்களிலும், பேன் ஜனங்களுடைய தலைகளிலும் இருக்கிறது. இதல்லாமல் வியர்வையிலிருந்துதான் உண்டாகிற தென்றால், எல்லோருக்கும் வியர்வையுண்டு. ஆனால் எல்லாரிடமும் பேன் காணப்படுகிறதோ? தவிர ஜனங்கள் வாசம் செய்துகொண்டு வருகிற எல்லா இடங்களிலும் மூட்டைப்பூச்சிகள் காணப்படுகிறதோ? இல்லை. ஆனால் பிரம்மாண்ட கடாகமேதானே சுவேதத்திலிருந்துதான் உத்பவித்துள்ளது. சுவேதம் சுயமாக உண்டான வியர்வை, அவ்வியர்வை உண்டாகக் காரணம் என்ன?

சி: உஷ்ணம் அதிகரித்ததனால்.

கு: உஷ்ணம் உண்டாகக் காரணம் என்ன?

சி: அக்னி அதிகரித்ததனால்.

கு: அக்னி எதிலிருக்கிறது?

சி: வாயுவிலிருக்கிறது.

கு: வாயுவென்றால் என்ன?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற தேகம்.

கு: ஆனால் வாயுவாயிருக்கின்ற தேகத்தில், அக்னி அதிகரித்தபோது அதிலிருந்து ஆவியாக உத்பவித்த வியர்வைதான் சுக்லம். இந்தச் சுக்லத்தைக் கொண்டுதான் சர்வ சிருஷ்டிகளும் அப்பொழுது

எல்லா உற்பவங்களும் சுவேதத்திலிருந்தாகும். அல்லாமல் நம்முடைய ஜடத்திலிருந்து உண்டாகின்ற வியர்வையினல் யாதொரு சிருஷ்டியு மில்லை. தேகத்தின் வியர்வைகொண்டாகும் சிருஷ்டி, தேகம் என் பதை இன்னதென்றறியாததனல் உலகோர் தப்பிதமாகத் தீர்மானிக்க இடமுண்டாயிற்று. தேகம் என்பது முன் சொல்லப்பட்ட வாயு வாகும். அதை எப்போது வாயுவென்று உலகம் அறிகிறதோ அப் போதுதான் அந்த தப்பிதமான தீர்மானம் மாறும். தவிர ஒரு குழந்தை ஜனித்தபோது அதற்கு சுக்லம் இருந்ததில்லை. அதில் அக்னி அதிகரித்தபோது நாளடைவில் சுக்லம் விருத்தியாகிக் காமாதிகள் உண்டாகின்றன. இந்தப் பிரகாரம்தான் உத்பவம்.

சி: குருவே! இந்தச் சுக்லத்தால் எவ்விதத்தில் சிருஷ்டிக் கிறதென்று விஸ்தரித்துச் சொல்லித்தர அபேக்ஷிக்கிறேன்.

கு: இந்த சுவேதமாயிருக்கின்ற சுக்லம் முதலில் முட்டை யாகின்றது. அந்த முட்டையிலிருந்துதான் உத்பவம். அதெப்படி என்ருல், காட்டுக்கொட்டையின் பாலை, ஒரு இலையில் பிடித்து, ஈர்க் கின் நுனியை வட்டமாகக் கட்டி அந்தப்பாலில் தொட்டு எடுத்து ஊதினல் அது எவ்விதமாகப் போகிறது?

சி: அது முட்டை வடிவாகப் போகிறது.

கு: அதன் காரணம் என்ன?

சி: அதை ஊதியபோது வாயு அதனுள் அடங்கியதனல்.

கு: ஆனல், இந்தப் பால் ஒருவிதப் பசையுள்ளது. அந்தப் பாலில் ஈர்க்கை வட்டமாகக் கட்டித்தோய்த்தபோது அதற்குள்ளில் பசையாயிருக்கிற பால் வட்டவடிவமாகப் பற்றிக்கொள்ளுகிறது. அதில் ஊதியபோது வாயு நிறைந்து ஒரு முட்டை வடிவாக ஈர்க்கி லிருந்து விடுபட்டுப் போகிறது. சிலவற்றில் ஒன்றிரண்டாயும், சில தில் ஐந்து பத்தாயும் சிலதில் சிறிது சிறிதாய் அநேகமாகியும் சிலதில் ஒன்றும் இல்லாமலும் போய்விடுகிறது. இது ஊதியதின் கிரமப்பிர காரந்தான் சம்பவிக்கின்றது. இதுபோலவே சுக்லமென்பது ஒரு பசை. அந்தப் பசையாயிருக்கின்ற சுக்லத்தைச் சம்யோக சமை யத்தில் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயு இளகச்செய்து, மூத்திர துவாரத்தின் மார்க்கமாய்க் கொண்டு வருகின்றது. மூத்திர துவா ரத்தின் நுனிவரையிலும் வந்தபோது, அந்த வாயுவினுடைய கதி ஒரே விதமாகவிருந்தால் அந்தச் சுக்லம் மூத்திர துவார நுனியி லிருந்து வாயுவால் நிரப்பப்பட்டு முட்டை வடிவமாகி விடுபட்டுக் கற் பப்பையில் சென்று விழுகின்றது. இம்மாதிரி விழும் முட்டைகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி ஒன்ருே இரண்டோ குழந்தைகள் ஜனிக்

கின்றன. தவிர சிலர் பாம்பு முட்டையைப் பிரஸவித்ததாகவும் சொல்லுகிறார்கள். அது பாம்பு சம்யோகம் செய்வதனாலல்ல, தாது சக்தி அதிகமானதால் சம்யோக சமயத்தில் இளைப்பு அதிகமாகி ஜீவ சக்தியாகிய வாயு சுக்லத்தை இளக்கிக்கொண்டு வரும்போது பன்னீர் சொம்பிலிருந்து பன்னீர் விழுவது போல் மூத்திரத் துவாரத்தி லிருந்து வாயுவால் சிதைவுண்டு சிறுசிறு துளிகளாக மாறித் தென்னம் பூபோல் கெற்பப் பையில் சென்று விழுகிறது. இப்படி விழுந்து ஜனித்த காலத்தில் உருவங்காரணமாக பாம்பு முட்டைப் பிரஸவிக்கப் பட்டதென்று சொல்லுகிறார்கள். இந்த விதந்தான் சிருஷ்டியி னுடைய ஸ்திதி இவ்விதமன்றி வேறுவிதமாய் சிருஷ்டி உண்டாகு வதற்கு இடமுண்டோ?

சி: இதை ஆலோசித்துப் பார்க்கும்போது இந்தப்பிரகார மல்லாமல் மற்று எந்த விதத்திலும் சிருஷ்டி உண்டாகுவதில்லை என்று புலப்படுகிறது.

கு: அப்பொழுது நம்மை சிருஷ்டித்தது யார்?

சி: ஜீவசக்தியாயிருக்கிற வாயு.

கு: அப்பொழுது சிருஷ்டி கர்த்தா யார்?

சி: ஜீவசக்தியாகிய வாயு.

கு: நாம் ஜீவித்திருக்கவேண்டுமானால் என்ன வேண்டும்?

சி: வாயு வேண்டும்.

கு: அப்பொழுது நம்மில் ஸ்திதி செய்வது யார்?

சி: வாயு.

கு: ஒருவன் இறந்தபோது அதில் என்ன இல்லாமலாயிற்று?

சி: வாயு.

கு: அப்போது சம்ஹாரம் செய்வது யார்?

சி: வாயு.

கு: அப்பொழுது, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், செய்கின்றது யார்?

சி: ஜீவசக்தியாகிய வாயுவென்றே நிச்சயமாகின்றது.

கு: இந்த வாயுவைத்தான் ஈஸ்வரன் என்று சொல்லுவது. இதனால் ஈஸ்வரனுக்கு நாமரூபம் இல்லையென்றும், உள், வெளி, அடி முடி, இல்லாத, சர்வ வியாபி என்றும் உள்ளும் வெளியும் நிறைந் திருக்கின்ற வஸ்துவென்றும் சொல்லக்காரணம். ஏனெனில் வாயு விற்கு நாமமோ ரூபமோ உண்டோ?

சி: இல்லை.

கு: இதனால்தான் ஈஸ்வரனுக்கு நாமரூபமில்லையென்று சொல்லக் காரணம். வாயுவிற்கு உள்ளும் வெளியும் உண்டோ?

சி: இல்லை.

கு: இதனால்தான் ஈஸ்வரனுக்கு உள்ளும் வெளியும் இல்லையென்று சொல்வது. வாயுவிற்கு அடியோ, முடியோ, உண்டோ?

சி: இல்லை.

கு: இதனால்தான் ஈஸ்வரனுக்கு ஆதியந்தம் இல்லையென்று சொல்வது. ஆனால் இந்த வாயு எப்படியிருக்கிறது?

சி: சர்வ வியாபியாயிருக்கிறது.

கு: இதனாலேதான் ஈஸ்வரன் சர்வ வியாபியென்று சொல்லக் காரணம். ஆனால் ஈஸ்வரன் உள்ளும் வெளியும் நிறைந்த வஸ்துவென்று சொல்லப்பட்டது. உள்ளும் வெளியும் இல்லாத வஸ்துவிற்கு உள்ளிலும் வெளியிலும் நிறைய இயலுமோ?

சி: முடியாது.

கு: ஆனால் நாம் இல்லையானால் நமக்கு உள்ளும் வெளியும் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: எப்பொழுது உள்ளும் வெளியும் உண்டாயின?

சி: நாம் உண்டான பின்பு.

கு: நாம் தூங்கும்போது உள்ளும் வெளியும் நமக்கு இருந்தனவா?

சி: இல்லை.

கு: எப்பொழுது உள்ளும் வெளியும் உண்டாயின?

சி: தூக்கம் விழித்தபோது.

கு: அது எவ்விடமிருந்து உண்டாயிற்று?

சி: நம்மிலிருந்தேதான்.

கு: அப்பொழுது தானாயிருக்கின்ற வஸ்து ஆகாசமாய்த் தோன்றி உள்ளும் வெளியும் உண்டாயின. அது தன்னிலிருந்துதான் உற்பவித்ததாகும். அப்பொழுது நம்மிலிருந்து உத்பவித்த உள்ளும் வெளியும் நிறைந்திருக்கின்ற வஸ்து என்ன?

சி: வாயு.

கு: இதனால்தான் ஈஸ்வரன் உள்ளும் வெளியும் நிறைந்திருக்கிறதென்று சொல்லக் காரணம். அங்ஙனமாயின் ஈஸ்வரனாய் இருக்கின்ற வஸ்து எது?

சி: வாயு.

கு: அறிவாயிருக்கிற வஸ்துவோ?

சி: அந்த வாயுவேதான்.

கு: காப்பாற்றுகிற வஸ்துவோ?

சி: அதுவும் வாயுவே.

கு: இப்போது ஈஸ்வரனாய், அறிவாய், காப்பாற்றுவதாய், இருக்கிற வஸ்து வாயுதான் என்று தெரிந்தது. அது அறியாமல் நாம் கல்மரம் முதலானவற்றால் உண்டாக்கிய பிரதிமைகளை ஈஸ்வரனென்று சங்கல்ப்பித்து நம்முள்ளில் ஸ்திதி செய்கிற ஜீவசக்தியாகிய வாயுவை வெளியில் போக்கி இறந்து போகிறோம். அதனால் அதை வெளியில் விடாமல், தனது உள்ளேயே நடத்தி, ப்ரம்மரந்திரத்தில் சேர்க்கின்றதுதான் மோக்ஷம். இதற்கே ஈஸ்வர சேவையென்று சொல்லுவது. இப்படியிருக்க உலகத்தில் ஈஸ்வர சேவையென்று சொல்லிச்செய்து வருகிறது எவ்விதம்?

சி: குளித்து கோயிலில் சென்று விளக்கேற்றி பிம்பத்தை இளநீர் பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து, மாலை முதலியவைகளால் அலங்கரித்து, பழம் தேங்காய் முதலானவற்றை வைத்து பூஜை நைவேத்தியமும், ஓமம், முதலியவை செய்கிறதும் செய்விக்கிறதும்தான்.

கு: இதற்கு ஈஸ்வர சேவையென்று சொல்லக்கூடுமோ?

சி: சொல்லக்கூடாது.

கு: ஈஸ்வர சேவையென்று சொன்னால் என்ன?

சி: ஈஸ்வரனை சேவிப்பது.

கு: ஈஸ்வரனை சேவிப்பதென்று சொன்னாலோ?

சி: ஈஸ்வரனை பஜிப்பதென்றாகும்.

கு: ஆனால் ஈஸ்வரனை சேவிப்பது எவ்விதமென்றால், அதற்கு ஒரு உதாரணம்:—ஒரு வைத்தியன் ஒரு வியாதிக்கு அமிர்தக்கொடி கழஞ்சி ஆறு, கடுக்காய்த் தோல்கழஞ்சி நாலு, சுக்கு கழஞ்சி இரண்டு, இவைகளை ஒரு படி ஜலத்தில் கஷாயம் வைத்து அரைக்

கால் படியாகச் சுண்டக்காய்ச்சி, இறக்கி வடிக்கட்டிக்கொண்டு, அதில் ஒரு அச்சு கரும்புவெல்லம் தட்டிப்போட்டு என்ன செய்யவேணு மென்று எழுதிக்கொடுக்கிறார்?

சி: அதை சேவிக்கவேணுமென்று.

கு: அப்பொழுது சேவிப்பதென்பதென்ன?

சி: குடிக்கிறது.

கு: நாம் ஈஸ்வர மயமாய் ஈஸ்வரனோடு ஐக்கியமாக வல்லவா வேண்டும்?

சி: ஆம்.

கு: அப்போது ஈஸ்வர மயமாவதற்கு ஈஸ்வரனை உட்கொள் ளாமல் வெளியில் விட்டால் ஈஸ்வரமய மாகலாமோ?

சி: ஆக முடியாது.

கு: அப்பொழுது ஈஸ்வரமயமாவதற்கு வேண்டி ஈஸ்வரனை அறிந்து சேவிக்கவேண்டும். ஈஸ்வரனை அறியாவிட்டால் சேவிக்க முடியுமா?

சி: முடியாது.

கு: ஈஸ்வரன் யாரென்று நாம் இதுவரை கருதியிருந்ததென் றால், சிவன், ராமன், கிருஷ்ணன், குட்டிச்சாத்தான், பத்திரகாளி, பகவதி, கணபதி, சுப்ரமணியன், என்றும் மற்றும், இப்பொழுது ஈஸ்வரனென்பது யாரென்று வெளிப்பட்டது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவென்று.

கு: அந்த வாயுவை சேவிக்கிறதற்குத்தான் ஈஸ்வர சேவை யென்று சொல்லுவது. தவிர நம்முடைய ப்ரம்மரந்திரத்தில் சேர்க் காமல் மோக்ஷம் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: ப்ரம்மரந்திரமென்று சொல்லுவது எவ்விடம்?

சி: அது நம்மில் மேற்பாகத்தில் உள்ளது.

கு: ஆனால் ஜீவன் நமக்கு உள்ளிலோ வெளியிலோ?

சி: உள்ளே.

கு: உள்ளிலுள்ள ஜீவன் நமக்கு மேலாக உள்ள ப்ரம்மரந் திரத்தில் சேர்ந்து மோக்ஷம் கிடைப்பதற்கு மார்க்கம் உள்ளிலோ? வெளியிலோ?

சி: உள்ளேதான்.

கு: உள்ளிலுள்ள ஜீவனை நம்மில் மேலாக உள்ள ப்ரம்மரந்திரத்தில் சேர்த்து மோக்ஷம் கிடைப்பதற்குவேண்டி வெளிவழியாகக் கொண்டுபோனால் சேருமோ? சேர்ப்பதற்கு முடியுமோ?

சி: முடியாது.

கு: உள்ளே யிருக்கின்ற ஜீவன் வெளியில்போய் தீர்ந்தால் அப்போது சொல்லுகிறது என்ன?

சி: இறந்து போயிற்றென்று.

கு: இறந்த பின் பெயர் என்ன?

சி: பிணம்.

கு: பிணத்திற்கு மோக்ஷமுண்டோ?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: ஜீவன் இல்லாததால்.

கு: அப்பொழுது யாருக்கு மோக்ஷம்?

சி: ஜீவனுக்குத்தான்.

கு: ஜீவனுக்கு என்ன மோக்ஷம்? ஜீவனை யாதாகிலும் பந்தப்படுத்தி யிருக்கிறதா? ஜீவன் நிற்பந்தன், நிற்முக்தன், நிர் அகங்காரன், நிர்மோகி, நிர்ச்சங்கன், எனப்படுகிறது. அப்படி யிருக்கின்ற ஜீவனுக்கு எதற்காக மோக்ஷம். மோக்ஷமென்றால் என்ன?

சி: மோக்ஷம் என்பது மோசனம்.

கு: மோசனம் என்று சொன்னால் என்ன?

சி: விடுதலை.

கு: விடுதலை என்று சொன்னாலோ?

சி: பந்தத்திலிருந்து விடுபடுதல்.

கு: ஜீவனை யாரேனும் பந்தனம் செய்திருக்கிறார்களா?

சி: இல்லை.

கு: ஆனால் தன்னிலிருக்கின்ற ஜீவன் வெளியில் வியாபித்து விஷயங்களைப்பற்றி பிடித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதுதான் பந்தம். அது எவ்விதமென்றால், இதோ பாருங்கள், இந்தப் பலகையை இப்போது நான் என்ன செய்திருக்கிறேன்?

சி: மார்புடன் சேர்த்து இரண்டு கைகளைக்கொண்டு கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்.

கு: நான் இதை இரண்டு கைகளாலும் கட்டிப் பிடித்துக் கொண்டு ஐயையோ, என்னை விட்டுவிடு, நான் போகவேண்டும் என்றிவ்விதம் அழுதுக்கொண்டிருந்தால் என்னை இந்தப் பலகை விடுமா ?

சி: விடாது.

கு: ஏன் ?

சி: பலகையை அந்தச் சமயம் சேர்த்து பிடித்திருப்பதால்.

கு: பலகை நம்மைப் பிடித்திருக்கிறதா ?

சி: இல்லை.

கு: ஆனால் நானென்ன செய்யவேண்டும். யார் பிடித்திருக்கிறது என்று பார். நான் பலகையைப் பிடித்திருந்தேனே, அல்லது பலகை என்னைப் பிடித்திருந்ததோ, யென்று பார்க்கும்போது பலகை என்னை பிடித்திருக்கவில்லை, நானே பலகையைப் பிடித்திருந்தேன். ஆனால் இந்தப் பலகையை விடுகிறேன் அப்போது என்னவாயிற்று ?

சி: பலகை வேறுபட்டுப் போய்விட்டது.

கு: இப்படியே தானாகிய சிவன் சக்தியாய் வெளியில் வியாபித்து அப்போது சிவசக்தியாயிற்று. அந்தச் சக்தியிலிருந்து சிருஷ்டிகள் உண்டாயின. அவைகளைத் தாயார், தகப்பனார், மனைவி, மணாளன், புத்திரன், புத்திரி, வீடுவாசல், தனம், ஸ்தானம், மானம், ஜாதி, சுத்தம், அசுத்தம், என்று கட்டிப் பிடித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இவைகள் ஒன்றும் நம்மை கட்டிப்பிடிக்கவில்லை. நாமே அவைகளைக் கட்டிப் பிடித்திருக்கிறோம். அதெப்படி யென்றால் தூங்கும்போது தாயார் என்றோ, தகப்பனார் என்றோ, மற்று யாதொன்று என்றோ இல்லை. அன்றியும் நமது மிகவும் பிரியமான புத்திரனோ சகோதரனோ நமது அருகில் படுத்துத் தூங்கும்போது நாமும் தூங்குகிறோம். அந்தச் சமயம் நம்முடைய கைகால்களை முன் சொன்னவருடைய மேலே ஒன்றும் தெரியாமல் போடுகிறோம். அப்பொழுது யாதொன்றும் அறிகிறதில்லை. தவிர இருக்காலிகளாகிய நம்மில் மிகவும் கீழானவனென்று ஒரு பறையனை நாம் எண்ணி வருவது வழக்கம். தூங்குகிற சமயம் அவன் அருகில் வந்து நம்மைத் தொட்டால் நாம் அறிவதுண்டோ ?

சி: இல்லை.

கு. அதுவுமல்லாமல் மேற்சொன்ன பறையன் மிகவும் அருவருப்புக்கிடமாகிய ஒரு உணவை உண்கிறான். அதாவது செத்த மாட்டை ஒரு குழியில்போட்டு அது புழுக்கும் சமயம், அப்புழுக்களை யெடுத்து, கஞ்சிவைத்து அந்தக் கஞ்சியை அவன் சாப்பிடு

கிருன். மேற்படி கஞ்சியை நாம் தூங்கும் சமயம் அந்தப் பறையன் ஒரு கரண்டியிலெடுத்து நமது வாயில் ஊற்றினனென்ருல் அது என்ன செய்யும்?

சி: தூக்கமானதால் அது உள்ளே இறங்கிவிடும்.

கு: அப்பொழுது நமக்குத் தெரியுமோ?

சி: தெரியாது.

கு. ஏன்?

சி: நமக்குத் தூக்கமாய் இருந்ததனுல்.

கு: நாம் தூங்கும்போது நம்முடைய சக்தி உள்ளிலோ வெளியிலோ?

சி: அப்போது உள்ளில் அடங்கியிருந்தது.

கு: தன்னுடைய சக்தி தன்னிலிருந்து வெளியே வியாபிக்க அந்தச் சக்தியிலிருந்து சிருஷ்டிகளுண்டாயின, தன்னுல் சிருஷ்டிக் கப்படுகிற பொருள்களை தானே கட்டிப்பிடித்துப் புலம்புகிருன். அதெப்படி என்ருல் நான் முன்னமே ஒருபலகையை கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருந்தேனல்லவா? அதுபோலவே தான். மேற் சொன்ன விஷயங்களையும் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருக்கின் ருேம். அந்தப் பிடியை அதிலிருந்து வேறுபடுத்தி அந்தச்சக்தியை தன் உள்ளில் நடத்தி ப்ரம்மரந்திரத்தில் கலக்கச் செய்வதுதான் மோக்ஷம். இதற்காகவே உபதேசம். உபதேசம் எதற்காக?

சி: மோக்ஷம் சித்திப்பதற்காக.

கு: மோக்ஷம் சித்திக்க ஜீவனுக்கு மேல்கதியோ கீழ்கதியோ எது வேண்டும்?

சி: ஜீவனுக்கு ஊர்த்துவ கதி வேண்டியது.

கு: ஜீவனுக்கு ஊர்த்துவ கதி கிடைக்கத்தக்க எதாவது உபதேசம் உலகத்தில் இப்பொழுது இருப்பதாக நீர் அறிந்ததோ, கேட்டதோ உண்டோ?

சி: உண்டு, பஞ்சாக்ஷரம் முதலான பலமந்திரங்களும், மஹா வாக்கியங்களாகிய: பிரம்மோபதேசங்களும் இப்பொழுது உலகத்தில் நடப்பிலுள்ளதாய் நான் அறிந்ததும் கேழ்விப்பட்டதும் உண்டு.

கு: ஆனுல் சிவசிவா, ராமா, நாராயணு என்றும் மற்றும் ஓம் ஐயும் கிலியும், ஸௌம், வதவத வாக்வாதினியை பாலபரமேஸ்வரி, ஸ்வாஹா, ஓம் ரீம் நமசிவாயா வென்றும், ஓம் நமோ நாராயணுய வென்றும், தவிர அஷ்டாக்ஷரி, திரியாக்ஷரி, ஏகாக்ஷரி: திரிபுரசுந்தரி,

சுயம்வரம், இன்னும் பிரம்மோபதேசமென்று சொல்லுகிற பிரக்ஞான பிரம்மம், அகம்பிரம்மாஸ்மி, தத்வமசி: அயம் ஆத்ம பிரம்மம் இப்பேர்ப்பட்டவைகள்தான், உபதேசமென்று சொல்லி உலகத்தில் இப்போது நடந்து வருகிறது. இந்தப்பிரகாரம் நாம் உச்சாடனம் செய்கிறதனலோ, தியானிக்கிறதினலோ நமது ஜீவனுக்கு மேல்கதி கிடைக்குமென்று நினைக்க இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: இந்தப்பிரகாரம் உற்சாடனம் செய்து கொண்டிருப்பதனல் நமது ஜீவன் ஊர்த்தகதியாகவோ, அதோகதியாகவோ போகிறது?

சி: அதோ கதியாகப் போகிறது.

கு: அதோகதியாகின்றது எப்படியென்று சொன்னல் அக்னி சொரூபமாயிருக்கின்ற சப்த மூலியமாக ஜீவனைப், தேகமாய், இருக்கின்ற வாயு தன்னிலிருந்து தகித்து அதோகதியாகப்போகிறது. அப்போது தான் நாம் இறக்கின்றது. அது அதோகதியாகாமல் ஊர்த்த வகதியில் போகத்தான் உபதேசம். உபதேசமென்பது உப+தேசம் இதில் உப என்பது என்ன?

சி: சமீபம்.

கு: தேசம் என்ருலோ?

சி: ஸ்தானம் (இடம்.)

கு: அப்போது உபதேசமென்பது என்ன?

சி: சமீப ஸ்தானம்.

கு: இந்த சமீப ஸ்தானம் யாருக்கு?

சி: நமக்கு.

கு: நமக்கு ஜீவனில்லாவிட்டால் ஸ்தானம் உண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: ஜீவன் இல்லாதிருந்ததனல்.

கு: ஆனல் ஸ்தானம் யாருக்கு?

சி: ஜீவனுக்கு.

கு: நாம் ஏதேனும் வழியில் நடக்கிற சமயத்தில் பின்னிருந்து அறியாத ஏதேனும் சப்தம் உண்டாகக்கேட்டு திடீரென்று பயப்படு

கிற சமயத்திலோ, அல்லாமல் ஒரு குழியிலோ மற்ருே கால்தவறி விழுகிற சமயத்திலோ, நமது ஜீவன் எவ்விதமாகப் போகிறது?

சி: அப்பொழுது ஒரே கதியாக மேற்பக்கமாய்ப் போகிறது.

கு: அப்பொழுது ஜீவனுடைய ஸ்தானம் எது?

சி: மேல் பக்கம்.

கு: அது நம்முடைய உள்ளிலிருந்தோ, வெளியிலிருந்தோ, மேற் பாகமாகப் போகிறது?

சி: அது நமது உள்ளிலிருந்து.

கு: ஜீவன் நமது உள்ளில் வியாபித்து மூத்திர துவாரத்தின் கடைசிவரை இருக்கிறது. அந்த ஜீவன் இல்லாவிடின் சுக்லம் இல்லை. அந்த ஜீவன்தான் சுக்லம். அந்தச் ஜீவன் மூத்திர துவாரத்தினுடைய பாதிவரையில்தான் வருகிறதென்ருல் சுக்லமோ, மூத்திரமோ வெளியில் வருகிறதில்லை. அது மூத்திர துவாரத்து கடைசிவரைக்கும் வந்து சுக்லத்தையும் மூத்திரத்தையும் வெளிக்குத் தள்ளுகிறது. இதனல் மூத்திர துவாரத்தின் கடைசிவரை ஜீவன் இருக்கிறதென்று தெரிகிறது. நாம் பயப்படும்போது நமது ஜீவன் மேல் பாகம் அதிவேகமாய் எவ்விடமிருந்து ஏறுகிறது?

சி: மூத்திர துவாரத்தின் உத்பவஸ்தானத்திலிருந்து.

கு: ஜீவன் இந்தப் பிரகாரமாக உள்ளில் இருக்கிறது. இந்தப் பிரகாரம் உள்ளில் கிடக்கின்ற ஜீவனுடைய மார்க்கத்தை நன்ருக்கவேண்டும். இதற்குத்தான் ஜீவனுடைய மார்க்கத்தை நன்ருக்கவேணுமென்றும், ஜீவனை நல்ல கதியில் சேர்க்கவேண்டுமென்றும் சொல்லுவது. அது எதுவென்ருல், தனது உள்ளில் வியாபித்திருக்கிற ஜீவனை உள்ளிலுள்ள மார்க்கத்தை நன்ருக்கி அந்த மார்க்கத்தின் வழியே ஒரே கதியாக சதா நடத்துகிறது. அப்போதுதான் ஜீவனுக்கு கதி வருகிறது. மற்றெந்த விதத்திலும் ஜீவனுக்கு கதி வருகிறதில்லை. தவிர நீர் யாரேனும் இறந்துபோகும் சமயத்தில் பார்த்திருக்கிறீரா?

சி: பார்த்திருக்கிறேன்.

கு: அது சமயம் சுவாஸத்தின் கதி எவ்விதம்?

சி: மேல் பாகத்திற்கு.

கு: அந்தத் தருணத்தில் வேண்டிய கதிதான் இப்போது நான் சொல்லிய கதி. அது எப்படி யென்ருல் இதோ பாருங்கள்............இவ்விதமாகும். இதுதான் வேண்டியது. இந்தக்கதி அப்பொழுது கிடைக்கிறதுண்டோ?

சி : இல்லை.

கு : அது என்னென்றால் பிறப்புண்டானால் இறப்புண்டென்று நாம் எண்ணியிருக்கிறோம். அது தவறு. இறக்காமலிருப்பதற்கு ஏதேனும் வழியுண்டா இல்லையா என்று யோசியாத காரணத்தால் அப்படித் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் நாம் மரிக்கப் படிக்க வேண்டும். மரிக்கப் படிக்காததனால் நரகம் அநுபவிப்பதற்கும் இறந்துபோகிறதற்கும் இடம் உண்டாகிறது. மரிக்கப் படித்தால் நாம் நரகம் அநுபவிக்கவும் இறந்துபோகவும் இடமில்லை. மரிக்க என்றால், மறக்க என்ற பொருள். எதை மறக்க என்றால் நான் என்று சொல்லப்பட்ட நிலைமையையும் உலகத்தையும் மறந்து தன்னுடைய ஜீவனை உள்ளில் அடக்கம் செய்கிறதுதான். அந்த மார்க்கத்தைப் படித்து ஜீவனை அடக்கம் செய்தால் நாம் இறக்க இடமுண்டோ ?

சி : இடம் இல்லை.

கு : மறப்பதற்கு வேண்டிய கதிதான் முன் காண்பித்துக் கொடுத்தது. அதை முன்னமே படிக்காததனால் இறக்கும் சமயத்தில் அந்த கதி கிடைக்காமல் நாலு ஐந்து பத்து இருபது முப்பது தினங்களும் ஏறக்குறைய ஒரு வருஷம் கூட படுத்து சுவாசம் மேலே இழுத்து முட்டி. ஜடம் புண்ணாகி, புழுத்து, அப்புழுக்கள் துழைக்க உணர்வில்லாமல் கிடந்து மிகுதியும் கஷ்டப்பட்டு இறந்து போகிறதை நாம் கண்டதில்லையா ?

சி : கண்டிருக்கிறோம்.

கு : அப்பொழுது அவர்கள் அநுபவிக்கின்ற நரகம் இன்ன விதத்திலென்று அவர்களுக்குச் சொல்லமுடியுமா ?

சி : முடியாது.

கு : பார்த்துக்கொண்டிருந்த நமக்கு எவ்வளவு சங்கடம் தோன்றுகிறது. அக்கஷ்டத்தை இந்தவிதமென்று நமக்குச் சொல்ல முடியுமா ?

சி : முடியாது.

கு : ஆனால் இப்பொழுது மேற்கூறிய கதியை அப்பியசித்திருந்தால் அப்பொழுது இந்தப்பிரகாரமுள்ள கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி வருமா ?

சி : வராது.

கு : நமக்குப் பிரம்மரந்திரம்இப்போது மூடியிருக்கின்றதோ, திறந்து இருக்கின்றதோ ?

சி: மூடியிருக்கிறது.

கு: மூடிக்கிடக்கிற பிர்ம்மரந்திரம் திறக்காமல் ஜீவனை பிரம்ம ரந்திரத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியுமா?

சி: முடியாது.

கு: தன்னிலுண்டாயிருக்கின்ற ஜீவசக்தி பிரம்மரந்திரத்தைத் திறக்காமல் அத்துடன் சென்று முட்டி அதோகதியாக வெளியே போகாமல் மேல்கதியாக்கினல் அந்தச் ஜீவன் பிரம்மரந்திரத்தைத் திறக்கும். இவ்விதம் செய்தால் ஜ்வன் பிரம்பரந்திரத்தில் கலந்து தானுயி, தன்மயமாய், நின்றுவிடும். இதுதான் மோக்ஷம். இந்த விதத்தில் அல்லாமல் மற்றெந்த விதத்திலும் மோக்ஷம் சித்திக்கிற தில்லை. இதுவரைக்கும் நமது ஜீவன் அதோகதியோ ஊர்த்துவ கதியோ?

சி: அதோகதிதான்.

கு: இந்த ஜீவன் அதோகதியாகி தன்னிலில்லாமலாகும்போது என்னவாகிறது?

சி: பிணமாகிறது.

கு: இப்பொழுது உம்முடைய ஜீவனின் கதி என்ன?

சி: ஊர்த்துவ கதி.

கு: அதோகதியாயிருக்கின்ற ஜீவனுக்கு ஊர்த்துவகதி வந்தது. உம்மில் உமக்கு உபரியான வஸ்து எது?

சி: ஈஸ்வரன்.

கு: அப்பொழுது ஜீவனுனது ஈஸ்வரனோடு ஐக்கியமாயிற்று ஜீவிஸ்வரோரைக்கியத்தின் நிலையை என்ன?

சி: அது மோக்ஷம்.

கு: இதற்குத்தான் பிராணனையும் அபானனையும் ஐக்கியப் படுத்துவதென்று சொல்லுவது. உள்ளில் இருக்கின்றது பிராணன் வெளியில் போகின்றது அபானன். அப்படி வெளியே போகும் அபானனை வெளியில் விடாமல் நிறுத்துவதற்குத்தான் பிராணுயாமம், என்று சொல்லுவது. பிராணுயாமம் என்றுல் பிராணனை ஆயாமம் செய்கிறது. ஆயாமம் செய்கிறதென்றுல் தீர்க்கிக்கிறது. அல்லது தடுத்து நிறுத்துதல், தீர்க்கிக்கிறதென்றுல் தன்னுள்ளிருக்கிற பிராணனை வெளியில் விடாமல் தன்னுள்ளில் தீர்க்கமாக நேரை நடக்

கிறது. அது நாம் தூங்குகிற சமயத்திலிருந்த கதி எந்தவிதமோ, அந்த் விதம் தூங்காதிருக்கிற சமயத்திலும் ஆக்கவேண்டும். தூங்கும் சமயத்தில் கதி உள்ளிலோ வெளியிலோ ?

சி : உள்ளில்.

கு : தூங்குகிற சமயம் டலவித சுவாஸ கதியுண்டு. சிலர் உள்ளிலுள்ள கதியிலே நின்று (க்றும்) என்றும் சிலர் எருதைப்போல் (ங்குரோ) என்றும் பலவித குறட்டை இழுக்கிறார்கள் அது என்றும் சரியான கதியல்ல. எப்படியென்றால் ஜீவ சக்தியாயிருக்கிற வாயுவுக்கு இலகுவாய் யாதொரு கோஷ்டிகளும் சப்தமும் இல்லாமல் சுவாஸம் உண்டோயென்று அறிவது கூட முடியாமல் இரண்டு மார்பினுடைய மையத்தின் குழியிலிருந்தோ, அடித்தொண்டையின் குழியிலிருந்தோ, துடிக்கிறது மாத்திரம் காணலாம். அதுதான் சரியானகதி. அந்த கதி நமக்கு தூங்காத சமயத்தில் கிடைக்கவேணும், அதுதான் நமக்கு மோக்ஷத்திற்குள்ள மார்க்கம். அந்த கதி வரும்போது நம் உள்ளில் தானே பிரகாசிக்கிறது. அது எப்படியென்றால் இந்த இடத்தில் நெருப்புவைத்து நெருப்பு இல்லாததாகிய மற்றொரு இடத்தில் ஊதினால் பிரகாசிக்குமோ ?

சி : பிரகாசிக்கிறதில்லை.

கு : அந்த தீ கனலானது பிரகாசிக்கவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் ?

சி : அந்தக் கனலின்மேல் ஊதவேண்டும்.

கு : இதே பிரகாரம்தானே அவனவனுடைய அக்னி நேத்திரமாகிய சுழிமுனையில் ஊதாமல் வெளிக்கு ஊதுவதால் நம் உள்ளில் பிரகாசிக்கிறதில்லை. ஆனதினால் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவைக் கொண்டு நம்முடைய ப்ருமத்தியமாகிய சுழிமுனையா யிருக்கின்ற அக்னி நேத்திரத்தில் ஊதி ராகத்துவேஷங்கள் முதலாகிய விர்த்திகளை எப்போது அவ்விடம் எரிக்கின்றோமோ, அப்பொழுதுதான் நம் உள்ளில் பிரகாசித்து ஞானம் உண்டாகிறது. வேறு யாதொரு விதத்திலும் ஞானம் உண்டாகிறதில்லை. மேற்சொல்லிய விதத்தில் செய்வதற்குத்தான் பிராணயாமம் என்று பெயர். இந்த உலகத்தில் தெரியாததனால் இந்த வாக்கின் பொருள் விளங்காமலும் பலவிதத்தில் செய்கிறார்கள். சிலர் மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து, மற்றொரு துவாரத்தின் வழியாய் வாயுவை மேலிழுத்து ஏற்றி தலையிலுள்ள மூளையை இளக்கி பைத்தியம், க்ஷயம், நாடிப்பிழை, முதலான வியாதிகளை உண்டாக்கி இறந்துபோகவும் செய்கிறார்கள். அது நிமித்தம் உலகத்தில் பிராணயாமத்தை அநேகமாக நிந்திக்கிறார்கள்.

சதா பிராணுயாமிக்கு வியாதி இல்லையென்று சொல்லப்படுகிறது. பிராணன் நமது உள்ளே யிருக்கின்றது. அப்படி யிருக்கின்ற பிராணனை வெளியிலுள்ள மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து மறு துவாரத்தின் வழியாய் வெளியிலிருந்து இழுத்தால் கிடைக்குமா ?

சி: கிடைக்காது.

கு: அதற்கு திருஷ்டாந்தம்:—ஒரு சாக்கு நிறைய நெல் இருக்கின்றது. அந்தச் சாக்கைத்தானே இன்னும் நிறைக்கு எண்ணியும், மற்றொரு சாக்கு நெல்லை கொட்டி மிதித்து அழுத்தினலும் நிறைக்க முடியுமோ ?

சி: முடியாது.

கு: அதை கவனியாமல் மேல் சொன்னவிதம் செய்தால் அந்த சாக்கு எப்படியாகும் ?

சி. அந்த சாக்கு கிழிந்துபோகும்.

கு: இதே பிரகாரந்தான் நம் உள்ளிலிருக்கும் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவினேடு வெளியிலிருக்கின்ற வாயுவையும், சேர்க்க வேணுமென்று கருதி வெளியிலிருந்த வாயுவை இழுத்து ஏற்றினல் அபாயம் நேரிட்டு, ஆபத்துக்கள் உண்டாகி இறந்துபோவதற்கிடமாகும். அதனல் பிராணுயாமம் என்று சொல்லுவது நமது உள்ளில் இருக்கின்ற பிராணனை வெளியில் விடாமல் நம் உள்ளின் உள்ளே நடத்துவதுதான். அப்படிச் செய்கின்றவருக்கு யாதொரு வியாதிகளும் உண்டாகிறதில்லை. அதனுல்தான் சதா பிராணுயாமிக்கு வியாதி இல்லை என்று சொல்லக் காரணம்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# 5-ம் அத்தியாயம்.

சி: சுவாமி, முன் அத்தியாயத்தில் சொன்னபிரகாரந்தான் சிருஷ்டி என்று எனக்கு உறுதிப்பட்டது. ஆனாலும் பஞ்ச பூதங்களைக்கொண்டுதான் சிருஷ்டியென்று சொல்லிவருகிறதின் காரணம் என்ன.

கு: பஞ்ச பூதங்களென்பது எவை?

சி: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகள்.

கு: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இவைகள் பஞ்ச பூதங்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் முன் அத்தியாயத்தில் விவரித்த வாயுவும் பஞ்சபூதங்களில் ஒன்றுதான் என்று புலனாகின்றது. எப்படியானாலும் பஞ்சபூதங்களால்தான் சிருஷ்டி. ஆனால் பஞ்சபூதங்கள் இன்னவையென்று தெரிகிறதில்லை. பஞ்சபூதங்களின் உத்பவம் சொல்லுவோம். அக்ஷரத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து அப்பும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது. பிருதிவி என்பது பூமியும், அப்பு என்பது ஜலமுமென்று சொல்லப்படுகிறது. அந்த ஜலத்திலிருந்து பூமி உண்டானதென்று சொல்லுகிறார்கள். ஒருக்காலும் இதை நம்புகிறதற்கு இடமில்லை. ஏனென்றால் பூமி என்கிற ஒரு அவஸ்தை இல்லாவிட்டால் ஜலம் முதலான யாதொரு வஸ்துவும் உண்டாகாது. பூமியில்தான் ஜலம் இருப்பது, ஜலத்தில் பூமி நிற்பதில்லை. காரணம் சமுத்திரமென்று சொல்லுவது ஜலம் நிறையப்பட்ட ஒரு பெரிய பாகமாகும். அந்த ஜலம் நிற்பதற்கு அடிஸ்தானமாகப் பூமி இல்லாவிடின் ஜலம் நிற்காது. தவிர அதில் அநேக தீவுகள் உண்டாகின்றன. அடியில் பூமி இல்லாவிடின் அப்படிப்பட்ட தீவுகள் உண்டாக இடமில்லை. அதன்றியும் கிணறு தோண்டும்போது கீழே போகப்போக ஜலத்தைப் பார்க்கிறோம். அந்த ஜலம் நிற்பதுவும் பூமியில்தான். ஆகையால் ஜலத்திலிருந்து பூமி உண்டானதென்று நம்புகிறதற்கிடமில்லை. அது எப்படியோ இருக்கட்டும் நாம் இப்போது நினைத்திருக்கிறபடி பஞ்சபூதங்களால் சிருஷ்டி உண்டாகிறதென்று ஒருக்காலும் நம்பு

வதற்கு இடமில்லை. ஏனென்றால் பஞ்சபூதங்களில் பிருதிவி என்பது பூமியும், (மண்) அப்புவென்பது ஜலமும் (தண்ணீர்) அக்னி என்பது தேஜஸமும் (பிரகாஸம்) வாயுவென்பது சலித்துக்கொண்டிருக்கிறதும் (காற்று) ஆகாயமென்பது காணக்கூடாததும் அதிகம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதும் ஆகும் (வெளி) இந்தப்பிரகாரமுள்ள ஐந்து வஸ்துக்களை சேர்த்து சிருஷ்டி செய்ய இயலாது. அதேனென்றால் இதோ காணுகிற வெளி ஆகாசமாகும். இதைப் பிடித்து பாக்கி நாலு பூதங்களோடு கூட்டிச் சேர்க்க முடியுமா?

சி: முடியாது.

கு: வாயுவென்று சொல்லுவது சலித்துக்கொண்டிருக்கிற இந்தக் காற்று இதைப் பிடித்துப் பாக்கி பூதங்களோடு சேர்க்க முடியுமா?

சி: முடியாது.

கு: அக்னியென்று சொல்லுவது தேஜஸாயிருக்கப்பட்ட பிரகாஸம். இதைப்பிடித்து பாக்கியுள்ள பூதங்களோடு சேர்க்க முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் பஞ்சபூதங்கள் தன் உள்ளிலேயே இருக்கின்றன. எவ்விதமென்றால் இதோ ஒரு மேஜை விளக்கு. அதைக்கொளுத்தி அதன்மேல் ஒரு சிம்ணி வைத்தால் நல்ல பிரகாசமுண்டாகும். அந்தச் சிம்ணி உள்ளீடில்லாமல் கெட்டியாக இருந்தால் என்ன சம்பவிக்கும்?

சி: அது எரியாமல் கெட்டுப்போகும்.

கு: ஆனால் அந்த விளக்கிலிருந்து எரிந்துக்கொண்டிருக்கிற அக்னிக்கு சிம்ணி வைக்கவில்லையானாலோ?

சி: சரியான பிரகாசம் கிடைக்காது.

கு: அப்பொழுது பரவியிருக்கிற பிரகாஸ சக்திக்கு சிம்ணி வைத்தபோது பரவுவதற்கு இடமில்லாமல் அந்தப் பிரகாஸ சக்தி ஒன்றாய் நின்றது. அப்படி ஒன்றானபோது அக்குழாய்போன்ற சிம்ணியிலிருந்து பிரதிபிம்பித்து நமக்கு அதிக ஒளி கிடைக்கிறது. ஆனால் கண்ணாடியில் செய்த சிம்ணிக்கு வெளி உண்டு, அது ஆகாசம் அந்த ஆகாய வாயிலாக வாயு கதாகதம் செய்கிறதுண்டு. அதில் வாயு கதாகதம் செய்யாதிருந்தால் அது எரியுமோ?

சி: எரியாது.

கு: ஆனல் சிம்னிக்கும் அக்னிக்கும் தம்முள் யாதொரு பந்தமும் இல்லை. சிம்னியில் வெளி இருந்தது. அந்த வெளியில் வாயு கதாகதம் செய்கிறது. வாயுவின் கதாகதம் நிமித்தம் அக்னி அதில் எரிந்துக்கொண்டிருக்கிறது. சிம்னி வைக்காவிட்டால் அந்தப் பிரகாசம் வியாபித்திருக்கும். அதற்கு அச்சிம்னியினல் தடங்கல் வந்தபோது பரவாமல் அந்தப் பிரகாசமொன்ருகி ஒரே சக்தியாகின்றது. சிம்னியான கண்ணுடி வாயிலாய் அந்த ஏகசக்தி பிரதிபிம்பித்து மிகவும் வெளிச்சமாகத் தெரிகிறது. சிம்னியை எடுத்தபோது அக்னி அங்கேதானிருந்தது. ஆகாயமும் வாயுவும் இருந்தன. ஆயினும் முன்போல் பிரகாசிப்பதில்லை. ஏனென்ருல் அந்தப் பிரகாச சக்தி பரவிவிட்டது. அப்போது முன்போல பிரகாஸம் கிடைக்கிறதுண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: அந்தப் பிரகாஸமாகிய சக்திக்கு சிம்னியால் தடை நேரிட்டுப் பிரதிபிம்பிக்கிறதற்கு இடமில்லாததனல்.

கு: இவ்வண்ணந்தான் நம்முடைய நிலைமையும், இதிலும் ஆகாயமும் வாயுவும் அக்னியும் உண்டு. இதற்கு நானென்கிற நிலைமையான ஒரு சிம்னியும் உண்டு. எப்பொழுது நானென்கிற நிலையையான சிம்னி வைக்கின்ருேமோ, அப்பொழுதே அதிலிருந்து பிரதிபிம்பித்து காண்கின்றதாகும். இந்த உலகம், நானென்கிற சிம்னியை எடுக்கும்போது உலகத்தை காண்கிறதற்கில்லை. இதல்லாமல் பஞ்சபூதங்களைக்கொண்டுதான் சிருஷ்டிக்கிறதென்று சொல்லுவதற்கு யாதொரு யுக்தியும் இல்லை. காரணம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இவைகளை ஒன்ருகச் சேர்த்து சிருஷ்டித்ததாயிருந்ததென்ருல் நாம் ஒருக்காலும் இறந்துபோக இடமில்லை. தவிர நாம் ஒருவருடைய மூக்கையும், வாயையும் அடைத்து கெட்டியாக கொஞ்ச நேரம் பிடித்திருந்தால், அப்பொழுது அவர் இறந்துபோகிருர். ஏன் இறக்கவேண்டும். ஆகாசமென்கிற பூதத்தையும் சேர்த்துச் சிருஷ்டித்ததல்லவா? நாம் மூக்கு வாய் இரண்டின் வெளியை மாத்திரம் அடைத்துப் பிடித்திருக்கிருேம். வாயு என்கிற பூதமும் அதில் உண்டாயிருந்தது. அவ்வாயுவுக்கு வாயும் மூக்கும் என்கிற இரண்டு வெளிபோக மீதியுள்ள வெளி வாயிலாய் சஞ்சரிக்கலாம் அல்லவா? அக்னி என்கிற பிரகாசமும் அதிலுண்டாகிறது. அந்தப் பிரகாஸமும் முன் அடக்கிப்பிடித்துள்ள இரண்டு வெளியில் மட்டும் பிரகாசிக்கிறதற்கு முடிகிறதில்லை. ஆனல் மிச்சமுள்ள வெளியின் வழியாய்

பிரகாஸிக்கிறதற்கு முடியாதோ? பஞ்சபூதங்களைக் கலந்து சேர்த்துத்தான் சிருஷ்டி என்றால் வாயையும் மூக்கையும் அடைத்துப் பிடித்தால் இறந்துபோகக் காரணம் என்ன? ஆனால் முன்சொன்ன மேஜை விளக்கிலிருந்து அக்னி எரிந்துகொண்டிருக்கும்போது, அதன் சிம்னிமீது அதனுடைய வெளியை மறைக்க ஏதேனுமொன்றை வைத்தால் என்னவாகும்?

சி: அணைந்துபோகும்.

கு: அதன் காரணம் என்னவென்றால் அதிலிருந்து எரிந்து ஜொலித்துக்கொண்டிருக்கும்போது மேல் பக்கமாய் வருகிற ஆவியாகிய புகை வெளியில் போகிறதற்கு தடையாயிருந்ததனால், அதிலேயே அடங்கி நிறைந்து தடித்து அக்னி எரிகிறதற்கு முடியாமல், அணைந்துபோயிற்று. இதே மாதிரியாகத்தான் நமக்கு விளக்காயிருக்கின்ற ஜடத்திலிருந்து அக்னி எரிந்து ஜொலித்து நானென்கிற நிலைமையான சிம்னியின் வழியாய் விசாராதிகளாகிய புகை வெளியில் போகாததால் தடைபட்டு, அந்த ஆவி சேரவேண்டிய ஸ்தானம் போய் சேராமல் ஜடத்தில்தானே தங்கி நிறைந்து வீங்கியதனால் எரியாமல் அணைந்துபோகிறது. அப்போதுதான் இறந்து போகிறது. தவிர, அக்னி உண்டாயிருக்கிறதென்பதற்கு திருஷ்டாந்தம்:— இப்போது இந்த ஜடத்தை தொட்டுப்பார்த்தாலோ, தேய்த்துப் பார்த்தாலோ, சூடுண்டு அது இந்த ஜடத்திற்கு பாத்தியதையுமில்லை. காரணம், முன் விவரித்த மேஜை விளக்கில் அதற்கு வைத்திருக்கின்ற சிம்னியுடைய அடியிலிருந்து சிம்னிக்கு யாதொரு பாத்தியதையுமில்லாமல் அக்னி எரிந்துகொண்டிருந்தது, அது சமயம் அந்த சிம்னியுடைய ஏதேனுமோர் பாகத்தையும் தொட முடியுமா?

சி: முடியாது.

கு: காரணம்?

சி: அதன் எல்லா இடங்களிலும் சூடிருப்பதால்.

கு: ஆனால் அதன் காரணம் சிம்னிக்கு வெளியுள்ளதாலும் அதில் வாயு கதாகதம் செய்வதாலும், அந்த வாயுவோடு அக்னி சேர்ந்து அந்த சிம்னியின் வெளி இடம் வரையிலும் வியாபிப்பதாலும் அந்தச் சிம்னிக்கு சூடு உண்டாயிற்று. அதனால்தான் சிம்னியை தொடுவதற்கு முடியாமல் இருக்கிறது. இதைப்போலவேதான் இந்த ஜடத்திற்கும் வெளியுண்டு, அந்த வெளியின் வழியாய் ஜீவசக்தி சஞ்சரிக்கின்றது. இதன் ஒரு பாகத்தில் அக்னியும் உண்டு. அந்த அக்னி ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவோடு சேர்ந்து இந்த ஜடத்தில் வெளியுள்ள எல்லா இடங்களிலும் வியாபிக்கின்றது. அப்

போது இந்த ஜடத்தைத் தொட்டால் சூடுண்டாகிறது. அக்னி அணைந்துபோகும்போது சூடுண்டாகிறதில்லை. அது எப்படியென்றால் முன் சொல்லப்பட்ட மேஜை விளக்கிலிருந்து அக்னி எரிந்துக் கொண்டிருக்கும்போது, அதற்கு வைத்திருந்த சிம்ணிக்கு சூடுண்டாகிறது. அது அணைந்தபின் அந்தச் சிம்ணியைத் தொட்டுப் பார்த்தபோது சூடில்லை. குளிர்ந்திருக்கிறது. இந்த விதந்தான் இந்த ஜடத்தில் ஜீவசக்தியாகிய வாயுவோடு அக்னி கதாகதம் செய்கிற இடம் வரைக்கும் சூடுண்டாயிருந்தது, எப்போது ஜீவசக்தியான வாயுவாகிய அக்னி இதிலிருந்து அணைந்துபோகிறதோ, அப்போது இறந்துபோகின்றது. இறந்தபின் அந்த ஜடத்தைத் தொட்டுப் பார்த்தாலோ, தேய்த்துப் பார்த்தாலோ, சூடு காண்கிறதில்லை. ஆனால் நீர் சொன்ன பிரகாரமுள்ள பஞ்சபூதங்களைக் கொண்டுதான். சிருஷ்டி யென்றால், இவ்விதமாகுவதற்கிடமில்லை. ஏனென்றால் ஆகாயம், வாயு, அக்னி, பூமி இவைகள் தனித்தனியாக நசிக்கிறதற்கிடமில்லை. எப்போது நசிக்கின்றதோ, அப்போது எல்லாம் ஒன்றாக நசிக்கவேண்டும். அதற்கு திருஷ்டாந்தம் :— பஞ்சலோகமாகிய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகளை ஒன்றாகக் கலந்து ஒரு உருவம் உண்டாக்குகிறது. அது நசிக்கும்போது ஒவ்வொன்றும் வெவ்வேறாக நசிக்கிறதில்லை. எல்லாம் ஒன்றாகவே நசிக்கிறது. இதைப்போலவேதான் பஞ்சபூதங்களைக்கொண்டு இந்த ஜடம் உண்டானதென்றால் பஞ்ச லோகங்களைக்கொண்டு உண்டாக்கப்பட்ட உரூபம், வெவ்வேறாக நசிக்காமல் ஒன்றாக நசிப்பதுபோல, இந்த ஜடமும் நசிக்கவேண்டியது. அதனாலிந்த ஜடத்தை ஒருபோதும் பஞ்சபூதங்களைக்கொண்டு உண்டாக்கியதென்று சொல்ல நியாயமில்லை. தவிர, பஞ்சபூதங்கள் இன்னின்னவை யென்றும் அவைகளைக்கொண்டு உண்டாகிற சிருஷ்டி இன்னவிதத்திலென்றும் நான் தெளிவாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். பஞ்சபூதங்களென்பது ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி இவைகளேதான். இவைகளில் ஆகாயம் என்பது, சதாசிவனான ஜோதி. அது புருவமத்தியத்திற்கு மேற்பாகமிருக்கிறது. அந்த ஜோதியிலிருந்து கீழ்பாகமாய் புருவமத்திய வரையிலும் சிவனாக ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவும், சிவனாயிருக்கின்ற வாயுவிலிருந்து புருவ மத்தியத்தின் கீழ்பாகம் நாசிவரை வாயு ருத்திரனாக பிரகாசித்துக்கொண்டிருக்கிற தேஜஸான அக்னியும், அந்த தேஜஸாகிய அக்னியிலிருந்து நாசியின் நுனிவரை அதோ பாகமாய் ஜலாம்ஸமான விஷ்ணுவா யிருக்கின்ற மனமும் விஷ்ணுவாகிய மனத்திலிருந்து அதோ பாகமாய், அதாவது அடிப்பாகம், பிருதிவியாயிருக்கிற பிரம்மா அந்தகாரமாயும், கட்டியாயும், இருக்கின்ற அகங்காரம்தான். அதாவது எவ்விதமென்றால் ஆகாச

ரூபியாய் சதாசிவனு யிருக்கின்ற ஜோதிஸிலிருந்து சர்வ வியாபியாய், ஜீவனுய், சிவனுயிருக்கின்ற வாயுவும், அதிலிருந்து த்ரவித்து (திராவகம்போல) நசித்துக்கொண்டு ருத்திரனுக அக்னி சொரூபமான தேஜஸும், அந்த தேஜஸிலிருந்து வியர்வையாய் ஜலமாகி வியாபகசீலனுய், விஷ்ணுவான மனமும், அதிலிருந்து கட்டியாய், அந்தகாரமாய் பிருதிவியாய் பிரம்மாவான அகங்காரமுமாயின. இவைதான் பஞ்சபூதங்கள், இவைகளைக்கொண்டுதான் சிருஷ்டி, இதனுல்தான் பஞ்சபூதங்களைக்கொண்டு சிருஷ்டிக்கிறதென்று சொல்லக்காரணம். இவ்விதமல்லாமல் மண், நீர், தீ, வாயு, ஆகாயம் இவைகளை ஒன்று சேர்த்து ஒரு சிருஷ்டி உண்டாவதல்ல. எப்படியென்றுல் தானுகி, சதாசிவனுயிருக்கின்ற ஜோதி சலித்து வியாபித்து, ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகி, தேயுவாகிய அக்னியாகி, ஜலமாகிய மனமாய், பிருதிவியாகிய அகங்காரமாய், அமைந்ததாகும், அப்பொழுதுதான் உலகம் உண்டானது, உலகத்தின் நிலைமை இவ்விதந்தான். அதற்குத் திருஷ்டாந்தம்:—நித்திரையில் தன்னிலிருந்து ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு பிரகாசித்து வெளியில் வியாபியாமல் இருப்பதனுல் உலகத்தைக் காண்பதற்கோ, அறிவதற்கோ, முடிவதில்லை. விழிப்பு நிலையில் அந்த வாயு பிரகாசமாய் வெளியில் வியாபித்தபோது மனமும், அகங்காரமும் உண்டாயின, அப்போது உலகமும் உண்டாயிற்று. தவிர பிணத்திற்கு உலகமில்லை. காரணம், தன்னிலிருந்து கதாகதம் செய்கின்ற ஜீவசக்தியாகிய வாயு கதாகதம் செய்யாததனுல். ஆனதினுல் தனது சக்தி எப்போது வெளியில் வியாபிக்கின்றதோ, அப்போது உலகம் உண்டாகும். எப்போது தனது சக்தி தன்னில் லயிக்கின்றதோ, அப்போது தன்னிலிருந்து உத்பவித்த உலகம் தன்னில் கலந்து தானுய், தன் மயமாய் அமைந்துவிடுகிறது. இவ்வண்ணந்தான் சிருஷ்டியினுடையவும் உலகத்தினுடையவும் நிலைமை, இத்தகைய சக்திகட்குத்தான் பஞ்ச பிரம்மமென்றும், பஞ்சபூதமென்றும், பஞ்சேந்திரியங்களென்றும் சொல்லுகிறது. ஆகையால் பஞ்சபூதங்களில் ஆகாயம் என்பது சதாசிவனுயிருக்கின்ற ஜோதியும், வாயுவென்பது சிவனுயிருக்கின்ற ஜீவனும், அக்னி என்பது உருத்திரனுயிருக்கின்ற தேயுவும், அப்புவென்பது விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், பிருதிவி என்பது பிரம்மா ஆகின்ற அகங்காரமும் ஆகும். ஆனுல் இந்தப் பஞ்சபூதங்களெல்லாம் அக்ஷரத்திலிருந்து உற்பவித்தன. அந்த அக்ஷரம் தானுயிருக்கின்ற பிரம்மம். இதைப் பற்றி முன் விவரித்திருக்கிறோம். அத்தன்மை வாய்ந்த தானே வெளி என்கிற ஆகாயமாயிற்று. அப்பொழுது அத்துடன் ஐந்து குணங்களும் உண்டாயின. அக்குணங்களேதான் முன்னர் கூறின நிலைமை. இந்த ஐந்து குணங்களாயிருக்கின்ற பஞ்சபூதங்கள் உண்டானுல்

மாத்திரமே சிருஷ்டிக்க முடியும். சிருஷ்டி உண்டாவது சம்யோகத்தினுல், இந்த ஐந்தில் ஒன்றேனும் இல்லாவிடின் சம்யோகம் உண்டாகாது. அதற்குக் காரணம், தூங்கும்போது அகங்காரமும், மனசும், பிரகாஸமும் இருக்கவில்லை. அச்சமயத்திலும், ஜீவனும் ஆகாயமும் தன்னிலேயே இருந்தன. எப்பொழுது விழிப்பு வந்ததோ அப்போது பிரகாசமாயிருக்கின்ற உருத்திரனும், மனமாகின்ற விஷ்ணுவும், அகங்காரமாயிருக்கின்ற பிரம்மாவும் உண்டாயின. அப்பொழுது ஐந்து பூதங்களும் பூர்த்தியாயின. அத்தருணம் ஐம்பூதங்களும் சேர்ந்து ஏககதியாகி வியாபகமில்லாமல் ஒன்றுபட்டு சம்யோகம் செய்ததின் நிமித்தம் சிருஷ்டி உண்டாகின்றது. இதனுற்றுன், பஞ்சபூதங்களால் சிருஷ்டி உண்டாகிறதென்று சொல்லுவதின் காரணம். இத்தகைய தத்துவங்களை உலகத்தில் கிரகிக்காமல் அநுபவஸ்தர்களால் கூறின சாஸ்திரங்களின் நுட்பங்களை உள்ளபடி உணராமல் உலகத்தார் தம்மில் தருக்கம்பேசி வாதப்பிரதிவாதம் செய்து சண்டை இட்டுக்கொள்ளுகிறுர்கள். அது எங்ஙனமென்றுல் ஒருவன் ஒரு வாழைக்கன்றை நட்டு, அதற்கு எருப்போட்டு, தண்ணீர் வார்த்து, வளர்த்துவருகிறுன். அது குலைதள்ளி முதிரவே, அதில் ஒரு காயால் பொரியலும், மற்றென்றுல் மோர்குழம்பும், இன்னென்றுல் சாம்பாரும், வேறென்றுல் கூட்டுக்கறியும், பிறிதொன்றுல் பச்சடியும், அந்நியமாய் இரண்டு காய்களைப் பழுக்கவைத்து அதில் ஒன்றினை, தோல் நீக்கி வேகவைத்து, கடைந்து, கரும்பு வெல்லமும், தேங்காய்ப்பாலும் சேர்த்து, பாயாஸமும் செய்து, அநுபவித்து மற்றைய பழத்தைக் கனியாகவே சாப்பிடுகிறுன். ஆனுல் இவையெல்லாம் யாருடைய அநுபவம்?

சி: அந்த வாழைக்கன்றை வைத்து மேற்பிரகாரம் செய்து சாப்பிட்டவருடைய அநுபவம்.

கு: ஆனுல் நாம் வாழைக்கன்றையோ, அதன் காய்கனிகளையோ, அதனுல் செய்யப்பட்ட பதார்த்தங்களையோ, கண்டதும், கேட்டதும், அறிந்ததும், இல்லையென்று வைத்துக்கொள்வோம். அப்போது முன்சொன்னவற்றை யெல்லாம், கண்டதும், கேட்டதும், தெரிந்ததும், அநுபவித்ததும் யார்?

சி: அவைகளை உண்டாக்கி அநுபவித்தவர்.

கு: அவைகளைச் செய்யாமலும், காணுமலும், கேட்காமலும், அநுபவிக்காமலும், இருக்கிறவர்களுக்கு அவைகளைப்பற்றி யாதொரு விபரமாவது தெரியுமோ?

சி: தெரியாது.

கு: ஆனால் மேற்சொன்னபடி வாழைக்கன்றை நட்டு, அதிலிருந்து உண்டான பலனை எடுத்துப் பலவித பதார்த்தங்கள் செய்து, அநுபவித்துள்ள ஒருவர் தன்னுடைய அநுபவ விபரங்களை ஓலையிலோ, காகிதத்திலோ, எழுதிவைத்ததை நாம் எடுத்து வாசித்ததினாலேயே முன்சொன்ன வாழைக்கன்றையோ, அதிலுண்டான பலனையோ, அந்தப் பலனால் செய்த பதார்த்தங்களையோ, அவைகளினுடைய உருசியையோ, மற்றெதையோ, அறிய இடமுண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் அந்த அநுபவஸ்தர்கள் எழுதிவைத்திருந்ததை மட்டும் வாசித்து, அதில் சொல்லப்பட்ட சாதனங்களின் இயல்பைத் தெரியாமல் இந்த உலகத்திலுள்ளவர்கள் போராடுகிறார்கள். எவ்விதமென்றால் ஒருவன் பாயாசத்தில் காரம் அதிகரித்ததென்றும், மற்றொருவன் மோர்க்குழம்பில் மதுரம் அதிகமென்றும், இன்னொருவன் பொரியலில் புளி அதிகமென்றும், மற்றும் சொல்லி வாதாடுகிறார்கள். ஆனால் இவர்கள் யாவரும் மேற்சொன்ன பதார்த்தங்களை உண்மையில் கண்டோ, உண்டோ, அறிந்தவர்களல்லர். அநுபவித்தவர்கள் தத்தம் அநுபவங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அவ்வநுபவங்களின் இயல்பை உணராதவர்களே போராடுகிறார்கள். அது எவ்விதமென்றால் மோர்க்குழம்பு, பொரியல், கூட்டு, பச்சடி, சாம்பார், பாயாசம், முதலான பதார்த்தங்களை ஒரு இலையில் வைத்து சாப்பிட்டு அந்த இலையில் உள்ள ரசத்தை முழுவதும் வழித்துச் சாப்பிட்டுவிட்டு கடைசியில் அந்த இலையை வெளியே போட்டால், ஒரு நாய் வந்து அதை நக்குகிறது, அந்த நாய்க்கு அந்த இலையில் இன்னின்ன பதார்த்தங்கள் பரிமாறி இருந்தன என்றும், இன்னின்னதற்கு; இன்னின்ன ருசி என்றும், அந்த இலையை நக்கும்போது தெரியுமா?

சி: தெரியாது.

கு: அதே சமயம் மற்றொரு நாயும் வந்து அந்த இலையை நக்கத் தொடங்கினாலோ என்னவாகும்?

சி: அவைகள் தம்மில் போராடி கண், மூக்கு, உதடு முதலானவைகளைக் கடித்துக் கிழித்துக்கொண்டு இரத்தம் ஒழுகச் செய்துக் கொள்ளுகின்றன.

கு: ஆனால் இந்த நாய்களின் கலகம் முன் சொன்ன பதார்த்தங்களினுடைய யாதொரு ருசியையேனும் தெரிந்த பின்னரா?

சி: அல்ல.

கு: ஆனால் அவைகளுடைய ருசியை அறிந்தது யார்?

சி: அவைகளை அநுபவித்தவர்.

கு: ஆனால் அநுபவித்தவர்களால் உண்டாக்கப்பட்டது. கிரந்தம், கிரந்தங்கள்தான் சுருதிகள். சுருதி என்பது அறிவு. அந்த அறிவு யாருடையதென்றால் அநுபவஸ்தர்களுடையதுதான். அந்த அநுபவஸ்தர்களுடைய அறிவைத்தான் நூல்களில் எழுதிவைத்துள்ளது. அக்கிரந்தாதிகளை உலகவாசிகள் வாசித்ததினாலேயே, தாங்கள் அநுபவஸ்தர்களென்று நடித்து, அநுபவஸ்தர்களால் எழுதிவைத்த அறிவின் தன்மை இந்தவிதமென்று தெரியாமல் விபரீத அருத்தத்தைக்கொண்டு முன் விவரித்தவைகளைப்போல ஜனங்கள் போராடுகிறார்கள். அதற்குக் காரணம் உலகத்தார் தமக்கு அநுபவம் வேண்டுமென்றோ, அநுபவத்தினியல்பை, அறியவேண்டுமென்றோ, ஆவல் கொள்ளாமல் தமக்குத்தலைமை, பதவி, புகழ், பெருமை, பண்டிதப்பட்டம் முதலானவற்றைப் பெறவேண்டுமென்னும், துரபிமானத்தில் மூழ்கிக் கிடந்து யாதொரு விவரமுமில்லாமலும் அக்ஷராப்பியாசம் செய்யாமலும் அதோகதியாகிப் போகிறார்கள். அதனாற்றான் உலகத்தில் தத்துவ ஞானம் இல்லாமல் போயிற்று.

சி: ஓ! பிரிய குருவே! உலகத்தில் யாவரும் அக்ஷராப்பியாசம் செய்ததில்லையென்று சொல்லுகிறீர்? அப்படியானால் உலகத்தார் எப்படிக் கிரந்தம் முதலியவைகளைப் படித்தார்கள்?

கு: அக்ஷரம் என்பது யாதென்று நீர் எண்ணியிருக்கிறீர்?

சி: அதாவது அ. முதல் 51. அக்ஷரமாகும். அதில் தமிழில் உயிரெழுத்துப் பனிரெண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும், ஆய்தவெழுத்து ஒன்றும், ஆக முப்பத்தொன்றாகிறது.

கு: அக்ஷரம் அவ்வளவில்லை. அகரம் அக்ஷரமல்ல. அக்ஷரம் என்கிற வார்த்தைக்குப் பொருளென்ன?

சி: நாசமில்லாதது.

கு: அப்பொருள் எது?

சி: அது பிரம்மம்.

கு: அந்த பிரம்மம் என்பது எது?

சி: அது தான் தான் என்பது.

கு: தவிர அ. என்று சொல்லுவதற்கு எத்தனை சப்தம்?

சி: ஒரே சப்தம்.

கு: சப்தத்திற்கு வடிவம் உண்டோ?

சி: உண்டு.

கு: வடிவம் உண்டென்றால் பார்க்கலாம் அல்லவா?

சி: ஆம்.

கு: இதோ "அ" என்று சொல்லிவிட்டேன் அதன் உருபத்தைப் பார்த்தீரா?

சி: இல்லை.

கு: ஆனால் எதற்கு வடிவம்?

சி: சப்தம் இன்னதெனத் தெரிய ஏற்படுத்தியுள்ள குறிகளுக்குத்தான் வடிவம்.

கு: அகாரத்திற்கு எத்தனை வடிவம் உண்டு?

சி: உலகத்தில் எத்தனை பாஷைகள் உண்டோ அத்தனை வடிவங்கள் இருக்கலாம்.

கு: அப்பொழுது அந்த அகாரம் என்னப்பட்ட எழுத்துக்களுக்கெல்லாம் ஒரே சப்தம் அல்லாமல் வேறே சப்தம் சொல்லுகிறது உண்டோ?

சி: அதில்லை, அந்த அகரக்குறிக்கும் சப்தம் ஒன்றுதான் எழுத்து மாத்திரம் பலவிதத்தில் இருக்கின்றது.

கு: நீர் தானே முன் 51 அக்ஷரமிருப்பதாக சொல்லியிருக்கிறீர். எத்தனை பாஷையுண்டோ அவைகளுக்கெல்லாம் பிரத்தியேகம் எழுத்துகள் உண்டென்று இப்போது சொல்லுகிறீர். அப்படி ஆலோசிக்கும்போது இந்த உலகில் 51-க்கு அதிகம் பாஷைகளிருக்கின்றன. அந்த பாஷைகளுக்கெல்லாம் ஒவ்வொருவித எழுத்துகள் இருக்கின்றன. அப்போது அகாரம் தானே 51-க்கும் அதிகமாகின்றது. எழுத்துக்களே அக்ஷரம் என்பதென்றால் நீர் முன் சொன்னதற்கெல்லாம் எவ்வளவோ அதிகமாக எண்ணிக்கை ஏற்படுகிறதல்லவா? தவிர அ என்கிற எழுத்திற்கு சப்தம் உண்டென்று நீர் சொன்னீரல்லவா? இதோ பாருங்கள் என்னுடைய இரண்டு கைகளை என்ன செய்திருக்கிறேன்?

சி: இரண்டு கைகளையும் கூப்பி, கும்பிடுவதுபோல் அடக்கிப் பிடித்திருக்கிறீர்கள்.

கு: இப்பொழுது இந்தக்கைகளை நான் என்ன செய்திருக்கிறேன்?

சி: கைகளைத் திறந்து ஒன்றுக்கொன்று வேறுபடாமல் விரித்துப் பிடித்திருக்கின்றீர்கள்.

கு: இந்தப் பிடிப்பு அகாரமா யிருக்கின்றதோ இல்லையோ?

சி: அகாரமா யிருக்கின்றது.

கு: இதற்குச் சப்தம் உண்டாயிற்ரு ?

சி: இல்லை.

கு: தவிர இதோ பாருங்கள் இப்பொழுது என்னுடைய வாய் எப்படி இருக்கிறது ?

சி: வாயை மூடி யிருக்கின்றீர்.

கு: இதற்கு அகாரமென்று சொல்லமுடியுமா ?

சி: முடியாது.

கு: இப்பொழுது எப்படி இருக்கின்றது ?

சி: இப்பொழுது வாய் திறந்து அகாரமாயிருக்கின்றது.

கு: அதற்கென்ன பெயர் ?

சி: அகாரமென்று பெயர்.

கு: அப்பொழுது அகாரத்துக்கு சப்தமிருக்கிறதோ ?

சி: இல்லை.

கு: ஆகையால் சப்தம் என்பது உண்டாக்கப்படுவதோ அல்லது தனியே உண்டாகுகிறதோ ?

சி: உண்டாக்கப்படுவது.

கு: ஆனல் உண்டாக்கப்படுகிறது நாசம் உள்ளதோ இல்லாததோ ?

சி: நாசம் உள்ளது.

கு: அப்பொழுது அ. என்கிற சப்தத்தை உண்டாக்கும் போது நமது உள்ளிலிருக்கிற ஜீவன் உள்ளில் அடங்குகிறதோ ? அல்லது வெளியில் போகின்றதோ ?

சி: அது வெளியில் போகிறது.

கு: அப்படியே நாம் ஒவ்வொரு சப்தமும் உண்டாக்கி நமது உள்ளிலிருக்கும் ஜீவனெல்லாம் நாளடைவில் வெளியில் போய் விடுகிறது. அச்சமயம் என்ன சம்பவிக்கிறது ?

சி: இறந்துபோகிறோம்.

கு: அப்பொழுது நாம் நாசமுள்ளதையோ, இல்லாததையோ எதை அப்பியாசித்தோம் ?

சி: நாசமுள்ளதை.

கு: அதனால், தன்னைத்தான் அப்பியாசிக்கின்றதுதான் அக்ஷராப்பியாசம்; அதுதான் வித்தை. அதைப் பயிலுவதுதான் வித்தியாப்பியாசம். முன் அத்தியாயத்தில் வித்தை என்பது அக்ஷரமென்றும், அக்ஷரம் என்பது தானே என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனதினால் வித்தையாய், அக்ஷரமாய், தானாயிருக்கின்ற வஸ்துவை அப்பியசிக்கவேண்டும். அப்பொழுதுதான் நாசரகித ராகிறோம். அவ்விதம் நசிக்காமலே யிருப்பதற்குத்தான் அக்ஷராப்பியாசம் செய்ய வேண்டியது. நீங்களிப்போது சொன்ன அகார முதலியவெல்லாம் அக்ஷரமல்ல. அவைகள் முழுதும் நசிக்கிறதாகும். அப்பொழுது அதற்கு அக்ஷரமென்று சொல்லுவதற்கு இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: சப்தம் உண்டாக்கி நசிக்கிறதை என்னவென்று சொல்லுவது? அக்ஷரமென்று சொல்லமுடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் நாம் அக்ஷரத்தை அப்பியசிப்பது உண்டோ?

சி: இல்லை.

கு: அக்ஷரம் அப்பியசிக்காமல் பொருள் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: பொருள் கிடைக்காதபோது பொருள் தெரியுமோ?

சி: தெரியாது.

கு: தவிர, உங்களுடைய லௌகீகப் பொருள்களைப் பத்திரப் படுத்துவது உள்ளேயோ, வெளியிலேயோ?

சி: உள்ளேதான்.

கு: இவ்வண்ணமே பொருள் உள்ளிலேதா னிருக்கிறது. உள்ளே எந்த யிடத்திலென்றால், தாதுவினிடத்தில், தாதுவிலிருக்கின்ற பொருளைத் தெரியத் தாது உணரவேண்டும். தாது உணர அக்ஷர அப்பியாசம் வேண்டும். அக்ஷர அப்பியாசமின்றித் தாதுவை உணர முடியுமா?

சி: முடியாது.

கு: தாது என்பது ஓலையிலோ, காகிதத்திலோ, அல்லது அவனவனிடத்திலோ, எங்கே யிருக்கிறது?

சி: அவனவனிடத்தில்.

கு: அவனவனிலுள்ள தாதுவுக்கு உணர்வில்லாதிருந்தால் அர்த்தம் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: ஆனதினால் அக்ஷரமாய், நாசரகிதமாயிருக்கின்ற வஸ்துவை அப்பியசித்தால் மாத்திரமே தாதுவிற்கு உணர்வுண்டாகி அர்த்தம் கிடைக்கும், அகார முதலாயிருக்கிற அக்ஷரத்தை அப்பியசித்தால் அனர்த்தமாகி தாது நசித்து உணர்வில்லாமல் போகிறது. அதனால் பொருள் கிடைக்கிறதில்லை. உலகில் என்னென்ன பொருளை நாம் தெரிந்திருக்கின்றோமோ, அது முழுமையும் தவறு. சரியாகவிருக்கின்றதை நாம் தெரியவேண்டுமென்றால், இப்போர்ப்பட்டவைகள் உத்பவிக்கிறது எங்கோ, அங்கே பார்த்துப்படிக்கவேண்டும். அப்போது நமக்குச் சரியான தத்துவத்தை கிரகிக்கலாம். அது எந்த விதமென்றால் இது ஒரு காகிதம், இதற்கு அகம் புறம் உண்டென்றும் அதன் மேல் பாகத்திற்கு அகமும் புறமும் உண்டோ ?

சி: இல்லை.

கு: ஆனால் இப்போது நானிந்தக் காகிதத்தில் என்ன செய்தேன் ?

சி: ஓர் வட்ட வடிவு வரைந்திருக்கிறீர்.

கு: இந்த வட்டத்திற்கு என்னென்ன இடங்கள் உண்டு ?

சி: உள்ளும் வெளியும் இரண்டிடங்கள்.

கு: அதன் காரணம் என்ன ?

சி: அப்படி வரைந்ததனால்.

கு: அப்படி வரையாவிடின் உள்ளும் வெளியும் உண்டாகுமோ ?

சி: உண்டாகிறதில்லை.

கு: உள்ளோ வெளியோ முதலில் உண்டானது ?

சி: உள்ளிடம்.

கு: அதன் காரணம் என்ன ?

சி: எப்போது வட்டம் வரைந்தோமோ, அப்போது உள் உண்டாயிற்று, அது உண்டாகவே அதன் எதிர்ப்பக்கம் வெளியாயிற்று. அதனால் முதல் உண்டானது அகம்,

கு: சரி, இவ்விடத்தில் இவ்வீடு இல்லாவிடின் உள்ளென்றோ வெளியென்றோ சொல்லமுடியுமா ?

சி: முடியாது.

கு: இந்த வீட்டினுடைய உள்ளே போகுவதற்குள்ள வாசற் படியில் உட்கார்ந்து வெளியில் பார்த்தால், அதனுள்ளிருக்கிறதை பார்க்கவோ, அறியவோ, முடியுமா ?

சி: முடியாது.

கு: உள்ளில் பார்க்கும் சமயம் வெளியில் யாதொன்றும் காணவோ, அறியவோ முடியுமா ?

சி: முடியாது.

கு: ஆனால் உள்ளுக்கு நேரே விபரீதம் வெளி, வெளிக்கு நேரே விபரீதம் உள். அந்தப் பிரகாரம் நமக்கும் ஆந்தரம் என்றும் பாக்கியம் என்றும் இரண்டுவித அவஸ்தைகள் உண்டு. ஆந்தரம் என்பது உள். பாக்கியம் என்பது வெளி, இதில் நமக்கு உத்பவம் உள்ளிலிருந்தோ வெளியிலிருந்தோ ?

சி: உள்ளிலிருந்து.

கு: ஆனால் உள்ளல்லவா உத்பவஸ்தானம் ?

சி: ஆம்.

கு: அதல்லவா நமது மூலஸ்தானம் ?

சி: ஆம்.

கு: அந்த மூலஸ்தானத்திலல்லவா நாம் சேரவேண்டியது ?

சி: ஆம்.

கு: ஆனதினால் ஆந்தரமாயும், உத்பவஸ்தானமாயும், மூலஸ் தானமுமாயிருக்கின்ற, உள்ளல்லவா சரியானது ?

சி: ஆம்.

கு: அதற்கு விபரீதமாயும், பாக்கியமாயும், வெளியாயுமிருக் கின்ற நிலைமையைச் சரியென்று சொல்லுவதற்கு இடமுண்டோ ?

சி: இல்லை.

கு: முன்சொன்ன உள் அல்லவா தத்துவம் ?

சி: ஆம்.

கு: அதல்லவா எதார்த்தம் ?

சி: ஆம்.

கு: அந்த எதார்த்தத்தை அல்லவா நாம் தெரிய வேண்டியது ?

சி: ஆம்.

கு: ஆனால் உலகத்தில் முன்சொன்ன ஆந்தரமாய், தத்துவமாய், எதார்த்தமாய் இருக்கின்ற அவஸ்தையைப் பாராமலே, பாக்கியமாய் தத்துவமல்லாததாகி, அசத்தியமாயிருக்கின்ற அவஸ்தையைப் பார்த்துதான் ஜனங்கள் கோஷிக்கின்றார்கள். அது தப்பிதம். தன்னுடைய எதார்த்தமான தத்துவத்தை கிரகிக்க வேணுமென்றால், தன்னிலுள்ள ஆந்தரமாகிய தத்துவத்தைப் பார்க்கவேண்டும். அப்போதே எதார்த்தத்தை கிரகிக்கவும், பாக்கிய அவஸ்தைகள் தப்பிதமென்று தோன்றவும் செய்யும். அதல்லாமல் பாக்கிய விர்த்தியை தரித்துக்கொண்டு, கிரந்தாதிகளை வாசித்து, கர்வமடைந்து, நான் மஹா பண்டிதனென்று அபிமானித்தால் யாதொரு ஞானமும் உண்டாகிறதில்லை. ஞானம் உண்டாக வேணுமேயானால், தன்னில் ஆந்தரமாயிருக்கின்ற தத்துவத்தை நாடி, அக்ஷராப்பியாசம் செய்யவேண்டும். அப்போது தாதுவிற்கு உணர்வுண்டாகிறது. அப்பொழுதுதான் சர்வக்ஞனாகிறோம்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# 6-ம் அத்தியாயம்.

சி: சுவாமீ! முன் அத்தியாயத்தில் விவரித்த விதமாகத்தான் சிருஷ்டி என்று எனக்குப் பூரண நம்பிக்கையாயிற்று. ஆயினும், நானுவிதமாக இயற்கையின் வித்தியாசம் காணப்படுகிறது. அது கிரக வித்தியாசமென்றும், அதைப் பின் விவரிக்கிறேனென்றும் மூன்ரும் அத்தியாயத்தில் அருளியிருகிறீரல்லவா? அதை விஸ்தாரமாக திருவாய் மலர்ந்தருளவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

கு: நானுவித சிருஷ்டிகள் எவை?

சி: அவை மனிதர், மிருகம், பக்ஷி, பாம்பு முதல் எறும்பு, கிருமி, கீடாதிகளாகிய ஊர்வன, நீர்வாழ்வன மீன் முதலிய பிறவுமாம்.

கு: மனிதர் என்று சொல்லப்படுவது யாரை?

சி: நம் எல்லோரையும்.

கு: நம்மை மனிதர் என்று சொல்லக் காரணம் என்ன?

சி: விசேஷ புத்தி இருப்பதால்.

கு: மற்ற ஜந்துக்களுக்கோ?

சி: விசேஷ புத்தியில்லை.

கு: ஆனல் அந்த எண்ணம் தப்பு. விசேஷ புத்தியில்லாதது நமக்கேதான். பாக்கி எத்தனை விதமான ஜீவன்கள் இருக்கின்றன என்று நாம் எண்ணிவருகிரேமோ, அவைகளுக்கெல்லாம் விசேஷ புத்தி யுண்டு. எப்படியென்ருல், ஆகாரம், நித்திரை, புணர்ச்சி, இம் மூன்றும் சர்வ ஜீவன்களுக்கும் உண்டானதே. அறிவில்லாததும் விசேஷ புத்தியில்லாததும் சர்ப்பம், மிருகம், பக்ஷி, கிருமி முதலான வைதான் என்றும், அறிவும் விசேஷ புத்தியுள்ளவரும் மனிதர்தான் என்றும், அந்த மனுஷர் நாம்தான் என்றும் அபிமானித்து வருகின் ரேம். அவ்விதந்தான் மற்ற ஜீவிகளும் கருதுகின்றன. எதார்த் தத்தில் மனுஷர் என்கிற ஒரு சிருஷ்டி இல்லாததாகும். சிருஷ்டி யில் இப்போது காணப்படுவன முற்றும் மிருகங்களே. அதாவது, இருகால் மிருகம், நாற்கால் மிருகம் முதலானவைகள். நாம் மனுஷ ரென்றும் நமக்கே விசேஷ புத்தி யுண்டென்றும், கருதியிருப்பதை

எதைக்கொண்டும் ஸ்தாபிக்க முடியாது. காரணம் யாதெனில், நாம் ஒரு கிளிப்பிள்ளையை வளர்த்தி கொஞ்சம் நாள் அதோடு பழகி "அக்கா" "அக்கா" "ரங்கா" "ரங்கா" "ஐயா" "ஐயா" என்று பலவிதமாக சொல்லக் கற்றுக்கொடுக்கிறோம். அதை எல்லாம் அது ஊக்கத்துடன் கிரகித்து நாம் பேசுகிறதுபோலவே தவறாமல் அது வும் பேசுகிறது. அந்தக் கிளிக்கு விசேஷ புத்தி யில்லாவிட்டால் நம்முடைய வார்த்தைகளை கிரகிப்பதற்கும், அதன்படி பேசுகிறதற் கும் முடியாது. நாம் எத்தனை காலம் அந்தக் கிளியோடு பழகியிருந் தும், விசேட புத்தி யுள்ளவர்களான நமக்கு அக்கிளியின் சுயபாஷை யாகிய சப்தத்தைக் கிரகிக்கவோ, அறிவதற்கோ முடிகிறதில்லை.

சி: சுவாமிகள்! கிளிக்கும் மிருகங்கட்கும் சுயபாஷையான ஒரு பேச்சு இல்லையே.

கு: அப்பிரகாரம் சொல்லக்கூடாது. உலகில் எத்தனை வகைப் பிராணிகள் இருக்கின்றனவோ அத்தனை பாஷைகளும் உண்டு. ஆனால் அவைகளை நாம் அறிந்ததில்லை. அது எப்படியெனில் உமக்கு தமிழ் பாஷை மாத்திரம் தெரியும் அப்படியிருக்க உமது முன்னிலையில் இந்துஸ்தானிக்காரர் இந்துஸ்தானியும், இங்கிலீஷ்காரர் இங்கிலீஷை யும், தெலுங்கர் தெலுங்கையும், பேசினால் உமக்கு அர்த்தப்படுவ துண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: அந்தப் பாஷை எனக்குத் தெரியாததால்.

கு: இதே பிரகாரம் தான் பக்ஷி, மிருகம், முதலானவை என்று எண்ணி வருகின்றவைகளுக்கும் பாஷை உண்டு. அதைப் படித்துப் பழகாததினால் நமக்குத் தெரிகிறதில்லை. தவிர மிருகங்க ளென்று நாம் கருதி வருபவைகளாகிய பிராணிகள் மேய்ந்துக்கொண் டிருக்கும்போது, அவற்றில் ஒன்று காணாமல் போனதேயானால் மற் றவை அதைச் சப்தித்துக் கூப்பிடுகின்றன, அவை கூப்பிட்டுக்கொண் டிருக்கிற தொனி, தவறிப்போன மிருகம் கேட்டு தன்னைக் கூப்பிடு கின்றன என்று அறிந்து பதில் தொனி கொடுத்து ஓடிவந்து சங்கத் தில் சேருகின்றது. இந்தப் பிரகாரமே பக்ஷிகளிலும் ஊர்வனவைக ளிலும் ஏற்படுவதை நாம் காண்ப தில்லையோ?

சி: உண்டு.

கு: அப்பொழுது அவைகளுக்கும் பாஷைகள் உண்டாயிருக் கிறதல்லவா? அவைகள் தங்கள் தங்கள் பாஷையில் கூப்பிடுவதும் பேசுவதும் உண்டு. அதை அவைகள் அறிதலும் அநுசரித்தலும்

செய்கிறதுண்டு. ஆனல் அது நமக்கு அறியாமலிருக்கிறதற்குக் காரணம் என்ன ?

சி: நாம் அந்தப் பாஷைகளைப் படியாததனல்.

கு: அதெப்படியெனில் மனுஷியர் என அபிமானிக்கிற நாமே வேறு பாஷைகளில் பேசும்பொழுது அப்பாஷைகளைப் படியாததனல் தெரிந்துக் கொள்ள முடிவதில்லையே, அதே பிரகாரமே பக்ஷி, மிருகாதிகளென்று உங்களால் சொல்லப்படுகிறவையின் பாஷைகளையும் படிக்காததனல் அறிந்துகொள்வதில்லை. ஆனல் அவைகளோவெனில் நாம் எந்தப் பாஷையில் பேசினலும் அதை அறிந்து அநுசரித்து நடக்கின்றன. எவ்வாறெனில் பாஷை மாறுபடுகின்ற அந்நிய தேசத்திலிருந்து நாம் ஓர் எருதை தமிழ் தேசத்திற்குக் கொண்டுவந்து ஏர் உழவேண்டி நுகம் வைத்து கலப்பை கட்டி வயலில் உழுகிற சமயத்தில் வலதுபுறம், இடதுபுறம், நேராக நடவென்று இப்படியெல்லாம் சொல்வதைக்கேட்டு அவை யனுசரித்து அந்தப்பிரகாரம் செய்கிறதல்லவா ? இதுமாத்திரமல்ல, காட்டு மிருகங்களென்று நாம் சொல்லுகிற சிங்கம், யானை, புலி, சிறுத்தை, கரடி, இவைகளைப் பிடித்து அநேகவிதமான தேகாப்பியாசங்களைக் கற்றுக்கொடுத்து சில சர்க்கசுகளில் கொண்டுவந்து ஆட்டி வைக்கிறார்கள், அவைகளும் அதே பிரகாரம் ஆடுகின்றன இது நமக்கு அநுபவமல்லவா. இந்தப் பிரகாரம் ஆடுவதனல் அவைகளுக்கு விசேஷ புத்தி உண்டென்றோ இல்லையென்றோ நாம் கருதவேண்டியது ?

சி: உண்டென்றே தான்.

கு: தவிர நமக்கு விசேஷ புத்தியில்லை என்றும், விசேஷ புத்தியும் அறிவுமுள்ளது மிருகம் முதலியவைகளுக்குத்தான், என்பதற்குத் திருஷ்டாந்தம் :—உங்களுடைய மாட்டுத் தொழுவத்தில் பிறந்து வளர்ந்த ஒரு எருதையோ, எருமையையோ, வேறு வதேனும் ஒன்றையோ, அமாவாசை இருட்டில் அது முன் பின் யாதொரு வழியுமறியாத ஒரு காட்டிற்கு இடையே ஒரு ஆற்றைக் கடத்தி பத்தோ இருபதோ மயிலுக்கப்பால் அதற்கு யாதொரு இம்ஸையில்லாமல் உள்ள இடத்தில் விட்டுவிட்டு வந்தால், அந்த நாற்காலியை யாராவது பிடித்துக் கட்டாமலிருந்தால் எப்படியும் நாலைந்து நாளில் கண்டிப்பாக தன்னுடைய இடத்திற்கே வந்து சேருமல்லவா ? நம்மில் மனுஷியர்களென்று அபிமானித்து வருகிற ஒரு இருகாலியை இவ்விடமிருந்து சுமார் பத்து அல்லது இருபது மயில் தூரத்திலிருப்பதும் முன்பு போகாததும் அறியாததுமான ஒரு பெரிய பட்டணத்தில் சாதாரண ஜனங்கள் உலாவுகிற பப்ளிக் ரோட்டில் பகல் சமயம் கூட்டிக்கொண்டு போய் பட்டணத்தின் மத்தியில் விட்டுவிட்டுப் போனல்

அந்த ஆள் மறுபடி தன் சொந்தயிடம் திரும்பி வருவதற்கு வேறொருவர் உதவியில்லாமலோ வழியைக் கேட்காமலோ வந்து சேர முடியுமா ?

**சி :** மற்றவர் உதவியில்லாமலும் வழி கேட்காமலும் திரும்பி வர முடியாது.

**கு :** ஏன் ? விசேஷ புத்தியும் அறிவுமுள்ளது மனிதர்களுக்கென்றும் அம்மனிதர் நாமேயென்றும் முன்னமே நீர் சொன்னீரல்லவா ? திரும்பிவர முடியாத காரணமென்ன ? மிருகங்கள் முதலானவைகள் விசேஷ புத்தியும் அறிவும் இல்லாதவைகளென்று சொன்னீரல்லவா ? ஆனால் அதுகள் வேறொருவருடைய உதவியின்றி தானே முன் இருந்த விடத்திற்கு எப்படி வந்தது ?

**சி :** அது தானாகவே வந்து சேர்ந்தது.

**கு :** அப்போது யாருக்கு விசேஷ புத்தி ?

**சி :** மிருகாதிகளுக்கு.

**கு :** விசேஷ புத்தியுள்ளவர் யார் ?

**சி :** மனுஷியர்.

**கு :** அப்போது மனுஷரென்று சொல்லப்பட்டவர் யார் ?

**சி :** இதுவரை மிருகம் முதலியவைகளென்று நாம் எண்ணி வந்தவைகள்தான் மனிதர்கள்.

**கு :** மிருகமென்று சொல்தப்படுகிறது எவை ?

**சி :** இதுவரை மனிதரென்று அபிமானித்து வந்திருந்த நாமெல்லாம்தான்.

**கு :** ஆனால் முன் சொல்லப்பட்ட நாற்காலி முதலானவைகளே மனுஷரென்று இப்போது தீர்மானிக்கப்பட்டதற்கு விசேஷ புத்தியுண்டாயிருத்தலே காரணம். அறிவாயிருக்கின்ற வஸ்து வாயுவென்று முன் அத்தியாயத்தில் விவரித்தோம். அந்த வாயு அவைகளுக்கு சுவாதீனம். அது எப்படியென்றால் நாம் தூங்கும்போது நமது கதி எவ்விதமோ அவ்விதமேதான் முன் சொல்லப்பட்ட நாற்காலி முதலான மனிதற்கு சதா காலமும் வாயுவினுடைய கதி. அந்த அறிவாய், ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவினது ஏககதியாக நிலத்திருக்கிறது. அந்த அறிவாகிய வாயு ஏககதியாக வரும்போது எல்லா நிலைமைகளும் சுவாதீனமாக வருகிறது. ஆனால் அந்த வாயுவினுடைய சுவாதீனத்தால் இன்ன திக்கிலிருந்து புறப்பட்டோமென்றும், இன்ன மார்க்கமாக வந்தோமென்றும் மோப்பத்தால் உணர்ந்து புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருகிறது. நமக்கு அந்த வாயுவி

னுடைய ஏககதியில்லாமல் பின்னகதியாக சதா நினைவிலிருக்கின்ற ராகத்வேஷாதிகளோடுங்கூடி இவன் என் மகன், இவனுக்கே நமது ஆஸ்திகளையெல்லாம் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும், அவன் அந்நியன், அவன்பேரில் கேசு நடத்தவேண்டும், எவ்விதமாயாவது கெடுக்க வேண்டுமென்றும் மற்றுமுள்ள துர்விசாரங்களால் சுத்த மிருகத் தன்மையோடு கூடி நடப்பதால் மோப்ப சக்தியில்லாமல் நாம் புறப் பட்ட இடத்திற்கு திரும்பிவர முடியாமல் போகிறது. எப்பொழுது நமக்கு பின்னகதி விலகி ஏககதி வருகிறதோ, அப்போது அறிவாகி ஜீவசக்தியாகி வாயுவாகின்ற வஸ்து நம்மில் அடங்கும். அப்போது நமக்கு அறிவுண்டாகும். அந்தச் சமயத்தில் நாம் மனிதராகக்கூடும். மனுஷரென்கிற ஒரு சிருஷ்டி இல்லை. தொழில் கொண்டுதான் மனிதராகவேண்டும். மனிதர்களுக்கே மோக்ஷம். தவிர இல்லாத வஸ்துவை நாம் உண்டென்று எண்ணுகிறோம். அந்த எண்ணம் நசிக்கும்போது மாத்திரம் மனிதராகிறோம். அது எவ்விதமென் றால் மத்தியானத்தில் அதி பிரகாசமாய் சூரியன் ஜொலிக்கும்போது ஒரு மைதானத்தைப் பார்த்தால் அங்கே என்ன தோன்றுகிறது?

சி: ஜலம் உள்ளதுபோல தோன்றும்.

கு: ஆனல் ஜலம்போல் தோன்றிய இடத்திற்கு போய்ப் பார்த்தாலோ?

சி: ஜலம் காண்பதில்லை.

கு: ஜலம் உண்டென்று தோன்றுகிறதற்கு காரணம் என்ன வென்றால், அந்தப் பெரிய மைதான சமபூமியில் யாதொரு மரங்க ளின் நிழல் இல்லாமலிருந்ததால் சூரிய கிரணங்கள் தாக்க உண் டான ப்ரமையின் ஜொலிப்பால் நமது கண்ணுக்கு ஜலமென்றும் தப் பிதமான தோற்றம் தோன்றிற்று. எதார்த்தத்தில் அது ஜலம் அல்லவென்று நீர் போய்ப் பார்த்தபோது தெரிந்ததல்லவா? இதே பிரகாரந்தான் தன்னுடைய ஜீவசக்தி வெளியில் வியாபித்து ஜொலித் துக்கொண்டிருக்கும் ஜ்வாலையில் பிரதிபிம்பித்து காணும்போது இவ் விதமாக ஒரு வஸ்து உண்டென்று தோன்றுகிறது. அதுதான் மிருக புத்தி. அந்தப்படியுள்ள தோற்றம் யாருக்கோ, அவர்களே மிருகங் கள். இவ்வித தோற்றம் எவ்விடமிருந்து உண்டானது? தன்னு டைய சக்தியிலிருந்து உண்டானதென்றும், அந்தச் சக்தி வெளியில் வியாபித்தபோது பிரதிபிம்பிக்கப்பட்டதென்றும் தெரிந்து அந்தச் சக்தியை வெளியில் வியாபிக்கவிடாமல் அதனுடைய உத்பவஸ்தான மாகிய தன்னிடத்தில் சேர்ந்து அதில் லயித்து தோற்றம் நசிக்கும் போது மாத்திரமே மனுஷராகக் கூடும், தவிர மனுஷனென்றால் மன னம் செய்கின்றவன், மனனம் செய்வதென்பது, நித்தியா நித்திய

வஸ்து விவேகம். அதாவது நித்தியம் இன்னதென்றும், அநித்தியம் இன்னதென்றும் அறிவது. நித்தியம் இன்னதென்றறிந்தால் அவனுக்கு சப்தம் இல்லை. அது என்னவென்றால், சப்தம் நித்தியமல்ல, அநித்தியமாகும், அப்போது சப்தத்தைத் தன்னில் தானே லயிப்பித்து தானாகவேண்டும். தவிர நாம் ஒரு ஆலோசனை செய்யும் சமயம் சப்தம் உண்டாக்க முடியுமா ?

சி : முடியாது.

கு : சப்தம் உண்டாக்கும்போது ஆலோசனை கிடைக்குமா ?

சி : கிடையாது.

கு : ஆனால் நாம் ஒரு ஆலோசனையிலிருக்கும்போது நமது பக்கத்திலிருக்கும் வேறொருவன் சப்தம் செய்தால் நாம் அவனைப் பார்த்து, என்ன சொல்லுவோம் ?

சி : ஹே, சப்தம் போடாதிருங்கள், நான் ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசனை செய்கிறேனென்று சொல்லுவோம்.

கு : அப்போது ஆலோசனை சமயத்தில் யாதொரு விதத்திலும், சப்தம் உண்டாக்க நமக்கு முடியாது. யாரேனும் சப்தம் செய்தாலும் அது வெறுப்பாகத் தோன்றும், இதே மாதரியாகத் தான் மனன சமயத்தில் யாதொரு சப்தமும் உண்டாக்க முடியாது. அப்போது சப்தம் உள் அடங்கிற்று. எப்போது சப்தம் உள் அடங்குகிறதோ அப்போது தான் மோக்ஷம் என்பது. இதனாற்றான் மனுஷருக்கே மோக்ஷம் கிடைக்கிறதுண்டென்று சொல்லக்காரணம். இந்தவிதமல்லாமல் சப்தரூபமாய் ராக த்வேஷ மத மார்ச்சரியாதிகளான விர்த்திகளோடு கூடிய மிருகமாகிய நாம் மனிதர்களென்று அபிமானித்து வருவதல்லாமல் மனிதரல்ல. மனிதராக வேண்டுமானால் ராகத்வேஷங்களை விட்டு முன் சொன்ன நிலைமையை அடையவேண்டும், அதற்குமுன் ஒருபோதும் மனிதனல்ல, மிருகந்தான்.

சி : சுவாமியே ! இதுவரைக்கும் சொன்னதெல்லாம் உண்மைதான், ஆனால் இயற்கை அநேக உருவ வித்தியாசமாகவும் காணப்படுகின்றது. அதாவது மனிதனென்று அபிமானித்து வருகிற இருக்காலிகளும், மிருகங்களென்று நாம் எண்ணி வருகின்ற யானை, குதிரை, பசு, ஆடு, சிங்கம், புலி, முதலிய நாற்காலிகளும், பருந்து, கிளி, காகம், கோழி, மயில், முதலிய பறவை இனங்களும், பாம்பு, எறும்பு முதலாகிய ஊர்வனவும், மீன் முதலிய நீர் வாழ்வனவும், கிருமி, கீடாதிகள் முதலிய பிறவுமாம். இவைகள் யாவும் ஒரேவிதமான சிருஷ்டி என்று கற்பித்தீரல்லவோ ? நானாவிதத்தில் பார்க்கப்

பட்ட இவைகள் எல்லாவற்றையும் எப்படி ஓரேவிதமான சிருஷ்டி என்று சொல்லக்கூடும்! அந்தப் பாகத்தை விஸ்தரித்துச் சொல்லி அருளவேண்டுமாய் அபேக்ஷிக்கின்றேன்.

கு: நீர் சொன்ன விதத்தில் பிரகிர்தி (ரூபம்) வித்தியாசமாய்க் காணுகிற தெவ்விதமென்ருல், எட்டடுக்கு மாளிகை, நான்கடுக்கு மாளிகை, மூன்றடுக்கு மாளிகை, இரண்டடுக்கு மாளிகை, ஓரடுக்கு மாளிகை, மாளிகை இல்லாத மெத்தை வீடு, மெத்தையில்லாத தட்டு வீடுகள், குச்சு, குடிசை, மேற்சொன்னபடி உண்டாக்குவதற்கு முடியாமல் மூங்கிலாலும் ஓலையின் தடுக்குகளினுலும், படலினுலும், மறைவு கட்டியும், வீடுகள் உண்டாக்கி, ஈந்து தேக்கு, இவைகளின் இலைகளால் மறைவு கட்டியும் வீடுகள் உண்டாக்கி அதற்குள் வசிக்கிருர்கள். இந்தப் பிரகாரம் வசிப்பவர்களை யாரென்று சொல்வது?

சி: மனுஷியர் என்று தான் சொல்லுகிறது.

கு: மேற்சொன்ன, எட்டடுக்கு வீடுமுதல் இலைகளைக்கொண்டு செய்த வரையில் யாவும் ஜீவன் வாசம் செய்வதற்குள்ள வீடுகள் தான் இயற்கை (ரூபம்) ஆனுல் குடிசை வித்தியாசம் மாத்திரமுண்டு, ஜீவன் இருப்பதற்குள்ள வீடாகும் இந்த ஜடம், (உடம்பு) என்றும் நினைப்பீராக. அதாவது நீர் சொன்ன மனுஷ்யர் முதல் கிருமி கீடாதி வரையிலுள்ள ஜீவராசிகளின் உடம்பாகிய கூட்டுக்குத்தான் இயற்கை வித்தியாசமான கிரகம் என்று சொல்வது, இவ்விதம் பிரகிருதி வித்தியாசமாகிய வீடுகளில் இருக்கிறது யார்?

சி: ஜீவன்.

கு: ஜீவன் எத்தனை உண்டு?

சி: ஜீவன் ஒன்றேதான்.

கு: அப்பொழுது இவைகளை ரூப வித்தியாசத்தால் வேறுபடுத்தி உயர்ந்தது என்றும் தாழ்ந்தது என்றும் சொல்ல இடம் உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனுல் எட்டடுக்கு மாளிகையில் இருப்பவரைக் காட்டிலும் இலைகொண்டு மறைவு கட்டி அதில் வசிக்கின்றவர்களுக்கு புத்தி சக்தி யிராதா?

சி: இருக்கும்.

கு: எப்படி யிருக்கும்? அதன் காரணம் யாதேனும் சொல்ல முடியுமா?

சி: பல காரணங்கள் சொல்வதற்குண்டு. அது என்னவென்றால், பல இராஜாக்களையும், பிரபுக்களையும், அவர்களால் நீச்சர் என்று நினைக்கப்பட்டு வருபவர்களாகிய புலையர், பள்ளர், பறையர் இவர்களிடத்திலும் நான் பழகியிருக்கிறேன். ஆனால் இராஜாக்களையும், பிரபுக்களையும் விட யோக்கியராயும், காரியத்திறமை யுள்ளவராயும், புத்தியும் அறிவும் உள்ள புலையர், பறையர் அநேகர் இருக்கிறதைப் பார்த்திருக்கிறேன். தவிர, திருவள்ளுவர், பாக்கனர், நந்தனர், முதலானவர்கள் மஹா யோக்கியர்களாயும், மஹா ஞானிகளாயும் இருந்தார்களென்றும், அவர்களை இப்பொழுதும் புகழ்ந்து வருகின்றார்கள். தவிர அவர்களுடைய ஸ்தாபனங்களையும், பிரமாணங்களையும் சரி என்று எண்ணி அனைவரும் அநுசரித்து வருகின்றார்கள். ஆகையால் அவர்களுடைய யோக்கியதை முன் சொன்ன இராஜாக்களுடையவும், பிரபுக்களுடையவும் யோக்கியதையைவிட அதிகமே தான் என்று என்னுடைய நம்பிக்கை.

கு: அப்பொழுது இன்னவருக்குத்தான் புத்தி சக்தி உண்டாயிருக்கக் கூடுமென்றுண்டோ?

சி: இல்லை.

கு. ஆனால் நீர் சொன்ன புலையர்கள், பள்ளர்கள், பறையர்கள், முதலானவரும், மஹா ஞானிகளாகிய திருவள்ளுவர், பாக்கனர், நந்தனர், முதலியவர்களும் எங்கே வசித்திருந்தார்கள்?

சி: புலையர்கள், பறையர்கள், பள்ளர்கள் என்பவர் ஓலைகளால் கட்டப்பட்ட, சாளை என்று சொல்லப்பட்ட குடிசையிலும், திருவள்ளுவர், பாக்கனர், நந்தனர் முதலியவர்கள் காடுகளில் இலை முதலானவைகளைக்கொண்டு கட்டிய குடிசையிலும் வசித்தார்களென்று கண்டும் கேட்டும் இருக்கிறோம்.

கு: அப்பொழுது இன்னவீட்டில் வசிப்பவருக்குத் தான் விசேஷ புத்தியும் அறிவும் உண்டென்றுண்டோ?

சி: அப்படி யொன்று மில்லை.

கு: இவ்விதமே மனிதரென்று அபிமானித்து வருபவர்களுக்கு வாசம் செய்வதற்குள்ள இடமாகும் இந்த உடம்பு. இதுதான் எட்டடுக்கு மாளிகை நான்கு கால்களுள்ள உடம்புகள். விலங்குகள் என்று எண்ணி வருபவைகளுக்கு வாசம் செய்வதற்குள்ளவை. அவைதான் நான்கடுக்கு மாளிகைகள். இலைகளைக்கொண்டு கட்டப்பட்ட குடிசைகளும், சாளைக்கும் எறும்பு முதலியவைகள் என்று சொல்லுகிறவைகளுக்கு வசிப்பதற்கு உள்ள உடம்பாகும், ஆனால்

சாளையாகிற எறும்பு என்று சொல்லப்படுகிற வீட்டில் வசிக்கின்ற ஜீவனுக்கும் எட்டடுக்கு மாளிகையான மனிதன் எனும் வீட்டிலிருக்கின்ற ஜீவனுக்கும் தம்முள் ஏதேனும் வித்தியாசமுண்டோ ?

சி : யாதொரு வித்தியாசமு மில்லை.

கு : ஆனால் எதற்கு வித்தியாச முண்டு ?

சி : வீடாகிய உடம்புக்கு.

கு : கிரக வித்தியாசம் அதாவது உடல் வித்தியாசத்தால் புத்தி சக்தியும் அறிவும் இல்லாமல் போகிறதோ ?

சி : இல்லை.

கு : ஆனால் குடிசையான எறும்பு ஈ முதலிய கிரகங்களினுள்ள ஜீவனுக்குள்ள சக்தியும், புத்தியும், மனிதன் முதல் மற்றெல்லா கிரகங்களினுள்ள, ஜீவனுக்கில்லை என்று விளக்கலாம் அது எப்படியென்றால் எறும்பானது தன்னைக்காட்டினும் பருமனையும், பளுவாயும், உள்ள வஸ்துவை தனியே தூக்கிச் சுமந்துக்கொண்டு போவதைப் பார்க்கிறோம். இதுபோல் மனிதன் முதலிய மற்றைய ஜீவிகளுக்கு செய்ய முடியுமா ?

சி : முடியாது.

கு : தவிர எறும்பு தன் தொழிலைப் புரிவதற்கு இடையூறு நேரும் காலையில் தன் புத்தியினால் அதை அகற்றுவதையும் தனது உப ஜீவனத்திற்கு உள்ளவற்றை அதி ஜாக்கிரதையாய்ச் சோம்பலில்லாமல் சேகரிப்பதையும் நாம் அநேக தடவை கண்டிருக்கிறோம் அல்லவா ?

சி : ஆம்.

கு : அது மாத்திரமல்ல அதன் விரைவு அதிகம், எறும்புக் கூட்டங்கள் கதாகதம் செய்துக்கொண்டிருக்கும் ஒரு சிறிய வழியில் மனிதனென்று அபிமானிக்கின்ற ஒருவன் அதிவேகமாய் ஓடினால் அந்த எறும்புக் கூட்டங்கள் அவனை என்ன செய்கின்றன ?

சி : அவனுடைய பாதத்திலிருந்து சிரசுவரை ஏறுகின்றன.

கு : அப்போது யாருக்கு விரைவு அதிகம் ?

சி : எறும்பிற்கேதான்.

கு : அதல்லாமல் அநேக ஜீவிகள் வெகு அதிக சாமர்த்தியமாய் ஒவ்வொரு வேலையையும் செய்து வருகின்றன. அதேபிரகாரம் நாமும் ஒரு ஜீவி யுக்தியுடன் நாமும் தொழில் செய்கின்றோம். ஆனால் நம்மால் ஒருக்காலும் செய்ய முடியாத தொழில்களை தூக்க

ணங்குருவி, குளவி, தேனீக்கள், எட்டுக்கால் பூச்சி முதலாகிய பல ஜீவிகளும் செய்துவருகின்றன. தவிர ஓர் பக்ஷிக்குக் கெற்பம் உண்டானல் அதும் அதன் ஆணும் சேர்ந்து கூடுகட்டுவதற்கு வேண்டி சுள்ளல், புல், செத்தை முதலியவற்றைக் கொண்டுவந்து விசித்திரமாகக் கூட்டை உண்டாக்குகிறது. பெண் பக்ஷி அந்த கூண்டில் முட்டையிட்டு அடை காத்துக்கொண்டிருக்கிறது. ஆண் பக்ஷி அதற்கு இறை கொண்டுவந்து கொடுத்து அதற்குத் துணையாகவும் இருக்கிறது. அந்த முட்டையின்பேரில் ஆணும் பெண்ணுமாக மாறி மாறி உட்கார்ந்து அந்த முட்டைகள் கருக்கூடி குஞ்சுகள் உண்டாயிற்றென்று தெரிந்தால் அவைகளைக் கொத்தி உடைத்து உண்டான குஞ்சுகளை அதிகப் பிரீதியுடன் வளர்க்கிறது. அக்குஞ்சுகளுக்கு அச்சமயத்தில் சுயசக்தி யில்லாததினல் அவைகள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்வது அசாத்தியமென்றெண்ணி தாய் தகப்பனகிய இரண்டு பக்ஷிகளும் அவைகளுக்குவேண்டி மிகவும் கஷ்டப்பட்டு அலைந்து ஆகாரம் முதலியவைகளைக் கொத்திப் பொறுக்கிக் கொண்டுவந்து அவைகளுக்கு வாயில் ஊட்டி சம்ரக்ஷணை செய்து வருகின்றன. இறகு முதலானவைகளுண்டானபோது, அக்குஞ்சுகளைக் கொத்தி பறக்கவும், இரை முதலியவைகளை எடுக்கவும் பழக்குகின்றன. அவைகளுக்குத் தனியே பறந்துபோய் உப ஜீவனம் செய்ய சக்தியுண்டானபோது, தாய் தகப்பனராகிய பக்ஷிகள் தங்கட்கு அவைகளின் பேரில் அதுவரையிலுமிருந்த பிரீதியையும் அது சம்மந்தமான தொழில்களையும் விட்டு, அவைகளைச் சமமாகக் கருதி தங்களுடைய கூட்டத்தில் சேர்க்கின்றன. அதன் பிறகு தாய்தகப்பன் என்றோ, மகன் மகள் என்றோ, சொல்லப்பட்ட யாதொரு பந்தமும் அவைகளுக்குள் இல்லை. தாயார் என்றல் எல்லாம் தாயார், தகப்பனர் என்றல் எல்லாம் தகப்பன், புத்திரன் என்றல் எல்லாம் புத்திரன். இந்தப் பிரகாரம் சமபாவனையோடு இருக்கின்றன. அவைகளுடைய விசேஷ புத்தி மிகவும் அற்புதகரமாகத் தோன்றுகிறது. அதென்னவென்றல், குஞ்சுகளுக்கு சுயசக்தியில்லாமலும் யாதொரு உணர்வு இல்லாமலும் இருந்த காலத்தில், அவைகளுக்கு தங்களைப் போல் எல்லா சக்திகளும் உண்டாக்கிக் கொடுப்பதற்குத் தாங்களே உத்திரவாதிகளென்றுள்ள ஒரு விசேஷ புத்தியானது பெற்றோராகிய அவைகளுக்கு உண்டாயிருந்ததனல், முன் சொல்லப்பட்ட இயற்கையிலுள்ள கஷ்டங்களை அநுபவித்து, அக்குஞ்சுகளை ரக்ஷிக்கவும், அவைகளுக்குப் பூரண சக்தி யேற்பட்டதென்று தங்களுக்குத் தெரிந்தபோது அவைகளைத் தங்களுடைய புத்திரன், புத்திரி, என்கிற சிநேகத்தை விட்டு சமமாக நினைத்துக் கூட்டத்தில் சேர்க்கவும் செய்கின்றன. அந்தப் பிரகாரம் அந்தக் குஞ்சுகளும் இவைகளைத்

தாய் தகப்பன் என்கிற சிநேகத்தைவிட்டுக் கூட்டத்தில் சேர்ந்து சம பாவனையாக நடக்கின்றன. இவை யனைத்தும் நமக்கு அநுபவ திருஷ்டாந்தமல்லவா ?

சி : ஆம்.

கு : மனுஷியர் என்றும், விசேஷ புத்தி யுள்ளவரென்றும் அபிமானித்து வருபவர்களாகிய நமக்கு ஓர் சந்தானம் உண்டானால், அக் குழந்தைக்கு முன் சொல்லப்பட்ட பக்ஷிகள் கஷ்டப்பட்டு செய்த பிரகாரத்தில் யாதொரு சம்ரக்ஷணையும் செய்கிறதில்லை. குழந்தையை ஏதாவது ஓர் பாயிலோ அல்லது படுக்கையிலோ படுக்கவைத்து தாய்மார்கள் அவரவருடைய வேலைக்காக பல இடங்களுக்கும் போகிறதுண்டு. அவருடைய வேலைமுடிந்து சாவகாசப்பட்டபோது வந்து குழந்தைக்கு ஆகாராதிகள் கொடுக்கிறார்கள். அது சமயம் அந்தக் குழந்தையின் வயிறு காய்ந்த சமயமாயிருக்கும். தவிர, இந்த ஆகாரமான முலைப்பால் அதிகம் கொதித்து நிறைந்து பல நீர்களும் சேர்ந்து கெட்டதாக யிருக்கும். அல்லாமலும் பல வியாதிகளுள்ள ஸ்திரீகளுடைய முலைப்பாலையும், பலவிதப் பழங்களும் யாதொரு யோசனையும் புத்தி விவேகம் இல்லாமல் தாய்மார்கள் கொடுக்கிறார்கள். அதனால் அந்தக் குழந்தைக்கு பலவிதமான வியாதிகள் உண்டாய்க் கஷ்டப்படுகின்றது. ஆனால் பக்ஷிகளில் ஒன்று ஆகாரத்திற்கு வேண்டி போகும்போது வேறொன்று குஞ்சினுடைய பக்கத்திலிருந்து வேண்டிய சம்ரக்ஷணை செய்துவருகின்றது. இப்பிரகாரம் நாம் செய்கிறதில்லை. தவிர, விசேஷ புத்தி யுள்ளவர் என்று அபிமானித்து வருகிற மனிதர்களுக்குண்டான சந்தானத்திற்கு நூறு வயதானாலும் அவருடைய தாயாரோ, தகப்பனாரோ உண்டாயிருந்தால் அவர்கள் என்னுடைய மகன், மகள் என் மகனுக்குக் கொடுக்கவேண்டும், என் மகளுக்குக் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதுபோலவே, அப்புத்திரன், புத்திரிகளும் என்னுடைய தாய், தகப்பன் என் தாயுடையது, என் தாய்க்குக் கொடுக்கவேண்டும், தகப்பனுக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பிரகாரமுள்ள ராகத்வேஷ கொடூர அந்தகாரத்தில் யாதொருவித விசேஷ புத்தியும், அறிவும் இல்லாமல் சுத்த மிருகங்களைப்போல் தான் உலகத்தின் நிலைமை காணப்படுகின்றது. இது நமக்கு அநுபோக திருஷ்டாந்தமல்லவா ?

சி : ஆம்.

கு : ஆனால் இப்பேர்ப்பட்டவைகளை நாம் ஆலோசிக்காவிடின் நமக்கு ஞானம் உண்டாகாது. ஏனென்றால், நான் மனிதன், எல்லா ஜீவிகளைக்காட்டிலும் சிரேஷ்டன், நான் செய்கிறது மாத்திரமே புத்தி

சக்தியோடும் யுக்தியோடும் அறிவோடும் கூடியது. மற்ற ஜீவிகளுக்கு சிரேஷ்டதையில்லை. அவைகள் நமக்கு தாழ்ந்தவையாகும், என்றுமெல்லாம் துரபிமானம் நிமித்தம் ஒரு குருட்டு நம்பிக்கையை உலகில் யாவரும் பொதுவாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், மனிதனென்று அபிமானிக்கிறவர்களுக்கு யாதொரு விவேகமு மில்லாததனாற்றான். ஆனால் ஏதொரு வஸ்துவையும் பார்க்கும்போதோ, கேட்கும்போதோ, அறியும்போதோ அதைப்பற்றி நாம் சரிவர மனம் ஊன்றி காரண காரியங்களை ஆராய்ந்து ஆலோசித்தால் அதன் உண்மை தெரியலாம். அவ்விதம் செய்யாமல், நாம் மிகவும் சிரேஷ்டரென்றும், பாக்கி யாவும் தாழ்ந்தவைகளென்றும் கொண்டுள்ள ஓர் மூட நம்பிக்கை நிமித்தம் உண்டான துரபிமானத்தால் ஜனங்கள் யாதொன்றும் தெரியாதவர்களாகிப் போகின்றார்கள். ஈசுவரன்தான் ஜீவன். அந்த ஜீவனாயிருக்கின்ற ஈசுவரன் தன்னுடைய இருதயத்தில் வசித்துக்கொண்டு மாயையாயிருக்கின்ற யந்திரம் நிமித்தம் சர்வ பூதங்களிலும் சலித்துக்கொண்டிருக்கின்றது. சர்வ பூதங்களினும் இருக்கப்பட்ட வஸ்து ஈசுவரன்தான். அந்த ஈசுவர சைதன்யத்திற்கு ஒரே சக்தியல்லாமல் இரண்டு சக்திகள் இல்லை. நாம் அதனுடைய எதார்த்தத்தை கிரகிக்காததனால்தான் நம்முடைய சக்தி வேறென்றும் மற்றுள்ளவைக்கு சக்தி வேறென்றும் கருதுகின்றோம். எப்பொழுது உண்மையை கிரகிக்கின்றோமோ அப்பொழுதுதான் இரண்டு சக்திகள் இல்லை என்றும் ஒரே ஒரு சக்திதான் உண்டென்றும் அது தன்னுடைய சக்திதான் என்றும் விளங்கும். அப்பொழுது துரபிமானம் நீங்கி ராகத்வேஷாதி விருத்திகள் நசித்துதான் தானாகிறான்.

**சி:** சுவாமி, இப்பிரகாரம் கற்பித்த நிலைமையில் எனக்கு ஒரு உத்தேசம் நேரிடுகிறது. அதாவது உலகில் யாதொரு ஜீவிகளுக்கும் வித்தியாசமில்லை என்றல்லவா இதுவரைக்கும் அருளிச்செய்தீர்? ஆனால் உலகில் ஸ்திரீ புருஷ வித்தியாசம் பிரத்தியக்ஷத்தில் கண்டு வருகின்றோமல்லவா? அதை இல்லை என்று சொல்வதற்கு இடமுண்டோ?

**கு:** இதுவரை சொன்னவைகளில் உமக்கு என்ன தோன்றுகிறது? எல்லாம் ஒரே சக்தியாகுமென்று சொன்னதற்கப்புரம், மற்றொன்று வேறாக உண்டாவதற்கிடமில்லை அல்லவோ? ஆனாலும் அதையும் விபரித்துச் சொல்லுகிறேன். கேளும், ஸ்திரீ புருஷன் என்பதில் ஸ்திரீ யார்? புருஷன் யார்? என்று சொல்ல முடியுமா?

**சி:** ஓ, சொல்வதற்கு முடியும். நாம் எல்லோரும் புருஷர்கள், நம்மைப் பிரசவித்தவர்கள் ஸ்திரீகள்.

கு: ஆனல் ஆதிமுதலிருந்து இதுவரைக்கும் உலகில் புருஷர்களாகிய நம்மை ஸ்திரீகளென்றும், ஸ்திரீகளைப் புருஷர்களென்றும் கூறி இருப்பார்களாயின் இப்போது நம்மை யாரென்று சொல்லுவார்கள்?

சி: ஸ்திரீகள் என்றுதான்.

கு: அப்பொழுது நாம் ஸ்திரீ என்றோ புருஷன் என்றோ நமக்குத் தெரிகிறதில்லை. உலகத்தில் வழங்கி வருபவையை மட்டும் நாம் தரித்திருக்கிறோம். அதன் உண்மை எந்தவிதமென்று ஆலோசிப்பதுமில்லை. ஆனல் புருஷன் என்று சொல்வதன் பொருளென்ன?

சி: புரத்தில் வசிப்பவன் புருஷன்.

கு: அப்போது யானை முதல் எறும்புவரையுள்ள ஜீவிகள் எங்கே வசிக்கின்றன?

சி: அவை தங்கள் தங்களுடைய வீடுகளில்.

கு: அவரவருடைய வீடென்பது எதை சம்பந்தித்தது?

சி: நமக்கெல்லாம் நம்மால் ஏற்படுத்தப்பட்ட வீடும், மற்றவைகளுக்கு வசிப்பதற்குவேண்டி அவைகள் எங்கெந்த விதத்தில் இடங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனவோ அவைகளேதான்.

கு: ஆனல், ஜீவன் இல்லாதிருந்தால் நீங்கள் சொன்னபிரகாரம் இருக்கின்ற வீட்டைக்கொண்டு யாதொரு பிரயோஜனமும் உண்டோ?

சி: இல்லை.

கு: அப்போது புரம் (வீடு) எதற்காக?

சி: அவரவர்கள் சுகமாய் வசிப்பதற்கு.

கு: ஜீவனில்லையானல் சுகமாய் வசிக்கலாமோ?

சி: வசிக்கமுடியாது.

கு: ஏன்?

சி: அதில் ஜீவன் இல்லாததனல்.

கு: அப்பொழுது யாருக்கு சுசமாய் வசிக்க வீடு வேண்டும்?

சி: ஜீவனுக்கு.

கு: ஜீவன் வசிக்கும் வீடு எது?

சி: இந்தக் காணுகின்ற உடம்பு.

கு: அப்பொழுது இந்த ஜடத்திற்கு என்னபெயர் சொல்ல வேண்டும்?

சி : புரம் (வீடு) என்று சொல்லவேண்டும்.

கு : ஆனால் இந்த வீட்டில் ஜீவன் எப்பொழுது அடங்கி சலிக்காமல் இருக்கிறதோ அப்பொழுதுதான் புருஷனாகிறது. அந்தப் புருஷன்தான் சிவன். அது எவ்விதமென்றால், ஒருவன் இதோ காணுகின்ற வீட்டுக்குள்ளே நுழைந்து கதவுகளை மூடியிருந்தால் அவனுக்கு வெளியிலுள்ளவைகளைக் காணவோ, கேட்கவோ, அறியவோ முடியுமோ ?

சி : முடியாது.

கு : ஆனால் அவன் வீட்டிற்குள் இருந்து எழுந்து கதவைத் திறந்து, இந்தக்காணுகின்ற திண்ணையில்வந்து இருக்கும்போது அவனுக்கு வெளியிலுள்ள எல்லா அவஸ்தைகளையும் காணக் கேட்க அறிய முடியுமல்லவா ?

சி : ஓ, முடியும்.

கு : உள்ளே இருந்தபோது காணுமலிருந்ததன் காரணம் என்ன ?

சி : அவன் வெளியிலுள்ள எல்லாத் தொழில்களையும் விட்டு உள்ளே சென்று கதவை மூடியிருந்ததனால்.

கு : வெளியில் திண்ணைக்கு வந்தபோதோ ?

சி : வெளியிலிருந்த எல்லா அவஸ்தைகளையும் காணவும் கேட்கவும் அறியவும் ஆயிற்று.

கு : ஆனால் வெளியிலுள்ள நிலைமைகளைக் காணவும் கேட்கவும் அறியவும் ஆனபோது அவன் வீட்டுக்குள்ளோ வெளியிலோ ?

சி : வெளியில்.

கு : அதெப்படியாகும். அவன் வீட்டிற்கு வெளியிலிருந்தால் இந்த வீட்டைவிட்டுப் போகவேண்டும். அந்தப் பிரகாரம் விட்டுப் போனுனென்றால் இந்த வீட்டினுடைய யாதொரு அவஸ்தையையும் காணுவதற்கோ, கேட்பதற்கோ, அறிவதற்கோ முடிகிறதில்லை. தவிர அந்த மனிதன் இந்த வீட்டின் திண்ணையிலிருந்து வெளியே போகவில்லை. திண்ணையிலிருந்து வெளியில் இறங்காமல் வீட்டைவிட்டு வெளியில் போனுன் என்று சொல்வதற்கு முடியுமா ?

சி : முடியாது.

கு : வீட்டுக்குள்ளிலிருக்கிறுனென்று சொல்ல முடியுமா ?

சி : முடியாது.

கு: அப்பொழுது அந்த மனிதன் வீட்டுக்குள்ளிலும் வெளியிலும் அல்லாமலிருக்கிறன். அந்த சமயத்தில் இந்த வீட்டினுடைய வெளியிலிருக்கிற எல்லா அவஸ்தைகளையும் காணவும், கேட்கவும், அறியவும் இடமாயிற்று. வீட்டைவிட்டு வெளியிலே போயிருந்தாலும், வீட்டுக்குள்ளே யிருந்தாலும் வீட்டின் வெளியிலுள்ள யாதொரு அவஸ்தையும் அறிகிறதில்லை. இதே பிரகாரம் நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது நமது ஜீவன் எவ்விடம் இருந்தது ?

சி: அப்பொழுது அந்த ஜீவன் நம்முடைய உள்ளில் இருந்தது.

கு: தூக்கம் விழித்து இவைகளைப் பார்க்கவும், கேட்கவும் செய்கிற சமயத்தில் ஜீவன் எவ்விடம் ?

சி: வெளியே.

கு: நமது ஜீவன் எப்பொழுது வெளியில் என்றல் நமக்கு இவைகளைக் காணவும் கேட்கவும் அறியவும் முடியுமா ?

சி: முடியாது.

கு: அது எதனல் ? ஜீவன் வெளியில் போய்விட்டால் அதன் நிலைமை என்ன ?

சி: பிணம்.

கு: உள்ளே இருந்ததென்றல் வெளியில் உள்ளவற்றை அறிய முடியுமா ?

சி: முடியாது.

கு: எதனல் ?

சி: ஜீவன் வெளியிலே வியாபிக்காமல் உள்ளே சொஸ்தமாய் இருப்பதனல்.

கு: அது எங்கே யிருக்கின்றது ?

சி: ஜீவனுடைய வீடாகிய புரத்தில்.

கு: ஆனல் ஜீவனுடைய வீட்டில் ஜீவனனது யாதொன்றிலும் சலிக்காமலே சொஸ்தமாயிருந்தபோது அது யாராகிறது ?

சி: புருஷனகின்றது.

கு: அது எதனல் ?

சி: ஜீவசக்தியானது வெளியில் வியாபிக்காமல் வீட்டிலேயே இருந்ததனல்.

கு: அவ்விதம் வீட்டில் சொஸ்தமா யிருக்கப்பட்டது யார் ?

சி: புருஷர்கள்.

கு : ஆனால் உலகினுள்ள எல்லோரும் யார்?

சி : இவ்விதம் சொஸ்தமாக வீட்டிற்குள் ளிருக்கின்றவர்கள் யாவரும் புருஷர்கள்.

கு : எப்பொழுது வெளியிலுள்ள அவஸ்தைகளை கேட்கவும் காணவும் அறியவும் செய்கின்றது ?

சி : தூக்கம் விழித்து ஜீவன் உள்ளிலும் வெளியிலும் அல்லாமலிருக்கும்போது.

கு : ஆனால் ஜீவன் எப்போது வீடாகிய புரத்தில் அடங்குகிறதோ அப்போது புருஷனும், எப்போது விழித்து உள்ளேயிருந்து ஜீவசக்தி வெளியே வியாபிக்கின்றதோ, அப்பொழுது சிவசக்தியுமாகின்றது. அதாவது புருஷப்பிரகிருதி. புருஷப்பிரகிருதி என்று சொல்லப்பட்டது புருஷன் புரத்திலிருந்து சக்தியாக சலிக்கின்றதற்காகும். புருஷன் என்பது ஜீவன். சக்தி என்பது ஸ்திரீ அதாவது ஜீவனுயிருக்கின்ற புருஷன் வெளியில் சலனம் உண்டானபோது புருஷப்பிரகிருதி என்று சொல்லுவது. அந்தப் பிரகிருதி சக்தி அதுதான் தாயார். அந்தத் தாயிலிருந்துதான் நாம் உண்டானது. அப்பொழுது நம்முடைய தாய் யார் ?

சி : மாயையாகின்ற சக்தி.

கு : ஜீவன் யார் ?

சி : சிவன்.

கு : சக்தி நமக்கு தாயாகிறபோது சிவன் யார் ?

சி : தகப்பன்.

கு : அப்பொழுது சிவன் தகப்பனும் அதாவது புருஷனும், சக்தி தாயும் அதாவது ஸ்திரீயும் ஆகிறது. அப்படியிருக்க நம்மை புருஷனென்றோ ஸ்திரீ என்றோ சொல்ல இடமுண்டோ? புருஷனும், ஸ்திரீயும், தகப்பனும், தாயும் ஆகிறது. அதனுல் நாம் புருஷனும், ஸ்திரீயும் அல்ல. அப்பொழுது நாம் யார் ?

சி : ஆணும் அல்ல பெண்ணும் அல்ல நபும்ஸகம் அதாவது அலி.

கு : ஆனால் நம்மில் புருஷனுக சிவனுயிருக்கின்ற ஜீவன் வெளியில் வியாபித்து சலனம் செய்தபோது சக்தியாகிறது. அந்த சக்திதான் மனம். அந்த மனமாகின்ற சக்தியிலிருந்துதான் நான் என்று அபிமானிக்கின்ற அகங்காரமாகிய நபும்ஸகம் (அலி) உத்பவித்தது. அதற்கு திருஷ்டாந்தம் :– நமக்கு மிகவும் பழகியிருக்கின்ற ஒரு

அறையில் கதவுகளை மூடித் தாள்போட்டுப் படுத்து தூங்குகையில் திடீரென்று தூக்கம் விழித்து எழுந்திருந்தால் யாதொரு பழக்கமுமில்லாத புது இடத்தைப்போல் வாசலின் வழி அறியாமல் தட்டித் தடுமாறி நடந்து தலைமுகம் முதலானவைகளை சுவற்றிலோ இன்னும் மற்றவைகளிலோ மோதிக் காயப்படுத்திக் கொள்ளுகிறோம். அதன் காரணம் தூக்கம் தெளிந்தபோது புருஷனையிருக்கின்ற ஜீவன் சக்தியாய் வெளியிலே வியாபித்தது. அந்தச் சக்திதான் மனம். அப்போது மனம் மாத்திரமே இருந்தது. அதனால்தான் வாசல் வழியைத் தெரிய முடியாமல் போயிற்று. வாசல் வழியைத் தெரிந்து அறியவேண்டுமென்றால் நான் என்கிற அகங்காரமாகிய நபும்ஸகம் வேண்டும். அந்த நபும்ஸகத்திற்குத்தான் பலவகை வித்தியாசம் உள்ளது. நான் என்றுள்ள அகங்காரமாகிய நபும்ஸகத்தில் கூடித்தான் மனசாகிய சக்தி பின்னப்பட்டு பிரகாசிக்கிறது. அந்த அகங்காரமாகிய நான் என்றுள்ள நிலைமை இல்லாதிருந்தால் யாதொன்றுமில்லை. வெளியில் நாம் ஏதொன்றை அறிகின்றோமோ, காணுகின்றோமோ, செய்கின்றோமோ அவைகளெல்லாம் அகங்காரமாகும். அந்த அகங்காரந்தான் பிரம்மா. அந்தப் பிரகாரமுள்ள பிரம்மா மனஸாக இருக்கின்ற சக்தியைக் கொண்டுதான் சிருஷ்டிக்கின்றது. அதற்குத்தான் பிரம்ம சிருஷ்டி என்று சொல்லுகிறது. அந்த பிரம்மா இல்லையென்றால் யாதொரு சிருஷ்டியுமிராது. அந்த பிரம்மா எப்பொழுதும் எக்ஞத்தில் இருக்கின்றது. எக்ஞம் என்பது யாகம். அந்த யாக குண்டமானது புருவ மத்தியம். அந்தப் புருவ மத்தியம் சுழிமுனை என்கிற அக்கினி நேத்திரம். அத்தன்மையுள்ள அக்கினி குண்டத்தினருகே நான் என்கிற அகங்காரமாகிய பிரம்மா இருந்துகொண்டு விசாராதிகளாகிய வஸ்துக்களை அந்த அக்கினி குண்டத்தில் ஓமம் செய்கின்றது. அந்த ஓமத்திலிருந்து உத்பவித்த தூமம் (புகை) ஆகும் (இந்தக் காணப்பட்ட உலகம்). உலகமென்று சொல்லப்படுவது ஒரு புகைதான். அந்தப் புகைக்குள்ளாக அகப்பட்டதனாற்றான் நமக்கு, ஸ்திரீ புருஷர்கள் இன்னின்னாரென்று பகுத்தறியச் சாத்தியப்படாமலாயிற்று. எப்பொழுது உலகமாயிருக்கின்ற அந்தப்புகை நீங்குகிறதோ, அப்பொழுது அது நமக்கு வெளியாய் தெரியப்படும். புகை நீங்கவேண்டுமென்றால் ஓமம் செய்த வஸ்துக்களை எரிக்கவேண்டும். எரித்தால் பிரகாசிக்கும். பிரகாசிக்கும்போது சர்வமும் தன்னுடைய ஜீவசக்தியாயிருக்கின்ற மனசென்று அறியப்படும். அப்பொழுது அந்த ஜீவசக்தியாயிருக்கின்ற மனம் தன்னில் தானே அடங்கித் தானயிருக்கவேண்டும். இதுதான் எதார்த்தம். இந்த எதார்த்தத்தை கிரகிக்கும்போது மாத்திரமே நபும்ஸகம் விட்டுப் புருஷனகின்றது.

சி: ஓ! குருவே, நமக்குத் தாய் மாயை என்றும், அது சக்தி என்றும் முன் சொன்னீரல்லவா? ஆனால் உலகில் ஸ்திரீகளுக்கு கெற்பம் உண்டாகிறதும் பிரசவிப்பதும் செய்கிறது. அப்படிப் பிர சவிக்கப்பட்டவரை தாயார் என்றும் சொல்லுகிறோம். இது எந்தப் பிரகாரமென்று விபரமாக சொல்லிம்படி அபேக்ஷிக்கிறேன்.

கு: யார் பிரசவிக்கிறார்கள்?

சி: ஸ்திரீகள்.

கு: ஸ்திரீகள் பிரசவிப்பதின் காரணமென்ன?

சி: சம்யோகத்தினால்.

கு: சம்யோகம் இல்லையானால் கெற்பம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: சம்யோகம் செய்தால் கெற்பம் உண்டாகக் காரணமென்ன?

சி: சுக்லம் சென்று விழுகிறதினாற்றான்.

கு: சுக்லம் இல்லை என்றால் கெற்பம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது கெற்பத்திற்கு சுக்லம் என்ன பொருளாகிறது?

சி: பீஜமாகிறது.

கு: பீஜம் என்றால் என்ன?

சி: வித்து (விதை).

கு: வித்தில்லாமல் யாதொன்றும் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: உங்களுடைய கைவசம் கொஞ்சம் நெல்விதை உண்டு, அதைப் பயிர் செய்யவேண்டும். அதை எவ்விதம் பயிர் செய்கிறது?

சி: வயலின் ஒரு பாகத்தில் உழுது சேருக்கி சமப்படுத்தி அதில் விதையை விதைக்கவேண்டும்.

கு: அந்த விதையை விதைக்கவேண்டிய இடத்திலல்லாமல் போட்டால் முளைக்குமோ?

சி: முளைக்கும்.

கு: முளைக்காது. வித்திடவேண்டிய இடத்தில் அல்லாமல் வேரிடத்தில் வித்திட்டால் ஒருக்காலமும் முளைக்கிறதில்லை. அவ்

விதையைக் களஞ்சியத்திலோ, அறையிலோ வைத்திருந்தால் அதிலிருந்து முளைக்குமா ?

சி : முளைக்காது.

கு : அந்த விதையை ஒரு பாறையின்மேல் அல்லது ஜலமுள்ள கிணறு, குளம், நதி, சமுத்திரம், இவைகளில் போட்டால் முளைக்குமோ ?

சி : முளைக்காது.

கு : என்ன காரணம் ?

சி : விதைக்க ஏற்படுத்திய ஸ்தலமல்லாத வேறிடத்தில் போட்டதனால்.

கு : அப்பொழுது விதைக்கவேண்டிய ஸ்தலமல்லாமல் வித்திட்டால் அதுமுளைக்கிறதில்லை. விதைக்கவேண்டிய ஸ்தலத்தில் வித்திட்டால் அது முளைத்து, வளர அதிலிருந்து கதிர் உண்டாகிறது. ஆனால் அந்தக் கதிரை நீங்கள் நெற்கதிரென்றோ வயலின் கதிரென்றோ சொல்லுவது.

சி : நெற்கதிரென்றே சொல்லுவது.

கு : அந்தக் கதிர், வயலிலல்லவா உண்டாயிற்று. நெற்கதிரென்று சொல்லுவதற்கு என்ன காரணம் ?

சி : அந்த வயலில் நெல்விதையை விதைக்கவில்லையென்றால் அந்த நெல்கதிர் உண்டாகிறதில்லை. அப்போது அந்த நெல் விதையிலிருந்துதான் கதிர் உண்டானது. அதனாற்றான் நெற்கதிர் என்று சொல்லக்காரணம்.

கு : ஆனால் அந்த வயலினால் என்ன பிரயோஜனம் ?

சி : பயிர் செய்யும் பிரயோஜனம்.

கு : அந்த விதையை வயலில் பயிர்செய்து கதிர் உண்டான போது அந்தக்கதிர் வயலின் கதிரென்று சொல்லுகிறதற்கு இடமுண்டோ ?

சி : இல்லை.

கு : ஆனால் எவ்விடமிருந் துண்டாயிற்றென்று சொல்ல வேண்டும் ?

சி : வித்திலிருந்து.

கு : அப்பொழுது அந்தக்கதிரை பிரசவித்தது யார் ? வயலோ வித்தோ ?

சி: வித்து.

கு: ஆனால் அந்த வித்தை விதைக்கவேண்டிய இடம் அல்லாத பக்கம் விதைத்தால் அது முளைப்பதில்லை. தவிர அந்தவயலை உழுது சமப்படுத்தி அதில் வித்திட்டால் சமமாகி தளர்ச்சியாக யிருக்கும் சேற்றில் அவ்வித்து விழுந்து சேற்றில் சேர்ந்து தளர்ச்சிகொண்டு பருத்து வேரிறங்கி முளைக்கிறதற்கு சாத்தியப்படும். அப்போது அதற்கு யாதொரு தடையுமில்லாமல் வளர்கிறது. அந்த ஸ்தலம் தளர்ச்சியில்லாமல்போனால் சேறு இறுகி, வித்து அடங்கி வேரிறங்குவதற்கும் முளைக்கிறதற்கும் முடியாமல் கெட்டுப்போக இடமுண்டாகிறது. அதனால் வித்துபோடவேண்டிய ஸ்தலம் உழுது சமப்படுத்தி தளர்ச்சியாய் இருக்கவேண்டும். கெற்பம் உண்டானதென்றும் பிரசவித்ததென்றும் சொல்லிவருகிற ஸ்திரீகளுக்குள்ள சம்போக ஸ்தலமானது மேற்சொன்ன விதம் சுக்லம் என்கிற வித்தை விதைக்கவிம் அதை முளைப்பிக்கவும் உள்ள ஸ்தலமென்று எண்ணுங்கள். மற்ற யாதொரு இடத்தும் சுக்லமாகிய வித்தைப்போட்டால் கெற்பம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: காரணம்?

சி: சுக்லமாகிய விதையை விதைக்கவேண்டிய ஸ்தலம் தவறிப் போட்டதனால்.

கு: சுக்லமாகின்ற விதையைப் போடவேண்டிய ஸ்தலமாகிய வயலைத் தளர்ச்சி செய்கிறதுதான் புணர்ச்சி. சம்போகத்தினால், அந்த ஸ்தலம் தளர்ச்சியாகிறது. அப்போது 4-ம் அத்தியாயத்தில் சொன்ன பிரகாரம் முட்டை வடிவத்தில்சுக்லம் சென்று விழுகிறது. தளர்ச்சியாயிருக்கின்ற அந்த ஸ்தலம் அதற்குச் சேர்க்கையாய் நின்று முட்டை வடிவமாகிய வித்து முளைத்து வருகிறது. அந்த ஸ்தலம் தளர்ச்சியானதனாற்றான் முன்சொன்ன வித்து பருத்து முளைக்க இடமுண்டாயிற்று. அப்போது அந்த முட்டை பருத்து உப்பி முளைத்து நாளடைவில் பெரியதாய் மூப்படைந்தபோது வெளியில் வருகிறது. அதுதான் சந்தானம். இப்பொழுது ஸ்திரீ பிரசவித்தாளென்று சொல்வதற்கு இடமுண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: சுக்லத்திலிருந்துதான் உற்பவித்தது. சுக்லம் இல்லாவிடின் பிரசவிப்பதில்லை.

கு: ஆகையால் புருஷன் சுக்லத்தை தரிக்கின்றதுதான் கெற்டம். அது எப்படியேன்றால் உடம்பாகிய புரத்தில் சுக்லத்தை நிறுத்துகிறது. அதாவது வெளியில் விடாமல் பத்திரம்செய்து விருத்தியாக்குகிறது. அதைத்தான் கெற்பம் தரித்ததென்று சொல்லப்படும். அந்தப்படி செய்யாவிட்டால் சுக்லம் உண்டாகிச் சந்தானம் உண்டாகுவதற்குச் சாத்தியப்படுமோ?

சி: சாத்தியப்படாது.

கு: இப்பொழுது கெற்பம் தரிக்கிறது யார்?

சி: புருஷன்.

கு: ஆனால் யார் பிரசவிக்கின்றது?

சி: புருஷன்.

கு: அந்த விதம் சொல்லப்படும் புருஷன் தரித்திருக்கின்ற கெற்பத்தை ஸ்திரீகளென்று சொல்லப்பட்டவர்களது சம்போக ஸ்தலமாகிய வித்தை விதைக்கவேண்டிய ஸ்தலத்தில் சம்போகம் செய்து தளர்ச்சியாக்கி அந்தத் தளர்ச்சியில் வித்தாகப்பட்ட சுக்லத்தைச் சேர்க்கிறான். அந்தச் சுக்லத்திலிருந்து மனுஷரென்று அபிமானிக்கப்பட்டவராகிய பிரகிருதியாயிருக்கின்ற ரூபத்தோடு கூடியவர் உத்பவிக்கிறார்கள். அதில் புருஷரென்று சொல்லுகின்றவரில் அடங்கியிருக்கின்ற சுக்லத்திலிருந்து உத்பவித்ததால் புருஷரூபமும், ஸ்திரீ என்று சொல்லப்படுகிறவரில் அடங்கியிருக்கின்ற சுக்லத்திலிருந்து உத்பவித்ததால் ஸ்திரீ ரூபமும் உண்டாகிறது?

சி: ஸ்வாமியே, ஸ்திரீக்குச் சுக்லம் உண்டோ? உண்டானால் இது எப்படி கெற்ப பாத்திரத்தில் விழுகின்றது?

கு: ஸ்திரீக்கும் சுக்லம் உண்டு. ஸ்திரீக்கு சுக்லம் உத்பவித்து வருவதாகிய ஒரு வஸ்து (நமக்குள்ள மூத்திரக்குழாய்க்கு சமமான ஒரு குழாய்) அவர்களுக்கும் உண்டு. அதின் வழியேதான் அவர்களுக்கு மூத்திரமும் சுக்லமும் வருகிறது, அந்தக்குழாய்க்குக்கீழே கெற்பப்பை கூடி மூடுபட்டு இருக்கிறது. அது சம்போக சமயத்தில் வாயு சக்தியினால் திறக்கப்படுகிறது. அது எவ்விதமென்றால் "ஒரு தோல் பந்திற்குள்" பம்பினால் (அதாவது குழலால்) காற்றை உட்செலுத்துவதுபோல் சம்போக சமயத்தில் அந்தப்பை திறக்கிறது. அச்சமயத்தில் அதில் ரத்தம், நீர் முதலியவைகள் சென்று விழுந்து தளர்ச்சியாகின்றது. அதில் புருஷரென்று சொல்லிவருகிறவருடையதோ, அல்லது ஸ்திரீகளென்று சொல்லிவருகிறவருடையதோ, சுக்லம் முட்டைவடிவமாகச் சென்று விழுந்து, அது அந்தத்தளர்ச்சியிலிருந்து பெரிதாகி, முதிர்ந்து, உடைந்து, வெளியில் கிளம்பி வரு

கின்றது, அதில் ஸ்திரீ என்கிற ரூபமும், புருஷர் என்கிற ரூபமும் உண்டாகின்றது.

சி: ஸ்திரீ சுக்லம், ஸ்திரீ ரூபமென்றும்; புருஷ சுக்லம், புருஷ ரூபமென்றும் சொன்னீரல்லவா? அந்த ஸ்திரீ ரூபம் சிலது தகப்பனின் நிறமும், புருஷ ரூபம் சிலது தாயின் நிறமுமாகக் காணப் படுகின்றதே அது என்ன காரணம்?

கு: சம்யோக சமயத்தில் புருஷன் ஸ்திரீயிடத்தில் அதிமோகத்துடன் ஏக விசாரமாயிருக்கிற சமயத்தில் சுக்லம் இளகினதால் அந்த ஸ்திரீயினுடைய ரூபம் அச்சுக்லத்தில் பிரதிபிம்பிக்கிறது. இதே மாதிரியாகத்தான் ஸ்திரீக்கும் புருஷனிடத்தில் அதிமோகத்துடன் ஏக விசாரமாயிருக்கிற சமயத்தில் சுக்லம் இளகினதால் அந்தப் புருஷனுடைய ரூபம் ஸ்திரீயினுடைய சுக்லத்திலும் பிரதிபிம்பிக்கிறது. அப்போது அந்நியோன்னியம் பிரதிபிம்பிக்கின்ற ரூபமாக ஜனிக்கின்றது. காரணம், விசாரந்தான் ரூபம். விசாரமில்லையானல் ரூபமில்லை. அந்த விசாரம் மனசிலிருந்து உத்பவிக்கிறது. அந்த மனம்தான் சுக்லம். அந்த சுக்லத்தைக் கொண்டுதான் சிருஷ்டி. அந்த சிருஷ்டிதான் ரூபம். அந்த ரூபம்தான் விசாரம். இதனுற்ருன் நிறம் வித்தியாசமாக ஏற்பட்டது. அதற்குத் திருஷ்டாந்தம்:— குதிரையை இணை சேர்க்கிறது எப்படி யென்ருல், விசேஷமான ஒரு ஆண் குதிரையைப் பெண் குதிரையின் முன்னிலையில் நிறுத்தி அதன்பின் பெண் குதிரையினுடைய கண்ணைக்கட்டி கோவேறு கழுதையை மேற்படி பெண் குதிரைக்குத் தெரியாமல் அதனுடன் இணை சேர்த்து பிறகு கோவேறு கழுதையை அப்புறப்படுத்தி பெண் குதிரையினுடைய கண்ணை அவிழ்த்து விடும்போது ஏற்கனவே முன் பார்த்த ஆண் குதிரையை தன் எதிரிலேயே பார்க்கிறது. அந்தச் சமயம் பெண் குதிரைக்கு இந்த எதிரில் நிற்கிற ஆண் குதிரைதான் தன்னேடு சம்யோகம் செய்ததாக விசாரம் உண்டாகி அந்த விசாரத்தை அநுசரித்து மேற்படி ஆண் குதிரையைப்போன்று துல்லியமாகக் குட்டி உண்டாகிறது. ஆனல் உண்மையில் அந்தப் பெண் குதிரையோடுசேர்ந்தது கோவேறு கழுதை. அது தெரியாமல் அதன் முன்னிலையில் நிறுத்தியிருந்த ஆண் குதிரைதான் தன்னேடு சம்யோகம் செய்தது என்கிற விசாரத்தினல், அந்த விசாரத்திற்கு அநுசரித்து குட்டி உண்டானது. அதனுற்ருன் விசாரமாகும் ரூபம். ஆனல் அந்தச் சுக்லம் இளகும்போது எப்படி விசாரமோ அதை அநுசரித்துதான் உத்பவம் உண்டாகிறது என்று இதனல் நன்கு வெளியாகிறது.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

# 7-ம் அத்தியாயம்.

சி: சுவாமி, விசாரம் ரூபமென்றும், ரூபம் விசாரமென்றும் கற்பித்தீர் அல்லவா? ஆனால் அந்தப்பிரகாரமே காணவும் படுகிறது. ஆனால் அது எப்படியென்று புலப்படவில்லை.

கு: இப்படிக் காணப்படுவதும், கேட்கப்படுவதும், அறியப்படுவதும் முதலிய யாவும் ஒன்றுமில்லாதது. இவையாவும் தன்னிலிருந்துண்டானதென்றும், தன்னிலேயே லயிக்கப்படுகிறதென்றும் பல தடவை சொல்லப்படுகிறதல்லவா? ஆனால் இவைகளைக் காணுவதும் கேட்பதும் அறிவதுமாகிய இவைகளெல்லாம் சொப்பனமாகும்.

சி: குருவே, சொப்பனமா? நான் இப்போது தூங்கவில்லையே, தூங்குகையில்தானே சொப்பனம் காண்பது. இப்போது எப்படி சொப்பனம் என்று சொல்லுவது?

கு: ஓகோ, நீர் இப்போது உணர்வோடிருக்கின்றீரோ? ஒருக்காலுமில்லை. உமக்கு இப்போது தூக்கம் காணுவதும், கேட்பதும், அறிவதும் யாவும் இத்தூக்கத்தினாலேதான்.

சி: சுவாமியே, என்ன இவ்விதம் சொல்லுகிறீர். நான் தூங்கும்போது யாதொன்றையும் அறிவதில்லை. இப்போது நான் உணர்வுடன் இருக்கின்றேன். இவையெல்லாம் காணுவதும், கேட்பதும், அறிவதும் செய்கின்றேன். அப்படியிருக்க இது தூக்கமென்றும் இந்தக் காணப்படுபவை எல்லாம் சொப்பனம் என்றும் சொல்வதை எவ்விதத்தில் நம்புகின்றது?

கு: ஆனால் இப்பொழுது உமக்கு தூக்கம் தெளிந்திருக்கின்றதல்லவா? இந்த அவஸ்தை யாதென்று சொல்லவேண்டும்!

சி: ஜாக்கிரதா அவஸ்தை என்று.

கு: எத்தனை அவஸ்தைகள் உண்டு?

சி: மூன்று அவஸ்தைகள்.

கு: அவைகள் யாவை?

சி: ஜாக்கிரம், சொப்பனம், சுழுப்தி.

கு: இப்பொழுது எந்த அவஸ்தை?

சி: ஜாக்கிரதை.

கு: ஜாக்கிரதை என்று சொல்லப்பட்ட நிலைமை எது?

சி: உணர்வோடிருப்பது.

கு: இப்பொழுது உமக்கு உணர்வுண்டோ?

சி: உண்டு.

கு: உண்டென்றால் உம்மை நீர் அறியவேண்டியதல்லவா?

சி: அறிகிறேன்.

கு: ஆனால் உங்களை நீங்கள் அறிந்திருக்கிறீரா?

சி: இல்லை என்னை நான் அறிகிறதில்லை.

கு: உம்மை நீர் அறிந்ததில்லையென்று நீரே சொல்லுகிறீர் அப்படி உங்களை நீங்கள் அறிந்ததில்லை என்றால் உமக்கு உணர்வுண்டென்று சொல்ல இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: உணர்வு இல்லாத அவஸ்தையை ஜாக்கிரதை என்று சொல்லலாமோ?

சி: சொல்லக்கூடாது.

கு: ஜாக்கிரதை அல்லவென்றால் பின் என்ன நிலைமை?

சி: சுழுப்தியாயிருக்கும்.

கு: சுழுப்தி என்றால் என்ன?

சி: தூக்கம்.

கு: ஆனால் இப்பொழுது உமக்கு நல்ல தூக்கமாகும். எப்படியென்றால் நீர் தூங்கும்சமயம் நான் இப்போது தூங்கிக்கொண்டிருக்கிறேன் என்கிற விசாரம் உண்டோ?

சி: இல்லை.

கு: இந்தப்பிரகாரம்தான் நீர் இப்போது தூங்குகிறீர். அப்படி தூங்குவதனால் நான் இப்போது தூங்குகிறேனென்கிற விசாரம் இல்லாமல் போனது?

சி: நான் தூங்குகிற சமயத்தில் இப்படி யாதொரு அவஸ்தையையும் காணுவதில்லையல்லவா? இப்பொழுது இவைகள் காணுகிறது இப்படிக் காணக் காரணமென்ன?

கு: நீர் தூங்கும்போது சொப்பனம் காண்பதில்லையா?

சி : காண்பதுண்டு.

கு : அந்தச்சமயம் நான் இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கிறேனென்றும், தூங்கும்போது காண்பது சொப்பனமென்றும், உள்ள விசாரம் உமக்கிருக்கிறதா ?

சி : இல்லை.

கு : அப்படிச் சொப்பனம் அநுபவித்துக்கொண்டிருக்கையில் உமது விசாரம் யாதென்று தோன்றுகிறது.

சி : இது ஜாக்கிரதா அவஸ்தை யென்றும் எதார்த்தத்தில் நாம் அனுபவிக்கிறதென்றும் தோன்றுகிறது.

கு : தூக்கம் விழித்தபோதோ ?

சி : நான் இதுவரைக்கும் தூங்கிக்கொண்டிருந்தேன் என்றும் அப்போது தோன்றிய யாவும் தூக்கத்தில் சொப்பனம் என்றும் புலப்படுகிறது.

கு : இதுபோலவேதான் நாம் இப்போது தூங்கிக்கொண்டிருக்கிறோம். அதனால் இந்தக் காணப்பட்டதும், கேட்கப்பட்டதும், அறியப்பட்டதும் யாவும் சொப்பனமே. எவ்விதமென்றால், தூங்கும்போது உண்டான சொப்பனமானது எதார்த்தத்தில் நாம் அநுபவிக்கிறதுபோல தோன்றுகிறது. ஆனால் தூக்கம் விழித்த பிறகே தான் அவைகள் உண்மையல்லவென்றும், தூங்கியதால் உண்டான சொப்பனம் என்றும் புலப்படுகிறது. இதைப்போலவேதான், இது தூக்கம், இதில் காண்பதெல்லாம் சொப்பனம், இந்த தூக்கம் எப்போது தெளிகின்றதோ அப்போது மாத்திரம் நானிதுவரைக்கும் தூங்கிக்கொண்டிருந்தேனென்றும், அந்தச் சமயத்தில் பார்த்ததெல்லாம் சொப்பனமென்றும் புலப்படுகிறதுண்டு.

சி : சுவாமின் ! இந்த அவஸ்தை தூக்கமென்றும், காண்பது யாவும் சொப்பனமென்றும் தெளிவாகிறது. ஆனால் சாதாரணமாய் தூங்குகிறதும், சொப்பனம் காண்கிறதும் உண்டல்லவா ?

கு : உங்களுக்கு, இந்தத் தூக்கமும், சொப்பனமும் அல்லாமல் வேறே நீர் தூங்குகிறதோ, சொப்பனம் காணுகிறதோ செய்கிறதில்லை ?

சி : சுவாமியே ! என்ன இவ்விதம் கற்பித்தீர். நான் சாதாரணமாய் தூங்குவதும், சொப்பனம் காணுவதும் உண்டு. அது எனக்கு அநுபவமா யிருக்கையில் தாங்கள் இல்லை என்று சொல்லுவதை நான் எப்படி நம்புகிறது.

கு: ஆனால் நீங்கள் தூங்குவதும், சொப்பனம் காண்பதும் எவ்விதமென்றால், உமக்கு சுமார் ஒரு மைல் தூரத்திற்கப்பால் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அத்தொழிற்சாலையில் நீரிருக்கும்போது நீர் பார்க்கிற தூரம்வரைக்கும், சப்தம் கேட்கிறவரைக்கும் என்னென்ன சங்கதி நடக்கிறதோ அவை யாவையும் காணவும், கேட்கவும், அறியவும் செய்கிறீர். அந்த ஸ்தலம்விட்டு சொந்த வீட்டிற்கு வந்தால் தொழிற்சாலையில் நடக்கிற யாதொரு அவஸ்தையையும் காணவும், கேட்கவும், அறியவும் கூடுகிறதோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: தொழிற்சாலையிலுள்ள யாதொரு அவஸ்தையும் எனக்கு காணாததால்.

கு: ஏன் காண்கிறதில்லை?

சி: தொழிற்சாலையைவிட்டு நான் சொந்த கிரகத்திற்கு வந்ததனால்.

கு: தொழில் ஸ்தலம்விட்டு சொந்த கிரகத்திற்கு வந்தபோது தொழில் ஸ்தலத்தைப்பற்றி யாதொரு சமாச்சாரமும் அறியவோ, கேட்கவோ, காணவோ செய்கிறதில்லை. ஆனாலச்சமயம் நீர் தூங்கினீர் என்று சொல்ல இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: இதேவிதமாகத்தான் இந்தக் காணப்பட்ட உலகமும் நமக்கு ஒரு தொழிற்சாலை. சாதாரணமாக நீர் தூங்குகிறதென்று சொல்லும் சமயம் இந்த தொழிற்சாலையைவிட்டு சொந்த கிரகத்திலிருக்கின்ற சமயமாகும். அந்த தொழிற்சாலையைவிட்டு சொந்த கிரகத்திலிருந்தபோது, தொழில் ஸ்தலத்திலுள்ள யாதொன்றையும் காணவோ, கேட்கவோ, அறியவோ முடியாமலிருக்கிறது. நீர் சாதாரண தூக்கம் என்று சொல்லி வருகிறது இதைத்தான். இது தூக்கமல்ல. தொழில் விட்ட சமயமாகும்.

சி: அந்தத் தொழிற்சாலையை விட்டு வந்தவர் யாரென்று எனக்குத் தெரிகிறதில்லை.

கு: காணுவதும் கேட்பதும் அறிவதும் செய்வது உங்களில் யார்?

சி: மனம்.

கு: மனம் இல்லையென்றால் நீர் யாதொன்றையும் காணவும், கேட்கவும், அறியவும், செய்யவும் முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது தொழில் ஸ்தலத்திலிருந்தது யாரென்று அறியவேண்டியது?

சி: மனந்தான்.

கு: ஆனல் நீர் தூங்குகிறதென்று சொல்லுகிற சமயம் உமது மனம் தொழில் ஸ்தலம் விட்டுச் சொந்த கிரகத்திற்கு வந்த சமயமாகும். அதற்குத் தூக்மென்று சொல்லுவதற்கு இடமுண்டோ?

சி: இல்லை.

கு: பின் என்னவென்று சொல்லவேண்டும்?

சி: மனசின் வேலையைவிட்ட சமயம் என்று.

கு: தவிர, ஒரு கடையில் கடைக்காரன் அநேக சாமான்களைக் கொண்டுவந்து வைத்து பகல் முழுவதும் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறன். வியாபாரம் நிறுத்தினசமயம் சாமான்களை எடுத்து உள்ளேவைத்துக் கதவை மூடித்தாளிட்டிருக்கிற சமயத்தை அவன் தூங்கும் சமயம் என்று சொல்லலாமா?

சி: கூடாது.

கு: ஆனல் அது அவனுக்கு என்ன சமயம்?

சி: வியாபாரம் நிறுத்தின சமயம்.

கு: இதேபிரகாரம்தான் மனமும் ஒரு வியாபாரி. அந்தவிதமான மனம் விசாராதிகளா யிருக்கின்ற சாமான்களைக்கொண்டு வியாபாரம் செய்துகொண்டிருக்கிறது. அதை நிறுத்தி விசாராதிகளாகிய சாமானுடன் உள்ளே பிரவேசித்துக் கதவை மூடியிருக்கிறது. இந்த அவஸ்தையைத்தான் நாம் தூங்குகிறேமென்று சொல்லுவது அது தூக்கமல்ல. அது வியாபாரம் நிறுத்திய சமயம். ஆனல் தூக்கமென்று சொல்லவேண்டியது தன்னைத்தான் அறியாதிருக்கின்ற நிலைக்குத்தான்.

சி: குருவே! தூக்கம் இந்தவிதமானல் சொப்பனம் எவ்விதம் உண்டாகும்?

கு: ஹே, தூங்காமல் சொப்பனம் காண்கிறது என்று சொன்னது சரியல்ல. தூங்கும்போது ஒருபோதும் சொப்பனம் காண்பதில்லை. காண்பதானல் அந்தச் சமயம் தூக்கமென்று சொல்லுவதற்கு இடமில்லை. ஏனென்றல், தொழில் ஸ்தலம் விட்டுச் சொந்த கிரகத்திற்கு வந்திருந்தபோது தொழில் ஸ்தலத்தில் கண்டதும், கேட்டதும், அறிந்ததும், செய்ததுமாகிய எல்லாக் காரியங்களையும் நீர் ஆலோசிப்பதில்லையா?

சி: ஆம்.

கு: தூங்கினல் ஆலோசிக்க முடியுமா?

சி: முடியாது.

கு: அப்படி ஆலோசிப்பதற்குச் சொற்பனம் என்று சொல்லக்கூடுமோ?

சி: கூடாது.

கு: ஆனல் அதை என்னவென்று சொல்லவேண்டும்?

சி: நான் செய்தவைகளையும் செய்யவேண்டியவைகளையும்பற்றி யோசிக்கின்ற சமயம் என்று சொல்லலாம்.

கு: அந்த யோசனை செய்வது எப்போது எவ்விடமிருந்து?

சி: தொழில்விட்டு சொந்த கிரகத்திற்கு வந்திருக்கிற சமயம்.

கு: ஆனல் நீர் தூக்கமென்று சொல்லுகின்ற சமயம், மனசினுடைய தொழிலைவிட்டு, சொந்த கிரகத்திலிருக்கின்ற அவஸ்தையல்லவா. அந்தப்பிரகார மிருக்கும்போது மனம் தன்னுடைய தொழில்களைப்பற்றி ஆலோசிப்பதைத்தான் சொப்பனம் என்று சொல்லுகிறது. நீர் தொழிலைவிட்டு சொந்த வீட்டிற்கு வந்திருந்து, உமக்கு அறிவுண்டாகியதற்குப்பின் நடந்ததாயிருந்த சம்பவங்களைத் தானே ஆலோசிக்க இடமுள்ளதும் ஆலோசிக்கிறதும்? தவிர, இனிமேல் இன்னின்னது செய்யவேண்டு மென்றும், செய்விக்கவேண்டுமென்றும். ஆலோசிக்க இடமுள்ளதும், ஆலோசிக்கிறதும் சகஜமல்லவா. அதுபோலவேதான் மனம் தன்னுடைய தொழில்விட்டு சொந்த வீட்டிற்கு வந்திருந்து, தன்னல் அறியப்பட்டதையும், காணப்பட்டதையும், கேட்கப்பட்டதையும், ஆலோசிக்கின்றதைத் தான் நீர் சாதாரணமாக சொப்பனம் காணுகிறதென்று சொல்லுகிறது. அது சொப்பனமல்ல. மனம் தொழில் ஸ்தலத்தைவிட்டு சொந்த ஸ்தலத்திலிருந்து முன்சொன்ன சங்கதிகளைப்பற்றி ஆலோசிக்கின்றதுதான். இந்த ஆலோசனைக்கு சொப்பனமென்று சொல்லுவதற்கிடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: அதுமட்டுமல்ல, நீர் ஜனித்தபின் அறியாதிருந்ததோ, கேட்காதிருந்ததோ, காணுதிருந்ததோ ஆகிய யாதொரு சங்கதிகளையும் சொப்பனம் காணுகிறதுண்டோ?

சி: காணுகிறதுண்டு.

கு: நீர் பிறந்ததின்பிறகு, காணுதவைகளோ, கேட்காதவைகளோ, அறியாதவைகளோ, ஆகிய யாதொன்றைக் குறித்தும் சொப்

பனம் காண்பதில்லை. ஆனாலும் கனவில், ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, பிரான்ஸ், காசி, இராமேஸ்வரம், கிஷ்கிந்தா, அயோத்தியா, அரித்துவாரம், சத்தியலோகம், பாதாளம், நரகம், சொற்கம், முதலியவைகளைப் பார்த்ததாகவும், ஆகாயத்தில் பறந்து சமுத்திரத்தில் விழுந்து, தீயில் குதித்து, சிறுத்தை கடித்து, புலி கடித்து, யானை முட்டி, பாம்பு கடித்து, மரத்திலிருந்து விழுந்து கப்பல் ஏறி, ஓடி விழுந்து, தாயார் இறந்து, தகப்பனார் இறந்து, குழந்தை கிணற்றில் விழுந்து, வண்டியில் போய், யுத்தம் செய்து, வெட்டுக்காயம் உண்டாகி, சண்டையாகி, கால் உடைந்து, கை உடைந்து, கண் அடிபட்டு, தூக்குப்போட்டு, இறந்து, உத்தியோகம் தரித்து, ஆற்றில் விழுந்து, வியாபாரம்செய்து, இன்னும் மற்றுமுள்ள அநேக விதத்தில் நடந்ததாகவும் கண்டதுண்டென்றும் நீர் சொல்லலாம். இவைகளில் யாதொரு அவஸ்தையும் நீர் ஜனித்ததின்பிறகு, கேட்காமலிருந்ததோ, காணாமலிருந்ததோ, அறியாமலிருந்ததோ, ஆகுமா?

சி: ஆகாது.

கு: அதனால், அந்த அவஸ்தையானது மனம் தன்னுடைய தொழில் விட்டு சொந்த வீட்டிலிருந்துக்கொண்டு, தன்னால் அறியப்பட்டதையும், காணப்பட்டதையும், கேட்கப்பட்டதையும், பற்றி ஆலோசிக்கிறதுதான். அது சொப்பனம் அல்ல. சொப்பனம் என்பது இப்போது நாம் அநுபவிக்கின்றதேயாம்.

சி: சுவாமியே! இது சொப்பனம் என்று சொன்னீரல்லவா? ஆனால் இவ்வளவு அதிகமாகச் சொப்பனம் அநுபவிப்பதில்லையல்லவோ?

கு: நீங்கள் சாதாரணமாக தூங்குகிறதென்று சொல்லும் சமயம் அநுபவித்ததென்று சொல்லுகிற சொப்பனமா, அல்லது இப்போது அநுபவிக்கிற இந்த சொப்பனமா எது அதிகம்?

சி: இப்போது அநுபவிக்கிறதுதான்.

கு: ஆனால் நீர் படுத்துத்தூங்குகிறதென்று சொல்லும் சமயத்தில் ஒரு நிமிஷநேரம், அநுபவிக்கின்ற சொப்பனத்தைவிட இப்பொழுது அநுபவிக்கிறதில்லை. அதனால் இந்த அநுபவம் நிமிஷ சொப்பனமும் தூங்கும் சமயத்தில் அநுபவித்ததென்று சொல்லப்பட்ட சொப்பனம் நீண்ட சொப்பனமுமாகும். நீர் சாதாரணமாக படுத்துத்தூங்கும் சமயம் அநுபவித்ததென்று சொல்லுகிற சொப்பனம் எத்தனை நேரம் உண்டாயிருந்தது? மிகவும் குறைந்த சமயம் தான். அதுவும் ஒன்றோ இரண்டோ நிமிஷநேரமிருக்கலாம். அங்

தச்சமயத்துக்குள்ளாக நீர் எத்தனையோ நீண்ட காலத்துக்குள்ள ஸ்திதிகளை அநுபவிக்கின்றீர். எப்படியென்றால் தாய் இறந்தது, தகப்பனார் இறந்தது, காசியிலும், இராமேஸ்வரமும்போய், பிண்டம் வைத்து இந்த வருஷம், இந்த மாசம், இந்த தேதியில் பிறந்தது இன்றைக்கு 60 வயதாயிற்று, ஷஷ்டி பூர்த்தியாகி நான் வாதரோகம் பிடித்து படுத்து கஷ்டப்பட்டுப்போய் வெட்டுண்டு காயம்பட்டு பிடித்து தண்டித்து ஜெயிலில்போய் இராஜாவாகி இன்னதிக்கில் இறந்து இந்த இடத்தில் பிறந்து இந்த மனிதனை தூக்கத்தில்போய் கூப்பிட்டு நாங்களிருவரும் ஒரு இடத்தில் படுத்துத்தூங்கி இந்தப் பிரகாரம் அநேக சதுர்யுகங்கள் அநுபவித்ததாக சொப்பனம் கண்டு பயந்து அழுது அந்தச்சமயம் நீர் சொன்ன தூக்கம் விழித்தால் மேற்சொன்னவை யாவும் உண்மையில் உண்டானதா ?

சி : இல்லை.

கு : ஆனால் இவைகளை அநுபவித்ததெல்லாம் எத்தனை நேரத்தில் ?

சி : ஒரு நிமிஷ நேரத்தில்.

கு : ஒரு நிமிஷ நேரத்தில் எத்தனை சதுர்யுக காலத்தின் விருத்தாந்தங்கள் நமக்கு அநுபவமாய்த் தோன்றுகின்றன.

சி : அது அநேக சதுர்யுக விருத்தாந்தங்கள் அநுபவித்ததாகத் தோன்றுகின்றன.

கு : அப்பொழுது நீண்ட சொப்பனம் எது ?

சி : தூங்குகிறோம் என்று எண்ணிவருகின்ற சமயத்தில் தோன்றின சொப்பனம்.

கு : ஆனால் நமக்கு இப்போது நல்ல தூக்கம். இப்படி தூங்குகிறதினால் உலகம் உண்டென்றும், தாய் தகப்பன்மார்கள் உண்டென்றும், பிறந்தோம், இறந்தோமென்றும், ஐந்து பிராயமுதல் 100-வயது ஆனதென்றும், பிறந்தவுடன் இறந்து என்றும், மற்றுமுள்ள இந்தக் காணப்பட்ட எல்லா அவஸ்தைகளும் தோன்றுகின்றன. இது நமக்கு ஒரு நிமிஷ நேரத்து சொப்பனமாகும். எந்தச் சமயம் நம்முடைய இந்தத் தூக்கம் தெளிகின்றதோ, அப்பொழுது மாத்திரம் இதுவரையும் நாம் தூங்கிக்கொண்டிருந்தோமென்றும், நாம் இப்போது கண்டதெல்லாம் சொப்பனமாகுமென்றும் தோன்றுகிறதுண்டு. ஆகையினால் இப்போது இது நமக்கு தூக்கமும், இந்தக் காணுகின்றதும், கேட்கின்றதும், அறிகின்றதும், அநுபவிக்கின்றதும் சொப்பனமாகும். உண்மை அல்ல. தவிர, தூக்கமென்று சொல்

ஒுகிறது அறிவில்லாமையைத்தான், அதாவது அறியப்படவேண்டு வதை அறிந்துக்கொள்ளாததுதான்.

சி: சுவாமியே! நான் சுகமாக தூங்கினேன் என்றும் யாதொன் றையும் அறியவில்லை என்றும், தூக்கம் விழித்தபின் பிறகு சொல்லு கின்றோம். இந்த வாசகத்தில் ஒன்றும் தெரிகிறதில்லை. தூங்கிப் போனதென்று அறியப்படுகிற ஒரு அறிவு மிச்சமிருக்கின்றதல்லவோ? அது என்ன?

கு: இந்த வார்த்தையானது சுத்த தப்பு. எப்படியென்றால் தூங்குவதற்காகப் படுத்து தூக்கம் வருமளவும் நான் தூங்குவதற்கா கப் படுத்துக்கொண் டிருக்கிறேனென்றும், தூக்கம் விழித்ததும், நான் இதுவரை தூங்கிக்கொண்டிருந்தேனென்றுமுள்ள விசாரம் உண்டாகிறது. தூங்குகிற சமயத்தில் நாம் தூங்குகிறோமென்கிற விசாரம் உண்டாயிருந்ததா?

சி: இல்லை.

கு: தூக்கம் விழித்தபோது தூங்கிக்கொண் டிருந்தே னென்று நீர் அநுமானிப்பதல்லாமல் தூங்கியபோதுள்ள அவஸ்தை இன்னதென்று சொல்லுவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் உலகத்தில் சாதாரணமாகப் படுத்து தூங்கும் போதோ, புத்திகெட்டு கிடக்கும்போதோ, காக்கை வலிப்பால் மயங் கிக் கிடக்கும்போதோ, ஜன்னிகண்டு உச்சிவரை ஏறி உறைந்து கிடக் கும்போதோ, அதல்லாமல், ஆஸ்பத்திரி மருந்தாகிய “குளோரபாம்” மயக்க மருந்தை மூக்கின் நேரில் பிடித்து மயங்கிக்கிடக்கிற சமயத் திலோ, உலகத்தைப்பற்றியும் மற்றும் யாதொரு அறிவோ, நினைவோ உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் அவைகளெல்லாம் எவ்விதம் கருதவேண்டும்?

சி: தூக்கமாகவேதான் கருதவேண்டும்.

கு: அதனால் அறிவை அறியாமல் இருக்கின்றதுதான் தூக் கம்? ஆனால் அறிவா யிருக்கின்ற வஸ்து எது?

சி: அது தானாயிருக்கின்ற பிரம்மம்.

கு: அறியாமையாய் இருக்கின்ற வஸ்து எது?

சி: மாயை.

கு: ஆனால் நாம் எந்த நிலைமையில் இப்போது இருக்கின் றோம்?

சி: மாயை நிலையில்.

கு: அப்பொழுது மாயை என்ன வென்றுகிறது?

சி: தூக்கமென்றுகிறது.

கு: ஆகையினுல் மாயையாயிருக்கின்ற தூக்கத்தில் கண்டு அநுபவிக்கின்ற சொப்பனந்தான் இதோ காணுகின்ற அவஸ்தை. எப்பொழுது மாயையாயிருக்கின்ற தூக்கம் தெளிகின்றதோ, அப்பொழுது உணர்வு உண்டாகும். அந்த உணர்வைத்தான் ஜாக்ரதா, ஜாக்ரதா என்று சொல்லுவது எதை என்றுல், அநித்தியமாகி என்னுடையதென்றும், உன்னுடையதென்றும் மற்றுமுள்ள ராகத்வேஷம் முதலாகிய விர்த்திகளை விட்டு நித்தியமாயுள்ள தன்னைத்தான் அறிகின்ற அவஸ்தையாகும். அப்போதுதான் ஜாக்ரதா அவஸ்தை என்று சொல்லுவதற்கு இடமுண்டு, இப்பொழுது ஜாக்ரத் இல்லை.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

# 8-ம் அத்தியாயம்.

சி: குருவே! உலகம் தன்னிலிருந்து உத்பவித்ததென்றும், அது ஒரு புகை என்றும், சொப்பனம் என்றும், கற்பித்தீர் அல்லவா? ஆனால் உலகம், கர்ம பந்தமென்றும். அவ்விதம் பந்திக்கப்பட்டதனால் கர்மம் செய்தால் மாத்திரமே விமோசனம் கிடைக்குமென்றும், எல்லாம் கர்மம்தானென்றும் கர்மமில்லாது இருந்தால் ஒன்றுமில்லை என்றும் சொல்லுகிறீர்களே, இதனுடைய தாத்பரியம் என்ன?

கு: உலகம் உம்மிலிருந்து உத்பவித்திருக்கின்ற ஒரு புகை என்றும், அது சொப்பனம் என்றும் நீங்கள் பூரணமாக நம்புவீராகில் பிறகு கர்மம் என்னும் நிலை எது? ஆனால் கர்மம் என்பது என்ன?

சி: கர்மம் என்பது தொழில்.

கு: ஒருக்காலும் கர்மத்துக்குத் தொழில் என்று சொல்ல முடியாது. ஏன் என்றால் நமக்கு மூன்று அவஸ்தைகள் இல்லாமல் யாதொன்றும் உண்டாகுவதற்கு இடமில்லை. அதாவது கர்த்தா, கர்மம, கிரியா, இப்பிரகாரம் மூன்று அவஸ்தைகள் இல்லாதிருந்தால் ஒரு தொழில் என்கிற சப்தம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: ஆனால் இம்மூன்றின் பொருள் என்ன?

சி: கர்த்தா என்பது தொழிலைச் செய்கின்றவன். கர்மம் என்பது தொழில். கிரியா என்பது யாதொன்றைச் செய்கின்றேமோ அது.

கு: செய்கை என்பதின் பொருள் என்ன?

சி: தொழில்தான்.

கு: அப்பொழுது கிரியைக்கும் தொழில் என்று அர்த்தமாகிறது. கர்த்தா, கர்மம், கிரியை இந்தப்பிரகாரம் மூன்று அவஸ்தைகளில் கர்த்தாவென்பது தொழிலைச்செய்கிற ஆள் என்றும், கர்மம், கிரியை என்பது தொழில் என்றும ஆகிறது. அப்படி வருகிறதற்கு இடையில்லை. ஏனென்றால் "கண்ணன் முயலைக் கொன்றான்" என்

கிற வாசகத்தில் கர்த்தா, கர்மம், கிரியா இவைகள் இருக்கின்றதா? இருந்தால் அவைகள் எவை?

சி: இருக்கின்றது. அவைகள் கண்ணன் என்பது கர்த்தாவும், முயல் என்பது கர்மமும், கொன்ருன் என்பது கிரியையும் ஆகும்.

கு: அப்பொழுது கர்மத்திற்கு தொழில் என்கிற அர்த்தம் போய்விட்டதல்லவா? கண்ணன் முயலைக் கொன்ருன் என்கிற வாசகத்தில் இந்தப்பிரகாரமல்லாமல் வேறுவிதமாக யிருக்குமோ?

சி: இருக்காது.

கு: அப்பொழுது கர்மம் என்பதற்கு தொழில் என்கிற அர்த்தம் உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனுல் கர்மம் என்பது என்ன?

சி: பேர் மாத்திரமா யிருக்கின்ற ஒரு வஸ்து.

கு: ஆனுல் உலகத்தில் கர்மம் என்பது இன்னதென்று பகுத்தறியாமலே அதைத் தொழிலென்று கருதியிருக்கிருேம். அது அந்தப்பிரகாரமல்ல. ஒரு வஸ்து இல்லையென்ருல் தொழில்செய்வதற்கு முடியாது. தவிர உலகத்தில் எவ்விதம் பார்த்தாலும் கர்மம் என்பது வஸ்து என்றல்லாமல் தொழில் என்று வருவதில்லை. ஏன் என்ருல் கர்த்தா, கர்மம், கிரியா, இவைகள் மூன்றும் அடங்கியிருக்கின்ற வாசகமும், கர்த்தா கிரியைமட்டும் அடங்கிய வாசகமும், கர்மமும் கிரியாவும் மாத்திரம் அடங்கிய வாசகமும் நாம் பேசுகிருேம். அவைகளைப்பற்றி நீங்கள் ஆலோசித்துப்பார்த்தால் கர்மம் என்பது வஸ்து என்று தெரியப்படும். அதாவது கிருஷ்ணன் புசித்தான் இந்த வாசகத்தில் என்னென்ன யிருக்கின்றன.

சி: கர்த்தாவும் கிரியை யாவும் மாத்திரம்.

கு: எது கர்த்தா? எது கிரியா?

சி: கிருஷ்ணன் என்பது கர்த்தா, புசித்தான் என்பது கிரியை?

கு: புசித்தான் என்பதை கிரியா என்று சொல்வதின் காரணமென்ன?

சி: புசித்தல் என்பது தொழில் தொழிலானதால் அது கிரியா.

கு: நீங்கள்தானே முன்னமே கர்மம் தொழில் என்று சொன்னீர் இப்போது கிரியா என்று சொல்லுகின்றீர் ஆனுல் கிருஷ்ணன் புசித்தான் என்கிற வாசகத்தில் கர்மம் வெளிப்பட்டிருக்கிறதா?

சி: இல்லை.

கு: ஆனால் அந்த கர்மத்தை வெளிப்படுத்தலாம் "கிருஷ்ணன் எதைப் புசித்தான்" என்கிற கேள்வியில் ஒரு வஸ்துவை அதாவது பழத்தைப்புசித்தான் என்று பதில் கிடைக்கிறது. அந்த வாசகத்தில் கர்மம் என்பது என்ன?

சி: பழம்.

கு: அப்போது பழம் என்று சொல்லுவது தொழிலோ வஸ்துவோ?

சி: வஸ்துதான்.

கு: இதனால் கர்மம் என்பது வஸ்துவென்று வெளிப்படுகின்றது. தவிர உங்களுடைய வீட்டில் ஒரு மாம்பழத்தை ஒருவர் பத்திரப்படுத்திக் கொடுத்துவைத்து பின்பு ஒரு சமயத்தில் அந்த மாம்பழத்தைக் கேட்டபோது, வாங்கினவர், அந்த மாம்பழத்தை தின்று விட்டேன் என்றார். இந்த வாசகத்தில் என்னென்ன இருக்கின்றன?

சி: கர்மமும் கிரியையும் உண்டு.

கு: அதில் கர்மம் எது? கிரியா எது?

சி: மாம்பழம் என்பது கர்மமும், தின்றேன் என்பது கிரியையும் ஆம்.

கு: இந்த வாசகத்திலும் கர்மம் வஸ்துவென்று வெளிப்படுகிறது. அதனால் எந்தப்பிரகாரம் உலகத்தில் நடக்கின்ற அவஸ்தைகளைப் பார்த்தாலும், கர்மம் என்பதற்கு வஸ்துவென்றல்லாது தொழில் என்கிற அர்த்தம் இல்லவே இல்லை. இதனாலேதான் கர்மம் இல்லையானால் ஒன்றுமில்லையென்றும், எல்லாம் கர்மமாகுமென்றும் சொல்லப்படுவது. அந்த கர்மம் வஸ்துவென்றும் வெளிப்பட்டது. அப்போது வஸ்துவில்லையானால், ஒன்றும் இல்லை என்றும் எல்லாம் வஸ்துவென்றும் ஏற்படுகிறது. அதனால் அந்த வஸ்துவையேதான் நாம் அறியவேண்டியது. அந்த வஸ்து எதுவென்று சொல்ல முடியுமா?

சி: முடியும், அது ஏதெல்லாம் காணப்படுகின்றதுவோ, அவையனைத்தும் வஸ்துக்களே யாகும். அதனால் வஸ்துவென்பது காணப்படுகிறயாவும்.

கு: இந்தக் காணப்பட்ட அனைத்தும் வஸ்து வென்றாலும், நீங்களில்லாவிடில் உங்களுக்கு இந்த வஸ்துக்களைப் பார்க்க முடியுமா?

சி: முடியாது.

கு: அது ஏன்?

சி: நான் இல்லாததனுல்.

கு: அப்பொழுது நீர் உண்டென்ருல் இதுகளைக் காண முடியுமா?

சி: முடியும்.

கு: நீர் தூங்குகிறதென்று சொல்லும் சமயத்தில் காண்பதுண்டா?

சி: இல்லை.

கு: அது ஏன் நீர் இல்லாமலிருந்தீரோ?

சி: அப்பொழுது நான் உண்டென்ருலும் என்னிலிருந்து உத்பவித்திருந்த சக்தி என்னில் தானே அடங்கியிருந்தது அதனுல் காணவில்லை.

கு: அந்த சக்தி எது? ஒரு பிணத்திற்கு அந்த சக்தி உண்டா?

சி: அந்த சக்தி என்னுடைய ஜீவனின் சக்தி. பிணத்திற்கு ஜீவன் இல்லாததனுல் அந்த சக்தி இல்லை.

கு: ஆனுல் அந்த ஜீவசக்தி என்பது எது?

சி: வாய்வு.

கு: அந்த ஜீவசக்தி வெளியில் வாயுவாக சலியாதிருந்தால் இவ்விதமான யாதொரு அவஸ்தையும் காணப்படுமா?

சி: காணப்படாது.

கு: அந்தச் ஜீவனுடைய சக்திதான் இந்தக் காணப்படுகிற அவஸ்தை. அப்போது காணுவதற்குக் காரணமாகின்றது. ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயு, அந்த வாயுதான் வஸ்து, வாயுவாயிருக்கின்ற வஸ்து இல்லையென்ருல் யாதொன்றுமில்லை. அந்த வாயுவினுல் பந்திக்கப்பட்டது இந்த உலகம். அந்த வாயுதான் கர்மம். இதனுற்ருன் உலகத்தைக் கர்மபந்தமென்று சொல்லுவதற்குக்காரணம். கர்மம் செய்தால் மாத்திரமே மோக்ஷம் கிடைக்கும். அந்தக் கர்மமாயிருக்கின்ற வாயுவிற்கு, நானுவிதமான விசாரங்கள் உண்டாவதனுல் பந்தம் உண்டாகிறது. கர்மமாயிருக்கின்ற வாயு மேற்சொன்ன விசாரங்களைவிட்டு தன்னில்தானே ஒன்றுபடும்போது தான் மோக்ஷம். இதனுற்ருன் கர்மம் செய்தால் மாத்திரமே மோக்ஷங்கிடைக்குமென்று சொல்லுவது. ஆனுல் உலகம் கர்மமாயிருக்கின்ற வாயுவினுல் எந்த விதம் பந்திக்கப்பட்டிருக்கின்றதென்பதைச் சொல்லுகிறேன். அதாவது எட்டுக்கால்பூச்சி என்று சொல்லப்படுகிற ஜீவி ஒரு வலை கட்டுகின்றது. அந்த வலை அதற்கு இருக்கிற

தற்கும், அதனுடைய ஆகாராதிகளைக் சம்பாதிப்பதற்குத்தான். ஆனால் அந்த வலை கட்டினது எதைக்கொண்டென்று சொன்னால் நூலைக்கொண்டென்று நமக்குத் தெரிகிறதல்லவா? ஆனால் இந்த நூல் எவ்விடமிருந்து கிடைத்தது.

சி: தன்னுடைய உள்ளிலிருந்து.

கு: அது அதன் உள்ளிருக்கின்ற ஒரு சக்தி. அந்த சக்தி ஒரு பசையாகும். அந்தச் சக்தியாயிருக்கின்ற பசை நூலாகி, அந்த நூலினால் முன்சொன்ன வலையாயிருக்கின்ற உலகத்தை சிருஷ்டித்தது. அந்த எட்டுக்கால்பூச்சி அவ்வலையின் ஒரு பாகத்திலிருக்கின்றது. அந்த வலையில் ஏதேனும் பூச்சிகளகப்பட்டால் அவைகளைப் பிடித்துத் தின்னவும் செய்கிறது. ஆனால் மேற்படி நூலைக்கொண்டு கட்டப்பட்ட உலகத்தை தானாகவே அழித்துத் தன்னுள்ளிலே கொண்டுபோய், சொஸ்தமாயிருக்கின்றது. திரும்பவும் அப்படியே கட்டுவதும் அழிப்பதுமாக இருக்கிறது. இவ்விதம் கட்டுவதும் அழிப்பதுமாயிருந்து கடைசியில் அதன் புச்சம் அல்லது அதனுடைய முடிவிலிருந்து அந்த நூல் அற்றுப்போகின்றது. அப்பொழுது தான் கட்டின உலகத்திற்றானே விழுந்து சாகிறது. ஆனால் அந்த நூல் வெளியில் சிறிது தூரத்திலிருந்து அறுந்துபோனால் அறுந்த துண்டோடு பசையாகிய நூலைத்தொடுத்துச் சேர்த்து முன்பிரகாரம் கட்டுவதும் அழிப்பதுமாக இருக்கிறது. நூலாகக்கட்டிய பசை அதனுடைய உடற்கடையாகிய உற்பத்தி ஸ்தானத்திலேயே அற்றுப்போம்போது செத்துப்போகின்றது. ஆனால் தன்னுடைய சக்தியாயிருக்கின்ற பசையான நூலை வெளியில் விடாமல் உள்ளேயே வைத்துக்கொண்டிருந்தால் அது ஒருகாலத்தும் நசித்துப்போகிறதில்லை. அதைத் தன்னுள்ளே நிறுத்தாமல் வெளியில் விட்டதினால் தான் அதற்கு நாசம் வந்தது. இதுபோலவேதான் நமக்கும் கர்மம் என்று சொல்லுகிறது வாயுவாயிருக்கின்ற ஒரு நூல். அது எவ்விதமென்றால் நமது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு என்னும் நூலை நாம் வெளியில்விட்டு உலகத்தைக்கட்டி அந்த உலகத்தில் மோகாந்தர்களாய் தன்னைத்தான் அறியாமல், நான் மிகவும் சமர்த்தன், பெரிய ஸ்தானி, மானி, பிரபு, சிரேஷ்டன், பண்டிதன், ஞானி, என்னும் மற்றுமுள்ள அனைவோரும் நிகிற்ஷ்டர்களென்று சொல்லி ராகத்வேஷ முதலாகிய துரபிமானத்துடனும் இருக்கிறோம். ஆனால் மேற்சொன்னபிரகாரம் தான் கட்டிய உலகத்தைத் தானே அழித்து தனது உள்ளே சேர்த்துச் சொஸ்தமாயிருக்கவும் செய்கிறோம். அந்தச் சந்தர்ப்பத்தைத்தான் தூங்குகிறதென்று சொல்லுகிற அவஸ்தை. அந்த அவஸ்தையில் நமக்கு உலகம் உண்டோ?

சீ : இல்லை.

கு : ஏன் ?

சி : தன்னுடைய சக்தி தன்னில் அடங்கி சொஸ்தமாயிருந்ததனால்.

கு : பின் எப்போது உலகத்தைக் காண்கின்றது ?

சி : தனது சக்தி தன்னிலிருந்து வெளியே வியாபித்தபோது.

கு : அது எந்தவிதமென்றால் முன்சொல்லிய எட்டுக்கால் பூச்சி எவ்விதம் தனதுள்ளிலிருக்கின்ற சக்தியான பசையை நூலாக வெளியில்விட்டு வலையாகிய உலகத்தை கட்டுவதும் அழிப்பதுமாக இருந்ததோ அப்பிரகாரம் நாமும் நம்மிலுள்ள சக்தியாய் வாயுவாய் கர்மமாயிருக்கின்ற நூலே வெளியில்விட்டு உலகத்தைக் கட்டவும் அழிக்கிறதும் செய்கிறோம். கடைசியில் எப்படி அந்த எட்டுக்கால் பூச்சியானது தன் சக்தியாயிருக்கின்ற நூல் அதன் உற்பவஸ்தானத்திலிருந்து அறுந்து சாகிறதைப்போல் நாமும் நமது ஜீவசக்தியாய் கர்மமாய் வாயுவாயிருக்கின்ற நூல் அதனுடைய உற்பவஸ்தானமாகிய புருவ மத்தியத்திற்கு கீழாகவும் மூக்கிற்கு மேலாகவுமுள்ள ஸ்தலத்திலிருந்து அறுந்தபோது இறந்துபோகிறோம். இதற்குத்தான் ஒருவன் இறந்தபோது அவன் கர்மம் அற்றுப்போயிற்றென்று சொல்வதின் காரணம், அந்த கர்மமாய் வாயுவாயிருக்கின்ற நூலைக்கொண்டு தான் உலகத்தைப் பந்தித்திருப்பது. அதனாற்றான் கர்மபந்தம் என்று சொல்லுவதின் காரணம். தவிர ஒருவன் இறந்தால் அவனுடைய கர்மம் எப்படிப் போயிற்றென்று சொல்கிறோம் ?

சீ : அவனுடைய கர்மம் அற்றுப்போயிற்றென்று.

கு : தூங்கும்போது அவனுடைய கர்மம் அற்றுப்போயிற்றென்று சொல்கிறதுண்டோ ?

சி : இல்லை.

கு : இறந்தபோது கர்மம் அற்றுப்போயிற்றென்று சொல்லுவதற்கும், தூங்கும்போது கர்மம் அற்றுப்போயிற்றென்று சொல்லாதிருப்பதற்கும் காரணம் என்ன ?

சி : இறந்தபோது வாயு கதாகதம் செய்கிறதில்லை. தூக்கமென்று சொல்லும் சமயத்தில் அவனுடைய உள்ளினுள் வாயு கதாகதம் செய்கிறதுண்டு அதனாற்றான்.

கு : தவிர ஒரு நிமிஷ நேரமாவது கர்மம் இல்லாமல் யாதொன்றும் ஜீவித்திருக்காதென்று சொல்லுகிறார்கள். உலகத்தில் கர்மம் என்பதை தொழிலென்று சொல்லுகிறார்கள். கர்மம் என்பது

தொழில் என்றால் தூக்கம் என்று சொல்லுகிற சமயம் யாதேனும் தொழில் உண்டா?

சி: உண்டு.

கு: அது என்ன?

சி: தூங்கும் தொழில்.

கு. அது எப்படி? தூக்கமென்று சொல்லும் சமயத்தில் நான் இப்பொழுது தூங்குகிறேன் என்றுள்ள விசாரம் உமக்குண்டோ?

சி: இல்லை.

கு: காரணம்?

சி: மனமாகிய சக்தி வெளியில் இல்லாததனால்.

கு: அப்பொழுது விசாரமும் தொழிலும் எங்கேயிருந்துண்டாகின்றது?

சி: மனதில்.

கு: மனதில்லாதிருந்தால் யாதொன்றையும் செய்வதற்கோ அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் நீர் தூங்குகின்றதென்று சொல்லும் சமயத்தில் தொழிலுண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது கர்மம் இல்லையா? தொழில் என்பது கர்மம் என்றால் அறியவேண்டியதல்லவா?

சி: கர்மம் உண்டு. கர்மம் என்பது தொழில் அல்ல. ஆனதனால் தெரியவில்லை.

கு: கர்மம் இல்லையானால் ஒரு நிமிஷ நேரங்கூட இருக்க சாத்தியப்படாதென்று சொல்லுகிறீரல்லவா? தூக்கம் என்று சொல்லுகிற சமயத்திலும், கர்மம் உண்டென்று தெரிகிறது. அதனால் கர்மம் தொழில் அல்லவென்றும் வாயுவாகுமென்றும் தெரிகிறது. அந்தக்கர்மம் ஜீவனின் சக்தியாயிருக்கின்ற வாயு. அந்த வாயு வெளியில் வியாபித்து உலகத்தை சிருஷ்டித்து, உலகத்தை பந்தித்துக்கொண்டிருக்கிறது. அப்பொழுது உலகம் கர்மபந்தமாகின்றது. எப்பொழுது இறந்துபோகின்றதோ அப்பொழுது அந்த வாயுவாயிருக்கின்ற கர்மம் அற்றுப்போகின்றது. இதனால்தான் கர்மம் அற்றுப்போனதென்று உலகம் சொல்லுகிறது. அதனால்

உலகம் என்கிற விஷயத்தை பந்தித்திருக்கின்ற கர்மமாய் வாயுவா யிருக்கின்ற சக்தியை அந்த பந்தனத்திலிருந்து வேறுபடுத்தி தனது உள்ளிலே நடத்தி அதனுடைய உத்பவஸ்தானமாகிய ஆகாசத்தில் (பிரம்ம ரந்திரம்) சேர்த்து ஒன்றுபடுத்துவதற்குத்தான் மோக்ஷம் என்று சொல்லுகிறது. இதுதான் கர்மயோகம், கர்மம் என்பது வாயு. யோகம் என்பது சேர்தல். கர்மயோகம் என்பது வாயு சேர்தல் அதாவது வாயுவினுடைய உத்பவஸ்தானமாய் ஆகாசமா யிருக்கின்ற பிரம்ம ரந்திரத்தில் அது சேர்க்கின்றதுதான். அப்படி செய்யாமல் நானாவிதமாக ஈஸ்வரரென்று சங்கற்பித்து பூஜிப்பதும், பஜிப்பதும், தொழுவதும், மந்திரங்கள் ஜபிப்பதும், தானம் கொடுப் பதும், விரதம் அநுஷ்டிபதும், முதலானவைகள் செய்து ஜனங்கள் பட்டினிகிடந்து கஷ்டப்பட்டு யாதொரு புத்தியும் விபாமுமில் லாமல் அதோகதியாகி நசித்துப் போகிறதல்லாமல் யாதொரு ஞான மும் அடைவதில்லை. ஞானம் உண்டாக வேணுமேயானால் மேல் விவரிக்கப்பட்ட வழியை அநுஷ்டிக்கவேண்டும். அப்பொழுது ஞானம் உண்டாகும். அதுவே கர்மயோகம்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# 9-ம் அத்தியாயம்.

சி: குருவே! உலகத்தில் இதுவரை கிரகித்திருப்பதற்கு நேர் விரோதமாக இப்பொழுது கற்பிக்கின்றீர். பஞ்சபூதங்களைப் பற்றி தாங்கள் சொன்னபோது அகங்காரம், மனசு, ஜீவன் இவைகள் தான் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று சொல்லியிருக்கின்றீர். ஆனால், உலகில் பாரம்பரியமாக மேற்சொல்லிய மூவர்களை சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் செய்கிறவர்களென்றும் அதில் பிரம்மா ரஜோகுணமும், விஷ்ணு சாத்வீக குணமும், சிவன் தமோ குணமும் உடையவர்களென்று சொல்லிவருகின்றார்கள். ஆனதனால் இவ்விஷயத்தை விளக்க வேண்டுமாய்க் கோருகிறேன்.

கு: உலகமென்பது யதார்த்தத் தத்துவத்திற்கு விபரீதமாயுள்ளது. அதனால் விபரீதம் தோன்றுகிறது என்பதைப்பற்றியும், பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களில் பிரம்மா என்பது அகங்காரமும், விஷ்ணு என்பது மனசும், சிவன் என்பது ஜீவனுமாகும், என்பவைகளைப்பற்றியும் 5-ம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டிருக்கின்றதல்லவா? அதில்தானே மேற்சொல்லிய திருமூர்த்திகள் மூன்றுவித குணங்களென்றும், அதாவது, தாமஸம், இராஜஸம், சாத்வீகம், என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நீர் இப்பொழுது சிவன் தாமஸ குணமும், விஷ்ணு சாத்வீக குணமும், பிரம்மா இராஜஸ குணமும் என்று சொல்லுகிறீர். அப்படி ஒருக்காலும் வருவதற்கிடமில்லை. ஏனெனில் பிரம்மா சிருஷ்டி கர்த்தாவல்ல, பிரம்மா என்பது அகங்காரம். அந்த அகங்காரமாகிய பிரம்மா, மனசிலிருந்து உத்பவித்தது. அந்த மனசுதான் விஷ்ணு. அதெப்படியென்றால், விஷ்ணுவின் நாபியிலிருந்தல்லவா பிரம்மா உண்டானதாகச் சொல்லுகிறார்கள். அப்பொழுது விஷ்ணு யில்லை என்றால் பிரம்மாவும் இல்லை, சிருஷ்டியும் இல்லை. தவிர பிரம்மாவுக்கு அண்டஜன் என்கிற ஓர் பெயருமுண்டு. அண்டஜன் என்றால் முட்டையிலிருந்து ஜனித்தவன் என்று பொருள். அந்த முட்டை எதுவென்றால் இந்தக் காணப்பட்ட உலகம். இந்த உலகமானது நம்மிலிருந்து ஒரு முட்டையினுடைய வடிவமாய், பிரதிபிம்பித்ததே. அதற்குத் திருஷ்டாந்தம்:— பூமியில் எங்கேயிருந்து பார்த்தபோதிலும் நாம் காணுகின்ற இந்த

ஆகாசம் நாலாபக்கமும் பூமியைத் தொட்டிருப்பது போலவும் முட்டையின் வடிவாகவும் காணப்படுகிறது. அதன் உத்பவம் தன்னுடைய மனசிலிருந்துதான். அது எவ்விதமென்றால், மனந்தான் சக்தி, அதுதான் விஷ்ணு. அப்பொழுது சக்தியாய், மனசாயிருக்கின்ற விஷ்ணு, சுக்லம், அந்தச் சுக்லம் சிரஸாகின்ற ஆகாயத்தில் தரித்திருப்பதால், அந்த ஆகாசத்திலிருக்கின்ற சுக்லந்தான் விஷ்ணு, அந்த விஷ்ணுவாயிருக்கின்ற சுக்லம் நம்மிலிருந்து வேறுபடாமல் நம்மிலேயே ஒரு முட்டையின்வடிவாய் நீர்க்குமுழியைப்போல் வெளியில் தள்ளி நிற்கிறது. அதையும் தாங்கிக்கொண்டுதான் நாம் இருக்கிறோம். அது எப்படியெனில் 4-ம் அத்தியாயத்தில் சொன்ன விதம் காட்டுக்கொட்டை பாலில், ஒரு ஈர்க்கு எடுத்து வட்டமாகக் கட்டித்தோய்த்து எடுத்து அப்பால் பிரிந்துபோகாவண்ணம், ஊதிக் கொண்டிருந்தால் அதிலிருந்து ஒரு முட்டைவடிவாய் வெளியில் தள்ளி நிற்கிறது. கொஞ்சநேரம் சென்றபிறகு, அது உடைந்து போகவும் செய்கிறது. இந்தப்பிரகாரம்தான், மனமாகிய சுக்லத்துடன் தன்னிலிருந்து ஜீவன் வெளியில் வருகின்றது. அந்த மனசாகிய சுக்லம் தன்னிலிருந்து வேறுபடாத முட்டையின் வடிவத்தில் குமிழியாய் வெளியில் தள்ளி பருத்து நிற்கின்றது. இதுதான் பிரம்மாண்டம். இந்தப் பிரம்மாண்டமென்னும் முட்டையிலிருந்து நான் என்கிற அகங்காரம் உண்டானது. அந்த அகங்காரந்தான் பிரம்மா. இவ்விதமாகும் பிரம்மாவின் உற்பவம். அது மனசிலிருந்து உற்பவித்ததாகும். அந்த மனந்தான் விஷ்ணு. விஷ்ணுவிலிருந்துதான் விச்வம் உண்டாயிற்று. அந்த விஷ்ணுதான் விச்வத்தைப் பரித்துக்கொண்டிருக்கிறது. அதனால் விஷ்ணுவுக்கு விச்வம்பரன் என்கிற பெயர் உண்டாயிற்று. விச்வம் என்பது உலகு. மனசாகிய விஷ்ணு இல்லையேல் விச்வமும் இல்லை. அதெப்படியென்றால் ஒருவன் தூங்குகிறான் என்று சொல்லும் சமயம் அவனுக்கு விச்வம் இல்லை. தூக்கம் எப்போது தெளிகின்றதோ, அப்பொழுது மனசாகிய விஷ்ணு முட்டைவடிவமாக வெளியில் வருகிறது அப்போது விச்வம் (உலகு) உண்டாகிறது. அதனை அது தாங்கிக் காப்பாற்றுகின்றது. அதனாற்றான் விஸ்வம்பரன் என்றுள்ள பெயர் உண்டானது. அந்த விஸ்வம்பரனாயிருக்கின்ற விஷ்ணுவை ரஜோ குணம், எப்படியென்றால் இராஜ்யம் பரிக்கின்றவருக்கு "இராஜா" என்று சொல்லுகிறது. ஏனென்றால் அந்த இராஜ்யத்தின் பரண கர்த்ருத்வம், தன் பொறுப்பானதினால்தான். இதே பிரகாரம் விஸ்வத்தைப் பரித்துக்கொண்டிருப்பதனாற்றான் மனமாகிய விஷ்ணுவுக்கு விஸ்வம்பரன் என்கிற பெயர் உண்டாயிற்று. அப்போது விஸ்வமாகிய உலகுக்கு இராஜா மனசாகிய விஷ்ணுவாகும். அல்லா

மனும் விஷ்ணுவென்றும், சிவனென்றும், சங்கல்பித்து எழுதிய சித்திரப்படங்களைப் பார்த்தால் அதில் விஷ்ணுவென்பது அநந்த சயனனாய், கிரீடபதியாய், முத்துமாலை கங்கணம் முதலிய ஆபரணங்களும், பட்டுவஸ்திரங்களும், தரித்து சர்வ அலங்கார பூஷிதராய் பாரிகளோடும் சேவகர்களாகிய தும்புருநாரதர், வீணாநாரதர் கருடன் முதலியவைகளோடுகூட, மஹா ரஜோகுணமூர்த்தியாய் காணப்படுகின்றது. அன்றியும் கிரீடம் இராஜாக்களுக்கே யுள்ளது. அதனால் இரஜோகுணம் விஷ்ணுவாகும். தவிர நீர் இரஜோகுணங்கொண்டு சிருஷ்டி கர்த்தா பிரம்மா என்றும் சொல்லுகிறீர். அதுவும் சரியே. அஃதெப்படியென்றால் இரஜோகுணமாயிருக்கிற மனசாகிய விஷ்ணு சுக்லமாகும். அந்த சுக்லத்தைக்கொண்டுதான் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா சிருஷ்டிக்கின்றது. உதாரணம்:— வாளினால் இராமன் வாழையை வெட்டினான், என்கிற வாசகத்தில் ஒருக்காலமும் வாள் இராமன் ஆகின்றதில்லை. வாள் என்று சொல்லுவது ஒரு வஸ்துவாகும். வாழை என்று சொல்லுவதும், ஒரு வஸ்துவாகும். வாழை என்கிற வஸ்துவை வாள் என்கிற வஸ்துவினால் இராமன் வெட்டியதாகும். வாள் என்றும் வாழை என்றும் உள்ள வஸ்துக்கள் இல்லையென்றால் வெட்டுகின்ற தொழில் இல்லை. இப்பிரகாரந்தான் இரஜோகுணமென்று சொல்லுகின்ற விஷ்ணுவென்கிற சுக்லம் ஒரு வஸ்து. அந்த சுக்லமாயிருக்கின் வஸ்துவைக் கொண்டுதான் சிருஷ்டிகள். அந்த வஸ்து இல்லை என்றால் சிருஷ்டி இல்லை. சிருஷ்டிக்கின்றது அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா. அகங்காரம் இல்லையென்றால் சம்போகம் என்கிற புணர்ச்சியில்லை. அகங்காரமிருந்தும் மனசில்லையானால் சம்போகம் உண்டாகாது. மனமாகிய சுக்லம் நிமித்தம் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா சம்போகமாகின்ற தொழிலினால் மேற்சொன்ன இரஜோகுணமாயிருக்கின்ற சுக்லத்தைக்கொண்டு சிருஷ்டிக்கின்றது. இதனாற்றான் இரஜோகுணங்கொண்டு பிரம்மா சிருஷ்டிக்கிறதென்று சொல்லக் காரணம். ஆகையால் பிரம்மா இரஜோகுணமல்ல, தாமஸ குணமாகும். சிவன் என்பது தாமஸ இராஜஸகுணங்களினின்றும் வேறுபட்டு சுத்த சாத்வீக மொன்றுமாத்திரமாகி ஜடை, மரவுரி, திருநீறு, உருத்திராக்கம், முதலியவைகளைத்தரித்து மௌனியாய் எப்போதும் தபோநிஷ்டையாய் யாதொரு அலங்காரமும் இல்லாமல் காணப்படுகிறது. அது சாத்வீக குணமாகும். அதாவது சிவனாயிருக்கின்ற ஜீவனாகும். அந்த ஜீவனே தான் ரக்ஷிக்கின்றது. இதனாற்றான் சத்துவகுணங்கொண்டு "ரக்ஷகர்த்தா" என்று சொல்லிவருகின்றது. அதனால் மனமாகிய விஷ்ணு ரக்ஷிக்கவேண்டுமென்றால் ஜீவன் வேண்டும். ஜீவனைக்கொண்டுதான் மனமாயிருக்கின்ற விஷ்ணு ரக்ஷிக்கின்றது.

ஜீவன் இல்லையென்றால் யாதொன்றும் இல்லை. இராஜோகுணமாயிருக்கின்ற மனசிலிருந்து பூதமாயிருக்கின்ற அகங்காரம் உத்பவிக்கின்றது. அந்தப் பூதமாயிருக்கின்ற அகங்காரத்தை சாத்வீகமாயிருக்கின்ற ஜீவன் ரக்ஷிக்கின்றது. அது எந்தவிதமென்றால் மனசாகிய இராஜோகுணத்தால் சம்போக நிமித்தம் அகங்காரமாயிருக்கின்ற இந்தக் காணுகிற ஜடத்தை சிருஷ்டித்தது. இந்த ஜடத்தை சாத்வீகமாயிருக்கின்ற ஜீவன்தான் ரக்ஷிக்கின்றது. அது எப்படியென்றால் சம்போக நிமித்தம் இராஜோகுணமாயிருக்கின்ற சுக்லத்தால் அகங்காரமாய் பூதமாயிருக்கின்ற ஒரு உரூபத்தைச் சிருஷ்டிக்கிறது. அதுதான் ஜனித்து விழுந்ததாகிய ஒரு குழந்தை. அந்தக் குழந்தைக்குள்ளில் ஜீவனாயிருக்கின்ற சாத்வீக குணம் இல்லையென்றால் அது பிணமாகும். அதில் ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயு இருக்கும்போது மாத்திரமே ஜீவன் உண்டென்று சொல்லப்படுகின்றது. அந்த ஜீவனாகி, சக்தியாகி, வாயுவாகி சாத்வீகமாயிருக்கின்ற சிவனில் இருந்து இராஜோகுணமாயிருக்கின்ற மனம் உத்பவித்தது. அதனால்தான், சாத்வீகத்திலிருந்து ராஜஸம் உண்டானதென்று சொல்லுகிறது. அந்த ராஜஸம்தான் சாத்வீகமாயிருக்கின்ற ஜீவனுடைய சக்தியாகிய வாயுவென்கிற வஸ்துவைக் கொண்டு ரக்ஷித்து வருகின்றது. இதனாற்றான் சத்வகுணங்கொண்டு "ரக்ஷகர்த்தா" விஷ்ணுவென்று சொல்லுகிறது. தமோகுணத்தால் சம்ஹார ருத்திரனாகும் யென்று சிவனை சொல்லுகிறது. அது எப்படியென்றால் தமோகுண ஹேதுவால் சிவன் சம்ஹாரருத்திரனாக பவிக்கிறது. அதாவது ஆத்மாவாகி, ஜீவனாய், சக்தியாய், வாயுவாய் தேஜஸாய் இருக்கின்ற வஸ்துவாகும் சிவன். ருத்திரன் என்பதில் ருகாரம் என்பது அக்னி. அந்த அக்னி த்ரவித்து, நசிக்கின்றது. அதற்குத்தான் ருத்திரன் என்று சொல்லுகிறது. ஆகையால் முன் சொன்ன சிவனாய், தேஜஸாய் இருக்கின்ற வஸ்துவானது த்ரவித்து நசிப்பதனால் ருத்திரன் என்று சொல்லுகிறது. அதற்குக் காரணம் தமோகுணமாயிருக்கின்ற அகங்காரம்தான். அந்த அகங்காரம் நிமித்தம் தன்னைதான் அறியாமல், அது வேண்டும், இது வேண்டும், நான் சிரேஷ்டன், ஸ்தானி, மானி, என்று இப்பிரகாரமுள்ள துரபிமானத்தால் மோகாந்தர்களாய், ஜீவனாய், தேஜஸாயிருக்கின்ற வஸ்து த்ரவித்து அதோகதியாகி ஜனங்கள் நசித்துப் போகின்றார்கள். இதனாற்றான் சிவன் ருத்திரனாக பவித்து சம்ஹாரம் செய்கிறதென்று சொல்லுகிறது. இவ்விதமல்லாமல் நம்மிலிருந்து வேறான ஒரு சிவன் ருத்திரனாக பவித்து வந்து நம்மைக் கொல்லுகிறதில்லை. நம் உள்ளிலிருக்கின்ற, ஜீவனாய், சக்தியாய், வாயுவாய், பிரகாசமாயிருக்கின்ற வஸ்து, அகங்கார நிமித்தம் தன்னைத்தான் அறியாமல் முன்

சொல்லிய துரபிமானமாகிய விசாரங்களால் நசித்துப் போகின்றது. ஆனதினால் சாத்வீகமென்பது ஜீவன். அதாவது சிவன். ராஜஸம் என்பது சாத்வீகமாயிருக்கிற ஜீவனிலிருந்து உத்பவித்திருக்கின்ற மனம். அதாவது விஷ்ணு. தாமஸம் என்பது ராஜஸமாயிருக்கின்ற மனசிலிருந்து உத்பவித்திருக்கின்ற அகங்காரம். அதாவது பிரம்மா. இவைகளுக்குத்தான் திருமூர்த்திகளென்று பெயர். இந்தப்பிரகாரம் திருமூர்த்திகளென்று சொல்லுகிற முக்குணங்களையும், ஒன்ருய்ச் சேர்த்து உத்பவஸ்தானமாகிய ஆகாசத்தில் எப்பொழுது ஒன்று படுத்துகின்ருேமோ, அப்பொழுது திரிகுணரகிதராய் திரிகுணுதீதராய் பவிக்கின்ருேம். இதுவே மோக்ஷம்.

ஒன்பதாம் அத்திய்ாயம் முற்றிற்று.

# 10-ம் அத்தியாயம்.

சி: குருவே? மனம்தான் விஷ்ணு, சக்தி, ஜலம், சுக்லம் என்று கற்பித்தீர் அல்லவா? அப்படி இந்த ஒரே வஸ்துவைத் தானே இவ்விதமாக மாறி மாறிச் சொல்வதின் காரணம் என்ன?

கு: அது ஒரே வஸ்துதான். அதற்குச் சந்தேகமில்லை. ஆனால் பல மாற்றங்களும் சம்பவிக்கின்றதால் பலபேர்களும் உண்டாகின்றன. அது எப்படியென்றால், அக்ஷரமாய், தானுயிருக்கின்ற வஸ்து ஆகாசமான வெளியாகிறது. அந்த வெளியான ஆகாசத்தைத்தான், சதாசிவம் என்று சொல்லுவது. அதுதான் தானுயிருக்கின்ற ஜோதிஸ் அந்த ஜோதிஸாயிருக்கின்ற தனக்கு சலனம் உண்டானபோது ஜீவன் ஆயிற்று. அந்த ஜீவன்தான் ஆத்மாவாய் சைதன்யமாயிருக்கின்றது. அதுதான் தேகம். அந்த தேகத்திலிருந்து ஆவியாய், வியர்வையாய், அக்னிஸ்வரூபமாய், சுக்லம் உத்பவிக்கின்றது. அந்த சுக்லம்தான் மனம். அது ஜலாம்சமாகும். அதுதான் விஷ்ணு. அதைத்தான் சக்தி என்று சொல்லுவது. அதைக்கொண்டுதான் (அதாவது சக்தியாற்றான்) சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், உண்டாகிறதென்றும் சொல்லப்படுகின்றது. சக்தி இல்லையென்றால் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், இவை உண்டாகிறதல்ல. அந்த சக்திதான் சுக்லம். சுக்லம் இல்லாதிருந்தால் யாதொரு சிருஷ்டியும் உண்டாகிறதில்லை. அந்த சுக்லமாயிருக்கின்ற, சுவேதஜமாகும் பிரம்மாண்டம். அது எவ்விதமென்றால் சமுத்திரத்தில் ஜலம் இல்லையென்றால் சமுத்திரம் என்னும் பெயரில்லை. ஆனால் அது மிகவும் ஆழமான தரிசாயிருக்கின்ற ஒரு ஸ்தலமாயிருக்கும். அதில் ஜலம் உண்டானதனால் சமுத்திரம் என்று பெயர் சொல்லப்பட்டு வருகிறது. அப்படியுள்ள சமுத்திரத்தில் சில நீர்க்குமிழிகள் உண்டாகின்றன. அவை உண்டாகக் காரணம் ஜலம் அசைந்து அலை அடிக்கிறதினால்தான். அந்த ஜலத்திற்கு சலனம் இல்லாதிருந்தால் மேற்சொன்ன நீர்க்குமிழிகள் உண்டாகிறதில்லை. அலையடித்தபோது உண்டானது நீர்க்குமிழியல்ல. நுரையாகும். அந்த நுரையில்லாவிடின் நீர்க்குமிழிகள் உண்டாகா. அதனால் ஜலத்திலிருந்துண்டாவது நுரையும், அதிலிருந்து உத்பவித்தது நீர்க்குமிழியுமாகும். அந்த நீர்க்குமிழிகள் ஜலத்தின்மீது எழும்பி உருண்டு முட்டைவடிவில் பளிங்குபோல் இருக்கின்றது. அதாவது ஜலத்தின்மேல் நுரை, நீர்க்குமிழிகளாக யிருக்கிறது. இப்பிரகாரம்தான்

ஆகாசத்தை சமுத்திரத்தில் ஜலம் இல்லாத ஸ்திதி எவ்விதமோ, அவ்விதம் கருதவேண்டும். ஜலமுள்ளபோது மாத்திரம் சமுத்திர மென்று சொல்லுவது, அதேபிரகாரம் ஆகாசத்தில் வாயு உண்டான போது சமுத்திரம் என்றும், அந்த சமுத்திரம் மாயா சமுத்திரம் என்றும் கிரகிக்கவேண்டும். சமுத்திரத்திலிருந்து அலேயடித்தபோது நுரையுண்டானதென்று சொல்வதைப்போல் மாயாசமுத்திரத்தில் வாயுவாயிருக்கின்ற ஜலத்தின் அலேயடிப்பதனுல் மனமாகிய நுரை உண்டாகிறது. சமுத்திரத்தில் அலேயடிக்கிறதினுல் உண்டாகிய நுரை, நீர்க்குமிழிகளாய் உருண்டு முட்டைவடிவமாய் பளிங்கு போல் ஜலத்தின்மீது கிடப்பதென்று சொல்லப்பட்டது. அதுபோல் மாயாசமுத்திரத்திலே சலனமாகிய வாயுவிலிருந்து நுரையாயிருக் கின்ற மனம் குமிழியாய் உருண்டு முட்டைவடிவாய் பளிங்குபோல் மாயாசமுத்திரத்தின்மீது அகங்காரமாய் கிடக்கின்றதென்று கருத வேண்டும். ஆனுல் சமுத்திரத்திலுண்டாயிருந்த ஜலமே, அலேக ளாயும், நுரைகளாயும், நீர்க்குமிழிகளாயும், அமைந்து ஜலத்தின்மீது இருக்கிறது. அவையெல்லாம் சமுத்திர ஜலமாகத்தானே இருந்தது. ஜலமில்லேயேல் இந்தவிதமான யாதொன்றும் உண்டாவதில்லே. அது போலவே ஆகாசத்திலும் வாயுவுண்டானதனுல், மாயாசமுத்திர மென்றும், அந்த மாயாசமுத்திரத்தில் வாயுவின் அலேயின் சலன நிமித்தம் நுரையாகிய மனமும் அகங்காரமாயிருக்கிற நீர்க்குமிழியும், உண்டாகிறது. எப்படி ஜலம் நுரையாயும், நீர்க்குமிழிகளாகவும், ஆயிற்றே, அதேபிரகாரம்தானே ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு மனசாயும், அகங்காரமாயும், உத்பவித்தது. நீர்க்குமிழிகளானது எவ்விதம் ஜலத்தின்மீது இருந்ததோ அதேபிரகாரம்தான் அகங்கார மாயிருக்கின்ற குமிழியும் ஜீவசக்தியாகிய வாயுவின்மீது . முன் சொன்ன நீர்க்குமிழிபோல் கிடக்கின்றது. அது பளிங்குநிறமான தினுல் அதில் பிரதிபிம்பித்து தான் யாரென்றறியாமல் நான் எல்லா வற்றிலும் மேல். சர்வமும் என் கீழ், என்று அபிமானித்து கிடக் கிறது. ஆனுல் முன்சொன்ன நீர்க்குமிழி ஒரு நிமிஷநேரத்திற்குள் உடைந்து ஜலத்தில் தானே லயிக்கின்றது. இப்பிரகாரந்தான் அகங் காரமாயிருக்கின்ற குமிழிகள் தன்னேத்தான் அறியாமல் அபிமா னித்து கொஞ்சநேரத்திற்குள் உடைந்து அது உத்பவித்த ஜீவசக்தி யாகும் வாயுவில்தானே லயிக்கின்றது. அது ஒரே வஸ்துவாகும். அந்த வஸ்துவே அநேகவிதமாக உண்டாகின்றது. பின்னர் அதற்கு பல மாற்றங்களும் சம்பவித்ததனுல் அந்த மாறுதல்களுக்கு அநு சரித்து பல பெயர்களும் சொல்லுவதற்குக் காரணமாயிற்று.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# 11-ம் அத்தியாயம்.

சி: சுவாமி! முன் அத்தியாயத்திலும் அதற்கு முந்தின அத்தியாயங்களிலும் கற்பித்த பிரகாரம் தேகம் வாயுதானென்றும் இந்தக் காணுகின்ற ஜடம் தேகம் அல்லவென்றும் தெரிகிறது. ஆனல் உலகத்தில் ஸ்தூலமென்றும், காரணமென்றும், சூக்ஷமமென்றும் மூன்று தேகங்கள் உண்டென்று சொல்லுகிருர்கள். தேகம் சுவாமிகள் கற்பித்த பிரகாரமென்ருல் மேற்சொல்லிய மூன்று தேகங்கள் இன்னின்னவை என்று விளக்க வேண்டுகிறேன்.

கு: ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்கிற மூன்று தேகங்கள் எவை யென்று நீர் கிரகித்து இருக்கிறீர்?

சி: ஸ்தூலம் என்பது இதுவரைக்கும் தேகம் என்று சங்கற்பித்த இந்தக் காணுகின்ற ஜடம் என்றும், காரணம் என்பது அவித்தையாகி (வித்தையல்லாமல்) ஒன்றும் அறியாமலிருக்கின்ற சுஷுப்தி என்றும், சூக்ஷமம் என்பது மனசு என்றும்தான் சொன்னீர்கள்.

கு: இவைகளெல்லாம் மிகவும் தப்பிதம். ஏனென்ருல் நீர் சொல்லிய பிரகாரம் மூன்று தேகங்கள் உண்டாகுவதற்கு இடமில்லே. ஆனல் ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்று சொல்லுகிறவை ஜீவனும், அந்த ஜீவனின் சலனமாயிருக்கின்ற சக்தியாகிய மனமும் அதில் உத்பவித்த மாயையாகிய அகங்காரமும் ஆகும். இந்தக் காணுகின்ற ஜடமாகிய உடம்பை ஸ்தூல தேகமென்று சொல்லுவதற்கு இடமில்லே. ஏனென்ருல் சூக்ஷம தேகமென்பது மனமென்று நீர் தானே சொல்லுகின்றீர். அந்த மனம் ஸ்தூலமென்று சங்கற்பிக்கின்றதாகிய இந்த ஜடத்தில் தான் இருக்கின்றதென்றும் சொல்லுகின்றீர். ஸ்தூலமென்பதானது தடித்ததும், சூக்ஷமம் என்பது சிறியதாயிருக்கின்றதென்றும் ஆகின்றது. மிகவும் சிறியதாயிருக்கின்ற வஸ்து மனமேயாகும். அவ்வளவு சிறியதாயிருக்கின்ற மனசிற்ருன் இந்தக் காணுகின்ற உலகம் உண்டானதும் இருக்கின்றதும், அதனுற்ருன் மனதின் கல்பிதமாகும். உலகு என்று சொல்லுகிறது. அப்போது எத்தனேயோ இலகுவாய்ச் சிறிதாய்ச் சூக்ஷமமாய் மனதிலிருந்து உலகம் உத்பவித்து அம்மனதிலேயே அடங்குகிறது. இந்தக் காணுகின்ற ஜடமும் அந்த மனதிலிருந்து உத்பவித்ததேயாம். மனசில்லேயானுல் ஜடம் உண்டாகிறதில்லே. அதனுல் சூக்ஷம மாகின்ற

மனசினால் உண்டாக்கப்பட்டதாகும், ஜடம் தவிர ஒருவன் இறந்தபோது பிணமாகின்ற ஜடத்தை நாம் காணுகின்றோம். அதில் மனசு இருக்கவில்லை. அதனால் அந்தப் பிணத்திற்கு உலகம் இல்லை. இந்த ஜடம்தான் ஸ்தூலதேகமென்று சொன்னால் இறந்தபோது பிணமாகிய ஜடத்தைக் காண்கிறோம். அதனுடைய அவயவங்களுக்கு யாதொரு கெடுதியும் காணவில்லை. ஸ்தூலம் இருக்கிறவரைக்கும் சூக்ஷமம் இருக்கிறதென்றும், ஸ்தூலம் இல்லாதிருக்கும்போது சூக்ஷமம் நசிக்கிறதில்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஜடம் ஸ்தூலமாயிருக்கிறதென்றால் சூக்ஷமம் நசித்துப்போயும், இந்த ஸ்தூலமென்று சொல்லுகிற ஜடம் நசிக்காமலும் காணுகிறது, அதனால் இந்த ஜடத்திற்கு ஒருக்காலமும் ஸ்தூலமென்று சொல்வதற்கு இடமில்லை. இறந்ததாய்ச் சொல்லும்சமயம் இந்த ஜடத்தில் என்ன இல்லாமலிருந்தது என்றால் தானா இருக்கின்ற ஜீவன். அதனால் தானாயிருக்கின்ற ஜீவனைத்தான் ஸ்தூல தேகமென்று சொல்லவேண்டும். அந்த ஜீவனாயிருக்கிற ஸ்தூல தேகத்தில் உள்ளதுதான் சூக்ஷமமாயிருக்கின்ற மனம். காரணதேகம் என்று சொல்லுகிறது. அவித்தையாய் ஒன்றுமே அறியாத சுஷுப்தியாகுமென்று நீர்தானே சொல்லுகிறீர். அதாவது ஜீவன் வெளியில் சக்தியாய்ச் சலித்தபோது, அந்த சக்தியிலிருந்து உத்பவித்த அகங்காரத்திற்கு மாயை என்று பெயர். அந்த மாயைதான் ஒன்றுமறியாத சுஷுப்தி என்று ஏழாம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஜடத்திற்கு ஸ்தூலம் என்று சொல்லுவதின் காரணம், ஸ்தூலமாகிய தானாயிருக்கின்ற ஜீவனை அறியாததனாற்றான். அது எவ்விதமென்றால் ஒரு வஸ்திரத்தின் இரண்டு பக்கங்களிலும் கனமாக பசை பூசி காயவைத்து எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அதை சாதாரணமாகப் பார்த்தால் யாவரும் இன்னதென்று அறிந்துக் கொள்ள முடியாது. அவ்விதமுள்ள அந்த வஸ்துவின்மேல் சாயத்தினால் உலகம் அதாவது ஆகாசம், பூமி, சமுத்திரம், மனிதன், மிருகம், பக்ஷி, ஊர்வனவாகிய சிருஷ்டி முற்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் சிருஷ்டிகளில் மிருகம், பக்ஷி, ஊர்வன முதலியவைகளுக்கு வழக்கத்திலில்லாத ஓர் அவஸ்தை மனுஷர் என்று அபிமானிக்கப்படுபவர்களாகிய நாம் அனுட்டித்து வருகிறோம். அது யாதெனில் வஸ்திரம் தரிப்பதாகும். முன்சொன்ன பசை தேய்த்து உலர்த்திய வஸ்துவின்மீது மனுஷிய ரூபத்தையும் அதில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா. அதற்கும் ஒரு வஸ்திரம் கட்டவேண்டும். அந்த மனித உருவம் பசை தேய்த்து உலர்த்திய வஸ்துவின்பேரில் எழுதியுள்ளதாயிருப்பதனால் வேறொரு வஸ்திரத்தை கொண்டுவந்துக் கட்ட முடிகிறதில்லை. ஆனதனால் வஸ்திரத்தினுடைய நிறத்திலுள்ள சாயத்

தைக்கொண்டு முன்சொன்ன உருவத்திற்கு வஸ்திரம் கட்டிய பிரகாரம் சாயம் போடவேண்டும். அதை அவ்வாறு போட்டபின் அதை ஒரு வஸ்திரமென்று சங்கற்பிக்கப்படுகிறது. ஆனால் அது வஸ்திரமல்ல அது சாயமாகும். யதார்த்த வஸ்திரத்தைக் காண்கிறதில்லை. யதார்த்த வஸ்திரத்தைக் காணும்போது முன்சொன்னவை யாதொன்றும் அதன்பேரில் உண்டாயிருக்கின்றதல்ல. யதார்த்த வஸ்திரத்தைக் காணவேண்டியிருந்தால் அதன்பேரில் தேய்க்கப்பட்டிருக்கின்ற பசையைப் போக்கவேண்டும். பசையைப் போக்கினால் அதன்பேரில் எழுதியிருந்த யாதொன்றையும் காண்பதில்லை. அப்பிரகாரமுள்ள யதார்த்த வஸ்திரத்தைக் காணாமல் வஸ்திரவடிவில் சாயம் பூசி யிருக்கின்றதைத்தான் வஸ்திரமாகுமென்று சங்கற்பித்து வருகின்றோம். இவ்விதம் எழுதிய சித்திரத்திற்கும் யதார்த்த வஸ்திரத்திற்கும் யாதொரு பந்தமுமில்லை. இந்த வஸ்திரத்தில் பசையாய் யிருந்ததனாற்றான். மேற்சொன்னவைகளை அதில் எழுதக் காரணம். அதனால் அந்த பசையைப் போக்குவதற்குள்ள பிரயத்தனம் செய்யவேண்டும். அதெப்படியென்றால் பசை தேய்த்துள்ள அந்த வஸ்திரத்தை ஜலத்தில் ஊறவைத்து தோய்த்தால் பசை நீங்கி யதார்த்த வஸ்திரம் காணப்படுகிறது. அப்பொழுது அதிலிருக்கின்ற சித்திரங்கள் ஒன்றும் காண்பதற்கில்லை. இதில் வஸ்திரம் ஸ்தூலமும் அதன்பேரில் தேய்த்திருக்கின்ற பசை காரணமும் அதில் எழுதப்பட்ட சித்திரங்கள் சூக்ஷமமாகின்றது. இவ்விதமாய் தானாயிருக்கின்ற ஜீவனே வஸ்திரமாயிருக்கின்ற ஸ்தூலமென்றும் ஜீவனுடைய சலனத்திலிருந்து உற்பவித்து யாதொன்றுமறியாமல் சுஷுப்தியாய் மாயையா யிருக்கின்ற அகங்காரத்தை அந்த வஸ்திரத்தின்பேரில் பூசியிருக்கின்ற பசையாகிய காரணமென்றும் ஜீவனுடைய சலனமாயிருக்கின்ற மனத்தால் காரணமாயிருக்கின்ற பசையின்மீது வரையப்பட்ட சித்திரங்களை சூக்ஷமம் என்றும் அறியவேண்டியது. மேற்சொல்லியவைகளால் யதார்த்த வஸ்திரத்தை அறியாமல் சாயத்தினால் வஸ்திர வடிவாய் எழுதப்பட்டிருப்பதை வஸ்திரமாய்ச் சங்கற்பிக்கப்படுகின்றது. இப்பிரகாரமே மாயையினாலுண்டாகிய அகங்காரமாயிருக்கின்ற இந்த ஜடத்தை அறியாமையினால் ஸ்தூலமென்று சங்கற்பிக்கின்றோம். எப்பொழுது தனது யதார்த்தமாகிய ஜீவனாயிருக்கின்ற ஸ்தூலத்தை தெரிந்துகொள்ளுகிறோமோ அப்பொழுது மற்றொன்றும் இல்லை. அது எவ்விதமென்றால் யதார்த்த வஸ்திரத்தை தெரிந்துக்கொண்டபோது வேறாக யாதொன்றுமில்லை. பின்னமாய் அதாவது வேறுபட்டுள்ளதை ஸ்தூலமென்று சொல்லுவதற்கிடமில்லை. ஸ்தூலமென்பது தானாயிருக்கின்ற ஜீவனும், காரணம் என்பது அந்த ஜீவனுடைய சலனமாயிருக்கின்ற சக்திலிருந்துண்டான சுஷுப்தியாயிருக்கின்ற

மாயையாகிய அகங்காரமும், சூக்ஷமம் என்பது ஜீவனுடைய சலன சக்தியாகிய மனமும் ஆகும். இவைகளைத்தான் ஸ்தூல, காரண, சூக்ஷமம் என்று சொல்லவேண்டியது. ஆகையால் நாம் இப்போது காரணமாகிய சுஷுப்தியிலிருக்கின்றோம். அவ்வாறு சுஷுப்தியி லிருப்பதனால் நாம் அநுபவிக்கிறதாகத் தோன்றுகிறதெல்லாம் சொற் பனமாகும். இதைப்பற்றி ஏழாம் அத்தியாயத்தில் விவரித்திருக்கின் றது. அப்பிரகாரமுள்ள சொப்பனத்தில் இருக்கிறதனாற்றான் ஸ்தூ லம், காரணம், சூக்ஷமம் என்கிற தோற்றம் உண்டாகிறது. இப்படி ஒன்றுமில்லை.

பதினொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

# 12-ம் அத்தியாயம்.

சி: குருவே! சுஷுப்தி என்பது மாயை என்றும் தானு யிருக்கின்ற சக்தியுடன் அந்த மாயை வெளியிலே வியாபித்துச் சலித்து தானும் சக்தியும் கூடிக்கலந்து மயங்கிக்கிடக்கிறதென்றும் தெரியவருகிறது. அந்தப்பிரகாரம் கலந்து மயங்கிக்கிடக்கிற தன்னை வேறாக அறிவதற்கு எவ்விதத்தில் சாத்தியப்படும்?

கு: தானும் தன்னுடைய சக்தியிலிருந்து உத்பவித்த மாயை யும் என்று சொல்லப்படுவது நித்தியமும் அநித்யமுமாகும். அவை களை வெவ்வேறாக அறியவேண்டியதை ஒரு உதாரணத்தால் தெரிவிக் கின்றேன். ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலம் எடுத்து அதில் கொஞ்சம் உப்பைப் போட்டால் உப்பைக் காணமுடியாது. உப்பு ஜலத்தில் லயித்துப் போகிறது. பிறகு அந்த உப்பைக் காணவேண் டுமென்றால் ஜலத்தைச் சுண்டச் செய்யவேண்டும். அப்பொழுது அதுவரை பார்த்துக்கொண்டிருந்த ஜலம் நசித்தும், காணுமலிருந்த உப்பைக் காணவுமாகின்றது. அந்தப் பிரகாரம் நித்தியம் என்பது நாசமில்லாதிருக்கின்றது அது தானாகும். அநித்தியமென்பது தன் னுடைய சக்தியிலிருந்து உத்பவித்த மாயை அது நசிக்கின்றது. அப் படி நசிக்கப்படுகிற மாயையில் நாசமில்லாமலிருக்கின்ற தான் லயித் துக்கிடக்கிறது. அப்படி லயித்துக்கிடக்கின்ற தன்னை அறிய வேண்டுமென்றால் கண்டுக்கொண்டிருக்கின்ற உலகத்தை நசிக்கச் செய்யவேண்டும். அது எப்படியென்றால் மேற்சொல்லிய உப்பு கலந்திருக்கின்ற ஜலத்தைச் சுண்டச் செய்வதற்கு தீ வேண்டியிருந்த தல்லவா, அந்தப் பிரகாரம் உலகத்தை நசிக்கிறதற்கும் தீ வேண்டி வரும். அது விவேகம் என்கிற அக்னியாகும். ஆனால் முன் சொன்ன உப்புக்கு நாசமில்லையென்று நினைத்து, ஜலத்திலிருந்து பிரத்தியேகப் படுத்தி, ஜலத்தை வற்றச்செய்ய முடியாது. அதினால் நசிக்கின்ற ஜலத்தையும் அதில் லயித்திருந்த, நாசமில்லாமலிருக்கின்ற உப்பை யும் தீ எரித்து சுண்டவைத்தால் நாசமுள்ளதாகிய ஜலத்தை நசிப் பித்து நாசமில்லாத உப்பைக் காணச் செய்யலாம். அந்தப்பிரகாரம் நித்தியமாயிருக்கின்றதுதான் அநித்தியமாயிருக்கின்ற உலகமாகிய மாயையில் லயித்ததினால் தனக்கு நாசமில்லையெனக் கருதி மாயை யாகிய உலகத்திலிருந்து பிரத்தியேகப்படுத்தி அந்த உலகை நசிப்

பதற்குச் சாத்தியப்படாது, அதனால் நாசமுள்ளதான உலகையும் அதில் லயித்த நாசமில்லாத தன்னையும் விவேகம் என்கிற விசேஷ அக்கினியினால் நாசமுள்ள மாயையை நசிப்பித்தால் நித்தியமா யிருக்கிற தன்னை அறியலாம்.

சி: குருவே, மாயையாயிருக்கின்ற உலகை விவேகமென்கிற விசேஷ அக்கினியால் எவ்விதம் தகிப்பிக்கவேண்டுமென்று விவரமாக சொல்லித்தர வேண்டுமாக அபேக்ஷிக்கிறேன்.

கு: நீங்கள் நித்தியனோ அநித்தியனோ?

சி: நான் என்று சொல்லப்பட்ட அவஸ்தை அநித்தியமாகும்.

கு: அப்பொழுது உங்களுக்கு நாசமுண்டோ?

சி: நான் என்றுள்ள அவஸ்தைக்கு நாசமுண்டு.

கு: நான் என்கிற அவஸ்தை உங்களுக்கு இல்லையென்றால் இந்தக் காணுகின்ற உலகம் உங்களுக்குண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது உங்களுக்கு இந்த உலகம் உத்பவித்தது எங்கே இருந்து?

சி: என்னிலே இருந்து.

கு: ஆனால் நீங்கள் இந்தக் காணுகின்ற எல்லா அவஸ்தைகளும் உங்களுள்ளில் உள்ளதாகும், அது எவ்விதமென்றால் சாதாரணமாக உலகில் சொல்லுகிறது என்னுடைய இராஜ்யம், என்னுடைய தாயார், என்னுடைய தகப்பனார், என்னுடைய பெண்சாதி, என்னுடைய புத்திரன், என்னுடைய ஜாதி, என்னுடைய கிரகம், என்னுடைய தனம் என்றும், எனக்கு ஸ்தானம், மானம், சுத்தம், அசுத்தம், சுகம், துக்கம், சுவர்க்கம், நரகம், பசி, பசியில்லை, பந்து, சத்துரு இந்தப்பிரகாரமும் இன்னும் வேறுமாகும். ஆனால் இத்தகைய நான் என்றுள்ள நிலைமை நித்தியமல்ல, அநித்தியமே. அப்பொழுது இத்தனை பெரியதாயிருக்கின்ற உலகத்துடன் நான் என்கிற அகங்காரம் உத்பவிக்கிறது. எங்கிருந்து என்றால் மனசாகின்ற சக்தியில் இருந்துதான். அதற்கு திருஷ்டாந்தம்:— "நான் அந்த மலையேறி இறங்கியதினால் எனது சரீரம் க்ஷீணித்து தளர்ந்து விழுந்துபோயிற்று" இந்த வாசகத்தில் நான் என்பது தளர்ந்து விழுந்ததில்லை, சரீரந்தான் தளர்ந்து விழுந்தது. ஒருவன் என்னுடைய கால் விரல் ஒரு கல்லின் மேல் மோதி அடிபட்டபோது "ஆ என்னுடைய ஜீவன் போய் விட்டது" என்று சொல்லுகிறான். இந்த வாசகத்திலும் நான் போகவில்லை, என்னுடைய ஜீவன்தான் போய்விட்டது. "நான் ஒரு நாள் இரவில் ஒரு காலடிப்பாதையில் வரும்போது ஒரு சப்தம்

உண்டாயிற்று. அந்த சப்தத்தைக்கேட்டுப்பயந்து என்னுடைய மனசு சொல்லக்கூடாத விதம் பிரமித்து போயிற்று" இந்த வாசகத்திலும் நான் பிரமித்ததில்லை. என்னுடைய மனசுதான் பிரமித்தது. அதனால் முன்சொன்னவர் யாரும் நானல்ல என்றும் எனது பந்துவாகுமென்றும் ஆகிறது. தவிர நீர் இரண்டு, மூன்று பேர்களுடன் பேசிக்கொண்டிருக்கின்றீர். அது சமயம் ஒருவர் வந்து உங்களை மிகவும் கெட்ட வார்த்தைகள் பேசி தூஷித்தார், அந்தச் சமயம் உமக்கு அவமானமோ, வெட்கமோ, விசனமோ உண்டாகிறது. அது நிமித்தம் உங்களுக்கு அசங்கியமுண்டாகி அங்கிருந்து உங்களுடைய வீட்டிற்கு வந்து நீங்கள் உமது சிநேகிதரிடமோ, வீட்டுக்காரரிடமோ பேசிக்கொண்டிருக்கையில் நான் இன்னவரோடு கூடி இன்ன இடத்திலிருக்கும்போது இன்னவர் வந்து என்னை மிகவும் கெட்ட வார்த்தைகள் பேசி திட்டினர். அதைக்கேட்டபோது நான் என்கிற நிலைமையே அவ்விடம் இல்லாதவனாய்விட்டேன் என்றும், வேறும் சொல்லுகிறார். அந்த வாசகத்தில் யார் இல்லாமல் போனது. சரீரம், ஜீவன், மனதே எல்லாம் இருக்கின்றன. அவை ஒன்றும் போகவில்லை. அப்போது யார் இல்லையென்றால் நான் என்று அபிமானித்துள்ள அகங்காரந்தான். தவிர நீங்களும் மற்றொருவருமாக சம்பாஷணையில் அவரை வென்று ஜெயமடைந்தீர் என்றால் நீர் என்ன சொல்லுவீர் ? நான் இன்ன விஷயத்தில் இன்னவரிடம் பேசி அவனை ஜெயித்தேன் என்றும் அவரை வாய் அடக்கிவிட்டேனென்றும், தவிர நான் யார் ஸ்தானி, மானி சமர்த்தன் என்றும் மற்றும் சொல்லி உம்மை நீரே புகழ்ந்து பேசுவீர் அதைத்தான் அபிமானமாய் இருக்கின்ற அகங்காரமென்று சொல்லுகிறது. அந்த அகங்காரம் நசிக்கக்கூடியது. அப்படி நசிக்கின்ற அகங்காரத்தினுடைய உத்பவம் மனசில் இருந்தென்று தெளிவாகிறது. அந்த மனம் உத்பவித்தது ஜீவனிலிருந்து, அதற்குத்தான் சக்தி என்று சொல்லுகிறது. இதுதான் ஜீவனுடைய சக்தி, இந்த ஜீவன் சிவன், அந்த சிவனேதான் அப்படி தானயிருக்கின்ற சிவனுடைய சக்தி மனம், அதனற்றான் அதைச் சிவ சக்தி என்று சொல்லுகிறது. அந்தச் சக்தியைத் தன்னில் அடக்கவேண்டும். அதனால் மேற்சொன்ன பிரகாரம் விசாரணை செய்து தன்னுடைய சக்தி இன்னதென்று அறிந்து அந்தச் சக்தியை வெளியில் பிரதிபிம்பிக்காமல் விவேகமாகிய விசேஷ அக்கினியினால் முன்சொன்ன உலகை தகிப்பித்து தன்னில் தானே எரித்து தானயிருக்கவேண்டும். இதற்குத்தான் நித்தியாநித்திய விவேகம் என்று சொல்லுகிறது.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# 13-ம் அத்தியாயம்.

சி: சுவாமி! தேகம் வாயுவென்றும், பாக்கியுள்ளவையெல்லாம் அதிலிருந்து உத்பவித்ததென்றும் கற்பித்தீரல்லவா. தேகம் என்பது அன்னமயகோசமென்றும், அதனால் அன்னம் புசித்தாலே ஜீவித்திருக்க முடியுமென்றும், தேகம் அன்னத்தால் போஷிப்பிக்கிறதென்றும் சொல்லுகின்றீர். அப்படியிருக்க வாயுவைத் தேகமென்று சொன்னால் அது அன்னத்தை புசிக்கவும் அன்னத்தால் போஷிப்பிக்கவும் வேண்டியதில்லை அல்லவா?

கு: அன்னமென்பது என்னவென்று நீர் கருதி இருக்கின்றீர்?

சி: அன்னமென்பது சோறுமுதல் நாம் புசிக்கின்ற யாவும்.

கு: ஆனால் அவைகளெல்லாம் புசிப்பதனாலேயே ஜீவித்திருக்க முடியுமா?

சி: ஆம்.

கு: ஆனால் உலகில் இதுவரை யாரும் இறந்ததில்லையா?

சி: அநேகர் இறந்திருக்கிறார்கள்.

கு: அது என்ன காரணம். அன்னம் புசித்தாலே ஜீவித்திருக்கலாமென்று நீர் சொன்னீர் அல்லவா, இறந்தவர் யாரும் நீர் சொன்ன அன்னத்தை புசிக்காதவர்களா?

சி: அவரெல்லாம் புசித்தவர்களே.

கு: அது எவ்விதம். அன்னம் புசித்தால் ஜீவித்திருக்கலாமென்றும் அன்னத்தினால்தான் தேகத்தைப் போஷிப்பிக்கிறதென்றும் நீரே சொன்னீர். அப்படி செய்திருந்தால் அவர் இறந்துபோகிறதற்கு காரணம் என்ன?

சி: ஆயுசு குறைந்துபோனதினால்.

கு: ஆயுசு குறைந்துபோகிறதென்று சொல்வது மிகவும் தப்பிதம். ஆனால் உலகில் அன்னத்தைப் புசிக்கிறதில்லை. அன்னத்தைப் புசித்தால் மாத்திரமே ஜீவித்திருக்க முடியுமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் அந்த அன்னத்தை நாம் அறிகிறதில்லை. அன்ன

மென்பது அசனம், அசனமென்றால் அசுவாகிய பிராணனை அயனம் செய்கின்றதாகும், அயனமென்றால் தடுத்து நிறுத்துதல், அதாவது தன்னுள் இருக்கின்ற பிராணனை வெளியில் விடாமல் தன்னுள்ளேயே பிரம்மரந்திரம்வரை நீளமாக நேரே கொண்டுபோகின்றதுதான், அந்த பிராணன் என்பது ஜீவசக்தியாகிய வாயு, அந்த ஜீவன் நீங்கிய பிணம் ஏதேனும் புசிக்க முடியுமா ?

சி: முடியாது.

கு: அதன் காரணமென்ன ?

சி: ஜீவசக்தியாய் வாயுவாயிருக்கின்ற அசனம் இல்லாததனால்.

கு: தவிர ஏறக்குறைய எழெட்டு நாள்வரை சோறு முதலியவற்றை உண்ணாதிருந்தால், ஜீவன் இல்லாமற் போகுமா ?

சி: போகாது.

கு: வாயு ஒரு நிமிஷநேரம் நமக்குக் கிடைக்கவில்லை என்றாலோ ?

சி: ஜீவன் போய்விடும்.

கு: அப்பொழுது நமக்கு ஆதாரமாயிருக்கின்ற வஸ்து எது ?

சி: வாயு.

கு: அதுதான் அன்னம். அந்த வாயுவாயுள்ள அன்னம் இருக்கிறபோது மாத்திரமே அசிக்கிறதற்கும் அதாவது எரிகிறதற்கும், பசிக்கிறதற்கும், கொதிக்கிறதற்கும், தகிக்கிறதற்கும், அதாவது வேகிறதற்கும், பக்ஷிக்கிறதற்கும், புசிக்கிறதற்கும் முடியும். அதற்கு ஒரு திருஷ்டாந்தம் :— ஒரு பிணத்திற்கு முன்சொன்ன யாதொன்றும் முடியாது. இதனால் அசிக்கிறதும், பசிக்கிறதும், தகிக்கிறதும், பக்ஷிக்கிறதும் எது ?

சி: வாயு.

கு: அதனாற்றான் அன்னமயமாத்திரமே உண்டென்றும் அன்னத்தின் சைதன்யம் (தேஜஸ்) உலகென்றும் சொல்லுகிறது. அப்பொழுது இந்தக் காணுகிற உலகம் எதனுடைய சைதன்யம் ?

சி: வாயுவினுடைய சைதன்யம்.

கு: அதனால் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுதான் அன்னம். அந்த வாயுவை புசித்தால்மாத்திரமே ஜீவித்திருக்கிறதற்கு முடியும். அதனாற்றான் இந்த தேகத்தை அன்னத்தால் போஷிப்பிக்கிறதென்று உலகம் சொல்லுகிறது. ஆனதினால் அன்னமாகிய வாயுவை பூரிப்பிக்கவேண்டும். அவ்விதம் செய்தால் இறந்போகிறதில்லை ?

**சி:** அந்த வாயு தேகமென்றும் அதுதான் தானே என்றும் அதிலிருந்து உலகம் உத்பவித்ததென்றும் பூரணமாக நம்புகிறேன், என்றால் இத்தனை இலகுவாகிய நம்மிலிருந்து இத்தனை பெரிதாகிய உலகம் எவ்விதத்தில் உத்பவிக்கிறதென்று தெளிவாய் அருளிச்செய்ய அபேக்ஷிக்கிறேன்.

**கு:** இத்தனை சிறியதாயிருக்கின்ற நம்மிலிருந்து இவ்வளவு பெரியதாகக் காணப்படுகிற இந்த உலகம் உத்பவித்ததைச் சொல்லுகிறேன். மிகவும் சிறியதாயிருக்கின்ற ஒரு வித்திலிருந்து எவ்வளவோ பெரியதாகிய ஒரு விருக்ஷம் உண்டாகிறது. இந்தப்பிரகாரந்தான் நம்முடைய நிலைமையும், உலகத்தினுடைய நிலைமையும், அதாவது எப்படியென்றால் உலகத்தில் மெத்தவும் பெரியதும் விசாலமாகவும் படர்ந்து வளரப்பட்ட விருக்ஷம், ஆலமரம் அவ்விருக்ஷத்தினுடைய காய் எத்தனையோ சிறியது. அக்காயினுள்ளிருக்கின்ற விதையோ மிகவும் சிறியது. அதாவது ஒரு கடுகில் நான்கின் ஒரு பாகத்தின் பிரமாணமிருக்கும். அவ்வளவு சிறிதாகிய வித்திலிருந்து எத்தனையோ பெரிதாகிய விருக்ஷம் உத்பவமாகிறது. அவ்வித்தில்லையானால் அவ்விருக்ஷம் உண்டாகிறதில்லை. எத்தனையோ பெரியதாயிருக்கின்ற அவ்விருக்ஷம் மிகவும் அணுவாயிருக்கின்ற பீஜத்தில் அடங்கியிருக்கிறது. வித்து காயினுள்ளில் அடங்கியிருக்கிறது, பருப்பு வித்தினுள்ளிருக்கின்றன. மேற்சொன்ன விருக்ஷமானது வித்தினுள் அடங்கிக்கிடக்கிற பருப்பிலிருந்து முளையாக உத்பவித்து அந்தப்பருப்பு அடங்கி இருக்கின்ற தோலின் வழியாய் வெளியே வந்து வளர்ந்து படர்ந்து பெரிதாகின்றது. பிறகு அந்தப் பருப்பையோ தோலையோ காணப்படுகிறதில்லை. இதே பிரகாரந்தான் வித்தில் அடங்கிய பருப்பைச் ஜீவனென்றும், பருப்பிலிருந்து உண்டான விருக்ஷத்தை மனசு என்றும், பருப்பு அடங்கியிருக்கிற தோலை அகங்காரம் என்றும் கருதவேண்டும். ஜீவனாயிருக்கின்ற பருப்பிலிருந்து மனதாகின்ற விருக்ஷம் முளைத்து அகங்காரமாயிருக்கின்ற தோலின் வழியாய் வெளியில் வியாபிக்கின்றது. அகங்காரமாயிருக்கின்ற தோலில் ஜீவனாயிருக்கின்ற பருப்பு அடங்கியிருக்கும்போது வித்து என்கிற பெயர் உண்டு. அந்தவிதமாகிய வித்து ஜடமாயிருக்கின்ற காயினுள் இருக்கின்றது. அது எவ்விதமென்றால் ஆலவிருக்ஷத்தினுடைய வித்து காய்க்குள்ளிருந்தது. ஆனால் மேற்பிரகாரமுள்ள வித்திலிருந்து மனதாகின்ற விருக்ஷம் முளைத்து வெளியில் வியாபிக்கிறதனால் வித்தைக் காண்பதில்லை. காணுகின்றது ஜடம் ஜடமாயிருக்கின்ற காயிலிருந்து ஜீவனோடு மேற்சொன்ன வித்து போனதின் பிறகு இந்த ஜடத்திலிருந்து மனதாகின்ற விருக்ஷம் முளைக்கிறதில்லை. அது ஏன் என்றால் ஜீவனோடு கூடிய வித்து இல்

லாததனால். அதெப்படியென்றால் ஆலவிருக்ஷத்தினுடைய காயினுள்ளிருக்கின்ற வித்தை நீக்கினால் அந்த வித்து அதுவரையும் அடங்கியிருந்த தோல் முளைக்கிறதில்லை. ஆலவிருக்ஷத்திற்கு எவ்விதம் காய் உண்டாகிறதோ அந்தப்பிரகாரந்தான் மனதாகின்ற விருக்ஷத்திற்கும் காய் உண்டாகின்றது. அதாவது ஆலவிருக்ஷத்தினுடைய இரண்டிலைகளுக்கு மத்தியத்தில் பூத்து காய் உண்டாகின்றது. இந்த காய் முதிர்ந்து பழுத்து பூமியில் விழுந்து முளைத்து விருக்ஷமாய்ப் பூத்து காய் உண்டாகி மேற்பிரகாரம் பழுத்து விழுந்து முளைத்து மரமாகும். நாளடைவில் அநேக விருக்ஷங்கள் உண்டாகிக்கொண்டிருக்கிறது. ஆனால் பூர்க்கும் பூவில் எல்லாம் காய் உண்டாகிறதில்லை. அந்தப் பூக்களில் எட்டில் ஏழு பாகம் பலவிதங்களிலும் நசித்துப்போகிறதுண்டு. பாக்கியுள்ளவைகளெல்லாம் காய்கள் உண்டாகின்றன. அந்த காய்களும் முழுவதும் முத்திப் பழுக்கிறதற்கு இடமில்லை. பல விதங்களில் நசித்துப்போகின்றன. இந்தப்பிரகாரம்தான் கெற்பம் உண்டாகின்றது. அதெப்படி என்றால் ஆலவிருக்ஷத்திலுள்ள கொம்புகளின்மேலும், குச்சிகளின்மேலும் வேறும், இலைகள் உண்டாகின்றன. அந்த இலைகளும் இரண்டிலைகள் ஒன்றாய்ச் சேர்ந்ததுபோல் உண்டாகின்றது. அந்த இலைகள் இரண்டாகப் பிரியும்போது அவைகளின் மத்தியில் அரும்புகள் உண்டாகின்றன. அதெப்படியென்றால் இலைகளுக்கு சிவந்ததாகிய கறையும், விருக்ஷத்திற்கு தனியே வெளுத்த வர்ணமாகிய பாலும் உ.ண்டு. இலைகள் விரியும்போது சிவந்ததாயிருக்கின்ற கறையில் வாயுவின் மார்க்கமாய் இலைகள் உத்பவித்ததாகிய அத்தண்டிலிருந்து பால் விழுந்து அக்கறையோடு சேர மொக்குகள் உண்டாகின்றன. அதுதான் பூவாகிக் காயாகின்றது. இதே பிரகாரந்தான் மனதாகின்ற விருக்ஷம் உணருகிறது. இரண்டிலைகளுடைய மத்தியத்திலே யாகும். அந்த இலைகளிலிருந்து இரத்த வர்ணமாகிய கறை உத்பவிக்கும்போது வாயு மார்க்கத்தால் மனதாகிய விருக்ஷத்திலிருந்து சுக்லமாகிய பால் முட்டைவடிவமாகி விழுந்து அந்த இரத்த வர்ணமாகிய கறையில் பிடித்து கெற்பமாகிறது. இவ்விதம் கெற்பமாகிய காயானது நாளடைவில் வளர்ந்து முத்திப் பழுத்து ஒன்பதோ பத்தோ மாதம் சென்று பூமியில் விழுகின்றது. அந்தக் காயாகிய குழந்தையில் ஜீவனுயிருக்கின்ற வித்தில்லையானால் அதைக் குழியில்போட்டு புதைத்து விடுகின்றோம். ஜீவனுயிருக்கின்ற வித்துண்டென்றால் அதைப் பத்திரப்படுத்தி அதிலிருந்து மனதாகப்பட்ட விருக்ஷம் முளைத்து நாளடைவில் வளர்ந்து பெரிதாகிய புணர்ச்சியாகின்ற பூக்களினால் மறுபடியும் நாளடைவில் காயுண்டாகி விருத்தியாய்க் கொண்டிருக்கிறது. ஆனால் எல்லாப் புணர்ச்சியிலும் கெற்பமும் எல்லா கெற்பத்திலும் முத்தி பழுத்து குழந்தைகளு

முண்டாகிறதில்லை. தவிர ஆலவிருக்ஷத்திலிருந்து உண்டாகிற புஷ்பங்களை நாம் பார்க்கிறோம். அந்த புஷ்பத்திற்கு ஏதேனும் ஒரு அடையாளம் வைத்தால் காய் உண்டாகுவது இன்ன புஷ்பத்திலிருந்து என்று நமக்குத் தெரிந்தரியலாம். மனசாகின்ற விருக்ஷத்தினுடைய பூக்களை காணுவதற்கோ இன்ன புஷ்பத்திலிருந்து உண்டான காயாகும். இக்குழந்தையென்று சொல்வதற்கோ முடிகிறதில்லை. மனதாகின்ற விருக்ஷத்தினுடைய புஷ்பம் காணுமல் காயுண்டாகின்ற பிரகாரமே புஷ்பத்தைக் காணலாம். புஷ்பத்தைக் காணுமல் காயுண்டாகின்ற ஓர் விருக்ஷமுண்டு. அதாவது அத்திமரம், அத்திமரத்தினுடைய புஷ்பத்தைக் காண்பதற்கு முடிகிறதில்லை. அது இருட்டில் பூத்து கொஞ்சம் நேரத்திற்குள்ளாக காய் உண்டாகின்றது. அதை பகற்காலம் பார்க்கும்போது காய் உண்டாகிக் காணுகிறது. இன்ன சமயத்தில் பூர்த்ததென்று சொல்ல முடிகிறதில்லை. ஆனுல் இவ்விருக்ஷம் இருட்டில்லையானுல் பூர்ப்பதில்லை. அதே பிரகாரந்தான் மனதாகின்ற விருக்ஷமும் இருட்டில் பூர்க்கின்றது. அதாவது அந்தகாரமாகிய அகங்காரத்தில் கொஞ்ச நேரத்தில் புஷ்பித்து கெற்பமாகி காயுண்டாகின்றது. அகங்காரமாகிய அந்தகார மில்லையென்ருல் புணர்ச்சி உண்டாவதில்லை. அதனுல் அகங்காரமாகிய அந்தகாரத்தில் பூர்க்கிறதனுல் இந்தப் பூவினுடைய காய் என்று சொல்ல சாத்தியமாகாமல் போகின்றது. ஆனுல் ஒரு ஆல விருக்ஷத்தை வெட்டி நீக்கினுல் அது நிமித்தம் எத்தனை விருக்ஷங்கள் இல்லாமல் போகின்றதென்று கணக்கெடுப்பதற்கு சாத்தியப்படுகிறதில்லை. அவ்விதம் மனதாகின்ற விருக்ஷத்திற்கு சம்சார விருக்ஷம் என்று பெயர். இந்த சம்சார விருக்ஷம் பூத்து, காய்த்து, முத்தி, பழுத்து பூமியில் விழுந்தும் முளைத்தும் மேற்பிரகாரம் உண்டாகின்றதும் நசிக்கிறதும் ஆகிறது. ஆனுல் எத்தனையோ இலகுவாயிருக்கின்ற ஆலவிருக்ஷத்தின் வித்து மிகவும் பெரிதாகியதும் படர்ந்து கிடக்கிறதும் ஆகிய ஆல விருக்ஷம் எப்படி உண்டாயிருக்கிறதோ அதுபோலவே நம்முள்ளிருந்து மனமாகிய சம்சார விருக்ஷமும் முளைத்து வெளியே சக்தியாக வியாபித்து படர்ந்து கிடக்கின்ற ஒரு வடவிருக்ஷம்தான் இந்தக்காணுகின்ற உலகம். இப்பிரகாரமுள்ள வட விருக்ஷத்தினுடைய மூலத்திற்ருன் தக்ஷிணுமூர்த்தியாகிய குரு இருக்கின்றது.

சி: குருவே! அப்படியானுலும் முன்சொன்ன விருக்ஷம் பூமியில் நின்றிருக்கிறதாய்க் காணப்படுகிறது. நாமும் அந்தப்பிரகாரந்தானே காணப்படுகிறோம். தவிர என்னை நான் உலகிலே காணுகிறேன். இப்படியிருக்க உலகம் என்னிலே என்று சொல்லுகிறீர். அது எவ்விதமென்று வெளிபடுத்தித் தரவேண்டும்,

கு: உலகம் உங்களில் என்றும் உங்களுள்ளிருந்து உலகம் உத்பவித்ததென்றும் சொல்லுகிறதற்கு ஒரு திருஷ்டாந்தம்:— ஒரு பெரிய பாத்திரத்தில் புகையை நிறைத்து அந்தப் பாத்திரத்தினுடைய வாயை மூடி பத்திரமாகக் கட்டி மேல்மாடி உள்ள ஒரு பெரிய அறையில் வைத்தால் அப்பாத்திரத்திலுள்ள புகை வெளியில் காணப்படுமோ?

சி: காணப்படாது.

கு: ஏன்?

சி: அந்தப்புகையை பாத்திரத்தில் உள்ளடக்கி பாத்திரத்தினுடைய வாயை அடைத்து கட்டியதனால்.

கு: அந்த அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடி முன்சொன்ன பாத்திரத்தினுடைய வாயை மூடிக்கட்டியதை அவிழ்த்து திறந்தாலோ?

சி: புகை அந்தப் பாத்திரத்திலிருந்து வெளிப்பட்டு அவ்வறை முழுதும் பரவி நிறையும்.

கு: அப்போது புகையிருந்த பாத்திரம் எவ்விடமிருப்பதாகத் தோன்றுகிறது?

சி: புகையில்.

கு: புகை பாத்திரத்தினுள்ளே இருந்ததா? அல்லது பாத்திரம் புகையிலிருந்ததா?

சி: புகை பாத்திரத்திலிருந்தது.

கு: ஆனால் பாத்திரத்தினுள்ளிருந்த புகையை வெளியே விடாமல் வாயை மூடி கட்டியிருக்கும்போது அதில்தானே அடங்கியிருந்தது. எப்பொழுது அப்பாத்திரத்தினுடைய வாய் மூடின கட்டை அவிழ்த்தபோது அடங்கியிருந்த புகை வெளியிலே பரவி வியாபித்ததோ, அப்போதுஅந்தஅறை முழுதும் புகை நிறைந்து பாத்திரத்தைச் சுற்றிலும் அடியிலும் மேலும் புகை வியாபித்து புகையில் பாத்திரமிருப்பதாகத் தோன்றுகிறது. எதார்த்தத்தில் புகை பாத்திரத்தில் இருந்தது. அந்தப்புகை பாத்திரத்தில் இல்லாதிருந்ததேயானல் வெளியில் வியாபிக்கிறதில்லை. இந்தப் பிரகாரந்தானே உம்மிலிருக்கின்ற மனசு புகையாக வெளியிலே வியாபித்தது. அந்த மனசாகின்ற புகையில் நீரிப்பொழுது இருக்கின்றீர். அது எவ்விதமென்றால் பாத்திரத்திற்குள்ளிருந்த புகை வெளியில் வந்து வியாபித்து புகையில் பாத்திரம் இருப்பதாக தோன்றியது போல்தான் உம்மிலிருந்து வெளியே வியாபித்திருக்கின்ற மனசாகிய புகையில் இருந்ததனல் உலகில் நீரிருக்கின்றதாய் தோன்றுகிறது. ஆனல்

முன்சொன்ன புகை உத்பவித்தது. அக்னியிலிருந்து அக்னி இல்லையானால் புகை உண்டாகிறதில்லை. இதைப்போலவேதான் மனசாகின்ற புகையும் ஜீவனாயிருக்கின்ற அக்னியிலிருந்து உண்டாகின்றது. ஜீவனாகிய அக்னி இல்லையானால் மனசாகின்ற புகையும் உண்டாகிறதில்லை. தவிர நீங்களில்லையானால் உமக்கு உலகமில்லை. அதுவுமல்லாமல் தூங்குகிறதென்று சொல்லும் சமயம் நீர் உலகத்தை காண்பதில்லை. காரணம் புகையாக வியாபித்திருந்த மனசு உமது உள்ளிலடங்கி இருந்ததனால், தூக்கம் விழித்த சமயம் பாத்திரத்திலிருந்து புகை வெளிக்கு வந்ததுபோல் இங்களுள்ளிருந்து மனசக்தி வெளியில் வந்து வியாபிக்கின்றது. தவிர தூக்கம் விழித்தவுடனே உலகில் எல்லா அவஸ்தைகளையும் ஒரே சமயத்தில் பார்க்கலாம். ஒவ்வொன்றாய் பார்க்கிறோம். வெளியிலிறங்கி சஞ்சரிக்கையிலே நாம் ஒவ்வொன்றதிகமாகக் காண்கிறோம். இவ்விதம் சஞ்சரிப்பதின் மத்தியிலிருந்து தானாயிருக்கின்ற ஜீவன் மனசாகிய புகையாக வெளியிலே போய்த் தீர்ந்தபோது பாத்திரமாயிருக்கின்ற ஜடம் விழுந்து போகிறது. பின் உலகம் இல்லை. எப்படியென்றால் மேற்சொன்ன புகை நிறைந்த பாத்திரத்தினுடைய மூடியை கட்டவிழ்த்து திறந்து அப்பாத்திரத்தை கையில் வைத்து வெளியே சஞ்சரிக்கும்போது புகை வெளிக்கு வியாபித்து பரவி பாத்திரத்திலில்லாமல் போகிறது. அப்போது பாத்திரம் பாக்கியாகிறது, புகையைக்காண்பதில்லை. இந்தப்பிரகாரம்தனே தன்னிலிருக்கின்ற ஜீவன் மனசாகின்ற புகையாக வெளியேபோய் தீரும்போதே இறந்துபோகிறது. அதற்குத்தான் செத்துப்போயிற்றென்று சொல்லுகிறது. அதாவது சத்துப்போய் அது எப்படியென்றால் ஜடமாகிய பாத்திரத்திற்குள்ளிருந்த சத்தாகிய ஜீவன் மனசாகின்ற புகையாகி வெளியிலே போய்த்தீர்ந்தது, அப்போதே "சத்துப்போய்" என்று சொல்லுகிறது.

பதிமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

# 14-ம் அத்தியாயம்.

சி: குருவே! மனசாகும் குரு என்றும் அந்த மனசே வட விருக்ஷமென்றும் மனசாகிய வட விருக்ஷத்தின் மூலத்தில் தக்ஷிணாமூர்த்தியாகிய குரு இருக்கிறாரென்றும் சொன்னீர்களல்லவா, அது எவ்விதமென்று விபரித்து அருளிச்செய்யவேண்டுமாய் அபேக்ஷிக்கிறேன்.

கு: மனசாகும் குருவென்றும் அந்த மனசேதான் வடவிருக்ஷமென்றும் சொன்னதற்கு 13-ம் அத்தியாயத்தில் சொன்ன பாத்திரத்திலுள்ள புகைதான் உதாரணம்:— அதெப்படியென்றால் பாத்திரத்தில் புகையை நிறைத்து வாயை அடைத்து கட்டியபோது அதில் புகை உண்டாயிருந்தது, அப்போது புகை வெளியில் வியாபகமில்லாததால் அதைப்பார்க்க முடியவில்லை. ஆனால் அந்தப் புகை பாத்திரத்தில் அடங்கியிருக்கும் போதும் அது புகையாகத்தானிருந்தது. அந்தப் புகையேதான் வெளியில் வியாபித்ததும் அப்படியே வெளியில் வியாபித்தபோது மாத்திரமே புகையைக்காணமுடியும். பாத்திரத்தில் அடங்கியிருந்ததும் வெளியில் வியாபித்ததும் ஒரே புகைதான். இதே பிரகாரம்தான் நமது மனம் உள்ளே அடங்கியிருக்கும்போதும் புகையைப்போல் வெளியே வியாபித்தபோதும், ஒரே மனமாக இருந்தது இரண்டல்ல. அப்பிரகாரம் அடங்கி இருக்கின்ற மனதைத்தான் குரு என்று சொல்லுகிறது. வடவிருக்ஷமென்று சொன்னால் இக்காணுகிற உலகமாகிய சம்சார விருக்ஷம், இதற்கு (காரண பூதமாயிருக்கின்றது.) மனம், அந்தமனம், மேற்சொன்ன சம்சார விருக்ஷத்தினுடைய மூலத்தில் தெற்குமுகமாக இருக்கின்றது. அதினால்தான் தக்ஷிணாமூர்த்தியாகிய குரு என்று சொல்லக்காரணம்.

சி: குரு, புருவமத்தியமாகிய இருதயத்தில் இருக்கிறதென்று கற்பித்தீரல்லவோ? இப்பொழுது சம்சார விருக்ஷத்தின் மூலத்தில் தெற்கு முகமாக இருப்பதென்றும் சொல்லுகிறீர், அது எவ்விதமென்று விபரமாக அருளிச்செய்யவேண்டுமாய் அபேக்ஷிக்கிறேன்.

கு: தெற்கு முகமென்பது ஏதென்று நீர் நினைக்கிறீர்?

சி: கிழக்குமுகமாய் நின்றால் வலது பாகம் தெற்கு என்று.

கு: கிழக்கு எது ?

சி: சூரியன் உதிக்கும் பாகம்.

கு: இப்படி நினைப்பது மிகவும் தப்பிதம். நீர் ஜனிக்கவில்லையானல் அப்பொழுது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்கிறது உமக்கு இருக்கிறதோ ?

சி: இல்லை.

கு: எப்போது முன்சொன்ன பாகங்கள் உமக்குண்டாயது ?

சி: நான் ஜனித்து எனக்கு அறிவு உண்டானதற்குப் பின்.

கு: நீர் ஜனிக்கவில்லை என்றால் உமக்கு உருவம் உண்டோ ?

சி: இல்லை.

கு: உருவம் இல்லையானல் ஆதி அந்தமென்றோ வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்றோ யாதேனும் உண்டோ ?

சி: இல்லை.

கு: எப்பொழுது முன்சொன்ன பாகங்கள் உண்டானது ?

சி: நான் என்கிற அவஸ்தை உண்டானபோது.

கு: நீர் தூங்கும்போது இந்த அவஸ்தைகள் உண்டாயிருந்ததா ?

சி: இல்லை.

கு: ஏன் ?

சி: நான் என்கிற அவஸ்தை இல்லாததனல்.

கு: நான் என்னும் அவஸ்தை எப்போது உண்டாயது ?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: அப்பொழுது முன்சொன்ன அவஷ்தைகளெல்லாம் யாருக்கிருக்கிறது ?

சி: எனக்கு இருக்கிறது.

கு: அப்போது உமக்கே, ஆனல் உங்களுடைய முன்சொன்ன பாகங்களை காண்பிக்கமுடியுமா ?

சி: முடியாது.

கு: நீர் பாடசாலையில் வாசித்திருக்கிறீரா ?

சி: ஆம்.

கு: அந்தப் பாடசாலையில் பூகோளம் படம் பார்த்திருக்கிறீரா ?

சி: ஆம்.

கு: அந்தப் பூகோளப் படத்திற்கு வடக்கு தெற்கு எங்கே?

சி: படத்தின் மேல்பாகம் வடக்கு, அடிபாகம் தெற்கு?

கு: உம்முடைய மேல்பாகம் எது?

சி: சிரம்.

கு: அதற்குத்தான் உயர்ந்தபாகம் வடக்கென்று சொல்லுகிறது. அது நம்முடைய சிரம். அச்சிரசினுடைய புருவமத்தியத்தில் மனசாகிய குரு, அடிப்பாகமாகிய தெற்கே அதோ முகமாயிருக்கின்றது, இதனுற்றான் தக்ஷிணாமூர்த்தியென்று சொல்லக்காரணம்?

சி: வடக்கு தெற்குபாகம் இன்னதுதானென்று தெரிந்தது. கிழக்கு மேற்குபாகம் ஏதென்றென்பதை விபரமாக அருள் செய்ய வேண்டுமாக அபேக்ஷிக்கிறேன்.

கு: சூரியன் உதிக்கும் பாகம் கிழக்கென்று சொன்னீரல்லவா. ஆனல் சூரியன் உதிப்பதை நீர் கண்டிருக்கிறீரா. அது எவ்விடமிருந்து?

சி: கண்டதுண்டு அது ஆகாசத்திலிருந்து.

கு: ஆகாசத்திலிருந்து சூரியன் உதிப்பதை நீர் பார்த்திருக்கிறீரா?

சி: ஆகாசத்திலிருந்து சூரியன் உதிப்பதைக்கண்டதில்லை. உதித்து உயர்ந்து வந்தபிறகு ஆகாசத்தில் பார்த்திருக்கிறேன்.

கு: அப்போது சூரியன் உதிப்பதை நீர் காணவில்லை. உதிக்கிறதென்று கேள்வியுண்டு. சூரியன் உதித்தால் நமக்கென்ன?

சி: பகலாகின்றது.

கு: பகலானதற்கு திருஷ்டாந்தம் என்ன?

சி: பிரகாசம் உண்டானதனல்.

கு: இப்போது என்ன சமயம்?

சி: பகல்.

கு: இப்பொழுது உமக்குப் பிரகாசமுண்டோ?

சி: உண்டு.

கு: ஆனல் இந்த வீட்டினுள் யாரெல்லாம் இருக்கின்றூர்கள் என்றும், என்னென்ன சாமான்கள் இருக்கின்றதென்றும் சொல்லுவீரா?

சி: உள்ளேபோய்ப் பார்க்காமல் சொல்ல முடியாது.

கு: உமக்குப் பிரகாசம் உண்டல்லவா? என்னகாரணத்தால் அவற்றை இங்கிருந்தே பார்க்கக் கூடாமல் போயிற்று?

சி: சுவற்றின் தடையினல்.

கு: பிரகாசத்திற்கு மற்றொன்றின் தடஸ்தம் உண்டாவதில்லை. அதனல் உமக்குப் பிரகாசிக்கவில்லை. உமக்குப் பிரகாசிப்பதாகத் தோன்றினது எவ்விதமென்றால் நீர் இராத்திரி என்று கருதுகிற இருட்டான சமயம் பிரகாசிக்கிறதில்லை. அந்தச் சமயம் விளக்கின் திரியை கொளுத்தினல் அதனுடைய சக்திக்கு அநுசரித்து பிரகாசம் உண்டாகும். பத்து மைல் சமதூர விஸ்தீரணமுள்ளதாகிய ஒரு சிம்னி வைக்கப்பட்ட விளக்காய் இருந்ததென்றால் அதன் சக்தியை அநுசரித்து வெளிச்சமுண்டாகிறது. அந்த சமயம் விளக்கின் நான்கு பாகங்களிலுமுள்ள எல்லா வஸ்துக்களும் வெளிச்சமுள்ள தூரம் வரைக்கும் நமக்குக் காணப்படுகிறது. ஆனல் அந்த விளக்கின் அருகில் விளக்கைத் தொடாமல் யாதேனும் வஸ்துவைக் கொண்டு விளக்கைமறைத்தால் மறைக்கப்பட்டிருக்கும் வஸ்துவின் பின்பாகம் இருட்டாகக் காணுகிறது. அதன் காரணம் சுயமாகிய அவஸ்தை இருட்டாகும். அந்த இருட்டில் ஒரு வெளிச்சம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வெளிச்சத்திற்கு மறைவு நேரிட்டபோது சுயமாகிய இருட்டுத்தான் காணுகிறது. இத்தப்பிரகாரம்தான் நமக்கு இப்போது பிரசிக்கவில்லை. இப்போது இருட்டு. இருட்டில் விளக்கு வைக்கப்பட்டமாதிரி இந்த இருட்டில் ஒரு பிரகாச வஸ்து உண்டாயிருக்கின்றது. அப்பிரகாசத்திற்கு தடை நேரிட்டபோது பிரகாசம் காணுகிறதில்லை. இருட்டாகிறது. காரணம் முன்சொன்ன விளக்கினுடைய பிரகாசத்திற்கு தடைநேரிட்டபோது உண்டானதுபோல், ஆனல் சூரியன் உதிக்கின்றது ஆகாசத்தில், அந்த ஆகாசம் இன்னதுதானென்று ஐந்தாம் அத்தியாயததில் விபரித்துச் சொல்லியிருக்கிறது. சூரியன் என்று சொன்னால் பிராணன். அந்தப் பிராணனை முன் சொன்ன ஆகாயத்தில் அசையாமல் நிறுத்தினல் பகலாகும். பகலென்று சொல்லுகின்றது பரமாத்மாவாகின்ற மனதை சிரசினுள் பிரகாசிப்பிக்கும்போதே, அந்த சந்தர்ப்பத்தில் சூரியன் உதித்துப் பிரகாசித்துப் பகலாகும், பின் இருட்டில்லை. அந்தப்பிரகாரம் சூரியன் உதித்தால் யாதொரு தடையுமில்லாமலே எல்லா அவஸ்தைகளும் காணவும் அறியவுமாகும். அதற்கு யாதொரு காலமுமில்லை. இப்போது நமக்கு இருட்டு, அந்த இருட்டில் இப்பொழுது பிரகாசமுண்டென்று தோன்றுகிறது. இதை இரவுயென்று சொல்லக்காரணம். தானயிருக்கின்ற ஜோதிஸ் சிவசக்தியாகிய மூன்று குணங்களாக வெளியே போய் வியாபித்து இருக்கின்றது. அதாவது சாத்

ஷிகம், ராஜசம், தாமஸம், இவைகளாகும். ஆனால் முன்சொன்ன சக்தியிலிருந்து உத்பவித்த மூன்று குணங்களையும் ஒன்றாகச்சேர்த்து அவைகளினுடைய உத்பவமாகிய சக்தியோடு புருவமத்தியத்தில் நிறுத்தி அங்கேதானே மனதையும் கண்களையும் அசையாமல் நிறுத்த வேண்டும். அப்பொழுது பிரகாசிக்கும் அந்த சமயத்தில்தான் ஆகாயத்தில் சூரியன் உதித்து பகலாகின்றது. இப்பொழுது சூரியன் உதிக்கவில்லை. சூரியன் உதித்தால் பின் இருட்டாகிறதில்லை.

சி : சுவாமி, இதோபாருங்கள் சூரியனைக் காணுகிறோம் இதை என்னவென்று சொல்லவேண்டியது ?

கு : இந்தக் காணப்படுகிறது நம்மில் இருக்கின்ற சக்தி பிரதிபிம்பித்துக் காணுகின்றதாகும். காரணம், நீர் உமது கண்களை மூடிக் கொண்டு பார்த்தால் காணுகின்றதா ?

சி : காணுகிறதில்லை.

கு : கண்களை மூடியபோது காணாமலும், பிரகாசிக்காமலும் இருப்பதற்குக் காரணம் என்ன ?

சி : கண்களை மூடியதனாற்றான்.

கு : பிரகாசிக்கிறதும், காணுகிறதும் எவ்விடமிருந்து ?

சி : அவனவனிலிருந்து.

கு . ஆனால் நம்மிலுள்ள சைதன்னியம் உச்சிப்பொழுதில் ஆயிரம்கோடி சூரியருக்குள்ள பிரகாசத்தை உடையதாகும். அந்தச் சைதன்னியத்திலிருந்து உண்டாகிய ஜீவசக்தி நிமித்தம் விசார முதலானது உண்டாகின்றது. அப்போது பின்னப் பிரகாசமாகின்றது. அந்தப் பின்னப் பிரகாசத்தில் நம்மிலிருக்கின்ற சைதன்யத்தை நம்மிலிருந்து பிரதிபிம்பித்துக் காண்கிறோம். இப்பிரகாரம் பிரதிபிம்பித்துப் பிரகாசிக்கப்பட்ட முன்சொன்ன சூரியனை இப்பொழுது நமக்குப் பார்க்கமுடியாது. அதி கடூரமாகிய கிரணங்களினால் கண்களால் பார்க்கும்போது மூடிப்போகின்றது. அது எவ்விதமென்றால் ஒரு கண்ணாடியை எடுத்துப்பார்த்தால் அதில் நம்முடைய உருவம் பிரதிபிம்பித்து நமக்கு யாதொரு கஷ்டமுமில்லாமல் சுகமாய்ப் பார்க்கலாம். அதுபோல் நீர் சூரியன் என்று சொல்லுகிற இந்தக் காணுகிறதாய் கிரணத்திற்கு நேரே முன்சொன்ன கண்ணாடியைப் பிடித்தால் அந்த கிரணம் பிரதிபிம்பிக்கின்ற பிரகாசத்தை நாம் கஷ்டமில்லாமல் பார்க்க முடியுமா ? முடியாது. அதன் காரணம், அதி ஜொலிப்புள்ள பிரகாசத்தால் கண்கள் கூசி மூடிப்போகின்றது. அந்தப் பிரகாரம் பத்தாம் அத்தியாயத்தில் சொல்லியபடி ஜீவ சக்தியாகிய வாயுவால் மனமானது உந்தப்பட்டு பளிங்கு வர்ணமான முட்டை வடிவமா யிருக்

கின்ற வெளியினுள் நம்மில் முன்சொன்னவிதம் பிரகாசமாயிருக்கின்ற பிராணனுகிப் பிரதிபிம்பித்ததுதான் இந்தக் காணுகின்ற சூரியன். அதை நாம் அகங்காரத்தைக்கொண்டு பார்ப்பதாற்ருன் அச்சூரியன் அதிக ஜொலிப்பாகவும் பார்க்கமுடியாமலும் இருக்கின்றது. எப்பொழுது அப்படி பிரதிபிம்பிக்க விடாமல் தன்னில் அடக்குகின்ருேமோ அப்பொழுதே நமக்குப் பகலாகிறது.

சி: இவ்விதமானல் இரவென்றும் பகலென்றும் இரண்டு அவஸ்தை உண்டாகக் காரணம் என்ன?

கு: நமக்கு இப்போது இரவென்று முன் சொல்லியிருக்கிறதல்லவா? அந்த இருட்டில் நம்முள்ளிலிருக்கின்ற பிராணன் வெளியினுள் பிரகாசிக்கின்ற சமயம் பகலென்றும், அவ்விதம் வெளியினுள் பிரகாசிக்கித்த பிராணன் எப்போது நம்முள்ளில்தானே அடங்குகிறதோ அப்பொழுதே இரவென்றும் சொல்லுகிறது. அது எவ்விதமென்ருல், நாம் இரவென்று சொல்லுகிற சமயம் இந்தக் காணுகிற வீட்டிற்குள் தலைவாசலுக்கு நேரே ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்தால் வெளியே அந்த வாசலுக்கு நேராக பிரகாசத்தினுடைய சக்தி எத்தனை தூரம் செல்லுகின்றதோ அத்தனை தூரத்திற்கு வெளிச்சம் இருக்கும். அந்த வாயிலை மூடினுல் வெளியே இருட்டாகக் காணப்படும். அதைப்போற்ருன் நம் புருவமத்தியில் பிராணனுய் சூரியனுயிருக்கின்ற பிரகாசம் அகங்காரமாகிய கதவைத் திறந்த போது வெளியினுள் வியாபித்துப் பிரகாசிக்கின்றது. அப்பொழுது நமக்குப் பகல் என்றும், அந்த அகங்காரமாயிருக்கின்ற கதவை மூடிய போது வெளியினுள் பிரகாசிக்காமல் இருக்கும்போது நமக்கு இரவென்றும் சொல்லுகிருேம். இதுதான் நாம் சொல்லிவருகின்ற இரவு . பகல்களினுடைய ஸ்திதி, ஆனுல் இப்போது சொல்லிவருகிறது நமக்கு இரவும் பகலும் அல்ல. இந்த அவஸ்தை தூக்கமானதால் இரவும் பகலும் உண்டென்று அந்தத் தூக்கத்தில் காணுகின்ற சொப்பனம்.

பதினுன்காம் அத்தியாயம் முற்றிற்று.

# 15-ம் அத்தியாயம்.

சி: குருவே! முன் அத்தியாயத்தில் பிராணனுயிருக்கின்ற சூரியன் எப்பொழுது புருவமத்தியில் பிரகாசிக்கின்றதோ அப்பொழுது யாதொரு காலமுமில்லை என்று கற்பித்ருக்கிறீர்களே ஆனால் இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் என மூன்று காலங்கள் உண்டென்றும் அவைகளை அநுசரித்துதான் உலகத்தினுடைய ஸ்திதியென்றும் சொல்லிவருகிறீர்கள், இந்தப்பிரகாரம் மூன்று காலங்கள் இல்லையானல் நடந்ததும் நடக்கிறதும் நடப்பதும் இப்படியாகிற மூன்று அவஸ்தையும் இல்லையென்று வருகிறதல்லவா? அப்படி வருவதற்கிடையுண்டோ?

கு: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், என்று சொல்லுகிறது எந்தெந்த சமயங்களைக் குறித்து?

சி: இறந்தகாலம் என்பது முடிந்ததும், நிகழ்காலம் என்பது நடக்கின்றதும், எதிர்காலமென்பது இனிமேல் வருகின்றதுமாகும்.

கு: அது எவ்விதம் அப்படி வருகின்றது? இதோ பாருங்கள் இது என்ன?

சி: இது ஒரு புஸ்தகம்.

கு: இதை நான் இப்பொழுது என்ன செய்ய ஆரம்பிக்கிறேன்?

சி: அதை நீங்கள் கையால் தொடுவதற்கு ஆரம்பிக்கிறீர்கள்.

கு: அதென்ன காலம் என்று சொல்லவேண்டும்?

சி: எதிர்காலம்.

கு: இப்பொழுது என்ன செய்கிறேன்?

சி: அந்த புஸ்தகத்தை எடுக்கிறீர்கள்.

கு: அதென்ன காலம்?

சி: நிகழ்காலம்?

கு: இந்தப் புஸ்தகத்தை இப்பொழுது என்ன செய்தேன்?

சி: கையில் எடுத்தீர்கள்.

கு: அதென்ன காலம்?

சி: இறந்தகாலம்.

கு: அப்பொழுது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென்றோ, அல்லது எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலமென்றோ எப்படிச் சொல்லவேண்டும்?

சி: எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலமென்று.

கு: ஆனால் நீர் (பாவிக்காமல்) விசாரிக்காமல் யாதொன்றும் செய்ய முடியுமோ?

சி: முடியாது.

கு: ஆனால் கேட்காமலும், காணாமலும், அறியாமலும், இருக்கும் அவஸ்தைகளுக்குப் பூதமென்றோ (இறந்தகாலமென்றோ) மற்றோ சொல்லுவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: நீர் இங்கே வருவதற்குவேண்டி உங்களுடைய வீட்டிலிருந்து புறப்பட நினைக்கிறது எதிர்காலமும், இங்கே வருவதற்கு வேண்டி நடப்பது நிகழ்காலமும், இவ்விடம் வந்து சேர்ந்தது இறந்தகாலமும் ஆகிறது. எதிர்காலமென்று சொல்வது பாவியாகும். பாவி என்றால் சலனம். அது ஒன்றுமில்லாத அவஸ்தையிலிருந்து எதிர்காலமான சலனமாக உத்பவித்தது. அதெப்படியென்றால், இந்த ஜடமாகிய உடம்புக்கு யாதொரு சலனமாகிய எதிர்காலம் இல்லையானால் யாதொன்றும் செய்கிறதற்கு முடியாது. அதெப்படியென்றால் நீர் இருக்குமிடத்திலேயிருந்து எழுந்திருக்கவேண்டுமென்றால் உம்முடைய கை, கால்களை, அசைக்காமல் எழுந்திருக்க முடியுமா?

சி: முடியாது.

கு: சலனம் இல்லாததனால் எழுந்திருக்க முடியாமலாயிற்று சலிக்கின்றது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு, அது பாவியாயிருக்கின்ற எதிர்காலம், அந்த எதிர்காலமாயிருக்கின்ற வாயுவிலிருந்து உத்பவித்தது மனசு, அதுவே வர்த்தமானமாய் இருக்கின்ற நிகழ்காலம், அந்த மனதினால் உண்டாக்கப்பட்டது ஜடம், அது பூதமாகிய இறந்தகாலம் இல்லையானால் ஜீவசக்தியாய் எதிர்காலமான வாயுவும், நிகழ்காலமான மனசும் சம்யோகம் உண்டாகிறதில்லை. ஆகையால் நிகழ்காலமாயிருக்கிற மனசு பூதமாயிருக்கிற இறந்த காலமான ஜடத்தை புணர்ச்சியால் உண்டாக்குகிறது. அது எவ்விதமென்றால் மனசு என்பது ரஜோகுணம், அந்த ரஜோகுணமாயிருக்கின்ற மனசு பூதமாயிருக்

கின்ற இறந்தகாலமாகிய ஜடத்தை சிருஷ்டிக்கிறது. அச்சிருஷ்டியை சாத்வீகமாய், ஜீவசக்தியாய் எதிர்காலமாயிருக்கின்ற வாயு ரக்ஷிக்கின்றது. சாத்வீகமாயிருக்கின்ற வாயுவும், ரஜோகுணமாயிருக்கின்ற மனசும், உள்ளபோது நான் என்கிற தேகாபிமானமாகிய அகங்காரம் தோன்றுகிறது. அப்போது மூன்று காலமாகிய நிலைமைகளும் ஒன்றுகூடி இந்தக் காணப்படும் பூதங்களை சிருஷ்டிக்கின்றது. அதனல் நாம் காண்பதும், கேட்பதும், அறிவதும் செய்கிறோம். அவை எல்லாம் இறந்த காலமாகிய பூதமாகும். அப்பிரகாரம் உண்டாகிறதற்கு உதவுகின்ற வஸ்து மனசாகும். அந்த மனசாகும் வேலை, வேலை மனசாகிறதினல் அது வர்த்தமானமாகிய நிகழ்காலம். அந்த தொழிலாயிருக்கின்ற மனசு உத்பவித்ததற்குக் காரணம் ஜீவசக்தியாகிய வாயுவாகும். அது எதிர்காலமாகிய பாவியாகிறது. பாவியாகிய எதிர்காலமாயிருக்கின்ற அந்த வாயு இல்லையானல் வர்த்தமானமாயிருக்கின்ற நிகழ்காலமாகிய மனசோ, பூதமாய் இறந்தகாலமாயிருக்கின்ற அகங்காரமோ, உண்டாகிறதற்கு இடமில்லை. இவையெல்லாம் உத்பவிக்கின்றது பாவியாகிய எதிர்காலமாகிய ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவிலிருந்தேதான். காரணம் நாம் தூங்கும் சமயம் முன்சொன்ன மூன்று காலமும் இல்லை. அப்போது யாதொன்றையும் அறிகிறதில்லை. அதன் காரணம் தன்னுடைய சக்தி உத்பவித்து வெளியினுள் வாயுவாகி சலனம் செய்யவில்லை. எப்பொழுது தன்னுடைய சக்தி வெளியினுள் வியாபித்து சலிக்கின்றதோ அப்பொழுதுதான் அதை வாயுவென்று சொல்லப்படுகிறது. இறந்தகாலமான வாயுவிலிருந்துதான் சகலமும் உற்பத்தியாகிறது. ஆகையால் வெளியினுள் எப்போது மனசிருக்கின்றதோ அப்பொழுது பாவி என்கிற எதிர்காலம் ஒன்றல்லாமல் வேறு யாதொரு காலமும் இல்லை. அவ்விதம் பாவியாகிய எதிர்காலமென்று சொல்லுகிற ஜீவசக்தியாய் வாயுவாயிருக்கின்ற வஸ்துவை எப்பொழுது வெளியினுள் சலிக்காமல் அதன் உத்பவஸ்தானமாகிய புருவமத்தியில் லயிப்பிக்கின்றோமோ அப்பொழுது காலம் நசித்து அந்த சந்தர்ப்பத்தில் தானய் தன்மயமாகின்றது. ஆனதினல் தானய் பிரம்ம ஜோதிஸாயிருக்கின்ற வஸ்துவானது தான்தானே எப்பொழுது ஆகாசமாய் பவிக்கின்றதோ அப்பொழுது அதில் சலிக்கின்றது. ஜீவசக்தியாகிய வாயு, அந்த வாயுவைத்தான் பாவியாகிய எதிர்காலமென்றும், சக்தியென்றும், மாயையென்றும் சொல்லுகிறது. அது தன்னிலிருந்து தானே சலிக்கின்றதனல், பிரம்ம மாயை என்றும் சொல்லுகிறது. அது தன்னிலிருந்து தானே சலிக்கிறதனல், பிரம்ம மாயை என்றும், புருஷப்பிரகிருதியென்றும், சிவசக்தியென்றும் மற்றும் சொல்லுவது. தானய் பிரம்மஜோதிஸாய் தன்னுடைய சக்தியாய், பாவியாய் அதாவது

எதிர்காலமாயிருக்கின்ற வாயுவை எப்பொழுது தானாகிய பிரம்மத்தில் தானே ஐக்கியப்படுத்துகின்றோமோ அப்பொழுது சர்வமும் தன்னில்தானே லயித்து தானாகி தன்மயமாகி ஆகிறது. இதற்கு தான் கைவல்யம் என்று சொல்லுகின்றது.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# 16-ம் அத்தியாயம்.

---

சி: சுவாமின்! உலகில் பழைய காலமுதல் பாரம்பரியமாக விரதம் முதலியவை அநுஷ்டித்து க்ஷேத்ரோபவாசங்கள் செய்தால் மாத்திரமே முக்தி சித்திக்குமென்று சொல்லி வருகிறார்கள். தவிர சாஸ்திரங்களிலும் அவ்விதமே இருப்பதாகச் சொல்லி அநுஷ்டித்தும் வருகிறார்கள் இதன் எதார்த்தம் என்ன?

கு: விரதாதிகளும் உபவாசாதிகளும் என்னென்ன?

சி: ஏகாதசி, பிரதோஷம், சிவராத்திரி முதலிய அநேக விரதங்களும் க்ஷேத்ரோபவாசங்களும்.

கு: நீர் ஏகாதசி முதலிய அநேக விரதங்களென்று சொன்னீரல்லவா இவைகள் முக்திக்கு வேண்டியதாயிருந்ததென்றால், ஒன்றே போதும் அநேகம் தேவையில்லை. இருக்கட்டும் இந்தவித விரதங்களை எந்த விதத்தில் அநுஷ்டித்து வருகின்றார்கள்?

சி: கேட்பீராக, ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்து வருகிறது எவ்விதமென்றால் சிலர் அன்று காலை உதயத்தில் எழுந்திருந்து குளித்து சந்தனம் பூசி விஷ்ணு நாமங்களை ஜபித்து, விஷ்ணு க்ஷேத்ர தரிசனம் செய்து, அரிசி, உளுந்து முதலியவற்றை விலக்கி இளநீர், பழம் முதலியவைகளை திருப்திகரமாக பக்ஷித்து ஏகாதசி, மகாத்மியம் முதலிய கிரந்தபாராயணம் செய்து, பகல்பொழுதைப் போக்கியும் சிலர் இராத்திரி தூக்கம் விழிக்கிறதும் சிலர் தூங்குகிறதும் செய்து வருகிறதுண்டு. பிரதோஷ விரதத்தை அநுஷ்டித்து வருகிறது, எவ்விதமென்றால் அன்றைய தினம் காலையில் எழுந்திருந்து குளித்து, விபூதி உருத்திராக்ஷங்களைத் தரித்து, சிவநாம சங்கீர்த்தனம் பாடி, சிவக்ஷேத்திரங்களில் தரிசனம் செய்து பகல் சமயம் யாதொரு ஆகாரமும் செய்யாமலிருந்து திரிசந்தியாகிய பிரதோஷ சமயம் அதாவது சூரியன் அஸ்தமித்து பகலும் இரவுமாய் சந்திக்கின்ற சமயம் குளித்து, சிவக்ஷேத்திர தரிசனம் செய்து பூஜை நைவேத்தியம் முதலானவைகளைச் செய்தும், செய்வித்தும், நைவேத்திய உச்சிஷ்டம் சாப்பிட்டும் தூங்குகிறார்கள். சிவராத்திரி விரதமென்பது வருஷத்தில் ஒன்றே உண்டு. அன்றைய தினம் காலையில்

எழுந்து குளித்து, விபூதி உருத்திராக்ஷம் முதலியதுகளைத் தரித்தும் சிவக்ஷேத்திரத்திற்கு சென்று தரிசனம் பிரதக்ஷணம் முதலியவைகளைச் செய்தும், பகல் முழுதும் நிராகாரனாய், சிவநாமங்கள் ஜபித்தும், சயனப்பிரதக்ஷணம் (அதாவது கண்கட்டிப்படுத்து உருண்டு க்ஷேத்திரத்தை வலம்செய்து வருகிறது) மற்றும் முதலியவைகளைச் செய்தும் இராத்திரி சிவபூஜைக்கு பிறகு சிலர் அபிஷேகத்தின் உச்சிஷ்டம் மாத்திரம் புசித்தும், சிலர் மற்றும் பலவிதமான பலகாரங்களைப் புசித்தும், ஒவ்வொரு புராணங்களை வாசித்தும், பலவிதமான ஆட்டங்களாடியும், அன்று இராத்திரி முழுதும் தூங்காமல் இருக்கிறார்கள்.

கு: இவ்வித விரதங்களுக்குள்ள் தினம் நீர் சொல்லியபிரகாரமுள்ள தொழில்களல்லாமல் வேறே தொழில்களையும் செய்கிறதுண்டோ?

சி: அவரவர்கள் பிரதிதினம் செய்யும் எல்லாத் தொழில்களையும் செய்கிறது உண்டு.

கு: ஆனால் மேற்சொல்லிய விரதம் முதலிய தினங்களில் அரிசி முதலிய சில பொருள்களை நீக்கி மற்றுள்ள பொருள்களைக் கொண்டு செய்த பலகாரங்கள் திருப்தியாகப்புசித்து, பிரதிதினமும் நடத்திவருகிற தொழில்களும் செய்தால் மோக்ஷம் கிடைக்குமென்றால் சில பிரதேசங்களிலிருக்கிற ஜனங்கள் பிரதிதினமும் கோதுமை, கேள்வரகு, சோளம், கம்பு, தினை, முதலியவைகளைக் கொண்டு செய்த பலகாரங்களை திருப்திகரமாகப் புசித்து, நித்திய தொழில்களைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவருக்கும் மோக்ஷம் கிடைக்கவேண்டியதல்லவா? இந்தவித விரதங்களை, ஜனங்கள் அந்த விஸ்வாசத்துடன் அநுஷ்டித்து யாதொரு போசனையுமில்லாமல் அவனவனிலிருக்கின்ற பிராணனை அதோகதியாக்கி, நசிப்பிக்கின்றதுமல்லாமல், எதார்த்த தத்துவத்தைக் கிரகித்து அவரவருக்கு மோக்ஷம் கிடைப்பதற்குள்ள மார்க்கத்தை பார்க்காமலும் நசித்துப் போகின்றார்கள். ஆனால் ஏகாதசி விரதம் என்பது ஏதென்றால் தன்னிலிருந்து தசேந்திரியங்களின் வழியாக வெளியிலுள் வியாபிக்கின்ற சக்தியை தன்னில்தானே ஒன்றாக்கி நிறுத்துகிறதுதான். அதாவது கண்களால் கண்டறிகிறதும், செவிகளால் கேட்டறிகிறதும், மூக்கினால் முகர்ந்தறிகிறதும், நாவினால் ருசித்தறிகிறதும், தொக்கு அதாவது தோலினால் தொட்டறிகிறதும், வாக்கு, பாணி, பாதம், பாயுரு உபஸ்தம் இவைகளினுடைய தன்மைகளை அறிகின்றதுமாகிய மனோ சக்தியை தன்னில்தானே ஒன்றாக்கி அடக்கி நிறுத்துகின்றதுதான். ஆனால் இத்தொழில்களை அறிகின்ற அறிவு எது என்றால் தன்னிலி

ருக்கின்ற ஜீவசக்தி முன்சொன்ன வாக்குமுதல் ஐந்து இந்திரியங்களிலிருந்து உத்பவித்த சக்தியிலிருந்து முன் சொன்ன கண்முதல் ஐந்து இந்திரியங்களின் வழியாய் வெளியினுள் வந்து அறிகின்றது எதுவோ அதுதான். ஆனால் நாம் கண் முதலியவைகளால் அறிகின்ற அறிவும், கை கால் முதலியதுகளைக்கொண்டு செய்கின்ற தொழில்களும், எவ்விதமுண்டாகிறதென்றால் நாம் தூக்கமென்று சொல்லுகிற அவஸ்தையிலிராமல் தொழிலாகிய சொப்பனத்திலிருக்கின்றதனால்தான் உண்டாகிறது. எப்பொழுது தொழில் என்கிற சொப்பனத்தை விட்டு தூக்கமென்கிற அவஸ்தையில் இருக்கின்றோமோ அச்சமயம் மேற்சொன்ன தசேந்திரியங்களினால் யாதொரு அறிவோ தொழிலோ இல்லை, அறிவிற்கு தசேந்திரியங்கள் உத்திரவாதியல்ல. மனந்தான் உத்திரவாதி அந்த மனம் உத்பவித்ததற்குக் காரணமானதும் ஜீவசக்தியாகி சலித்துக்கொண்டிருக்கிறதுமான வாயுவை அசையவிடாமல் தனது உத்பவ ஸ்தானவாகிய பிரம்மரந்திரத்தில் நிறுத்துவதுதான் ஏகாதசி விரதம். அப்போது மனசானது தன்னுடைய சுவஸ்தானத்தில் ஸ்திதி செய்கின்றது. அவ்விதம் ஸ்திதி செய்கின்ற மனதைத்தான் விஷ்ணுவென்று சொல்லுகிறது. அந்த விஷ்ணு அனந்தசயனனாயிருக்கின்றார். அனந்தசயனமென்றால் ஆதியந்த விஹீனமாயும் உள் வெளி என்கிற அவஸ்தைகள் இல்லாமலும், இருக்கின்ற பதவியாகும். தன்னிலிருந்து சலித்துக்கொண்டிருக்கின்ற மனம் சலனமில்லாமல் சுவஸ்தானத்தில் லயிக்கின்ற அவஸ்தையைத்தான் ஏகாதசி விரதம் அநுஷ்டித்தல் விஷ்ணுபதம் பிராபிக்கும் என்று சொல்லக்காரணம். பிரதோஷமென்பது திரியோதசி கூடியதினம் என்று சொல்லுகிறது ஆனால் அதனுடைய யதார்த்தம் தசேந்திரியங்களுடன தன்னுடைய சக்தி சத்வ ரஜோ, தமோகுணங்களாகி வெளியினுள் வியாபித்திருக்கின்றதை முன் சொன்ன மூன்று குணங்களோடு ஆந்தர்யத்தில் (உள்ளில்) உள்ள சிவனாகிய ஜீவனோடு ஐக்கியப்படுத்துகிறதாகும்.

சிவராத்திரியும் அந்தப்பிரகாரம்தான். பாகியம் அதாவது வெளியினுள் மூன்றுவிதமாக மாயையில் பிரகாசித்த பிரகாசத்தை ஆந்தரியத்திலிருக்கிற சிவனாகிய ஜீவனோடு ஐக்கியப்படுத்துகிறது தான் விரதங்களுடைய ஸ்திதி இந்தப்பிரகாரமாகும். ஆனால் சிவராத்திரி வருஷத்தில் ஒன்றே என்றும், இது சிவனுடைய இராத்திரி என்றும் சொல்லுகிறார்கள். என்றால் வருஷத்தில் இரவும் பகலுமாக மூன்னூற்றி அறுபத்தைந்து தினங்களுண்டு. அதில் ஒரு தினத்தின் இராத்திரியை மாத்திரம் சிவனுக்கு இராத்திரி என்றும், பாக்கி தினங்களெல்லாம் பகலென்றும் ஒருக்காலமும் நம்புவதற்கு

இடமில்லை. ஏனென்றால் பகல் எத்தனை சமயமோ அத்தனைசமயம் இராத்திரியும் உண்டு. இதில் 364 இரவு பகல் கூடிய தினங்கள் முழுதும் சிவனுக்குப் பகலாகவும், 365-ஆம் நாளாகிய ஒருதினத்தின் இராத்திரி மாத்திரம் சிவனுக்கு இராத்திரியாகவும் வருவதற்கு இடமில்லை. இதை ஆலோசிக்காமல் ஏகாதசியென்றும், பிரதோஷமென்றும், சிவராத்திரியென்றும், கேள்விப்பட்டும் வாசித்தும் அதனுடைய யாதொரு தத்துவமும் அறியாமல் தவறாக அர்த்தத்தைக்கிரகித்து ஏதேனும் சில கோஷ்டிகளை ஜனங்கள் காண்பிக்கிறார்களென்று மாத்திரமே சொல்வதற்கு இடமுண்டு. ஆனால் விரதங்கள் மட்டுமல்ல, உலகமும் அதனுள் நடக்கிறதாகிய எல்லா நிலைமைகளும் தன்னுடைய மனோ சக்தி வெளியினுள் வியாபித்து அந்த சக்தியிலிருந்து உத்பவித்ததேயாகும். ஆகையால் தன்னுடைய சக்தியை வெளியினுள் விடாமல் தன்னில் தானே லயிப்பித்து தானாய்த் தன்மயமாய் ஆகிறதற்குள்ள மார்க்கத்தைக் கண்டறிந்து அந்நிலை அடையவேண்டும். இதற்குத்தான் மோக்ஷம் என்று சொல்லுகிறது. இதல்லாமல் நீர் சொன்னபிரகாரம் ஏகாதசி முதலிய பல விரதங்களையும் அநுஷ்டித்து தன்னுடைய நித்திய பக்ஷணங்களையும் விட்டும், வழக்கமாய்ச் சாப்பிடும் நேரம் தப்பி ஏதோபலகாரங்களைத்தின்றும், வயிற்றை நிறைத்து விரதமென்று சொல்லிக்கொண்டு இருப்பதனால் யாதொரு பலனும் கிடைக்காமலும் யாதொரு தத்துவத்தையும் அறியாமலும் தன்னுடைய சக்தி அதோகதியாய் நசித்துப்போவதற்கு இடமுண்டாகிறது.

சி: விரதங்களைப்பற்றி இவ்விதமென்றால் க்ஷேத்திரம் முதலியவைகளில் உபவாசிப்பதைப்பற்றிச் சுவாமிகள் கற்பிக்கின்றது யாது?

கு: க்ஷேத்திரம் முதலியவைகளில் உபவாசிக்கிறதென்று நீர் சொன்னீர் அல்லவா? ஆனால் எத்தனை க்ஷேத்திரங்கள் உண்டு. உபவாசம் என்பது என்ன?

சி: அநேக க்ஷேத்திரங்கள் உண்டு. அவைகளில் ஆகாராதிகளின்றி இருப்பவைதான் உபவாசம் என்று சொல்லுவது.

கு: அந்தச் சேத்திரங்கள் எவை எவை?

சி: சிவ, விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியர், ஐயன், பகவதி, முதலான அநேக க்ஷேத்திரங்கள் உண்டு.

கு: அவைகளில் என்னென்ன விருக்கின்றன?

சி: அவைகளில் சங்கற்பித்துப் பிரதிஷ்டை செய்துள்ள தெய்வங்கள் உண்டு.

கு: அவ்விடங்களில் எவைகளைப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்?

சி: பிம்பங்களை ஈஸ்வரன் என்று சங்கற்பித்துப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்.

கு: பிம்பங்கள் எதைக்கொண்டு செய்யப்பட்டிருக்கின்றது?

சி: உலோகங்கள், சிலைகள் இவைகளைக்கொண்டு.

கு: எந்தெந்த உலோகங்களாலும், சிலைகளாலும்?

சி: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவைகளாலும், பாதாள அஞ்சனத்தினுலும், கருங்கற்களாலும், பலா, தேக்கு, முதலிய மரங்களாலும்.

கு: உலோகங்கள், சிலைகள், மரங்கள், இவைகளினுல், ஈஸ்வரர்களை உண்டாக்குவது யார்?

சி: தட்டான், கன்னுன், கற்கொத்தன், தச்சன் முதலியவர்கள்.

கு: அப்பொழுது முதலில் உண்டானது ஈஸ்வரனே, அல்லது அதனை உண்டாக்கியவரோ?

சி: ஈஸ்வரன்தான் முதலில் உண்டானது.

கு: ஆனுல் மேற்சொன்னவர்கள் எவ்விதத்தில் ஈஸ்வரனை உண்டாக்குவது? தவிர தட்டான் முதலியவர்கள் இல்லாதிருந்தால் நாம் ஈஸ்வரனை பஜிப்பதற்கு முடியாமல் வருகிறதல்லவா?

சி: இதைப்பற்றி ஆலோசிக்கும்போது தட்டான் முதலியவர்கள்தான் முதலில் உண்டானவர்களென்று வருகிறது.

கு: அது எவ்விதமோ ஆகட்டும். ஈஸ்வரசேவை செய்கிறதற்காக முன் சொன்னவர்களே உண்டாக்கி ஸ்தாபித்து வைத்ததாகுமோ?

சி: அப்படியல்ல, பக்த ஜனங்கள் இந்த விதத்தில் உண்டாக்கிவித்து, பிராம்மணர்களைக்கொண்டு பிரதிஷ்டை செய்து வைத்ததாகும்.

கு: அப்போது ஈஸ்வரன் உண்டாகிறதற்கு முன்புதானே மேற்சொன்ன ஆசாரி முதலியவர்களும், பக்தர்களும், பிராமணர்களும் உண்டாயிருக்கிறுர்களென்று தெரிகிறது. அதுவும் எவ்விதமோ ஆகட்டும். பிரதிஷ்டிப்பதென்று சொன்னீர் அல்லவா, அவர்கள் ஈஸ்வரனை பிரதிஷ்டிப்பது எங்ஙனம்?

சி: அஷ்ட கந்தங்களை இடித்தரைத்துச் சேர்த்து, க்ஷேத்திரங்களின் மூலஸ்தானத்திற்குள் முன்சொன்ன பிம்பங்களை வைத்து

மேற்சொன்ன அஷ்டகர்தக்கூட்டினுல் கெட்டித்து, அதில் பிராண ணப்பிரதிஷ்டை செய்து பூஜை நைவேத்தியம் முதலியதும் செய்வ தாகும்.

கு: இவ்விதம் செய்யும் பூஜை நைவேத்யம் முதலியவைகளை அந்தப் பிம்பங்கள் அறிகின்றதோ, புசிக்கின்றதோ உண்டோ?

சி: உண்டென்றுதான் நம்பிக்கை.

கு: இதுவரை முன்சொன்ன பக்ஷணுதிகளை யாதாயினுமோர் பிம்பம் புசித்ததாக நீர் கண்டதாவது, கேட்டதாவது, அறிந்ததா வது உண்டோ?

சி: இல்லை.

கு: அந்த பிம்பம் ஏதேனும் சப்திக்குமோ?

சி: சப்திக்காது.

கு: தவிர மாத்துண்டினுல் செய்யப்பட்டது ஈஸ்வரனென்ருல் இந்தக் காணுகின்ற தூண், உலக்கை, முதலியனவும் ஈஸ்வரன் அல் லவா? நீர் அவைகளையும் பஜிக்கவேண்டியதல்லவா? ஒரே மாத்தி னுடைய ஒரு துண்டில் ஈஸ்வரனையும் மற்ருெரு துண்டில் உலக்கை உரலையும் உண்டாக்கியதாக வைத்துக்கொள் அதனுல் அவைகளை யும் பஜிக்கவும், தொழுகவும் செய்யவேண்டியதல்லவா? அந்த நான்கு வஸ்துக்களையும் மாத்துண்டினுல் ஒருவன்ருனே உண்டாக்கினது? நீர் என்ன காரணத்தால் உரல், உலக்கை முதலியதுகளை பஜிக்கவும், கும்பிடவும் செய்கிறதில்லை?

சி: அது ஒரு உருவமாய் உண்டாக்கப்படவில்லை.

கு: அப்போது ஈஸ்வர உருவத்தை உண்டாக்கியவன் ஆசாரி என்று தெரிகிறது. ஆனுல் அவைகளை உண்டாக்கியவரை அல்லவா பஜிக்கவேண்டியது?

சி: ஆசாரி உருவத்தை மாத்திரம் செய்கிறதற்கு முடியும், அதற்குவேண்டிய பிராணப் பிரதிஷ்டை, பூஜை, நைவேத்தியம் முத லியதுகளைச் செய்து ஸ்தாபித்தபோது மாத்திரந்தான் அதற்கு சக்தி யுண்டு.

கு: அவ்விதம் செய்தது யார்?

சி: பிராம்மணர்.

கு: ஆனுல் அந்தப் பிராம்மணர்களைப் பஜித்தால் போதாதா? மரம், கல் முதலிய உலோகங்களைக்கொண்டு செய்யப்பட்ட பொம்மை களை பஜிக்கவும் வேண்டுமோ?

சி: சுவாமி! அந்தப் பிரதிஷ்டைக்கு யாதொரு சக்தியுமில்லை என்றோ சொல்லுவது?

கு: ஏனென்றால், பிராணப்பிரதிஷ்டை செய்வதென்பது, பிராணனை ஸ்தாபிப்பது அல்லது நிலை நிறுத்துவதென்று அருத்தம். பிராணன் என்பது தன்னுள்ளிலே இருக்கின்ற வஸ்து. அப்படித் தன் உள்ளில் இருக்கின்ற பிராணனை உலோகங்கள் முதலியவைகளைக் கொண்டு உண்டாக்கியுள்ள பொம்மைகளில் பிரதிஷ்டிப்பது என்று வருகிறதினால் அப்பிரகாரம் பிரதிஷ்டித்தவருடைய பிராணன் தற்சமயம் நசித்துப் பிணமாயிருக்கவேண்டும். அந்தப்பிரகாரம் பிரதிஷ்டை செய்த தற்சமயம் மேற்பிரகாரம் பிரதிஷ்டை செய்த யாராகிலும் பிணமாய்ப் போயிருக்கிறார்களென்று கேட்டதோ, அறிந்ததோ, கண்டதோ, உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் தன்னிலிருக்கும் பிராணனை முன்சொன்ன பொம்மையில் பிரதிஷ்டைசெய்து அதற்குச் சக்தியைக் கொடுக்கத் திறமையுள்ள ஒருவர் இருந்தாரேயானால் இதனிலும் பெரியதானகுணம் உலகத்தில் உண்டாகிறதற்கு இடம் உண்டு. அதாவது உலகத்தில் அநேகர் இறந்துபோகின்றார்கள், இறந்து போகிறதென்றால் பிராணன் நசிக்கிறதற்கல்லவா? அந்தப்பிரகாரம் பிராணன் நசித்தபோது முன்சொன்ன பொம்மையில் ப்ராணப்பிரதிஷ்டிக்கிறதற்குச் சக்தியுள்ளவர் இறந்து வீழ்ந்த ஜடத்தில் பிராணப் பிரதிஷ்டித்து அந்தச் சக்தியைக் கொடுத்தால் எவ்வளவோ பெரிய குணமாயிருக்கும் அதுவும் எவ்விதமோ ஆகட்டும், தவிர மேற்பிரகாரம் பிரதிஷ்டித்திருக்கின்ற ஸ்தலத்திற்குப் போகும்போது உமது விசாரமானது அவ்விடத்தில் யார் இருக்கிறாரென்று?

சி: ஈஸ்வரன்.

கு: ஆனால் நீர் அவ்விடத்தில் சென்று அந்தப்பிரதிஷ்டையை எவ்விதம் கும்பிடுகின்றீர்? கும்பிடுகிறசமயம் உம்முடைய சங்கற்பம் என்ன?

சி: என்னுடைய இருகைகளையும் கூப்பிச் சேர்த்தி எனது நெஞ்சில் வைத்துக் கும்பிடுகிறேன். அப்பிரகாரம் கும்பிடும் சமயத்தில், என்டைய ஈஸ்வரா என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

கு: அப்படி நீர் செய்வது மஹா தப்பிதம், அது ஏனென்றால் நீர் அவ்விடம் போகும்போது கோவிலில் பிரதிஷ்டை செய்திருக்கிற பொம்மையாகும் ஈஸ்வரன் என்று உமது சங்கற்பம். அந்தப்பிரகா

ரம் சங்கற்பித்ததனுற்றான் நீர் அவ்விடம் போகிறதற்கு இடம் வந்தது. அப்படிச் சங்கற்பித்த அவஸ்தைக்கு என்னுடைய ஈஸ்வரர் என்று சொல்லி அவரவருடைய நெஞ்சில் கைகளைவைத்துக் கும்பிடுவது கூடாது. அந்தப் பிரதிஷ்டையாகிய பொம்மையுடைய நெஞ்சில் கையைவைத்து கோவிலிலிருக்கின்ற ஈஸ்வரா என்று சங்கற்பித்து என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும். அந்தப்பிரகாரம் செய்கிறதில்லை. காரணம் என்னவென்றால் உமதுள்ளில் ஈஸ்வரர் இல்லையானல் வேறொரு இடத்தில் ஈஸ்வரர் இல்லை. உமது சக்தி வெளியினுள் வியாபித்து உம்மால் சங்கற்பிக்கப்படுகிறது. அந்தப் பிரதிஷ்டையில் யாதொருசக்தியும் இல்லை ஏனென்றால் பிராணப்பிரதிஷ்டை செய்யப்பட்டதென்று சொல்லவேண்டுமென்றால், பிரதிஷ்டை செய்பவர் முன்சொன்ன பிம்பங்களை எடுத்து மற்றோர் சகாயமும் இல்லாமல் தன்னுடைய பிராணனைக் கொண்டுமாத்திரம் ஸ்தாபித்து, யாதொரு அசைவும் இல்லாமல் நிறுத்தவேண்டும். அவ்விதமல்லாமல் சீமைச்சுண்ணும்பினலோ, அதனல் உண்டாக்கப்பட்ட சிமின்டினலோ, அஷ்டகந்தத்தினலோ, கட்டி உறைப்பித்து நிறுத்துகிறதைப் பிராணப் பிரதிஷ்டை என்று சொல்லுவதற்கு இடம் இல்லை. அது எவ்விதமென்றால் இதோபாருங்கள் இந்த நிற்கின்ற கதவு நிலையை யார் உண்டாக்கியது ?

சி : ஆசாரி.

கு : அதை அவ்விடத்தில் ஸ்தாபித்தது யார் ?

சி : கட்டட வேலைசெய்கிற கொல்லத்துக்காரன்.

கு : அதை எந்தப்பிரகாரம் ஸ்தாபிப்பது ?

சி : அந்த கதவு நிலையைவைத்து செங்கல், சுண்ணும்பு, காரை இவைகளால் கட்டி ஸ்தாபிக்கவேண்டும்.

கு : ஆனல் இந்தக்காணப்பட்ட கதவு நிலை ஓர் ஆசாரியால் உண்டாக்கப்பட்டு அதை கட்டட வேலைசெய்கிற கொல்லத்துக்காரன் கட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரகாரமேதான் பிம்பங்களைச்செய்யத் தெரிந்தவனல் செய்யப்பட்டும் அதைக் கெட்டிப்படுத்தி ஸ்தாபிக்கத் தெரிந்தவனல் அஷ்டகந்தம் சிமின்டு முதலானதினல் கட்டிப்பித்து ஸ்தாபிக்கப்பட்டுமிருக்கிறது. இவ்விதமாய் ஸ்தாபித்திருக்கின்ற பொம்மைகளைத்தான் ஈஸ்வரன் என்று சொல்லி நாம் சென்று பஜிக்கின்றோம். அது எவ்விதமென்றால் நம்முடை ஒரு கை விரல்களைச் சேர்த்து குழியாகப்பிடித்து அதில் நிரையப் பாயாசத்தைவிட்டுப் பிடித்தால் அந்தப்பாயாசத்திலிருந்து விரல் சந்துகள் ஐந்தின் வழியாய் பின்புரமாக முழங்கைவரை நீர் ஒழுகுகிறது. அப்படி ஒழுகும்

நீரை நக்கவேண்டி ஆசையுடன் கையைத்திருப்பி புறங்கையில் ஒழுகுகிற நீரை நக்கும்போது கையிலிருக்கிற பாயசம் கவிழ்ந்துபோய் இல்லாமலாகிப் போகிறதல்லவா? தவிர மறுபடி நக்குகிறதற்கு புறங்கையில் நீர் இல்லாதுபோகிறது. ஏனெனில் பாயசத்திலேயிருந்து தான் அந்த நீர் ஒழுகிக்கொண்டிருந்தது. அந்த நீரை மோஹித்து பாயாசத்தை பாராமல் புறங்கையிலே ஒழுகும் நீரை நக்கியபோது, நீர் உத்பவித்த பாயசம் போய்விட்டது. நீரில் ஆசைவைத்ததின் நிமித்தம் பாயசத்தினுடைய ருசியை அறியவில்லை. நீர் உத்பவித்த பாயசத்தைத்தானே முதலில் புசித்தானென்றால் நீர் ஒழுகவும் பாயசம் கையிலிருந்து இல்லாமற்போகவும் இடமில்லை. இதே பிரகாரம் தான் அவனவனில் இருக்கின்ற ஈஸ்வரனை உபேக்ஷித்து பிரதிஷ்டையாகிய பொம்மைதான் ஈஸ்வரனென்று சங்கல்பித்து நம்மிலிருக்கின்ற ஈஸ்வர சக்தியை ஐந்து துவாரமாகிய பஞ்சேந்திரியங்களின் வழியாக வெளியினுள் ஒழுகவிட்டு நசித்துப் போகின்றோம். அது மிகவும் தப்பிதம், பின் எவ்விதமென்றால் நம்முடைய இருதய ஸ்தானமாகிய புருவ மத்தியத்தில் இருக்கின்ற ஈஸ்வரனிலிருந்துதான் சக்தி ஒழுகிக்கொண்டிருக்கின்றது. அவ்விதம் ஒழுகிக்கொண்டிருக்கின்ற சக்தியின் உத்பவ ஸ்தானத்தை அறியாமல் அச்சக்தியை மோஹித்து அதில் பிரமித்து முன்சொன்ன ஈஸ்வரனை இல்லாதாக போக்குறோம். ஈஸ்வரனிலிருந்து ஒழுகிக் கொண்டிருக்கின்ற சக்தியை மோஹித்ததனால் ஈஸ்வரனின் நிலைமையை அறிய இடமில்லாமற் போயிற்று. சக்தியுத்பவித்த ஈஸ்வரனைச் சேவித்தானென்றால், தன்னிடத்திலிருந்து சக்தி யொழுகவும் ஈஸ்வரன் இல்லாமற் போகவும் இடமில்லை. பிராணப் பிரதிஷ்டை என்பது மேற் சொன்னவிதம் ஈஸ்வர சக்தியை ஒழுகவிடாமல் உத்பவஸ்தானமாயிருக்கின்ற புருவ மத்தியில் அசையாமல் நிறுத்துவது தான். இதைத்தான் பஞ்சப் பிராணப் பிரதிஷ்டையென்று சொல்லுவது. மேற்சொன்னவிதம் பிரதிஷ்டை செய்துள்ளதுதான் க்ஷேத்ரம். அது காத்ர க்ஷேத்ரம். அந்த க்ஷேத்ரத்திற்கு ஒன்பது வாயல்கள் உண்டு. உலோகங்கள் பாதாள அஞ்சனம், கற்கள், மரங்கள் முதலியவற்றால் பொம்மையை உண்டாக்கி, சீமைச்சுண்ணும்பினாலோ, சிமின்டினாலோ, அஷ்டகந்தத்தினாலோ கட்டி உறைப்பித்து அதைப் பிராமணப் பிரதிஷ்டையாகுமென்றும் பெயரும் சொல்லி யாதொரு விபரமும் இல்லாமலும், தன்னைத்தான் அறியாமலும், தனது சக்தியினால் அவ்விடம் பல சங்கல்பங்களைச் செய்தும் மேல்சொன்ன சக்தியைத் தெரியாமல் அதோகதியாக்கி நசிப்பிக்கின்றதல்லாமல் உலகினர் க்ஷேத்ரோபவாசம் செய்து வருகிறதில்லை. க்ஷேத்ரோபவாசமென்பது க்ஷேத்ரத்திற்குள் உபவசிக்குக வென்றாகும். க்ஷேத்ரம் என்பது

காத்ரக்ஷேத்ரமாகும். உபவசிக்குக யென்பது கூடியிருக்குக அல்லது சேர்ந்திருக்குக என்ருகும். அதாவது ஜீவேஸ்வர ஐக்யம், இந்த விதம் முன்சொன்ன காத்ரக்ஷேத்ரத்தில் பிரதிஷ்ட ஸ்தலமாகிய புருவ மத்தியில் ஜீவ ஈஸ்வரோரைக்யமாகிய அவஸ்தைதான் க்ஷேத்ரோபவாசமென்று சொல்லுவது.

சி: சுவாமின்! காத்ரக்ஷேத்ரமே, க்ஷேத்ரமென்றும், அதற்கு ஒன்பது வாசல்கள் உண்டென்றும் சொன்னீர்களே அந்த வாசல்கள் எவை?

கு: அதாவது நவத்துவாரங்கள்.

சி: அப்பொழுது இந்த ஜடம் முழுவதும் க்ஷேத்ரம்தானு? ஜடத்திற்கல்லவா நவத்துவாரங்களிருக்கின்றன.

கு: ஜடம் முழுதும் க்ஷேத்ரமல்ல. ஜடத்தில் ஒரு பாகம் மாத்திரமே க்ஷேத்ரம், ஜடத்திலுள்ள எல்லாத்துவாரங்களும் நவத்துவாரத்தில் அடங்கினதல்ல. நவத்துவாரங்களென்பது, க்ஷேத்ர துவாரங்கள் மாத்திரமே.

சி: சுவாமின்! ஜடத்தில் எந்தப்பாகம் க்ஷேத்ரம்?

கு: சிரசை மாத்திரம் க்ஷேத்ரமென்று சொல்லக்கூடும். அது ஏனெனில், இதோ பாரும் பெரிய மதிற்சுவர்களால் சூழப்பட்ட ஒரு இடம். இந்த இடத்தில் வடகிழக்கு மூலேயில் ஒரு கோவில் இருக்கிறது. மற்ற பாகங்கள் அதைச் சேர்ந்த இடம். அதைப்போல் இந்த ஜடத்தை உலகமாகவும் ஜடத்தின் வடபாகமாகிய மேற்பாகம் காணுகிற சிரசே கோவிலாகவும் கொள்ளவேண்டும். அந்தக் கோவிலாகிய சிரசில்தான் நவத்துவாரங்கள் இருக்கின்றன.

சி: சுவாமின்! நவத்துவாரங்களும் சிரசிலேதான் என்று எப்படிச் சொல்லமுடியும்?

கு: நவத்துவாரங்கள் எவைகளென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: நவத்துவாரம் என்பது இரண்டு செவிகள், இரண்டு கண்கள், மூக்கின் இரண்டு துவாரங்கள், ஒரு வாய், மூத்திர தாரையான ஒரு லிங்கம், மலதாரையான ஒரு குதம் ஆக ஒன்பது துவாரமென்று நாம் கருதியிருக்கின்ருேம்.

கு: நீர் நவத்துவாரங்களில் லிங்கமென்பது மூத்திர துவாரமென்றும், குதம் என்பது மலத்துவாரமென்றும் சொன்னீரல்லவா? நவத்துவாரங்களில் இரண்டு துவாரங்கள் மாத்திரம் சிரசிலிருந்து வேறுபட்டு ஜடத்தின் கீழ்பாகத்தும் மற்ற ஏழு துவாரங்கள் சிரசிலும் ஏற்படுவதற்கிடமில்லே. தவிர லிங்கமென்பது மிகவும் சிரேஷ்ட

மானது. அதை மூத்திரத்துவாரமாக கருதியிருக்கின்றது மிகவும் தப்பிதம். லிங்கமென்பது சிவலிங்கம் அது மூத்திர துவாரமல்ல. ஸ்திரீ புருஷர் என்று சொல்லிவருகிற எல்லாச் சிருஷ்டிகட்கும் அது இருக்கின்றது. அந்த லிங்கம் கோவிலில் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளது. அதாவது சிரசில்தான் ஒன்பது வாசலுள்ள கோவில் நமது சிரசு. அதாவது முன் சொன்னபிரகாரம் மதில் சுவர்களால் தடுக்கப்பட்டுள்ள இடத்தின் ஈசான்ய மூலையில் கோவில் இருக்கிறது. அக்கோவிலுக்குள் போகிறதற்கு நான்கு பாகங்களிலும் கோபுரம் உண்டு அந்தக் கோபுரவாசலைக் கடந்து சென்றால் நாலம்பல-சிற்றம்பல-த்திற்குப் போகலாம். அந்த நாலம்பலத்திற்கு மூன்று வாசல்கள் உண்டு. நாலம்பலத்தின் வாசலைக் கடந்து சென்றால், ஸ்திரீ கோவில் என்கிற மூலஸ்தானத்திற்கு முன்னிருக்கும் நமஸ்கார மண்டபத்தைக் காணலாம். அதற்கு நேரே மூலஸ்தானமிருக்கிறது. மூலஸ்தானத்திற்கு இரண்டு வாசல்கள் உண்டு. நமஸ்கார மண்டபத்திலிருந்து அந்த வாசலைக்கடந்து சென்றால் மூலஸ்தானமாகிய பிரதிஷ்டைத்தலம் காணலாம். இவ்விதந்தான் நமதுள்ள காதும், கண்ணும் கோபுர வாசல்கள். அவைகளைக் கடந்து சென்றால் சிற்றம்பலமாகிய மேல் வாய்க்குப் போகலாம். சிற்றம்பலம் என்பதற்குக் காரணம் வாயைக் கம்மென்று மூடிக்கொண்டிருக்கும்போது முன்சொன்ன ஸ்தலத்தில் வாயு நிறைந்து சுழன்றுக்கொண்டிருப்பதால், அச்சிற்றம்பலத்திற்கு மூன்று வாயில்கள் உண்டு. அவைகள் மூக்கின் இரண்டு துவாரங்களும் வாயும் அச்சிற்றம்பலத்தைக் கடந்து சென்றால் அவ்விடத்தில் மூலஸ்தானத்தின் முன்னிருக்கும் நமஸ்கார மண்டபமாகிய உண்ணுக்கு உண்டு. அந்த உண்ணுக்கிலிருந்து நேரே மேல்பாகமாய்க் கதவுகளாகிய இரண்டு துவாரங்களும் உண்டு. அந்த துவாரங்களின் வழியாய் ஜீவன் கடந்துபோனல் பிரதிஷ்டையாயிருக்கின்ற மூலஸ்தானமாகிய சிவலிங்கம் காணப்படும். அந்த இரண்டு துவாரங்களைத் தான் குதம் என்று சொல்லுகிறது. அந்தக் குதத்திலிருந்துதான் சப்தம் உண்டாகின்றது. அது எவ்விதமென்றால் நமஸ்கார மண்டபத்தில் தூக்கியிருக்கிற மணியை மூலஸ்தானத்திற்குள் போகிறபோதும் வருகிறபோதும் அடிப்பதுபோல் நமஸ்கார மண்டபமாகிய உண்ணுக்கிலிருந்து மூலஸ்தானத்திற்கு ஜீவசக்தியாகிய வாயு கடக்கும் போது உள்ளில் அடங்கின சப்தமும் வெழியேவரும்போது பேச்சாகிய சப்தமும் உண்டாகின்றது. அதனல்தான் குதம் என்பது கோவினைத் தானம் செய்கிறது என்று சொல்லுகிறது. கோ, என்றால் சப்தம் அந்த சப்தம் உண்டாகிறதற்கு முன்சொன்ன உண்ணுக்கிலிருந்து மேல்பாகத்தில் இரண்டு துவாரம் இருக்கின்றது, அந்த துவாரங்களும் மூக்கின் துவாரங்களும் அன்னியோன்னியம் சேர்கின்றது.

அந்த ஸ்தலம் புருவ மத்தியத்திற்கு சற்று கீழாக விருக்கின்றது. அவ்விடமிருந்துதான் ஆகாச அம்சமாகிய சப்தம் உண்டாகிறது. அதற்குத் திருஷ்டாந்தம் :—மூக்கில்லாதவர்கட்குத் தெளிவாய்ப் பேச முடியாது. காரணம் முன்சொன்ன துவாரங்களிலிருந்து சப்தம் உத்பவிக்கும்போது வாயுவிற்குத் தடஸ்தம் இல்லாமல் ஒன்றாய் வெளியினுள் போகிறது. அந்த மூக்குண்டாகும்போது சப்தமாகிய வாயுவிற்கு தடையுண்டாகி அடங்கி வியக்தமாய்ப் பேச்சுண்டாகிறது. அஃதெப்படி எனில் கிராமபோன் பாட்டுக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா ? அந்த கிராமபோனிலிருந்து சப்தம் உத்பவிப்பது எவ்விதமென்றால், பெட்டியின் மேல் பாட்டுகளடங்கிய ஒரு பிளேட் (தட்டம்) வைத்து அதில் ஒரு நீடில் (ஊசியை) சப்தம் உண்டாக்குகின்ற பெட்டிமேலுள்ள இயந்திரத்தின்மேல் வைத்து பிடிப்பித்து அதை பிளேட்டுடன் தொடுப்பித்துவைத்து அந்தப்பெட்டியினுடைய சாவியைத் திருப்பினால் பிளேட் சுற்றிச் சப்தம் உண்டாகின்றது. ஆனால் அதிலிருந்து உத்பவிக்கின்ற பாட்டின் தொனி தெளிவாய்த் தெரிகிறதில்லை. காரணம், அந்தச் சப்தம் உத்பவிக்கும்படியான ஸ்தலத்து ஒரு குழாய் (ஹாரன்) வைக்கிறதுண்டு அந்தக் குழலை வைக்காததனால் சப்தம் உத்பவிக்கும் இடத்தில் அடக்கமில்லாமல் அதிலிருந்து உத்பவிக்கும் வாயு வெளியினுள் வியாபித்துப் போகிறது. அக்குழலை வைத்தபோது அவ்விடமிருந்து உத்பவிக்கின்ற வாயுவோடு சப்தம் அடங்கி குழாய் மார்க்கமாய் வெளியினுள் வருகின்றது. அப்பொழுது அதனில் உண்டாகின்ற பாட்டுகள் சிறு குழந்தைகள்கூட தெரியத்தக்க விதம் தெளிவாய் உண்டாகின்றது. இந்தப் பிரகாரந்தான் முன்சொன்ன ஸ்தலத்திலிருந்து குழலாயிருக்கின்ற மூக்கினது உதவியால் தெளிவாய் சப்தம் உண்டாகின்றது. அதினால் உண்ணாக்கிலிருந்து மேல்பக்கமாயிருக்கின்ற இரண்டு துவாரங்களுக்குத்தான் குதம் என்று சொல்லுகிறது. உள்ளிலுள்ள இந்த இரண்டு துவாரங்கள் வெளியினுள்ளுள்ள காது இரண்டு, கண் இரண்டு, மூக்கின் துவாரம் இரண்டு, வாய் ஒன்று ஆக துவாரங்கள் ஒன்பதாகும். இவ்விதம் ஒன்பது வாசலுள்ள கோயில்தான் சிரசு. அந்தக் கோவிலில் பிரதிஷ்டித்துள்ளதுதான் லிங்கம். அதைதான் சிவலிங்கமென்று சொல்லவேண்டும். அந்த சிவலிங்கத்தினுடைய மூலத்தில் சுக்லம் இருக்கிறது. அந்த லிங்கம் புருவ மத்தியத்திலிருக்கிறது. லிங்கம் மூத்திர துவாரமல்ல. லிங்கமானது மூத்திர துவாரமானால், மூத்திரதுவாரத்தின் மூலத்திற்றான் சுக்லம் இருக்கவேண்டும். எவ்விதம் யோசித்தாலும் மூத்திரதுவாரத்தினுடைய மூலத்தில் சுக்லம் இருக்க இடமில்லை. முன்சொன்ன லிங்க மூலத்திற்றான் சுக்லம் என்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களும் இருக்கின்

றன. அதுவுமல்லாமல் புணர்ச்சி சமயத்தில் சுக்லம் இலகுகின்றத னும் அறியலாம். அந்த சங்கதியைப்பற்றி நான்காம் அத்தியாயத்தில் விவரித்திருக்கின்றது. தவிர, இராமேஸ்வர பிரதிஷ்டை என்று சொல்னும் ஒரு படம் உண்டு. அந்த படத்தில் ஒரு சிவலிங்கமும், அச்சிவலிங்கம் பாதாளத்துக்குத் தாழ்ந்து போவதாகவும், அப்படி போகாதிருப்பதற்காக பார்வதி அதைக்கட்டி தாவிப்பிடித்திருப்பதாகவும் அதில் காணப்படுகிறது அது உண்மையாகும். நம்முடைய புருவ மத்தியில் பிரதிஷ்டித்த சிவலிங்கம் கீழ்பட்டு உள்ளாகிய பாதாளத்தில் சப்த ரூபமாய் தகித்து எரிந்து நசித்துப்போகிறது. அவ்விதம் போகாமல் பிடித்து நிறுத்துவது குண்டலினி சக்தியாகும். அந்த குண்டலினி சக்திதான் முன்சொன்ன பார்வதி, மேற்சொன்ன சித்திரப்படமாகிய சிவலிங்கத்தின் மூலத்தில் வெளுத்த வர்ணத்தில் நாகர பாஷையில் ஓம். என்கிற ஒரு அக்ஷரம் எழுதியிருக்கிறது அதுவும் உண்மைதான். அதாவது ஓம் என்பது பிரம்மம், அது சுக்லம். அந்த பிரம்ம சொரூபமாயிருக்கின்ற சுக்லம் முன்சொன்ன குண்டலினி சக்தியால் கட்டப்பட்டு சிவலிங்கத்தின் மூலத்தில் இருக்கின்றது, அது புருவ மத்தியம். இவ்விதம் கோவிலினுடைய ஸ்திதியும் பிரதிஷ்டையும் இந்தவிதமுள்ள காத்ரக்ஷேத்ரத்தின் (கோவிலின்) நிலைமையை அறியாமல் ஏதேதோ சில இடங்களில் பல கட்டடங்கள் கட்டி அவைகளில் உலோகங்கள், சிலைகள், மரங்கள் முதலியவை கொண்டு உண்டாக்கிய பொம்மைகளை நட்டு அவைகளை ஈஸ்வரன் என்றும் அதுதான் கோவிலென்றும் சொல்லி பஜித்து தானும் தன்னிலிருக்கின்ற க்ஷேத்திரத்தினுள்ள ஜீவசக்தியை வெளியினுள் விட்டு மற்றொன்றிலே சங்கல்பித்து அதோகதியாக ஜனங்கள் நசித்துப் போகின்றதல்லாமல் க்ஷேத்ரோபவாசம் ஒருக்காலும் அவருக்கு சித்திக்கிறதில்லை. க்ஷேத்ரோபவாசம் சித்திக்கவேண்டுமென்றால் முன்சொன்ன காத்ரக்ஷேத்ரத்தில் ஜீவனை உபவசிக்கவேண்டும் அப்பொழுது க்ஷேத்ரோபவாசம் சித்திக்கும். அப்பிரகாரம் யாவனொருவன் செய்கின்றானோ அவனுக்கு ஜீவன் ஊர்த்துவகதியாகி முன்சொன்ன சிவலிங்கத்தில் சென்று சேர்ந்து எல்லா அறிவும் சித்தித்து தன்னில் லயித்து தானும் கைவல்யத்தைப் பிராபிக்கும்.

சி: சுவாமி! ஸ்திரீ புருஷர்கள் முதலான சிருஷ்டிகளுக்கெல்லாம் லிங்கம் உண்டென்று சொன்னீரல்லவா? ஸ்திரீகளுக்கு லிங்கம் என்று சொல்வதில்லை. உபஸ்தம் என்றுதான் சொல்லுவது. இதன் ஸ்திதி என்ன?

கு: ஒஹோ! எல்லா சிருஷ்டிகளுக்கும் உபஸ்தமும் லிங்கமும் உண்டு. புருஷர் என்று சொல்லுகிறவர்களுக்கு மாத்திரமே

லிங்கமும் ஸ்திரீ என்று சொல்லுகிறவர்களுக்கு மாத்திரமே உபஸ்தமும் இருக்கிறது உண்டென்று கருதவேண்டாம். ஏனென்றால் நவத்துவாரங்களில் ஒரு துவாரம் லிங்கமென்று நீர்தானே முன் சொன்னீர். அதை கவனிக்கின் ஸ்திரீகளுக்கும் லிங்கமுண்டென்று காணுகிறது. அதாவது வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்கிற ஐந்து இந்திரியங்களில் ஒரு இந்திரியம் உபஸ்தமென்றும் முன்னமே நீர் சொல்லி இருக்கிறீர். அதை கவனிக்கின் அது புருஷர் என்று சொல்லி வருபவருக்கும் உண்டென்று வருகிறது. அதனால் லிங்கம், உபஸ்தம் என்கிற இரண்டும் எல்லா சிருஷ்டிகளுக்கும் பொதுவானதாகும். லிங்கம் என்பது முன்சொன்ன பிரகாரமானதும் உபஸ்தம் என்பது உத்பவஸ்தானமுமாகும். அதுதான் சக்தி யோனி. அந்த சக்தியோனியாயிருக்கின்ற பிரம்மரந்திரத்திலிருந்தே தான் உலகத்தினுடைய உத்பவம். சக்தி என்பது ஸ்திரீ, அதனாற்றான் ஸ்திரீயோனி என்று சொல்லக்காரணம். ஜீவன் என்பது புருஷன். அந்த ஜீவன் எப்பொழுது புரமாகிய உடம்புக்குள் தன்னிடத்தில் அடங்குகின்றதோ அப்பொழுது அது புருஷனாகிறது. எப்போது அது புருஷனாகிறதோ அப்போது மாத்திரமே முன்சொன்ன சிவலிங்கமாகிய தன்னுடைய லிங்கத்தை அறியப்படுகிறதுமுண்டு. ஆகையினாற்றான் புருஷலிங்கமென்று பெயராயிற்று. யோனியின் ஸ்திதியும் லிங்கத்தின் ஸ்திதியும் இதுவாகும். இந்தவகை யாதொன்றும் அறியாமல் மூத்திரதுவாரமாயிருக்கின்ற குழாயை யோனியென்றும், லிங்கமென்றும், மலத்துவாரமாயிருக்கின்ற கக்கூசை குதம் என்றும் உலகத்தில் கிரகித்து மூடமதிகளாய் ஜனங்கள் இருக்கின்றார்கள். இவ்விதக் குருட்டு நம்பிக்கை உண்டாகக் காரணம் அநுபோகஸ்தர்கள் தங்களுடைய அநுபவத்தை எழுதிவைத்திருக்கின்றதனை வாசித்து தப்பிதமாக கிரகித்து நான் அநுபோகஸ்தன் எனக்கு எல்லாம் தெரியும் என்று நடித்து, அநுபவம் இன்னதென்றறியாமல் உலகில் சாஸ்திரம் முதலியதுகளுடைய சரியான அர்த்தத்தை கிரகிக்காமல் எதிராக கிரகித்து உலகவாசிகளுக்கும் சொல்லி பழக்கிவிப்பதனாற்றான் இவ்விதம் உலகவாசிகள் இவர் அநேக சாஸ்திரங்கள் முதலியவற்றைப் படித்தவரென்றும் இவர் சொல்லுவதும் சரியாகத்தான் இருக்கும் என்றும் கருதி யாதொரு விபரமுமில்லாமல் போக ஏற்பட்டது. இந்தப்பிரகாரம் தப்பிதமாக கருதலின் நிமித்தம் யதார்த்தம் வெளிப்படாது. ஆகையால் மூடமதியில் ஆழ்ந்து அதோகதியாகி ஜனங்கள் நசித்துப்போகின்றார்கள்.

பதினாறும் அத்தியாயம் முற்றிற்று.

# 17-ம் அத்தியாயம்.

சி: சுவாமி! இதுவரைக்கும் சொல்லிவந்ததில் யோகங்களைப் பற்றி யாதொன்றும் கற்பித்ததில்லையல்லவா. உலகத்தார் அநேக சாஸ்திரங்களைப்படித்து அதில் பலவித யோகங்களுண்டென்று கருதியிருக்கின்றார்கள் இந்த விஷயத்தைப் பற்றியும் தெளிவாகச் சொல்லித்தரவேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன்.

கு: பல யோகங்கள் என்பது என்ன?

சி: கர்மயோகம், அடயோகம், ராஜயோகம் முதலிய அஷ்டாங்க யோகங்கள்.

கு: யோகமென்பதின் பொருள் என்ன?

சி: யோகம் என்பது சேர்க்கை.

கு: சேரவேண்டியது என்ன?

சி: ஜீவனும், ஈஸ்வரனும்.

கு: நமக்கு எத்தனை ஜீவனும் ஈஸ்வரனுமுண்டு?

சி: ஒரு ஜீவனும், ஒரு ஈஸ்வரனும் உண்டு.

கு: அப்படி ஒன்றாயிருக்கிற ஜீவனும் ஈஸ்வரனும் சேருவதற்கு இத்தனை அதிகமான யோகங்கள் உண்டாகிறதற்கு இடமில்லை. எதனாலென்றால், யோகம் என்பது ஒன்றே. அது ஜீவேசுவர ஐக்கியம். அதற்கு பல ஆசாரியர்கள் காரண வசத்தால் பல பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். தவிர அநேக யோகங்களில்லை. எல்லாமொன்றுதான். எப்படியென்றால் கர்மம் என்பது ஜீவசக்தியாயிருக்கிற வாயுவென்று எட்டாம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கின்றீர் அல்லவா, அந்த வாயுவினுடைய உத்பவஸ்தானமாகிய ஆகாசமான பிரம்மரந்திரத்தில் அந்த ஜீவசக்தியாகிய வாயுவை சேர்ப்பதற்கு கர்மயோகமென்று பெயர். ஹடயோகமென்பது பலாத்காரமான யோகமென்று உலகம் கிரகித்திருக்கின்றது. அந்தக் கருதல் தப்பிதம். ஏனென்றால் "ஹ" என்பது பிரகிருதி, அதாவது மாயை "ட" என்பது அடைக்கிறது. எதையென்றால் தன்னிலிருந்து பிரகிருதியாக வெளியினுள் வியாபித்துக் கொண்டிருக்கிற பிரகாசத்தை, அந்த

பிரகிருதியிலிருந்துதான் நமக்குப் பிரகாசிக்கின்றது. அந்தப் பிரகிருதிதான் சூரியனாயிருக்கின்ற பிராணன். அந்த பிராணனுடைய வெளியிலுள்ள வியாபகத்வம்தான் மனமாகிய சந்திரன். அப்படியுள்ள பிராணனாயிருக்கின்ற சூரியனையும் மனதாகின்ற சந்திரனையும் ஐக்கியமாக்குவதுதான் ஹட யோகம். சூரிய சந்திரர்களை ஐக்கியப்படுத்துவது என்று உலகம் சொல்லிவருகிறது. அது உண்மையே சூரியனும் சந்திரனும் மேற்சொன்ன பிராணனும் மனதுமாகும்.

ராஜயோகமென்பது ராஜ + யோகம் என்றாகும். இதில் ராஜ என்பது ரஜோகுணமாய் விஷ்ணுவாயிருக்கின்ற மனம். யோகமென்பது சேர்க்கை. மனசைப்பற்றி ஒன்பதாம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்பிரகாரமுள்ள மனசு அதனுடைய உத்பவஸ்தானமாகிய புருவமத்தியத்தில் அசையாமல் நிற்கிற ஸ்திதிக்குதான் ராஜயோகமென்று பெயர். இந்தவிதமாகும் யோகங்களினுடைய ஸ்திதி. ஆனால் எட்டு அவஸ்தைகள் எப்பொழுது ஒன்றாகச் சேருகின்றனவோ அப்பொழுதுதான் யோகம். அதென்னவென்றால் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸரியம், டம்பம், ஆசூயை (பொறாமை) ஆகிய இவைகள்தான் எட்டு அவஸ்தைகள். இவைகளை முன்சொன்ன பிரகிருதியாகிய சலனத்திலிருந்து உத்பவிக்கின்றன. அந்தச் சலனம் வெளியினுள் சலிக்காமல் எப்பொழுது தன்னில் லயமாகின்றதோ, அந்த சந்தர்ப்பத்தில் மேற்சொன்ன எட்டு விருத்திகளும் அவைகளுடைய உத்பவஸ்தானமாகிய பிரகிருதியில் லயித்து அன்யத்துவமில்லாமல் (வேறுபடாமல்) தானாக ஆகிறது அதற்குத்தான் அஷ்டாங்க யோகமென்று பெயர். தவிர ஜீவனும் ஈஸ்வரனும் என்பது இரண்டல்ல, ஒன்றுதான். அதெப்படியென்றால், ஜீவன் என்பது பரமாத்மாவாகிய மனம். அந்த மனமாகிய பிம்பத்தில் பிரதிபிம்பித்துக் காணப்படுகிற எல்லாம் நமது ஜீவனேயாம். அது எவ்விதமென்றால் ஒரு முகக்கண்ணாடியில் நாம் பார்க்கும்போது நம்மை அந்தக் கண்ணாடியில் பிரதிபிம்பித்துக் காணுகிறோம். இதேவிதமாகத்தான் மனசாகின்ற கண்ணாடியில் பார்க்கும்போது சங்கற்பத்தால் நம்மை பிரதிபிம்பித்துக் காணுகிறோம். அப்பிரதி பிம்பத்தைக் காணுகிறது நான் என்கிற அகங்காரம். எப்பொழுது நான் என்றுள்ள அகங்காரம் நசிக்கின்றதோ, அப்பொழுதே யாதொன்றும் காணுகிறதில்லை. இந்த அகங்காரத்தினாற்றான் ஜீவனும் ஈஸ்வரனும் என்றுள்ள வித்தியாசம் உண்டானது. அது எப்படியெனில் ஒரு ஆற்றில் ஓடுகிற நீரில் ஒரு தடியினுடைய யாதேனும் ஒரு பாகத்தை தாழ்த்திப் பிடித்தால் தண்ணீர் தடியின் இரண்டு பாகங்களிலும் போகின்றது. ஆனால் ஜலம் இரண்டாக

வில்லை ஜலப்பாய்ச்சலிற்கே பின்னம் வந்து இரண்டு வழியாகப்போ கிறதென்று நமக்குத் தோன்றுகிறது. அந்தத் தடியை எடுத்தால் ஜலப்பாய்ச்சலின் பின்னத்வம் தீர்ந்து ஒன்றாய்ப்பாய்கிறது. இந்தப் பிரகாரம்தான் ஜீவனுடைய வெளியிலுள்ள பாய்ச்சலில் மனமானது நான் என்கிற அகங்காரமாயிருக்கின்ற தடியைப்பிடித்தபோது ஜீவனென்றும், ஈஸ்வரனென்றும், இரண்டு அவஸ்தைகளை அடைகிறது. எப்பொழுது அகங்காரமாயிருக்கின்ற தடியை எடுக்கின்றதோ அப்பொழுது இரண்டில்லை ஜீவ ஈஸ்வரரோரைக்கியமாகின்றது. ஆனால் உலகம் முழுவதும் இருக்கின்றது நான் என்றுள்ள ஒரு முடியின் மேல்தான் அதாவது ஒரு சரட்டினால் சங்கிலி கோர்க்கும் பிரகாரம் முடிந்து முடிந்து கடைசியில் அச்சரட்டின் மறுதலைப்பில் ஒருகட்டு கட்டியிழுத்தால் அந்த முடிச்சுகள் அவிழ்ந்து போகிறதில்லை. ஆனால் கடைசியாய்க் கட்டின் ஒரே கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து முன்போல் ஒரே சரடாகிறது. இதே பிரகாரம்தான் கர்மமாயிருக்கின்ற வாயுவினால் விசாராதிகளாய் கட்டுகளை முடிந்து முடிந்து கடைசியில் நான் என்கிற ஒரு கட்டுக் கட்டி இழுத்துக்கொண்டிருக்கிறது. அதை இழுக்கிறவரையில் வலுவாகிறதேயொழிய அழிந்துபோகிறதில்லை. அழியவேண்டுமானால் முன்சொன்ன சரட்டினுடைய கடைசி கட்டை அவிழ்த்து இழுத்த பிரகாரம் நான் என்கிற அகங்காரமாகிய ஒரு கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லாக்கட்டுகளும் அவிழ்ந்து ஒரே வஸ்துவாக ஆகின்றது. அந்த வஸ்து சலனமில்லாமல் தன் உள்ளில் லயிக்கும்போது தானாய்த் தன்மயமாகிறது. அப்பொழுதுதான் எல்லா யோகங்களும் அதிலடங்குகின்றது. இதல்லாமல் யோகங்கள் அநேகமுண்டென்று கருதி நானாபிரகாரத்தில் ஒவ்வொரு தொழில் செய்வதால் யோகமாகிறதில்லை. ஆசாரியர்கள் பலபெயர்களும் சொன்னது ஒரே யோகத்திற்குத்தான். அது எவ்விதமென்றால் ஒரு வஸ்துவிற்குப் பல பெயர்கள் சொல்லுவதுண்டு, அதாவது, பாஷை வித்தியாசத்தால் அதல்லாமல் யோகம் அநேகம் இல்லை. இந்தப்பிரகாரம்தான் யோகத்திற்கும் ஒவ்வொரு காரணத்தால் ஒவ்வொரு ஆசாரியர்கள் யுக்திக்கநுசரித்து பல பெயர்களைச் சொன்னார்கள். அதனால் தானாயிருக்கின்ற சக்தி வெளியினுள் வியாபித்துச் சலித்து பிரமித்துக்கொண்டிருக்கிற சக்தியை எப்பொழுது வெளியினுள் சலிக்காமல் தன்னில் லயிக்கின்றதோ அப்பொழுதே யோகமாகும். இவ்விதமாகும் யோகத்தினுடைய ஸ்திதி.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

# 18-ம் அத்தியாயம்.

சி: சுவாமி! பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்றிப்படி நான்கு வருணத்தார்கள் இருக்கிறார்களென்றும், அதில் சூத்திரர்களில், அநேக ஜாதிகளாகக் கண்டுவருகிறதே அதனுடைய ஸ்திதி என்னவென்றும் கேட்க அபேக்ஷிக்கிறேன்.

கு: இவைகளில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவர் யார் யார்?

சி: பிராமணர் என்பவர் நம்பூதரி, எம்பிரான், பட்டர்கள் இவர்கள். நம்பூதரிகளை மலையாளப் பிராமணர்களென்றும், எம்பிரான்களை கர்னாடகப் பிராமணர்களென்றும், பட்டர்களை பரதேசப் பிராமணர்கள் (தமிழ் பிராமணர்) என்றும் சொல்லுகிறார்கள். க்ஷத்ரியர் என்பவர் கொச்சி, கோட்டையம் முதலிய இடங்களிலுள்ள இராஜாக்கள். வைசியர் என்பவர் இந்துஸ்தானிக்காரராகிய சேட்டுமார்கள். தமிழ்தேசத்துகாரராகிய செட்டிமார்கள் முதலிய வியாபாரக்காரர்கள். சூத்திரர் என்பவர் மேற்சொல்லியவர்கள்போக மற்றெல்லா ஜாதிக்காரர்கள்.

கு: பிராமணரை நீர் தொட்டுக்காண்பித்துத்தர முடியுமா?

சி: முடியும்.

கு: யார்?

சி: முன்சொன்ன நம்பூதிரி முதலியவர்கள்.

கு: அவர்களைப் பிராமணர்களென்று எவ்விதம் தீர்மானித்தீர்?

சி: அவர்கட்குப் பூணூல் உள்ளதனால்.

கு: பூணூல் தரித்தவர்களைப் பிராமணர்கள் என்று சொல்லுவது பிசகு. ஏனெனில், தட்டான், செட்டி, செக்கார், அல்லது (வாணியர்) சாலியர் என்று சொல்லப்பட்டவர்கட்கும் பூணூல் இருக்கிறது. இவர்களெல்லாம் பிராமணர்கள் ஆவார்களா?

சி: அவர்களெல்லாம் பிராமணர்களாவதில்லை.

கு: பூணூல் தரித்தவர்களை பிராமணர் என்றல்லவா நீர் சொல்லுகிறீர்?

சி: பூணூல் தரித்ததனால் மட்டுமல்ல, தொழில்களைக் கொண்டும்.

கு: பிராமணர்களின் விருத்தி என்னென்ன?

சி: வேதபாராயணம், க்ஷேத்ராதிகளில் பூஜை முதலியவைகள்.

கு: க்ஷத்ரியர்களின் விருத்தி என்ன?

சி: துஷ்டநிக்கிரகம் செய்து சிஷ்டர்களைப் பரிபாலிப்பது.

கு: வைசியர்களுடைய விருத்தி என்ன?

சி: கோரக்ஷை, (பசுவைக்காப்பாற்றல்) கிருஷி (வேளாண்மை) வாணிபம் (வியாபாரம்) இவைகள்.

கு: சூத்திரருக்கோ?

சி: பிராமணர் பாதசேவையும், அடிமைப் பிரவிருத்தித் தொழிலும்.

கு: ஓஹோ! அவ்விதம் என்றால் பறையன் என்று அபிமானிக்கப்பட்டவனைக் குளிக்கவைத்து சுத்தமாக்கி நல்ல ஆசார நடவடிக்கைகளைக் கற்பித்து, வேதாப்யாசம் செய்துவைத்து பூஜையின் கிரமங்களைப் பழக்கி, பூணூலும் தரிக்கவைத்து, பிராமணருடைய கூட்டத்தில் சேர்த்தால், நீர் அவனைப் பிராமணனென்று சம்மதிப்பீரோ?

சி: சம்மதிக்கமாட்டேன்.

கு: ஏன்?

சி: அவன் பறையன்.

கு: நீர் முன்பார்த்திராத ஒரு பறையனை மேற்சொன்னவிதம் ஆக்கி பிராமணர் சங்கத்தில் நிறுத்தினால் அவனை நீர் இன்னானென்று அறியமுடியுமா?

சி: முடியாது.

கு: ஏன்? பிராமணர் என்கிற ஓர் பிரத்தியேக ஜாதியுண்டானால், அவரைக் கண்டறியவேண்டுமல்லவா? தவிர நீர் ஜனித்ததில்லையானால் முன்சொன்ன நான்கு வர்ணங்கள் முதலிய யாதொன்றும் உமக்கு உண்டோ?

சி: இல்லை.

கு: இவைகள் யாவும் எப்போது உண்டாயிற்று?

சி: நான் ஜனித்ததன் பிறகு.

கு: ஆனால் நீர் தூங்குகிற சமயத்தில் இப்படி நான்கு வர்ணங்கள் உண்டோ?

சி: இல்லை.

கு: அது ஏன்?

சி: அப்பொழுது நம்முடைய மனம் நமது உள்ளில் அடங்கி யாதொன்றும் இல்லாமலிருக்கின்ற நிலைமையில் இருப்பதனால்.

கு: ஆனால் எப்பொழுது இதெல்லாம் உண்டாயின?

சி: தூக்கம் விழித்தபோது.

கு: அப்போது எவ்விடமிருந்து உண்டாகிறது?

சி: என்னுடைய மனதிலிருந்து.

கு: ஆனால் மேற்சொன்ன நான்கு வர்ணங்கள் உள்ளது உண்மைதான் அவைகளை விவரிக்கலாம். பிராமணர்கள் தங்கள் இனத்தில் ஒருவரைத் தொட்டால் குளிக்கவேண்டுமோ?

சி: அவர் தங்களைத் தொட்டால் குளிக்கவேண்டியதில்லை.

கு: க்ஷத்திரியர்கள் தங்கள் இனத்தில் தொட்டால் குளிக்க வேண்டுமோ?

சி: குளிக்கவேண்டியதில்லை.

கு: வைசியரோ?

சி: குளிக்கவேண்டியதில்லை.

கு: சூத்திரரோ?

சி: சூத்திரரில், 72 அடி 40 அடி தூரம் விலகி நிற்கவேண்டியவர்களும், அடுத்துவந்தாலும் தொட்டாலும் குளிக்கவேண்டியவர்களும் வேண்டாதவர்களும் உண்டு.

கு: நீர் சொன்னதெல்லாம் சரியே. ஆனால் உமதெண்ணம் போல் அல்ல ஏனென்றால் மேற்சொல்லிய நான்கு வர்ணங்களும் உம்மிலிருந்தே உற்பவிக்கின்றது. அதாவது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் இவைகள், அதில் மனம் என்பது பிராமணன். சித்தம் என்பது பிரகாசம், அது க்ஷத்திரியன். புத்தி என்பது வைசியன். அகங்காரம் என்பது சூத்திரன். எவ்விதமென்றால் பிராமணர் என்பது நித்தியாநித்திய வஸ்து விவேகம் செய்கின்றவன். நித்தியாநித்திய வஸ்து விவேகத்தைப்பற்றி 6, 12-ம் அத்தியாயங்களில் சொல்லியிருக்கின்றது. அவ்விதம் நித்தியமாகிய வஸ்துவைத் தெரிகிறபோது அவன் பிராமணன். அவன்தான் வைதீகன். அதனால் வேதத்தினுடைய அதிகாரஸ்தன் பிராமணன். பிராமணனைத் தவிர மற்றொருவரும் வேதத்தின் அதிகாரஸ்தர் அல்ல. வேதம் என்பது அறிவு. அந்த அறிவினுடைய அதிகாரி மனம். மனம் இல்லையா

ஞல் யாதொரு அறிவுமில்லை. இதனுற்ருன் வேதத்தினுடைய அதிகாரஸ்தன் பிராமணன் என்று சொல்லக்காரணம். உலகத்தில் பிராமணனைக்காட்டிலும் கீர்த்தியுள்ளவன் க்ஷத்திரியன். இந்தச் க்ஷத்திரியன் சித்தாயிருக்கின்ற பிரகாசம். க்ஷத்திரியனுடைய தொழில் துஷ்டநிக்கிரகம் செய்து சிஷ்டபரிபாலனம் செய்வதென்று சொன்னீர் அல்லவா. துஷ்டர் என்று சொல்லுவது நம்மிலிருந்து உத்பவிக்கின்ற ராகத்துவேஷங்கள் முதலிய விருத்திகளாகும். சிஷ்டன் என்பது மனம். அந்த மனதிற்கு மற்ற விசாரங்களினுல் வேதமாயிருக்கின்ற அறிவிற்குத் தடைவருகிறது, அந்தத் தடைகளை க்ஷத்திரியனுயிருக்கின்ற பிரகாசத்தால் வெட்டி நசிப்பித்து மனதிற்கு அறிவை நிறுத்துவதுதான் சிஷ்டபரிபாலனம் செய்கிறது.

வைசியருக்கு கோரக்ஷ, கிருஷி, வாணிபம் முதலிய தொழில்கள் அவைகள் புத்திக்குச் சம்பந்தப்பட்டது. எப்படி என்ருல் கோ, என்பது சப்தம். சப்தத்தை ரக்ஷிக்கவேண்டியது அது புத்தியின் தொழில் கிருஷி வாணிபம் முதலானதும் புத்தியுள்ளவனே செய்கிறதற்கு முடியும். தவிர உலகத்தில் சாதாரணமாக அவன் புத்தியீனன் பேசுகிறதற்குக்கூட புத்தியில்லை, தெரியவில்லை என்றும் சொல்லி வருகின்ருர்கள். ஆகையால் புத்தியாகிய வைசியன் கோவை ரக்ஷிக்கவேண்டும். எப்படியென்ருல் தன்னிலிருந்து உத்பவிக்கிற சப்தத்தைத் தன்னில்தானே நிறுத்தவேண்டும். எப்பொழுது தன்னுடைய சப்தத்தை நசிக்காமல் தன்னில்தானே நிறுத்துகின்ருனே அப்போது அது கிருஷி. கிருஷி என்பது சிரசில் சுழிமுனையில் தன்னுடைய சக்தியை அடக்குகிறதுதான். அப்போது சப்தம் தன்னிலே லயிக்கிறது. இதுதான் கிருஷி. அவ்விதம் கிருஷி செய்கின்ற சக்தியைக்கொண்டு தன்னில்தானே வியாபிக்கச் செய்வதுதான் வியாபாரம். அவ்விதம்செய்து பக்ஷண சாதனங்களை பிராமணனுக்குக் கொடுக்கவேண்டியது வைசியருடைய தொழில். பக்ஷண பதார்த்தங்கள் கிடைக்காவிடில் பிராமணன் நசித்துப்போகின்ருன். மேற் சொன்னவிதம் சக்தியை தன்னில்தானே அடக்கி வியாபிக்கச்செய்வதால் மனம் விசாரங்களாக வெளியிலே நசித்துப்போகிறதில்லை. அப்போது பிராமணனுயிருக்கின்ற மனதுக்கு நாசமில்லை. தன்னில் தானே லயிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் வைசியராயிருக்கின்ற புத்தியினுடைய தொழில்.

சூத்திரன் என்று சொல்லுகிறது எதை என்ருல் நான் என்கிற அகங்காரத்தை, அந்த அகங்காரத்துக்குத்தான் அநேக ஜாதிகள் இருக்கின்றன. அந்த ஜாதிகள் என்று எதைச் சொல்லப்படுகிறதென்ருல், அநேக விசாரபேதங்களை, அதாவது நான் ஸ்தானி, மானி,

பண்டிதன், மற்றவன், மூடன், சண்டாளன், அதாவது பறையன் என்றிப்படியுள்ளவைகள். சண்டாளன் என்பது கொலை செய்தல், சதிசெய்தல், பொய்பேசுதல், களவுசெய்தல், விபசாரஞ் செய்தல், துர்விருத்திகளைச் செய்யத்தூண்டுகின்ற எண்ணந்தான். இந்த துர்விருத்திகளை விலக்கி அவைகளின் ஞாபகமில்லாமல் இருக்கவேண்டும். இதற்குத்தான் சண்டாளர்களைத் தீண்டக்கூடாது என்று சொல்லுவது. இதனுற்றான் சூத்திரரில் அநேகம் ஜாதிகள் உண்டாயிற்றென்று சொல்லக்காரணம். சூத்திரனுயிருக்கின்ற அகங்காரத்தினுல் உண்டாக்கப்பட்ட மேற்சொன்ன எல்லா விசாரங்களையும் தொழில்களையும் விட்டு பிராமணனுயிருக்கின்ற மனசினுடைய பாதசேவை செய்யவேண்டும். பாதமென்பது ஸ்தானம், ஆகையால் மனசினுடைய ஸ்தானமாகிய புருவ மத்தியத்தைச் சேவிக்கவேண்டும், இதுதான் அகங்காரமாகிய சூத்திரனுடைய தொழில். இந்தப்படிக்கல்லாயல், நான் பிராமணன், வேதசாஸ்திர புராணுதிகளெல்லாம் நான்தான் படிக்கவேண்டும், மற்றவர் யாரும் படிக்கக்கூடாது, மற்றவன் சூத்திரன், சண்டாளன், அசுத்தன், அவனை தூர நிறுத்தவேண்டும், என்றுள்ள எண்ணங்களை நினைப்பவர்களும், பொய், சதி, வியபிசாரம் முதலிய சண்டாளத் தொழில்களைச் செய்பவரும் யாரோ அவரே சண்டாளர். பிராமணரல்ல, பிராமணன் என்பது தன்னிலிருந்து வெளியினுள் சலித்து வியாபிக்கின்ற மனதை, தானுய், நித்தியமாயிருக்கின்ற தன்னில்தானே லயித்து தன்மயமாகின்றவன். க்ஷத்திரியர் என்பது “நான் க்ஷத்ரியன்” “துஷ்டர்களை நிக்ரகிக்கவேண்டும்” என்று கருதி துப்பாக்கியாலும், வாளினுலும், மற்றவைகளினுலும் ஒவ்வொருவரையும் கொலை செய்பவர் அல்ல. அப்படிச் செய்பவர் நான் என்றுள்ள அகங்காரத்தின் துர் விருத்தியால் செய்பவரே யாகையால் அவரும் சண்டாளராவர். க்ஷத்ரியன் என்பது தன்னுடைய ஜீவனைத் தன்னில் பிரகாசிப்பித்து ராகத்வேஷாதி சத்துருக்களை நசிப்பித்து, தன்னுடைய மனதிற்கு யாதொரு அசைவுமில்லாமல் ஸ்திரப்படுத்துகிறவன் தான் வைசியன் என்பது. கோரக்ஷை, கிருஷி, வாணிபம் என்பவைகளை முன்னிட்டு பசு, எருமை இவைகள் கழுத்தில் முடிச்சிட்டு கட்டி கஷ்டப்படுத்தியும், அவைகளினுடைய கன்றுகளை வேறுபடுத்திக் கட்டியும், அந்தக் கன்றுகள் குடிக்கவேண்டிய பாலைக் கறந்தும், அவைகளையும் அவைகளின் கன்றுகளையும் பிடித்து விவஸாயம் வண்டி இழுத்தல் முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தியும், வியாபாரமென்று சொல்லி பல சரக்குகளைச் சேகரித்து விற்பனையில் (எடை) தூக்கத்திலும், அளவிலும், மோசம் செய்தும், அதிக லாபம் எடுத்தும் வருகிறவனல்ல. இவ்விதம் செய்கிறவன் நான் என்கிற அகங்காரத்தின் துர்விருத்திகளால்

செய்கின்றவனாகையால் அவனும் சண்டாளனே. ஆனால் வைசியன் என்பவன் வாக்காய் இருக்கின்ற சப்தத்தை தன்னிலடக்கி கிருஷி செய்து, மூன்சொன்ன விதத்தில் செய்கிறனுவான். சூத்திரன் என்பது பிராமணன் என்று அபிமானித்து வருபவனுக்கு அடிமைத் தொழில்களைச் செய்தும், பாதசேவை முதலியதுகளைச் செய்தும், பல ஜீவ இம்சைகளைச் செய்தும், மதுபான முதலியவைகளைச் செய்தும், நடப்பவனல்லன். அவனும் அகங்காரத்தின் துர்விருத்தியினால் செய்பவனே ஆகையால் சண்டாளனுவன். ஆனால் சூத்திரன் என்பது தனது மனதினுடைய உத்பவஸ்தானமாகிய புருவமத்தியை அடைய கதி செய்து அவ்விடம் தனது ஜீவனைக் கொண்டுபோய் சேர்ப்பதற்கு வேண்டி யத்னம் செய்பவனே. இதுவேதான் பிராமண பாதசேவை. ஆனால் மேலே சொன்ன நான்கு வருணமும் ஒரே முடிவை அடைவதாக ஜாதியே இல்லை. என்று நன்கு புலப்படுகிறது என்கிற நான்கு ஜாதிகள் இல்லை. இவ்வித ஜாதிகளெல்லாம் அவனவனுண்டானபின் தன்னில் அடங்கிய குணம், கர்மமாகிய வாயுவாக வெளியினுள் வியாபித்தபோது அதிலிருந்து நான்கு வர்ணமாக உத்பவிக்கின்றன. அது தன்னாலேயே சிருஷ்டிக்கப்பட்டதாகும். அதாவது, மனசு, சித்தம், புத்தி, அகங்காரம் இவைகள்தான். இவைகளிலிருந்து எல்லா நிலைமைகளும் உண்டாயின. இங்ஙனம், எல்லா சிருஷ்டிகளும் தன்னுடைய சக்தி வெளியினுள் வியாபித்து, அதிலிருந்து உத்பவித்து தன்னைத் தான் அறியாமல் அந்தகாரத்தில் ஆழ்ந்துபோகிறது.

எப்பொழுது தன்னைத்தான் அறிகிறோமோ அப்பொழுது மற்றொன்றில்லை. தன்னைத்தான் அறியவேண்டுமென்றால் மற்றுள்ள பிராண விருத்திகளை விட்டு தன்னுடைய சக்தியை தன்னில்தானே லயிப்பிக்கவேண்டும். அப்பொழுதே தன்னைத்தான் அறியலாம். அந்த சந்தர்ப்பத்தில் தானாய் தன் மயமாய் ஆகிறோம். இதற்குத் தான் கைவல்யமென்று பெயர்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# 19-ம் அத்தியாயம்.

சி: சுவாமின்! முன் அத்தியாயத்தில் மதுபானத்தைப்பற்றி குற்றம் கூறினீரே ஆனால் மதுபானம் நிமித்தம் ஞானம் கிடைக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன், தவிர சக்தி பூஜையில் மதுபானம் செய்யாதிருக்க நிர்வாகமில்லை என்று சொல்ல, அப்படியே நடந்து வருகிறதும் உண்டு. அப்படியிருக்க அதனைப்பற்றி விரோதம் சொல்வதின் காரணம் என்ன?

கு: மதுபானத்தால் யாருக்கு ஞானம் உண்டானதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்?

சி: மலையாள இராஜ்யத்தில் எல்லா ஜாதிகளுக்கும் வித்தியாப்பியாசம் உண்டாக வழி ஏற்படுத்திய கேரள குருவாகிய, துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற மஹானுக்கு.

கு: இதை நீர் யாதேனும் சாஸ்திரங்களைப்படித்து அறிந்தீரோ, அல்லது வேறே யாரேனும் சொல்லக் கேள்விப்பட்டதோ?

சி: உலகவாசிகள் சொல்லக் கேட்டறிந்ததேயாம்.

கு: அந்த மஹான் சாப்பிட்ட மது எப்படிப்பட்டதென்று நீர் கேள்விப்பட்டிருக்கிறீர்?

சி: சாதாரணமாக உலகில் இப்பொழுது நடப்பதான மது வகையறுக்கள்.

கு: அவைகள் எவை?

சி: கள், என்பது தென்னை, பனை, முதலிய மரங்களினுடைய குலைகளைச்சீவி, அதிலிருந்து எடுக்கின்ற ஓர்வகை இரசம். சாராயம் என்பது அக் கள்ளைக் காய்ச்சி இறக்குகின்ற ஓர் வகைத் திராவகம்.

கு: ஆனால் நீர் சொன்னவிதமான மதுவகைகளை துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற மஹான் சாப்பிட்டதில்லை. அந்த மஹான் சாப்பிட்டது எதுவென்றால், எண்ஜாண் பனையின் தலையிலூறிய மது அந்தப் பனையின் தலை என்பது ஜடத்தினுடைய எழுஜாண் மேல்பாகமாகிய சிரம், அச்சிரசிலிருக்கின்றதே மது அம்மதுவை லம்பிக முத்திரையினால், அதாவது உண்ணாக்கிலிருந்து மேல்பாகத்துள்ள துவாரத்

தில் நாக்கின் தலை நுனியைவைத்து மனசை அதனுடைய ஸ்தானமாகிய புருவமத்தியத்தில் சலனமில்லாமல் நிறுத்தி இருகண்களும் ஊர்த்துவ திருஷ்டியாய் (மேற்பார்வையாய்) இருக்கும்போது தன்னிலிருந்து வெளியினுள் வியாபித்திருக்கின்ற சக்தி தன்னிலே லயித்து நிரைந்து உப்பும், அப்பொழுது சிரசிலிருக்கின்ற அமிர்தம் இளகும் அந்த அமிர்தத்தைப் பானம்செய்து சதா ஆனந்த மத்தனுயிருக்கலாம். மேற்சொன்ன மதுவைத்தான் அந்த மஹான் சாப்பிட்டிருந்தார். இதை ஆலோசிக்காமலும், தெரிந்துகொள்ளாமலும் உலகவாசிகள் தப்பிதமாகக்கருதி கேரள குருவாயும் மஹா ஞானியாயுமிருந்த துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற மஹானை நீர் சொன்ன கள்ளும் சாராயமும் குடித்தார் என்று ஓர் அபவாதம் சொல்லி அந்த மஹானைக் குற்றம் சுமத்தியும் மஹான்கள் செய்ததை நாங்களும் செய்யக்கூடாதோ என்று அகம்பாவம் பவித்துப்பேசியும், அந்த மஹான் சாப்பிட்ட மதுவை தெரியாமலும் புத்தியில்லாமலும் நீர் சொன்ன கள், சாராய முதலியவற்றைக்குடித்து முன்னோர்கள் தேடி வைத்துள்ளதும், மற்றுமுள்ள திரவியங்களையும் நாசப்படுத்தி மிகவும் அயோக்கியர்களாகத் தங்களில் கலகம் செய்துகொண்டும், அடிதடி, குத்து. வெட்டு, கொலை, முதலிய கேசுகளை உண்டாக்கி ஜெயில் முதலிய தண்டனைகளுக்கு உட்படுகின்றார்கள்.

தவிர நீர் சக்தி பூஜை என்றும், அன்று மதுபானம் செய்யாதிருக்க முடியாதென்றும், சொன்னது உண்மைதான். அதாவது சக்தி என்பது தன்னிலிருந்து உத்பவித்தது. அந்த சக்தி வெளியினுள் வியாபித்ததினால் நானாவிதத்தில் ஜனங்கள் மோகாந்தர்களாய் இருக்கின்றார்கள். அவ்விதமுள்ள அந்தகாரத்தை நீக்குவதற்கு அந்த சக்தியை தன்னில்தானே சேர்க்கவேண்டும். அதைச் சேர்க்க வேண்டியது ஜீவன். அந்த ஜீவன் சக்தியை பூஜிக்கின்றது. இதற்குத் தான் சிவன் சக்தியை பூஜிக்கின்றது என்று சொல்லப்படுகிறது அது எவ்விதமென்றால் தன்னிலிருந்து வெளியினுள் வியாபித்து ஒவ்வொன்றாய் பந்திக்கப்பட்டிருக்கின்ற தனது சக்தியை அந்தப் பந்தத்திலிருந்து ஜீவனாகிய சிவன் வேறுபடுத்தி பிரம்மரந்திரத்தில் சேர்க்கின்றதுதான். இதுதான் சக்தி பூஜை. அந்தப் பிரகாரம் பூஜிக்கும்போது மஸ்தகத்திலுள்ளதாகிய மது இறங்கும். அந்த மதுவைத்தான் மஹான்கள் பானம்செய்வது. இதனாற்றான் சக்தி பூஜையில் மதுபானம் செய்யாதிருப்பதற்கு நிர்வாகமில்லையென்று சொல்லக்காரணம். இந்த விதந்தான் சக்திபூஜை, இதை அறியாமல் ஜனங்கள் சக்திபூஜை என்று சொல்லி ஆடு, கோழி முதலியவைகளை வதைசெய்து அதன் பிணங்களை சமைத்து அப்பம், வடை, கூட்டு

முதலியவைகள் செய்து மதுவென்று சொல்லுகிற கள், சாராயம் முதலியதுகளையும் மற்றும் ஒரு வீட்டிற்குள் பீடம், விளக்கு முதலானதுகளையும் வைத்து மேற்படி சாமான்களை அந்த பீடத்தருகில் வைத்து பூஜை செய்ய சில புஷ்பங்கள் கூடி பீடத்தின்மேலும் மேற்சொன்ன சாமான்களிலும் வாரி இறைத்து பூஜை முடித்து அதன் பிறகு வயிறு நிறைப்பி மேற்சொன்ன பிணத்தையும் கூட்டு முதலிய பலகாரங்களையும் தின்று கள், சாராயம் முதலியவற்றைக் குடித்து உணர்வில்லாமல் வீழ்ந்து கை, கால், கண், பல், உதடுகள் முதலியவற்றைக் காயப்படுத்திக்கொண்டு கொஞ்சமும் விபரமில்லாமல் இருக்கின்றார்கள். உண்மையான சக்தி பூஜை என்பது எது என்றால் முன் சொல்லப்பட்ட பிரகாரம் செய்வதுதான், அந்தப் பிரகாரமுள்ள பூஜையைத்தான் செய்யவேண்டியது. தன்னுடைய சக்தியை யாவனொருவன் தன்னில் லயிப்பித்து பூஜிக்கின்றானோ, அவன் தன்னிலிருந்து உண்டாகிற மதுவை பானம் செய்து ஆனந்த மத்தனாய் சர்வக்ஞனாக இருக்கலாம். அந்த மதுவுக்குத்தான் அமிர்தம் என்று பெயர். இந்தவிதமான மதுவைத்தான் முன்சொன்ன மஹான்கள் சாப்பிட்டது, நீர் சொன்ன கள்ளும் சாராயமும் அல்ல.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

# 20-ம் அத்தியாயம்.

---

சி: சத்குருவே! உலகில் நான்கு மதங்களுண்டென்று சொல்லி அதை அநுசரித்து ஜனங்கள் நடந்து வருகிறார்களே அம்மதங்கள் எப்படி உண்டாயிற்று.

கு: அந்நான்கு மதங்கள் யாவை?

சி: இந்துமதம், புத்தமதம், கிருஸ்துமதம், முகம்மதியர்மதம்.

கு: நாம் எந்தமதஸ்தர்கள்?

சி: இந்து மதஸ்தர்கள்.

கு: நாம் இந்து மதஸ்தர்களென்பதற்கு என்ன திருஷ்டாந்தம்?

சி: ஈஸ்வரசேவை முதலியவற்றை நாம் சரிவர செய்துவருகிறதினால்தான்.

கு: இதுவரை நாம் ஈஸ்வரசேவை செய்ததாக இப்போது தோன்றுகிறதா?

சி: இதுவரை செய்யப்பட்டதை நாம் ஆலோசிக்கும்போது ஈஸ்வர சேவை செய்ததில்லை.

கு: ஈஸ்வர சேவை செய்யாதவர்களை இந்துக்களென்று சொல்லுகிறதற்கு சாத்தியப்படுமோ?

சி: சாத்தியப்படாது.

கு: ஆனால் உலகத்தில் நாலு மதங்கள் உண்டென்று சொல்லுவது பைத்தியம். மதங்கள் யாதொன்றுமில்லை- அப்படியுண்டென்றால் ஒரே மதமல்லாமல் மற்ற வேறு மதங்கள் கிடையாது. அந்த ஒரே மதத்திற்குத்தான் ஈஸ்வர மதமென்று பெயர், ஆகையால் ஈஸ்வரமதமல்லாமல் உலகத்தில் மற்ற யாதொரு மதங்களுமில்லை. இந்துமதமென்பது இந்துஎன்றால் சந்திரன், மதம் என்றால் ஸ்தாடனம். எதை ஸ்தாபிக்க வேண்டுமென்றால் சந்திரனை ஸ்தாபிக்கவேண்டும். சந்திரன் என்பது மனம். மனசாகின்ற சந்திரனை ஈஸ்வரனாகின்ற ஜீவனில் நிறுத்துவது, இந்து மதம்.

இந்தவிதமாக யார் நிறுத்துகிறார்களோ அவர்களே இந்து மதஸ்தர்கள், இவ்விதம் செய்யாதவர்கள் இந்து மதஸ்தர்களென்றும், புத்த மதஸ்தர்களென்றும், கிருஸ்து மதஸ்தர்களென்றும், மஹம்மதிய மதஸ்தர்களென்றும், அபிமானிக்கின்றதல்லாமல் மதத்தைப்பற்றி யாதொரு அறிவும் உள்ளவரல்லர். யாதொரு மதஸ்தர்களுமல்லர். அது எவ்விதமென்றால் இந்து மதஸ்தர்களென்று அபிமானித்து வருகின்றவரில் சேர்ந்தவராகிய நாயாடி என்றும் மற்றுமுள்ள கூட்டக்காரர்களே, அம்மதஸ்தர்களாகிய மற்றவர்கள் பொதுஸ்தலங்களிலும் பாதைகளிலும் தங்களுடன் சமமாக நடத்தாமல் 72 அடிக்கு அப்பால் விலகி நடக்கச்செய்து கஷ்டப்படுத்தி வருவதால் அவர்கள் தங்களால் நிர்வகிக்க முடியாமல் மஹம்மது மதஸ்தரென்று அபிமானித்து வருபவரில் சேர்ந்து பல வேலைகள் செய்து உபஜீவனம் கழித்து வருகிறவருமாகிய முன்சொன்ன நாயாடிகள் நாங்களும் மஹம்மதியர்களென்று அபிமானித்து வருகிறதும் பேசுகிறதும் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மஹம்மது மதத்தைப்பற்றி யாதொரு அறிவும் கிடையாது- அவர்கள் மஹம்மது மதத்தில் மூன்று வாக்குகள் மட்டும் அறியலாம். அதாவது, "ஹல்லா" "ஹல்லாஹு" "பிஸ்மில்லா" இவைகள் இந்த வாக்குகளுடைய பொருள்களையோ, மஹம்மது மதத்தைப்பற்றிய யாதொரு தத்துவங்களையோ, அறியமாட்டார்கள். அவைகளை அறியாமல் மேற்சொன்ன வாக்கை உச்சாடனம் செய்துகொண்டு, நாங்களும் மஹம்மதியர்களென்று அபிமானித்து நடக்கிறார்கள்.

இவ்விதந்தான் எல்லா மதஸ்தர்களும் மதத்துனுடைய யாதொரு தாத்பரியங்களையும் கிரஹிக்காமல் நான் இந்து, நான் புத்தன், நான் கிருஸ்துவன், நான் மஹம்மதியனென்றும், மற்றும் அவரவர் மதங்களைப்பாராட்டி முன் சொன்ன நாயாடி அபிமானித்து நடக்கிறது போல் அபிமானித்து நடக்கிறார்கள். இவ்வகை யாதொரு மதங்களுமில்லை. எல்லாம் ஒரே மதந்தான். அதாவது முன் சொல்லப்பட்ட ஈஸ்வர மதம் அவ்விதமுள்ள ஈஸ்வர மதத்தை அறியாமலிருந்த் ஒரு காலத்தில் புத்தர் என்கிற ஒரு மஹான் உத்பவித்து அவர் ஈஸ்வர மதத்தினுடைய தத்துவத்தை கிரஹித்து ஈஸ்வர தியானம் செய்யவேண்டியதற்குள்ள ஒரு மார்க்கத்தை ஸ்தாபிக்கச் செய்தார். அதற்கு அந்த மஹான் ஒரு புரோகிதனாகயிருந்தார். அப்புரோகிதராகிய புத்தர் என்கிற மஹான் ஸ்தாபித்த நிமித்தம் புத்த மதம் என்று பெயர் உண்டாயிற்று. அவர் ஸ்தாபித்தது ஈஸ்வர மதமேயாம், அவருடைய பெயர் புத்தர். இப்பொழுதும் அதற்கு புத்த மதமென்று சொல்லி வருகிறார்கள். ஆனால் அந்த புத்தர் என்கிற

மஹானுக்கு புத்தர் என்றல்லாமல் சுக்ரன் என்ற பெயர் இருந்தால் அவரால் ஸ்தாபித்ததற்கு என்ன மதமென்று பெயர் சொல்ல வேண்டும் ?

சி : சுக்ர மதமென்று சொல்லவேண்டும்.

கு : அப்போது புத்தமதமென்கிற ஒரு மதமுண்டோ ?

சி : இல்லை.

கு : இதே பிரகாரந்தான் மற்றொரு காலத்தில் கிருஸ்து என்கிற ஒரு மஹான் உண்டாகியும், வேறொரு காலத்தில் முஹம்மது என்கிற ஒரு மஹான் உண்டாகியும் இருந்தார்கள். அவர்களும் ஈஸ்வர விசாரம் செய்வதற்குள்ள ஞாயமான ஓரோர் மார்க்கத்தை ஸ்தாபித்தார்கள். அவைகளும் மேற்சொன்ன ஈஸ்வர மதமேயாம். அப்படி மதங்களை ஸ்தாபிப்பதற்கு முன்சொன்ன மஹான்கள் ஓரோர் புரோகிதர்களாயிருந்தார்கள். அப்புரோகிதர்களாகிய கிறிஸ்து என்கிற மஹானும் முஹம்மது என்கிற மஹானும ஸ்தாபித்ததின் நிமித்தம் கிருஸ்து மதமென்றும், முஹம்மது மதமென்றும் பெயர்கள் உண்டாயிற்று. அம்மஹான்களுடைய நாமதேயங்களுக்கு அநுசரித்துதான் மதங்களுக்கு வித்தியாசமான பெயர்கள் சொல்லக்காரணம்.

கிருஸ்து என்கிற மஹானுக்கு ஜியார்ஜ் என்றும், முஹம்மது என்கிற மஹானுக்கு சேக்குட்டி என்றும் பெயர். இருந்திருந்ததேயானல், அந்த மதங்களுக்கு இப்போது என்ன சொல்லவேண்டும் ?

சி : ஜியார்ஜ் மதமென்றும், சேக்குட்டி மதமென்றும், சொல்ல வேண்டும்.

கு : ஆனல் மேற்சொன்ன மதங்கள் உண்டோ ?

சி : இல்லை.

கு : ஆனல் மதங்கள் எதை அநுசரித்து வித்தியாசமான பெயர்களுடன் இருக்கின்றன ?

சி : குருநாதன்மாருடைய பெயர்களை அநுசரித்து இருக்கின்றன.

கு : ஆனல் குருநாதர்களாகிய அம்மஹான்கள் எந்த மதத்தை ஸ்தாபித்திருக்கின்றார்கள் ?

சி : ஈஸ்வர மதத்தைத்தான்.

கு : ஆனல் எத்தனை மதங்களுண்டு ?

சி : ஈஸ்வரமதமென்கிற ஒன்று மாத்திரம்.

கு: ஈஸ்வரமதம் என்கிற ஒரு மதம் அல்லாமல் வேறு, யாதொரு மதமும் இல்லை. அப்படிக்குள்ள ஈஸ்வர மதத்தை இன்னதென்றறியாமல் அநேக கட்டடங்கள் உண்டுசெய்து அவைகளில் பிம்பாதிகளை ஸ்தாபித்து, ஈஸ்வரனென்று சங்கல்பித்து அவ்விடங்களில் புத்தியீனர்களாகி ஜீவகாருண்யம் இல்லாமல் மெத்த கடுமனமுடையவராக நரபலி என்றும், அஸ்வமேதபலி என்றும், அசபலி என்றும், குக்குடபலி என்றும், மற்றும் சொல்லி மனிதர், குதிரை, ஆடு, கோழி, மற்றும் உள்ளவற்றை அறுத்து அதி கடினமான கொடூர தொழில்களைச் செய்துகொண்டிருக்கும் காலங்களில் மேற்சொன்ன மஹான்கள் உத்பவித்து, அவர்களுக்கு அதிகமும் புத்தி சக்தி உண்டாயிருந்ததால் அவர்கள் இதனுடைய யதார்த்தத்தை ஆலோசித்துத் தெரிந்து, உலகில் மெத்தவும் கஷ்டப்பட்டலைந்து, மேற்சொன்ன வதைகளைச் செய்துவருவது தப்பிதமென்றும், சரியான மார்க்கம் இன்னதென்றும், அதாவது உலகம் என்பது தனது சக்தியிலிருந்து உத்பவித்ததென்றும், அந்த சக்தியைத் தன்னில்தானே அடக்கம் செய்யவேண்டியதென்றும், அது தானாயிருக்கின்ற தனது சக்தி தன்னில்தானே லயிப்பிக்க வேண்டியதென்றும், அதுதான் சரியென்றும், மற்றதெல்லாம் தப்பிதமென்றும் சொல்லி ஸ்தாபித்திருக்கின்றார்கள்.

ஆகையினால் உலகத்தில் யாரால் மஹான்கள் உத்பவித்திருந்தார்களோ அவர்கள் யாவரும் சொல்லி வந்தது முன்சொன்ன ஒரே மார்க்கம்தான், அந்த மார்க்கத்தைத்தான் நான் இப்போது உமக்குக் காண்பித்துக் கொடுத்திருக்கின்றேன், இதுதான் சரி.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

# 21-ம் அத்தியாயம்.

சி: சுவாமின்! மோக்ஷம் கிடைப்பதற்கு பிரம்மோபதேசந் தான் வேண்டுமென்றும், அது மஹா வாக்கியங்களாகிய சதுர்வாக்கியங்களென்றும் உலகில் சொல்லி வருகிறார்களே? 4-ம் அத்தியாயத்தில் அதை கண்டிக்கவும் செய்திருக்கின்றீர் அல்லவா? ஆனால் சதுர்வாக்கியங்களுடைய உண்மை இன்னவை என்று அருளிச்செய்ய அபேக்ஷிக்கிறேன்.

கு: சதுர்வாக்கியங்கள் எவை?

சி: பிரக்ஞானம் பிரம்மம், அஹம்பிரம்ஹாஸ்மி, தத்வமஸி, அயம் ஆத்மா பிரம்மம் இவைகள்.

கு: இந்த சதுர்வாக்கியங்கள் என்ன செய்யவேண்டுமென்று உபதேசிக்கின்றன?

சி: அவைகளின் பொருள்களை அறிந்து மனனம் செய்து கொண்டிருக்க.

கு: ஆனால் இந்த நான்கு வாக்கியங்களின் பொருள்கள் என்னவென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: பிரக்ஞானம் பிரம்மமென்றால் வேறுபட்டு அறியப்படுகிற அறிவு பிரம்மமென்றும், அஹம்பிரம்ஹாஸ்மி என்றால் நான் பிரம்மமாய் பவிக்கின்றேனென்றும், தத்வமஸி என்றால் அது நீயாகி பவிக்கின்றதென்றும், அயம் ஆத்மா பிரம்மம் என்றால் இந்த ஆத்மா பிரம்மம் என்றும் நான் கிரகித்திருக்கின்றேன்.

கு: இந்த வாக்கியங்களினுடைய முன்கூறின அர்த்தங்களை மனனம் செய்வதனாலேயே மோக்ஷம் கிடைக்குமென்றால், கற்கண்டு என்னும் ஓர் பொருளைப்பற்றி அடியிற் கூறும்விதம் தியானம் செய்யும்போது, அதாவது கற்கண்டு என்னும் பொருள் ஒன்றுண்டு. இனிப்புள்ளது, வெள்ளை நிறமானது, அது தின்பதற்கு உபயோகப்படுவது, அது என்று அது நான்கு வாக்கியங்களைத் தியானிப்பதால் கற்கண்டை இப்படி அறியவோ, அதன் ருசியை உணரவோ, அதன் நிறத்தைப் பார்க்கவோ, அந்த எண்ணத்தையே கற்கண்டாக மாற்

றவோ முடியுமா? ஒருக்காலும் முடியாது. அதை அநுபவித்தால் மாத்திரம்தான் அதனுடைய அவஸ்தைகளை அறியலாம்.

ஆனால் மஹா வாக்கியங்களை நீர் சொன்ன பிரகாரம் அர்த்த விசாரம் செய்கிறதனால் ஒருக்காலும் பிரம்மத்தை அறிய இடமில்லை. தவிர இந்த வாக்கியங்களினுடைய அர்த்தம் நீர் சொன்னபடி அல்ல. பிரக்ஞானம் பிரம்மம் என்றால் பிரதிபதிக்கப்பட்டிருக்கின்ற அறிவே தான் பிரம்மம். அதாவது தன்னிலிருந்து பிரதிபிம்பிக்கப் பட்டிருக்கின்ற வஸ்துக்களை அறிகிற அறிவு எதுவோ அதுவே பிரம் மம். எப்படி யென்றால் காதினால் கேட்டறிகிறதும், கண்களால் பார்க்கிறதும், மூக்கினால் முகருகிறதும், நாவினால் சுவைக்கிறதும், தொக்கினால் ஸ்பரிசிக்கிறதும்தான். ஆனால் இந்த ஐந்து அவஸ்தை களை அறிகிறதற்குள்ள காரணம் எதுவோ அந்த அறிவு பிரம்மம். இந்த ஐந்து இந்திரியங்களல்ல அறிகின்றது என்று முன்னமே 16-ம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா, அந்த அறிவு எது வென்றால் மனம்தான். அந்த மனசு தன்னிலிருந்து பின்னமாய் வெளி யினுள் பலவிதத்திலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அப்படி பிர காசிக்கும் மனசக்தியை பின்னமின்றி தன்னில்தானே அடக்கி நிறுத் துவதற்குத்தான் பிரக்ஞானம் பிரம்மம் என்று சொல்லப்படுகிறது. ஆனதினால் தன்னிலிருந்து பிரதிபிம்பிக்கப்பட்டிருக்கிற பிரகாசத்தை தன்னில்தானே அசைவுபடாமல் நிறுத்தும்போது பிரக்ஞானம் பிரம் மம், என்பதின் அந்த விசாரமோ, தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

அஹம் பிரம்மாஸ்மி என்றால், அகாரமாயிருக்கின்ற வெளியி னுள் தானாயிருக்கின்ற பிரம்மமே. ஹம் என்கிற பிரகிருதியாகி சலித்துக்கொண்டிருப்பதை சலனம் இல்லாமல் உத்பவ ஸ்தானமா கிய தன்னிலேயே அடங்குவதுதான். அந்த சந்தர்ப்பத்தில் அஹம் பிரம்மாஸ்மி என்கிற தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

"தத்வமஸி" என்பது தத் + த்வம் + அஸி. தத் என்பது பிரம் மமும், த்வம் என்பது நீ அதாவது வெளியினுள் நசித்து வியாபித்து சலித்துக்கொண்டிருக்கிற மனசக்தியும். அஸி என்பது ஆகின்றது என்றும் பொருள்படும். ஆகையினால் தத்வமஸி என்பது தத் என் னும் பிரம்மத்திலிருந்து த்வம் (நீ) எனும் மனசக்தி வெளியினுள் வியாபித்து நானாவிதமாக சலித்துக்கொண்டிருப்பதை பிரம்மத்தி லேயே கலந்து நிற்கச் செய்வதுதான். அப்படி கலக்கும்பொழுது சலித்து பிரமித்துக்கொண்டிருக்கிற மனசக்தி பிரம்மம் ஆகின்றது. அப்பொழுது தத்வமஸி எனும் தியானத்திற்கு இடமில்லை.

"அயம் ஆத்மா பிரம்மம்,,என்பது அயம் + ஆத்மா + பிரம்மம். அயம் என்பது இந்த எனவும். ஆத்மா என்பது ஆத்மாவெனவும். பிரம்மம் என்பது பிரம்மம் எனவும் பொருள்படும். அதாவது இந்த எனும் சொல்லில் 'இ' என்பது பிரம்மத்தினுடைய சக்தி. அச் சக்தி வெளியினுள் நானுவிதத்தில் பிரவேசித்து பிரகாசித்துக்கொண் டிருப்பதாகும். அப்பிரகாசத்தை வெளியே பிரகாசிக்க விடாமல் தன்னுள்ளே யிருக்கும் ஆத்மாவினிடத்து பிரகாசிக்கும்படிச் செய்து சலனமின்றி நிறுத்துகின்ற நிலையாகும். அப்பொழுது அயம் ஆத்மா பிரம்மம் எனும் தியானத்திற்கு இடமில்லை.

மேற்கூறிய நான்கு மஹாவாக்கியங்களும் பிரம்மோபதேசமாக தியானம் செய்வதற்குச் சொல்லப்பட்டனவல்ல. பிரம்மத்தின் உண் மைநிலையை உணர்த்தும்பொருட்டேயாகும். அல்லாமலும் பிரம்மத் தினது நிலையை அறிய இன்னும் ஒரு வாக்கியங்கூட உண்டு. அது "பிரம்ம ஜ்யோதிரஹம்" பிரம்ம ஜ்யோதிரஹம் என்பது பிரம் மம் + ஜ்யோதிஸ் + அஹம், அதாவது தானே பிரம்ம ஜ்யோதிஸ் என்று பொருள்படும். இந்தப் பிரம்ம ஜ்யோதிஸ், அகாரமான வெளியினுள் ஹம், எனும் பிரகிருதியாகி பின்னமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரகாசத்தை பின்னப்படவிடாமல் ஒரே பிரகாசமாகச் செய்து ஆதியந்தமின்றி யிருக்கும் நிலைமையைத் தான் மேற்சொன்ன வாக்கியம் குறிக்கின்றது. அப்பொழுது தன் மயமாய் பிரம்ம மாத்திரமாய் ஆகின்றது. அச் சந்தர்ப்பத்தில் "பிரம்ம ஸத் ஜகத் மித்தியா" என்று ஏற்படுகிறது. ஆகையினுல் தன்னிலிருந்து நானுவிதமாக வெளியினுள் சலித்து வியாபித்துக் கொண்டிருக்கும் சக்தியை தன்னுள்ளேயே லயிக்கச் செய்வதுதான் மோக்ஷமெனும் பதவி. அல்லாமல், மந்த்ரோச்சாரணத்தினுலோ, மும்மூர்த்திகளை சங்கல்பித்து தியானித்து பூஜை செய்வதனுலோ, பலவகையான விரதாதிகளை அநுஷ்டித்து பட்டினியிருந்து ரோகம் கொள்ளுவதனுலோ, பல ஜீவ வதைகள் செய்து யாகாதி ஓமங்கள் புரிவதனுலோ, சக்தி பூஜை என்று ஏற்படுத்திக்கொண்டு கள், சாரா யம் முதலிய போதை வஸ்துக்களை சாப்பிட்டும், பிணங்களைத் தின் றும், நினைவு தடுமாறி கீழே விழுந்து பல், உதடு, முதலியவைகளை உடைத்துக் கொள்ளுவதனுலோ, காசி, இராமேஸ்வரம் முதலிய இடங்களுக்குப்போக தீர்மானித்து பல இடங்களில் சுற்றித்திரிந்து கஷ்டப்பட்டு ரோகமடைவதனுலோ, கங்கா ஸ்நானம், சேது ஸ்நானம் என்று சொல்லிக்கொண்டு பல ஆறுகளிலும், உப்பு ஜலம் நிறைந்த சமுத்திரங்களிலும் மற்றும் பல நீர்நிலைகளிலும் ஸ்நானம் செய்து சொறி, சிரங்கு முதலான வியாதிகளடைவதனுலோ, கைவல்யம்

கிடைப்பதில்லை. இச்செய்கைகளால்? தன் ஜீவசக்தி அதோகதியாய் நாசமடைவதல்லாமல் தன்மயம் அடைவதில்லை. தன்மயம் அடைய வேண்டுமானால் முன்சொன்னபடி தன் சக்தியை தன்னுள்ளேயே லயிக்கச் செய்யவேண்டும். அதைத் தவிர வேறுவழியில்லை.

ஓம்

சிதம்பரா வாஸா மகண்டமீஸம்
சதாசிவாம் ஸம் மனுஜாவதாரம்
சதா சிவாநந்த மஸேஷகாம
சதா பிரதாதார மகம்பஜாமி.

மீதான்றீலகோம் குருகடாக்ஷ மதின்னுமேலா
யொன்னும் மஹாதுரிதவன் கடலே கடப்பான்
வன்னிச்சிடட்டே குருவில் கழலேவனும்கை
வந்தெத்திடட்டே புருஷார்த சதுஷ்கமெல்லாம்.

சுபம்

இருபத்தோன்றும் அத்தியாயம் முற்றும்.


எலெக்டிரிக் பிரிண்டிங் ஒர்க்ஸ், கோயமுத்தூர்.

# பிழை திருத்தம்.

| அத்தியாயம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 1 | 5 | பிரியா | பிரிய |
| 1 | 14 | 27 | ஞுபாகம் | ஞாபகம் |
| 2 | 19 | 11 | கிடையாது | கிடைக்காது |
| 2 | 20 | 5 | பார்பின் | மார்பின் |
| 2 | 25 | 30 | கிரியை | திரியை |
| 3 | 29 | 23 | எவ்விடமிருக்து | எவ்விடமிருந்து |
| 3 | 32 | 33 | ஐடமாயிருக்கின்ற | ஜடமாயிருக்கின்ற |
| 3 | 34 | 24 | தடுப்பது | இழுப்பது |
| 4 | 58 | 8 | பிரம்பாந்திரத்தில் | பிரம்மாந்திரத்தில் |
| 4 | 58 | 9 | தானாயி | தானாய் |
| 4 | 58 | 23 | நிலையை | நிலைமை |
| 4 | 59 | 30 | உலகத்தில் | உலகத்தில் பிராணாயாமம் |
| 6 | 76 | 5 | அருளியிருகிறீரல்லவா | அருளியிருக்கிறீரல்லவா |
| 8 | 108 | 14 | கர்மம | கர்மம் |
| 8 | 108 | 25 | கர்மம் | கர்மம் என்பதும் |
| 8 | 108 | 26 | என்பது | என்பதும் |
| 8 | 108 | 26 | என்றுமக | என்றும் |
| 8 | 109 | 26 | கிரியையாவும் | கிரியையும் |
| 9 | 118 | 11 | சுக்கிலத்தைச்சொண்டு | சுக்கிலத்தைக்கொண்டு |
| 9 | 118 | 34 | காணம்படுகிறது | காணப்படுகிறது |
| 9 | 118 | 37 | ரக்ஷகர்த்தா | ரக்ஷகர்த்தா விஷ்ணு |
| 9 | 119 | 6 | ஐடத்தை | ஜடத்தை |
| 10 | 121 | 17 | உண்டாகிறதல்ல | உண்டாகிறதில்லை |
| 11 | 125 | 38 | சக்திலிருந்து | சக்தியிலிருந்து |
| 13 | 131 | 34 | இறந்போகிறதில்லை | இறந்துபோகிறதில்லை |
| 13 | 133 | 25 | உணருகிறது | புணருகிறது |
| 13 | 135 | 25 | மாத்திரத்தை | பாத்திரத்தை |
| 13 | 135 | 30 | வெனிபிலே | வெளியிலே |

## பிழை திருத்த (தொடர்ச்சி)

| அத்தியாயம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 13 | 136 | 9 | இங்களுள்ளிருந்து | உங்களுள்ளிருந்து |
| 13 | 136 | 11 | பார்க்கலாம் | பார்க்கமுடியாது |
| 13 | 136 | 21 | தனே | தானே |
| 14 | 140 | 20 | பிரசிக்க | பிரகாசிக்க |
| 14 | 142 | 26 | நமக்ரு | நமக்கு |
| 16 | 148 | 34 | பாயுகு | பாயுரு |
| 16 | 149 | 21 | விஷ்ணுபாதம் | விஷ்ணுபதம் |
| 16 | 149 | 25 | வெனியினுள் | வெளியினுள் |
| 16 | 150 | 29 | சேத்திரங்கள் | க்ஷேத்திரங்கள் |
| 16 | 152 | 1 | பிராமாணப்பிரதிஷ்டை | பிராணப்பிரதிஷ்டை |
| 16 | 157 | 9 | நாலம்பல | நாலம்பலமாகிய |



HIS HOLINESS

**Swami Sivananda Paramahamsa.**

# சித்தவேதம்.

—(o)—

ஸ்வாமி சிவானந்த பரமஹம்ஸரால்

உபதேசிக்கப்பட்ட

# மோக்ஷ சூத்ரம்.

---

" வந்தேபரம்பிரம்ம சிதாத்ம கம்ஸ
துவந்தே குரும் சாந்தமுமேஸமீஸம்
வந்தே சிவானந்த குருப்ரவீரம்
வந்தே சதான்யா நபிவந்தனீயான் "

---

" அனந்த சுக தாதார
மகண்டானந்த விக்ரகம்
தயாலுமதி சந்துஷ்டம்
வக்தேஹம் மமசத்குரும் "